(xiii) இந்தியாவுலே ....இருபத்தியாறு மாநிலம் இருக்குது. (total)

(xiv) இந்தியாவுலே............ மாநிலம் இருக்குது. (twenty six)

(xv) சுமார்............ கோடி மக்கள் இருக்குறாங்க. (fifty five)

(xvi) சுமார் அம்பத்தியஞ்சு............ மக்கள் இருக்குறாங்க. (crore)

(xvii) ....அம்பத்தியஞ்சு கோடி மக்கள் இருக்குறாங்க. (approximately)

(xviii) சுமார் அம்பத்தியஞ்சு கோடி............இருக்குறாங்க (people)

h. **Fill in the blanks with the appropriate conjugated forms of the verb இரு 'be'.**

(i) இமயமலெ இந்தியாவுக்கு வடக்கே..............
(ii) இந்தியாவுலே இருபத்தியாறு மாநிலம்..............
(iii) இந்தியாவுலே அம்பத்தியஞ்சு கோடி மக்கள்..............

i. Write the word represented by the formula.

Example : நாட்டுக்கு நாடு + Dative
(i) தாய்நாடு + Dative : ....
(ii) இந்தியா + Dative : ....

Example : நாட்டுலே நாடு + Locative
(i) இந்தியா + Locative : ....
(ii) தாய்நாடு + Locative : ....

j. Frame questions for the answers given below following the model

Model : A. இல்லெ. அரபிக்கடல் இந்தியாவுக்குக் கெழக்கே இல்லெ. மேற்கே இருக்குது.
Q. அரபிக்கடல் இந்தியாவுக்குக் கெழக்கே இருக்குதா ?

(i) இல்லெ. அரபிக்கடல் இந்தியாவுக்கு வடக்கே இல்லெ. மேற்கே இருக்குது.
(ii) இல்லெ. இமயமலெ இந்தியாவுக்குத் தெற்கே இல்லெ. வடக்கே இருக்குது.
(iii) இல்லெ. இந்துமகாசமுத்திரம் இந்தியாவுக்குக் கெழக்கே இல்லெ. தெற்கே இருக்குது.

k. Join the following according to the Sandhi rules.

(i) நாடு + க்கு :..............
வீடு + க்கு :..............
நாடு + லே :..............
வீடு + லே :..............

(ii) பள்ளிக்கூடம் + உலே :..............
பள்ளிக்கூடம் + உக்கு :..............
மாநிலம் + உக்கு :..............
மாநிலம் + உலே :..............

l. Answer the questions.

(i) உங்க தாய்நாடு எது ?
(ii) உங்க மாநிலம் பேரு என்ன ?
(iii) உங்க மாநிலத்துலே மொத்தம் எத்தனெ மக்கள் இருக்குறாங்க ?
(iv) அரபிக்கடல் எங்கே இருக்குது ?
(v) இமயமலெ எங்கே இருக்குது ?
(vi) உங்க ஊருலே எத்தனெ மக்கள் இருக்குறாங்க ?

VOCABULARY

தாய்நாடு	'motherland'	நாடு	'country'
எல்லை	'boundaries'	இமயமலை	'the Himalayas'
இந்துமகாசமுத்திரம்	'the Indian Ocean'	அரபிக்கடல்	'the Arabian sea'
வங்காளவிரிகுடா	'the Bay of Bengal'	வடக்கே	'to the north'
தெற்கே	'to the south'	கெழக்கே	'to the east'
மேற்கே	'to the west'	மொத்தம்	'total'
மாநிலம்	'states'	இருபத்தியாறு	'twenty six'
சுமார்	'approximately'	அம்பத்தியஞ்சு	'fifty five'
கோடி	'crore'	மக்கள்	'people'

GRAMMAR

2. 15. 58. When a noun denoting direction is used in sequence with the verb இரு 'be' it obligatorily requires the presence of a dative case in the sense of possession. Consider the following sentences.

> 2.15.58. இமயமலை இந்தியாவுக்கு வடக்கே இருக்குது.
> அரபிக்கடல் இந்தியாவுக்கு மேற்கே இருக்குது.

In the above sentences வடக்கு 'north', மேற்கு 'west' etc., are the nouns of direction. These nouns cannot be declined for dative case, instead the particle -ஏ is added to them. இந்தியாவுக்கு 'India's' is the dative of possession. In a sentence the sequence of noun denoting direction + the particle -ஏ is questioned as எங்கே 'where'. Example :

> 2.15.58. இமயமலை எங்கே இருக்குது ?

2. 15. 59. சுமார் 'approximately' and மொத்தம் 'total' are the quantifiers which always precede the cardinals. Example :

> 2.15.59. சுமார் அம்பத்தியஞ்சு கோடி மக்கள்
> இந்தியாவிலே இருக்குறாங்க.
> மொத்தம் இருபத்தியாறு மாநிலம்
> இந்தியாவிலே இருக்குது.

Sandhi :

> நாடு + க்கு → நாட்டுக்கு (Refer S. 16 in 2.13)
> ரொம்ப + பெரியநாடு → ரொம்பப் பெரிய நாடு (Refer S. 4 in 1.2)
> இந்தியாவுக்கு + தெற்கே → இந்தியாவுக்குத் தெற்கே (இருக்குது)
> இந்தியாவுக்கு + கெழக்கே → இந்தியாவுக்குக் கெழக்கே
> (இருக்குதா ?) (Refer S. 18 in 2.14)
> இந்தியா + உக்கு → இந்தியாவுக்கு (Refer S. 9 in 1.7)

UNIT 2

LESSON 16

DRESSES

DIALOGUE

சாந்தி : செல்வி, இது புதுப் ப்ராக்கா ?	Selvi, is it a new frock ?
செல்வி : இல்லெ, இது பழைய ப்ராக்கு.	No, it is an old frock.
சாந்தி : எத்தனெ ப்ராக்கு உன்கிட்டெ இருக்குது ?	How many frocks do you have ?
செல்வி : என்கிட்டெ அஞ்சு ப்ராக்கு இருக்குது.	I have five frocks.
சாந்தி : என்னென்ன தெறம் ?	What are the colours (of those frocks ?)

செல்வி : ரெண்டு ப்ராக்கு நீல நெறம் ; ஒரு ப்ராக்கு வெள்ளெ நெறம் : ஒரு-ப்ராக்கு மஞ்சள் : ஒரு ப்ராக்கு செவப்பு... உன்கிட்டெ எத்தனெ பாவாடெ இருக்குது ?	Two frocks are blue in colour ; one frock is white in colour ; one frock is yellow (in colour) and one frock is red (in colour)... Howmany skirts do you have ?
சாந்தி : என்கிட்டெ அஞ்சு பாவா-டெ, அஞ்சு ஜாக்கெட்டு இருக்குது.	I have five skirts and five blouses.
செல்வி : இந்தத் தாவணி யாரொடெது ?	Whose half saree is this ?
சாந்தி : இது எங்க அக்காவோ-டெது.	This is our eldersister's.
செல்வி : உங்க ராதா அக்கா-கிட்டெ நெறெயப் பொடவெ இருக்குதா ?	Does your eldersister Radha have many sarees ?
சாந்தி : நெறெய இல்லெ, கொஞ்சம் இருக்குது.	Not many. (She has) a few (sarees)

DRILLS

a. Variation drill

2. 16. 60. என்கிட்டெப் ப்ராக்கு இருக்குது.
என்கிட்டெப் பாவாடெ இருக்குது.
அக்காகிட்டெத் தாவணி இருக்குது.
யாருகிட்டெத் தாவணி இருக்குது ?

2. 16. 61. ரெண்டு ப்ராக்கு நீல நெறம்.
ஒரு ப்ராக்கு வெள்ளெ நெறம்.
ரெண்டு ப்ராக்கு என்ன நெறம் ?
ரெண்டு ப்ராக்கு என்னென்ன நெறம் ?

b Build up drill

(i) என்கிட்டெ ப்ராக்கு இருக்குது.	என்கிட்டெ ப்ராக்கு இருக்குது.
இருக்குது	இருக்குது
ப்ராக்கு	ப்ராக்கு இருக்குது
என்கிட்டெ	என்கிட்டெ ப்ராக்கு இருக்குது.

(ii) அக்காகிட்டெப் பாவாடெ இல்லெ.	அக்காகிட்டெப் பாவாடெ இல்லெ.
இல்லெ	இல்லெ
பாவாடெ	பாவாடெ இல்லெ
அக்காகிட்டெ	அக்காகிட்டெப் பாவாடெ இல்லெ.
(iii) தாவணி யாருகிட்டெ இருக்குது ?	தாவணி யாருகிட்டெ இருக்குது ?
யாருகிட்டெ இருக்குது ?	யாருகிட்டெ இருக்குது ?
தாவணி	தாவணி யாருகிட்டெ இருக்குது ?
(iv) ரெண்டு ப்ராக்கு நீல நெறம்.	ரெண்டு ப்ராக்கு நீல நெறம்.
நெறம்	நெறம்
நீல(ம்)	நீல நெறம்
ப்ராக்கு	ப்ராக்கு நீல நெறம்
ரெண்டு	ரெண்டு ப்ராக்கு நீல நெறம்.
(v) ரெண்டு ப்ராக்கு என்னென்ன நெறம் ?	ரெண்டு ப்ராக்கு என்னென்ன நெறம் ?
என்னென்ன நெறம் ?	என்னென்ன நெறம் ?
ப்ராக்கு	ப்ராக்கு என்னென்ன நெறம் ?
ரெண்டு	ரெண்டு ப்ராக்கு என்னென்ன நெறம் ?

c. Expansion drill

(i) என்கிட்டெ இருக்குது.	என்கிட்டெ இருக்குது.
ப்ராக்கு இருக்குது	என்கிட்டெப் ப்ராக்கு இருக்குது.
அஞ்சு இருக்குது	என்கிட்டெ அஞ்சு ப்ராக்கு இருக்குது.
(ii) அக்காகிட்டெ இல்லெ.	அக்காகிட்டெ இல்லெ.
பாவாடெ இல்லெ	அக்காகிட்டெப் பாவாடெ இல்லெ.
நெறைய இல்லெ	அக்காகிட்டெ நெறையப் பாவாடெ இல்லெ.

d. Question-Answer drill

(i) Q: எத்தனெ ப்ராக்கு உன்கிட்டெ இருக்குது ?
A: என்கிட்டெ அஞ்சு ப்ராக்கு இருக்குது.

(ii) Q: அந்த ப்ராக்கு என்னென்ன நெறம் ?
A: ரெண்டு ப்ராக்கு நீல நெறம் ; ஒரு ப்ராக்கு வெள்ளெ நெறம் ; ஒரு ப்ராக்கு மஞ்சள் நெறம் ; ஒரு ப்ராக்கு செவப்பு.

(iii) Q: ஒரு ப்ராக்கு என்ன நெறம் ?
A: ஒரு ப்ராக்கு செவப்பு நெறம்.

(iv) Q: யாருகிட்டெ நெறெயத் தாவணி இருக்குது ?
A: அக்காகிட்டெ நெறெயத் தாவணி இருக்குது.

e. Substitution drill

(i) என்கிட்டெ ப்ராக்கு இருக்குது.	என்கிட்டெ ப்ராக்கு இருக்குது.
Substitute	
பாவாடெ	என்கிட்டெப் பாவாடெ இருக்குது.
ஜாக்கெட்டு	என்கிட்டெ ஜாக்கெட்டு இருக்குது.
தாவணி	என்கிட்டெத் தாவணி இருக்குது.
(ii) அந்த பாவாடெ என்கிட்டெ இருக்குது.	அந்த பாவாடெ என்கிட்டெ இருக்குது.
Substitute	
எங்ககிட்டெ	அந்த பாவாடெ எங்ககிட்டெ இருக்குது.
நம்மகிட்டெ	அந்த பாவாடெ நம்மகிட்டெ இருக்குது.
உங்ககிட்டெ	அந்த பாவாடெ உங்ககிட்டெ இருக்குது.
அவகிட்டெ	அந்த பாவாடெ அவகிட்டெ இருக்குது.
இவகிட்டெ	அந்த பாவாடெ இவகிட்டெ இருக்குது.
அவங்ககிட்டெ	அந்த பாவாடெ அவங்ககிட்டெ இருக்குது.
இவங்ககிட்டெ	அந்த பாவாடெ இவங்ககிட்டெ இருக்குது.
(iii) ஒரு ப்ராக்கு வெள்ளெ நெறம்.	ஒரு ப்ராக்கு வெள்ளெ நெறம்.
Substitute	
நீல(ம்)	ஒரு ப்ராக்கு நீல நெறம்.
மஞ்சள்	ஒரு ப்ராக்கு மஞ்சள் நெறம்.
செவப்பு	ஒரு ப்ராக்கு செவப்பு நெறம்.

Transformation drill

(i) என்கிட்டெ ப்ராக்கு இருக்குது.	யாருகிட்டெ ப்ராக்கு இருக்குது ?
என்கிட்டெ அஞ்சு பாவாடெ இருக்குது.	யாருகிட்டெ அஞ்சு பாவாடெ இருக்குது ?
என்கிட்டெ ஜாக்கெட்டு இருக்குது.	யாருகிட்டெ ஜாக்கெட்டு இருக்குது ?
அக்காகிட்டெ நெறெயத் தாவணி இருக்குது.	யாருகிட்டெ நெறெயத் தாவணி இருக்குது ?

EXERCISES

g. **Fill in the** blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ரெண்டு ப்ராக்கு என்ன..............? (colour)
ரெண்டு ப்ராக்கு என்ன **நெறம் ?**

(i) ரெண்டு ப்ராக்கு..............நெறம். (blue)
(ii) ஒரு ப்ராக்கு ....நெறம். (white)
(iii) ஒரு ப்ராக்கு ....நெறம். (yellow)
(iv) ஒரு ப்ராக்கு..............நெறம். (red)
(v) என்கிட்டெ அஞ்சு..............இருக்குது. (frocks)
(vi) என்கிட்டெ அஞ்சு.............. இருக்குது. (skirts)
(vii) என்கிட்டெ அஞ்சு..............இருக்குது. (blouses)
(viii) என்கிட்டெ..............இருக்குது. (half sarees)
(ix) உங்க அக்காகிட்டெ எத்தனெ..............இருக்குது ? (saree)
(x) எங்க அக்காகிட்டெ.............. தாவணி இருக்குது. (many)

h. Write the word represented by the formula.

Example : **என்கிட்டெ** நான் + Locative of possession

(i) நாங்க + Locative of possession : ....
(ii) நாம + Locative of possession : ....
(iii) நீ + Locative of possession : ....
(iv) நீங்க + Locative of possession : ....
(v) அவன் + Locative of possession : ....
(vi) இவ + Locative of possession : ....
(vii) இவரு + Locative of possession : ....
(viii) அக்கா + Locative of possession : ....
(ix) அவங்க + Locative of possession : ....

i. Change the given nouns/pronouns into the locative of possession and add at the left to the sentences given below.

(i) நான் : அஞ்சு ப்ராக்கு இருக்குது.
(ii) அக்கா : நாலு பொடவெ இருக்குது.

(iii) நீ : அஞ்சு பாவாடெ இருக்குது.
(iv) அவ : அஞ்சு ஜாக்கெட்டு இருக்குது.
(v) அவ : நெறெயத் தாவணி இருக்குது.

j. Change the underlined words to questions.

(i) என்கிட்டெ அஞ்சு பாவாடெ இருக்குது.
(ii) அக்காகிட்டெத் தாவணி இருக்குது.
(iii) அந்த ஜாக்கெட்டு உன்கிட்டெ இருக்குது.
(iv) இந்தத் தாவணி அக்காவோடெது.
(v) ஒரு ப்ராக்கு நீல நெறம்.

k. Frame thirty sentences from the table given below.

Example : என்கிட்டெ அஞ்சு ப்ராக்கு இருக்குது.

நான் நீ	அஞ்சு ஆறு ஏழு	ப்ராக்கு பாவாடெ ஜாக்கெட்டு தாவணி பொடவெ	இருக்குது

l. Here is some information. Put it all together in one sentence using the same order as in the example given below.

Example : நான்
பொடவெ
இரு
என்கிட்டெப் பொடவெ இருக்குது.

(i) நீங்க
அஞ்சு
பொடவெ
-ஆ
இரு

(ii) யாரு
நல்ல
பாவாடெ
இரு

(iii) நீங்க
அம்மா
எத்தனெ
பொடவெ
இரு

(iv) அவ
பத்து
ப்ராக்கு
-ஆ
இரு

m. Answer the questions.

(i) உங்க குழந்தெகிட்டெ எத்தனெ ப்ராக்கு இருக்குது ?
(ii) உங்க தங்கெகிட்டெ எத்தனெ பொடவெ இருக்குது ?
(iii) உங்க மனெவிகிட்டெ எத்தனெ பொடவெ இருக்குது ?
(iv) உங்க மனெவிகிட்டெ நெறெயப் பொடவெ இருக்குதா ?

VOCABULARY

ப்ராக்கு	'frock'	என்னென்ன	'what (are)'
நெறம்	'colour'	நீல(ம்)	'blue'
வெள்ளெ	'white'	மஞ்சள்	'yellow'
செவப்பு	'red'	பாவாடெ	'skirt'
ஜாக்கெட்டு	'blouse'	தாவணி	'half saree'
நெறெய	'many'	பொடவெ	'saree'

GRAMMAR

2.16.60. The locative case has four suffixes namely -லே, -இலே, -உலே and கிட்டெ. We have seen already in the lesson 2.13 that the presence of locative is inherently understood by the verb இரு 'be' when the suffix -லே or -இலே or -உலே occurs with the place nouns. Similarly, the locative case in the sense of 'possession' is inherently understood by the same verb when the suffix -கிட்டெ occurs with the animate nouns. These sentence types can be equated with the English 'have-constructions'. Example :

2. 16. 60. என்கிட்டெப் ப்ராக்கு இருக்குது.
என்கிட்டெப் பாவாடெ இருக்குது.

The locative of possession like என்கிட்டெ 'I have' can be correspondingly questioned as யாருகிட்டெ 'who has'. Example :

2. 16. 60. யாருகிட்டெத் தாவணி இருக்குது ?

It is to be noted that the locative suffixes -லே, -இலே and -உலே and -கிட்டெ always occur with inanimate and animate nouns respectively.

2.16.61. நீலம் 'blue', வெள்ளெ 'white' etc., are colour adjectives. Example :

2. 16. 61. ரெண்டு ப்ராக்கு நீல நெறம்.
ஒரு ப்ராக்கு வெள்ளெ நெறம்.

The colour adjectives are correspondingly questioned by using என்ன 'what'. Example :

2. 16. 61. ரெண்டு ப்ராக்கு என்ன நெறம் ?

என்னென்ன 'what are (the colours)' is a distributive which is formed by reduplicating the first syllable of the word என்ன 'what'. Example :

2. 16. 61. ரெண்டு ப்ராக்கு என்னென்ன நெறம் ?

Sandhi : புது + ப்ராக்கு → புதுப் ப்ராக்கு
இந்த + தாவணி → இந்தத் தாவணி
நெறெய + பொடவெ → நெறெயப் பொடவெ

(Refer S. 4 in 1.2)

UNIT 2

LESSON 17

HOW IS THANJAVUR ?

DIALOGUE

சுரேஷ் : வணக்கம். என் பேரு சுரேஷ்....உங்க அப்பா-வோடெ மாணவன்.	Vanakkam. My name is Suresh... (I am a) student of your father.
ராமு : வணக்கம். என் பேரு ராமு. ....இவ என் சகோதரி.	Vanakkam. My name is Ramu... She is my sister.
சுரேஷ் : உங்களுக்கு எத்தனை சகோதரிங்க இருக்-குறாங்க ?	How many sisters do you have ?
ராமு : எனக்கு ரெண்டு சகோதரி-ங்க இருக்குறாங்க...இவ இங்கே ஒரு ஆபீஸ்லே குமாஸ்தாவா இருக்குறா. ரெண்டாவது சகோதரி தஞ்சாவூருலே இருக்-குறா.	I have two sisters... She is a clerk in an office here... (My) second sister is in Thanjavur.

சுரேஷ் : அவங்களுக்குக் குழந்தெ-ங்க இருக்குறாங்களா?	Does she have children?
ராமு : ஆமா. அவளுக்கு ஒரு மக இருக்குறா...அவ அம்மா-வெப் போல ரொம்ப அழகு	Yes. She has a daughter... She is very beautiful like her mother.
சுரேஷ் : தஞ்சாவூரு எப்படி இருக்குதுங்க ?	How is Thanjavur (Mr. Ramu)?
ராமு : தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது ...ஆனா, மதுரெயெவிடப் பெரியதா இல்லெ. தமிழ்நாட்டுலே சென்னெ எல்லா ஊரெ-யும் விடப் பெரியது.	Thanjavur is beautiful like Madurai... But (it is) not bigger than Madurai... Madras is the biggest (town) among all the towns in Tamilnadu.

DRILLS

a. Variation drill

2. 17. 62. அவ அழகா இருக்குறா.
இவ அழகா இருக்குறா.

2. 17. 63. அவ அம்மாவெப் போல அழகா இருக்குறா.
தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.
தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இல்லெ.
தஞ்சாவூரு எப்படி இருக்குது ?

2. 17. 64. மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியதா இருக்குது.
தஞ்சாவூரு மதுரெயெவிடப் பெரியதா இல்லெ.
தஞ்சாவூரு எப்படி இருக்குது ?

2. 17. 65. சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இருக்குது
சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இல்லெ.
சென்னெ எப்படி இருக்குது ?

2. 17. 66. அவ அம்மாவெப் போல அழகு.
மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியது.
சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியது இல்லெ.

2. 17. 67. தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.
ஆனா. மதுரெயெ விடப் பெரியதா இல்லெ.

b. Build up drill

(i) அவ அழகா இருக்குறா.	அவ அழகா இருக்குறா.
இருக்குறா	இருக்குறா
அழகா	அழகா இருக்குறா
அவ	அவ அழகா இருக்குறா.
(ii) தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது	தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.
இருக்குது	இருக்குது
அழகா	அழகா இருக்குது
மதுரெயெப் போல	மதுரெயெப் போல அழகா இருக்குது
தஞ்சாவூரு	தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.
(iii) மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியதா இருக்குது.	மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியதா இருக்குது.
இருக்குது	இருக்குது
பெரியதா	பெரியதா இருக்குது
தஞ்சாவூரெவிட	தஞ்சாவூரெவிடப் பெரியதா இருக்குது
மதுரெ	மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியதா இருக்குது.
(iv) சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இருக்குது.	சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இருக்குது.
இருக்குது	இருக்குது
பெரியதா	பெரியதா இருக்குது
எல்லா ஊரெயும்விட	எல்லா ஊரெயும் விடப் பெரியதா இருக்குது
சென்னெ	சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இருக்குது.
(v) மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியது.	மதுரெ தஞ்சாவூரெ விடப் பெரியது.
பெரியது	பெரியது
தஞ்சாவூரெவிட	தஞ்சாவூரெவிடப் பெரியது
மதுரெ	மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியது.
(vi) தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இல்லெ.	தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இல்லெ.
இல்லெ	இல்லெ
அழகா	அழகா இல்லெ

மதுரெயெப் போல	மதுரெயெப் போல அழகா இல்லெ
தஞ்சாவூரு	தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இல்லெ.
(vii) தஞ்சாவூரு எப்படி இருக்-குது ?	தஞ்சாவூரு எப்படி இருக்குது ?
எப்படி இருக்குது ?	எப்படி இருக்குது ?
தஞ்சாவூரு	தஞ்சாவூரு எப்படி இருக்குது ?

c. Expansion drill

(i) அவ அழகா இருக்குறு.	அவ அழகா இருக்குறு.
அம்மாவெப் போல இருக்குறு	அவ அம்மாவெப் போல அழகா இருக்குறு.
(ii) இவ குமாஸ்தாவா இருக்குறு.	இவ குமாஸ்தாவா இருக்குறு.
ஒரு ஆபீஸ்லே குமாஸ்தாவா இருக்குறு	இவ ஒரு ஆபீஸ்லே குமாஸ்தாவா இருக்குறு.
இங்கே குமாஸ்தாவா இருக்குறு	இவ இங்கே ஒரு ஆபீஸ்லே குமாஸ்தாவா இருக்குறு.
(iii) சென்னெ பெரியது.	சென்னெ பெரியது.
எல்லா ஊரெயும் விடப் பெரியது	சென்னெ எல்லா ஊரெயும் விடப் பெரியது.
தமிழ்நாட்டுலே பெரியது	சென்னெ தமிழ்நாட்டுலே எல்லா ஊரெயும்விடப் பெரியது.
(iv) தஞ்சாவூரு பெரியதா இல்லெ.	தஞ்சாவூரு பெரியதா இல்லெ.
மதுரெயெ விடப் பெரியதா இல்லெ	தஞ்சாவூரு மதுரெயெவிடப் பெரியதா இல்லெ.

d. Question-Answer drill

(i) Q : தஞ்சாவூரு எப்படி இருக்குது ?
A : தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.

(ii) Q : தஞ்சாவூரு மதுரெயெவிடப் பெரியதா இருக்குதா ?
A : இல்லெ, தஞ்சாவூரு மதுரெயெவிடப் பெரியதா இல்லெ.

(iii) Q : அவ அம்மாவெப் போல அழகா ?
A : ஆமா. அவ அம்மாவெப் போல அழகு.

(iv) Q : எது எல்லா ஊரெயும்விடப் பெரியது ?
A : சென்னெ எல்லா ஊரெயும் விடப்பெரியது.

e. Substitution drill

(i) அவ அழகா இருக்குறா. — அவ அழகா இருக்குறா.

Substitute and change the verb accordingly.

இவ	இவ அழகா இருக்குறா.
அவன்	அவன் அழகா இருக்குறான்.
இவன்	இவன் அழகா இருக்குறான்.
அவரு	அவரு அழகா இருக்குறாரு.
இவரு	இவரு அழகா இருக்குறாரு.
இவங்க	இவங்க அழகா இருக்குறாங்க.
அவங்க	அவங்க அழகா இருக்குறாங்க.
அது	அது அழகா இருக்குது.
இது	இது அழகா இருக்குது.
நீங்க	நீங்க அழகா இருக்குறீங்க.
நான்	நான் அழகா இருக்குறேன்.

(ii) தஞ்சாவூரு எப்படி இருக்குது ? — தஞ்சாவூரு எப்படி இருக்குது ?

Substitute and change the verb accordingly.

நான்	நான் எப்படி இருக்குறேன் ?
நீங்க	நீங்க எப்படி இருக்குறீங்க ?
அவன்	அவன் எப்படி இருக்குறான் ?
அவ	அவ எப்படி இருக்குறா ?
அவரு	அவரு எப்படி இருக்குறாரு ?
அவங்க	அவங்க எப்படி இருக்குறாங்க ?
அது	அது எப்படி இருக்குது ?

(iii) இவ என் சகோதரி. — இவ என் சகோதரி.

Substitute

மனைவி	இவ என் மனைவி.
தங்கெ	இவ என் தங்கெ.

(iv) அவளுக்கு ஒரு மக இருக்குறா. — அவளுக்கு ஒரு மக இருக்குறா.

Substitute

அக்கா	அவளுக்கு ஒரு அக்கா இருக்குறா.
தங்கெ	அவளுக்கு ஒரு தங்கெ இருக்குறா
அம்மா	அவளுக்கு ஒரு அம்மா இருக்குறா.

(v) அவ அம்மாவெப் போல ரொம்ப அழகு. — அவ அம்மாவெப் போல ரொம்ப அழகு.

Substitute

அடக்கம்	அவ அம்மாவெப் போல ரொம்ப அடக்கம்.
சுறுசுறுப்பு	அவ அம்மாவெப் போல ரொம்பச் சுறுசுறுப்பு.
துடுக்கு	அவ அம்மாவெப் போல ரொம்பத் துடுக்கு.
ஒயரம்	அவ அம்மாவெப் போல ரொம்ப ஒயரம்.

f. Transformation drill

(i) அவ அழகா இருக்குற. — அவ எப்படி இருக்குற ?
தஞ்சாவூரு அழகா இருக்குது. — தஞ்சாவூரு எப்படி இருக்குது ?
மதுரெ பெரியதா இருக்குது. — மதுரெ எப்படி இருக்குது ?

(ii) அவ அழகா இருக்குற. — அவ அழகா இல்லெ.
தஞ்சாவூரு அழகா இருக்குது. — தஞ்சாவூரு அழகா இல்லெ.
மதுரெ பெரியதா இருக்குது. — மதுரெ பெரியதா இல்லெ.

g. Integration drill

(i) அவ அழகா இருக்குற.
அம்மா அழகா இருக்குற. — அவ அம்மாவெப்போல அழகா இருக்குற.

தஞ்சாவூரு அழகா இருக்குது.
மதுரெ அழகா இருக்குது. — தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.

தஞ்சாவூரு பெரியதா இருக்குது.
மதுரெ பெரியதா இருக்குது. — தஞ்சாவூரு மதுரெயெப் போல பெரியதா இருக்குது.

அவ ரொம்ப அழகு.
அம்மா ரொம்ப அழகு. — அவ அம்மாவெப் போல ரொம்ப அழகு.

(ii) அவ அழகா இருக்குற.
அம்மா அழகா இருக்குற. — அவ அம்மாவெ விட அழகா இருக்குற.

தஞ்சாவூரு அழகா இருக்குது.
மதுரெ அழகா இருக்குது. — தஞ்சாவூரு மதுரெயெவிட அழகா இருக்குது.

தஞ்சாவூரு பெரியதா இருக்குது.
மதுரெ பெரியதா இருக்குது. — தஞ்சாவூரு மதுரெயெ விட பெரியதா இருக்குது.

அவ ரொம்ப அழகு.
அம்மா ரொம்ப அழகு. — அவ அம்மாவெவிட ரொம்ப அழகு.

EXERCISES

h. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இவ என்.............. (sister)
இவ என் சகோதரி.

(i) இவ ....வா இருக்குறா. (clerk)
(ii) அவ அம்மாவெப் போல ரொம்ப.................. (beauty)
(iii) தஞ்சாவூரு..............இருக்குது ? (how)
(iv) சென்னெ..............+லே எல்லா ஊரெயும் விடப் பெரியது. (Tamilnadu)

i. Fill in the blanks using the appropriate conjugated forms of the verb இரு 'be'.

(i) அவன் மேனேஜரா..............
(ii) அவ அழகா..............
(iii) அவரு பேராசிரியரா..............
(iv) அவங்க வீட்டுலே..............
(v) அது ஊருலே..............

j. Write the word represented by the formula.

Example : தஞ்சாவூரெ   தஞ்சாவூரு + Objective

(i) அம்மா + Objective :..............
(ii) மதுரெ + Objective : ....
(iii) ஊரு + Objective : ....
(iv) அவ + Objective : ....
(v) அவங்க + Objective : ....
(vi) சகோதரி + Objective : ....
(vii) உங்க + Objective : ....

k. Give the plural form of these words

(i) சகோதரி : ....
(ii) குழந்தெ : ....
(iii) தங்கெ : ....
(iv) பொண்ணு : ....

l. Frame questions for the answers given below following the model

Model : A. தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.
Q. தஞ்சாவூரு எப்படி இருக்குது ?

(i) அவ அம்மாவெப் போல அழகா இருக்குறா.
(ii) மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியதா இருக்குது.
(iii) சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இருக்குது.

m. Transform the following as shown in the model.

Model : மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியதா இருக்குது.
மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியது.

(i) அவ அம்மாவெப் போல அழகா இருக்குற.
(ii) சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இருக்குது.

n. Change these sentences to the negative. Do not change the meaning.

(i) மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியது.
(ii) தஞ்சாவூரு மதுரெயெவிட அழகு.
(iii) மதுரெ தஞ்சாவூரெவிட அழகா இருக்குது.
(iv) சென்னெ எல்லா ஊரெயும் விடப் பெரியது.

o. Make one sentence out of the two sentences using – எ போல.

Model : அவ அழகா இருக்குற.
அம்மா அழகா இருக்குற.
அவ அம்மாவெப் போல அழகா இருக்குற.

(i) தஞ்சாவூரு அழகா இருக்குது.
மதுரெ அழகா இருக்குது.
(ii) தஞ்சாவூரு பெரியதா இருக்குது.
மதுரெ பெரியதா இருக்குது
(iii) அவ ரொம்ப அழகு.
அம்மா ரொம்ப அழகு.

p. Make one sentence out of the two sentences using எ விட.

Model : அவ அழகா இருக்குற.
அம்மா அழகா இருக்குற.
அவ அம்மாவெ விட அழகா இருக்குற.

(i) மதுரெ பெரியதா இருக்குது.
தஞ்சாவூரு பெரியதா இருக்குது.
(ii) தஞ்சாவூரு பெரியதா இருக்குதா ?
மதுரெ பெரியதா இருக்குதா ?
(iii) மதுரெ பெரியது.
தஞ்சாவூரு பெரியது.

q. Fill in the blanks with the sentence conjunction ஆனா.

(i) தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.
...............மதுரெயெவிடப் பெரியதா இல்லெ.
(ii) மதுரெ தஞ்சாவூரெவிடப் பெரியது.
.... சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியது.

r. Join the following according to the sandhi rules.

(i) அம்மா + ஏ :	(ii) மதுரெ + ஏ : ....
குமாஸ்தா + ஏ :	சகோதரி + ஏ : ....
(iii) அவ + ஏ :	(iv) அவங்க + ஏ : ....
இவ + ஏ :	உங்க + ஏ : ....

s. Answer the questions

(i) உங்க ஊரு எப்படி இருக்குது ?
(ii) உங்க ஊரு மதுரெவிடப் பெரியதா ?
(iii) தஞ்சாவூரு மதுரெயெவிடப் பெரியதா இருக்குதா ?
(iv) உங்க சகோதரி எங்கே இருக்குறா ?
(v) உங்க சகோதரி குமாஸ்தாவா ?
(vi) உங்களுக்கு எத்தனெ சகோதரிங்க இருக்குறாங்க ?
(vii) உங்க சகோதரிக்கு குழந்தெங்க இருக்குறாங்களா ?

VOCABULARY

சகோதரி	'sister'	ஆபீஸ்	'office'
குமாஸ்தா	'clerk'	அழகு	'beauty'
எப்படி	'how'	ஆனா	'but'

GRAMMAR

2. 17. 62. We have already noted that the Tamil verb distinguishes person, number and gender. -ஆ is the pronominal suffix which indicates third person, singular number and feminine gender. Example :

2. 17. 62. அவ அழகா இருக்குறா.
இவ அழகா இருக்குறா.

-ஆ is realized as -ஆள் when any vowel beginning suffix is added to it.

2. 17. 63. The degree of comparison in Tamil is expressed by the comparative markers -போல and -விட in order. They are always preceded by the objective case which consists of a noun considered as a basis of comparison and the marker -ஏ. The use of the comparative marker -போல may be identified with the 'positive degree' in English. Example :

2. 17. 63. அவ அம்மாவெப் போல அழகா இருக்குறா.
தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இல்லெ.

2. 17. 64. Similarly the use of the comparative marker -விட may be identified with the 'comparative degree' in English. See the following examples.

2. 17. 64. மதுரெ தஞ்சாவூரெ விடப் பெரியதா இருக்குது.
தஞ்சாவூரு மதுரெயெ விடப் பெரியதா இல்லெ.

The conditional form காட்டிலும் (with particle -உம்) is also used as a comparative marker. Example : மதுரெ தஞ்சாவூரெக் காட்டிலும் பெரியதா இருக்குது. தஞ்சாவூரு மதுரெயெக் காட்டிலும் பெரியதா இல்லெ etc.

2. 17. 65. The use of எல்லா....உம் விட may be identified with the 'superlative degree' in English. Example :

> **2. 17. 65.** சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா
> இருக்குது.
> சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியதா இல்லெ.

எப்படி 'how' is the corresponding question form of the degree of comparison, however, the degree varies positive, comparative and superlative. Example :

> **2. 17. 65.** சென்னெ எப்படி இருக்குது ?

2. 17. 66. The adverb marker -ஆ and the following verb இரு 'be' may be optionally deleted in the comparative sentences as follows.

> 2. 17. 66. அவ அம்மாவெப் போல அழகு.
> மதுரெ தஞ்சாவூரெ விடப் பெரியது.
> சென்னெ எல்லா ஊரெயும்விடப் பெரியது.

2. 17. 67. ஆனா is a sentence conjunction which means 'but'. Example :

> 2. 17. 67. தஞ்சாவூரு மதுரெயெப் போல அழகா இருக்குது.
> ஆனா, மதுரெயெ விடப் பெரியதா இல்லெ.

Sandhi **20.** The consonants க், ச், த் and ப் are always doubled after the objective (accusative) case suffix -எ. Example :

> அம்மாவெ + போல → அம்மாவெப் போல (ரொம்ப அழகு)
> மதுரெயெ + போல → மதுரெயெப் போல (அழகா இருக்குது)

விட + பெரியது → விடப் பெரியது (Refer S.4 in 1.2)
அப்பா + ஓடெ → அப்பாவோடெ
குமாஸ்தா + ஆ → குமாஸ்தாவா
அம்மா + எ → அம்மாவெ (Refer S.9 in 1.7)

UNIT 2

LESSON 18

HOW IS THE WEATHER IN MYSORE NOW ?

DIALOGUE

சுரேஷ் : ராமு, நீங்க இப்ப எங்கே இருக்குறீங்க ?	Mr. Ramu, where are you now ?
ராமு : நான் இப்ப மைசூருலே இருக்குறேன்.	Now I am in Mysore.
சுரேஷ் : எத்தனை வருஷமா மைசூருலே இருக்குறீங்க ?	For howmany years have you been in Mysore?
ராமு : நான் மூணு வருஷமா மைசூருலே இருக்குறேன்.	I have been in Mysore for three years.
சுரேஷ் : மைசூருலே இப்ப 'வெதர்' எப்படி இருக்குது ?	How is the weather in Mysore now ?

ராஜு : பகல்லே நம்ம ஊரெப் போல வெயிலா இல்லெ... ராத்திரி கொஞ்சம் குளிரா இருக்குது.	It is not as hot as our place during the daytime...... (It is) slightly cold during the night.
சுரேஷ் : ஊரு எப்படி இருக்குது ?	How is the place?
ராஜு : ரொம்ப அழகா இருக்குது.	(It is) very beautiful.
சுரேஷ் : மதுரெயெ விடப் பெரியதா ?	(Is it) bigger than Madurai?
ராஜு : இல்லெ. மதுரெயெ விடச் சின்னது.	No. (It is) smaller than Madurai.

DRILLS

a. Variation drill

2. 18. 68. நான் மூணு வருஷமா மைதுருலே இருக்குறேன்.
நீங்க எத்தனெ வருஷமா மைதுருலே இருக்குறீங்க ?

2. 18. 69. மைதுரு ராத்திரியிலே குளிரா இருக்குது.
மைதுரு ராத்திரியிலே எப்படி இருக்குது ?

b. Build up drill

(i) நான் மூணு வருஷமா மைதுருலே இருக்குறேன்.	நான் மூணு வருஷமா மைதுருலே இருக்குறேன்.
இருக்குறேன்	இருக்குறேன்
மைதுருலே	மைதுருலே இருக்குறேன்
மூணு வருஷமா	மூணு வருஷமா மைதுருலே இருக்குறேன்
நான்	நான் மூணு வருஷமா மைதுருலே இருக்குறேன்.
(ii) நீங்க எத்தனெ வருஷமா மைதுருலே இருக்குறீங்க ?	நீங்க எத்தனெ வருஷமா மைதுருலே இருக்குறீங்க ?
எத்தனெ வருஷமா மைதுருலே இருக்குறீங்க ?	எத்தனெ வருஷமா மைதுருலே இருக்குறீங்க ?
நீங்க	நீங்க எத்தனெ வருஷமா மைதுருலே இருக்குறீங்க ?

(iii) மைசூரு ராத்திரியிலே கொஞ்சம் குளிரா இருக்குது. — மைசூரு ராத்திரியிலே கொஞ்சம் குளிரா இருக்குது.

இருக்குது — இருக்குது

குளிரா — குளிரா இருக்குது

கொஞ்சம் — கொஞ்சம் குளிரா இருக்குது

ராத்திரியிலே — ராத்திரியிலே கொஞ்சம் குளிரா இருக்குது

மைசூரு — மைசூரு ராத்திரியிலே கொஞ்சம் குளிரா இருக்குது.

(iv) மைசூரு ராத்திரியிலே எப்படி இருக்குது ? — மைசூரு ராத்திரியிலே எப்படி இருக்குது ?

எப்படி இருக்குது ? — எப்படி இருக்குது ?

ராத்திரியிலே — ராத்திரியிலே எப்படி இருக்குது ?

மைசூரு — மைசூரு ராத்திரியிலே எப்படி இருக்குது ?

c. Expansion drill

(i) நான் மைசூருலே இருக்குறேன். — நான் மைசூருலே இருக்குறேன்.

மூணு வருஷமா இருக்குறேன் — நான் மூணு வருஷமா மைசூருலே இருக்குறேன்.

(ii) மைசூரு கொஞ்சம் குளிரா இருக்குது. — மைசூரு கொஞ்சம் குளிரா இருக்குது.

ராத்திரியிலே இருக்குது — மைசூரு ராத்திரியிலே கொஞ்சம் குளிரா இருக்குது.

(iii) மைசூரு வெயிலா இல்லெ. — மைசூரு வெயிலா இல்லெ.

நம்ம ஊரெப் போல இல்லெ — மைசூரு நம்ம ஊரெப் போல வெயிலா இல்லெ.

பகல்லே இல்லெ — மைசூரு பகல்லே நம்ம ஊரெப் போல வெயிலா இல்லெ.

(iv) மைசூரு சின்னது. — மைசூரு சின்னது.

மதுரெயெ விடச் சின்னது — மைசூரு மதுரெயெ விடச் சின்னது.

d. Question-Answer drill

(i) Q : நீங்க இப்ப எங்கே இருக்குறீங்க ?

A : நான் இப்ப மைசூருலே இருக்குறேன்.

(ii) Q : நீங்க எத்தனெ வருஷமா மைசூருலே இருக்குறீங்க ?

A : நான் மூணு வருஷமா மைசூருலே இருக்குறேன்.

(iii) Q: மைசூரு மதுரெயெ விடப் பெரியதா ?
A: இல்லெ. மதுரெயெ விடச் சின்னது.

(iv) Q: ஊரு எப்படி இருக்குது ?
A: ஊரு ரொம்ப அழகா இருக்குது.

e. Substitution drill

(i) மைசூரு ரொம்ப அழகா இருக்குது.	மைசூரு ரொம்ப அழகா இருக்குது.
Substitute	
வெயிலா	மைசூரு ரொம்ப வெயிலா இருக்குது.
குளிரா	மைசூரு ரொம்பக் குளிரா இருக்குது.
பெரியதா	மைசூரு ரொம்பப் பெரியதா இருக்குது.
சின்னதா	மைசூரு ரொம்பச் சின்னதா இருக்குது.
(ii) மைசூரு ராத்திரியிலே கொஞ்சம் குளிரா இருக்குது.	மைசூரு ராத்திரியிலே கொஞ்சம் குளிரா இருக்குது.
Substitute	
நல்ல	மைசூரு ராத்திரியிலே நல்ல குளிரா இருக்குது.
ரொம்ப	மைசூரு ராத்திரியிலே ரொம்பக் குளிரா இருக்குது.
(iii) மைசூரு நம்ம ஊரெப் போல வெயிலா இல்லெ.	மைசூரு நம்ம ஊரெப் போல வெயிலா இல்லெ.
Substitute	
நாட்டெப் போல	மைசூரு நம்ம நாட்டெப் போல வெயிலா இல்லெ.
மாநிலத்தெப் போல	மைசூரு நம்ம மாநிலத்தெப் போல வெயிலா இல்லெ.

f. Transformation drill

(i) நான் மூணு வருஷமா மைசூருலே இருக்குறேன்.	நீங்க எத்தனெ வருஷமா மைசூருலே இருக்குறீங்க ?
நான் நாலு வருஷமா மதுரெயிலே இருக்குறேன்.	நீங்க எத்தனெ வருஷமா மதுரெயிலே இருக்குறீங்க ?
(ii) மைசூரு குளிரா இருக்குது.	மைசூரு எப்படி இருக்குது ?
மதுரெ வெயிலா இருக்குது.	மதுரெ எப்படி இருக்குது ?
ஊரு அழகா இருக்குது.	ஊரு எப்படி இருக்குது ?

(iii) மைசூரு குளிரா இருக்குது. — மைசூரு குளிரா இல்லெ.
மதுரெ வெயிலா இருக்குது. — மதுரெ வெயிலா இல்லெ.
ஊரு அழகா இருக்குது. — ஊரு அழகா இல்லெ.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below

Model : நான் மூணு ....+ ஆ மைசூருலே இருக்குறேன். (year)
நான் மூணு வருஷமா மைசூருலே இருக்குறேன்.

(i) .... + லே நம்ம ஊரெப் போல இல்லெ. (daytime)
(ii) .... + லே குளிரா இருக்குது. (night)
(iii) நம்ம ஊரெப் போல............+ ஆ இல்லெ. (hot sun)
(iv) ராத்திரியிலே கொஞ்சம்............+ ஆ இருக்குது. (cold)

h. Fill in the blanks using the appropriate conjugated forms of the verb இரு 'be'.

(i) நான் மைசூருலே............
(ii) நீங்க மைசூருலே............
(iii) மைசூரு ரொம்ப அழகா............

i. Change the given nouns into the adverbs of time and add at the left to the verb இரு 'be' in the sentences given below.

(i) மூணு வருஷம் : நான் மைசூருலே இருக்குறேன்.
(ii) அஞ்சு வருஷம் : நீங்க மைசூருலே இருக்குறீங்க.

j. Frame questions for the answers given below following the models.

Model : A. நான் இப்ப மைசூருலே இருக்குறேன்.
Q. நீங்க இப்ப எங்கே இருக்குறீங்க ?

(i) அவன் இப்ப மதுரெயிலே இருக்குறான்.
(ii) பேராசிரியரு இப்பக் கல்லூரியிலே இருக்குறாரு.

Model : A. நான் மூணு வருஷமா மைசூருலே இருக்குறேன்.
Q. நீங்க எத்தனெ வருஷமா மைசூருலே இருக்குறீங்க ?

(i) அவன் ரெண்டு வருஷமா மதுரெயிலே இருக்குறான்.
(ii) ராமு நாலு வருஷமா மைசூருலே இருக்குறான்.
(iii) அவ ரெண்டு வருஷமா தஞ்சாவூருலே இருக்குறா.

Model : A. ஊரு ரொம்பக் குளிரா இருக்குது.
Q. ஊரு எப்படி இருக்குது ?

(i) மைசூரு ரொம்பக் குளிரா இருக்குது.
(ii) மைசூரு ரொம்ப வெயிலா இருக்குது.

k. Change these sentences to the negative.

(i) மைசூரு வெயிலா இருக்குது.
(ii) மைசூரு குளிரா இருக்குது.
(iii) மதுரெ பெரியதா இருக்குது.

l. Make one sentence out of the two sentences using –எ விட.

Model : மைசூரு பெரியதா ?
மதுரெ பெரியதா ?
மைசூரு மதுரெயெ விடப் பெரியதா ?

(i) மைசூரு அழகா இருக்குது.
மதுரெ அழகா இருக்குது.
(ii) மைசூரு குளிரா இருக்குது.
மதுரெ குளிரா இருக்குது.
(iii) மைசூரு சின்னது.
மதுரெ சின்னது.

m. Here is some information. Put it all together in one sentence with necessary modifications using the same order as in the examples given below.

Example : அவரு
மைசூரு
இரு
அவரு மைசூருலே இருக்குறாரு.

(i) அவரு
மைசூரு
-ஆ
இரு

(ii) நீங்க
எங்கே
இரு

(iii) அவரு
எந்த
பள்ளிக்கூடம்
ஆசிரியரா
இரு

(iv) அவரு
நான்
வீடு
இரு

Example : நான்
குழந்தெங்க
இருக்குறாங்க
எனக்குக் குழந்தெங்க இருக்குறாங்க.

(i) நான்
ஆண் குழந்தெங்க
இரு

(ii) நீங்க
நேரம்
இரு
-ஆ

(iii) அவங்க
குழந்தெங்க
இரு
-கு

(iv) நான்
ரெண்டு
மாணவங்க
இரு

Example : நான்
ஒரு
ப்ராக்கு
இரு

என்கிட்டெ ஒரு ப்ராக்கு இருக்குது.

(i) யாரு
நாலு
புஸ்தகம்
இரு

(iii) நீங்க
எத்தனெ
பேனா
இரு

(ii) நான்
பத்து
ரூபாய்
இரு

(iv) அவன்
-கு
நாவல்
இரு

n. Answer the questions.

(i) நீங்க எத்தனெ வருஷமா மைசூருலே இருக்குறீங்க ?
(ii) இப்ப உங்க ஊருலே 'வெதர்' எப்படி இருக்குது ?
(iii) உங்க ஊரு மைசூரெப் போல ரொம்ப அழகா ?
(iv) நீங்க இப்ப எங்கே இருக்குறீங்க ?
(v) உங்க ஊருலே மைசூரெப் போல குளிரா இருக்குதா ?
(vi) உங்க ஊருலே இப்ப ரொம்ப வெயிலா இருக்குதா ?
(vii) உங்க ஊரு மைசூரெ விடப் பெரியதா ?

VOCABULARY

வருஷம்	'year'	வெதர்	'weather'
பகல்	'daytime'	வெயில்	'hot (sun)'
ராத்திரி	'night'	கொஞ்சம்	'slightly'
குளிரு	'cold'		

GRAMMAR

2. 18. 68. The time adverb which is followed by the verb இரு 'be' gives the sense of continuous existence of a thing or person. Example:

2. 18. 68. நான் மூணு வருஷமா மைசூருலே இருக்குறேன்.
நீங்க எத்தனெ வருஷமா மைசூருலே இருக்குறீங்க ?

2. 18. 69. குளிரா 'coldly' is a manner adverb which is followed by the verb 'இரு'. This adverb is correspondingly questioned by எப்படி 'how'.

2\. 18. 69. மைசூரு ராத்திரியிலே குளிரா இருக்குது.
மைசூரு ராத்திரியிலே எப்படி இருக்குது ?

Sandhi : ஊரெ + போல → ஊரெப் போல (Refer S.20 in 2.17)

விட + பெரியது → விடப் பெரியது
விட + சின்னது → விடச் சின்னது (Refer S.4 in 1.2)
குளிரு + ஆ → குளிரா
அழகு + ஆ → அழகா
பெரியது + ஆ → பெரியதா (Refer S.3 in 1.2)

UNIT 3

LESSON 19

RENTING A HOTEL ROOM

DIALOGUE

மேனேஜர் : ஸார், உங்களுக்கு என்ன வேணும் ?	What do you want, sir ?
சுரேஷ் : எங்களுக்கு ஒரு ரூம் வேணும்.	We want a room.
மேனேஜர் : நீங்க எத்தனெ பேரு?	How many persons are you ?
சுரேஷ் : நாங்க ரெண்டு பேருங்க.	We are two (persons).
மேனேஜர் : ஒரு டபுள் ரூம் வேணுமா ? ரெண்டு சிங்கிள் ரூம் வேணுமா ?	(Do you) want one double room or two single rooms ?
சுரேஷ் : ரெண்டு சிங்கிள் ரூம் வேண்டாம். ஒரு டபுள் ரூம் வேணும்.	(We) do not want two single rooms; (we) want one double room.

மேனேஜர் : உங்க பேரு என்னங்க ?	What is your name, sir ?
சுரேஷ் : என் பேரு சுரேஷ் பந்த். இவரு பேரு நரசய்யா.	My name is Suresh Pant. His name is Narasaiah
மேனேஜர் : நீங்க ரெண்டு பேரும் என்னவா இருக்குறீங்க?	What are you both (doing) ?
சுரேஷ் : நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க.	Both of us are Tamil students.
மேனேஜர் : உங்களுக்குக் காலையிலே பேப்பர் வேணுமா ?	Do you want newspaper in the morning ?
சுரேஷ் : ஆமாங்க. 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேணும்.	Yes, sir. (I) want 'Indian Express'
மேனேஜர் : யாருக்குங்க தமிழ்ப் பேப்பர் வேணும் ?	Who wants Tamil newspaper, sir ?
நரசய்யா : எனக்குத் தமிழ்ப் பேப்பர் வேணும்.	I want Tamil newspaper.
மேனேஜர் : உங்க ரெண்டு பேருக்கும் வேறே என்ன வேணுங்க ?	What else do both of you want, sirs ?
சுரேஷ் : எங்களுக்கு வேறே ஒண்ணும் வேணாம்.	We do not want anything else.
மேனேஜர் : இந்தாங்க, சாவி. உங்க ரூம் நம்பர் முப்பது.	Please take this key. Your room number is thirty.

DRILLS

a. Variation drill

3. 19. 70. எங்களுக்கு ரூம் வேணும்.
எங்களுக்கு ரூம் வேண்டாம்.
உங்களுக்கு என்ன வேணும் ?
உங்களுக்குப் பேப்பர் வேணுமா ?
யாருக்குப் பேப்பர் வேணும் ?

3. 19. 71. நாங்க ரெண்டு பேரு.
நீங்க எத்தனை பேரு ?
நீங்க ரெண்டு பேரா ?

3. 19. 72. நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க.
நீங்க ரெண்டு பேரும் என்னவா இருக்குறீங்க ?
நீங்க ரெண்டு பேரும் யாரு ?

3. 19. 73. உங்களுக்கு வேறே என்ன வேணும்?
எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்.

h. Build up drill

(i) எங்களுக்கு ரூமு வேணும். | எங்களுக்கு ரூமு வேணும்.
வேணும் | வேணும்
ரூமு | ரூமு வேணும்
எங்களுக்கு | எங்களுக்கு ரூமு வேணும்.

(ii) உங்களுக்கு என்ன வேணும்? | உங்களுக்கு என்ன வேணும்?
என்ன வேணும்? | என்ன வேணும்?
உங்களுக்கு | உங்களுக்கு என்ன வேணும்?

(iii) நாங்க ரெண்டு பேரு. | நாங்க ரெண்டு பேரு.
ரெண்டு பேரு | ரெண்டு பேரு
நாங்க | நாங்க ரெண்டு பேரு.

(iv) நீங்க எத்தனை பேரு? | நீங்க எத்தனை பேரு?
எத்தனை பேரு? | எத்தனை பேரு?
நீங்க | நீங்க எத்தனை பேரு?

(v) நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க. | நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க.
மாணவங்க | மாணவங்க
தமிழ் | தமிழ் மாணவங்க
ரெண்டு பேரும் | ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க
நாங்க | நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க.

(vi) உங்களுக்கு வேறே என்ன வேணும்? | உங்களுக்கு வேறே என்ன வேணும்?
என்ன வேணும்? | என்ன வேணும்?
வேறே | வேறே என்ன வேணும்?
உங்களுக்கு | உங்களுக்கு வேறே என்ன வேணும்?

(vii) எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாம். | எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்.
வேண்டாம் | வேண்டாம்
ஒண்ணும் | ஒண்ணும் வேண்டாம்
வேறே | வேறே ஒண்ணும் வேண்டாம்
எங்களுக்கு | எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்.

c. Expansion drill

(i) எங்களுக்கு வேணும்.
டபுள் ரூம் வேணும்

எங்களுக்கு வேணும்.
எங்களுக்கு டபுள் ரூம் வேணும்.

(ii) எங்களுக்கு வேண்டாம்.
சிங்கிள் ரூம் வேண்டாம்

எங்களுக்கு வேண்டாம்.
எங்களுக்கு சிங்கிள் ரூம் வேண்டாம்.

ரெண்டு வேண்டாம்

எங்களுக்கு ரெண்டு சிங்கிள் ரூம் வேண்டாம்.

(iii) உங்களுக்கு வேணுமா ?
சிங்கிள் ரூம் வேணுமா ?
ரெண்டு வேணுமா ?

உங்களுக்கு வேணுமா ?
உங்களுக்கு சிங்கிள் ரூம் வேணுமா?
உங்களுக்கு ரெண்டு சிங்கிள் ரூம் வேணுமா ?

(iv) நாங்க மாணவங்க.
தமிழ் மாணவங்க
ரெண்டு பேரும் மாணவங்க

நாங்க மாணவங்க.
நாங்க தமிழ் மாணவங்க.
நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க.

(v) எங்களுக்கு வேண்டாம்.
ஒண்ணும் வேண்டாம்
வேறே வேண்டாம்

எங்களுக்கு வேண்டாம்.
எங்களுக்கு ஒண்ணும் வேண்டாம்.
எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்.

d. Question-Answer drill

(i) Q: உங்களுக்கு என்ன வேணும் ?
A: எங்களுக்கு ஒரு ரூம் வேணும்.

(ii) Q: நீங்க எத்தனை பேரு ?
A: நாங்க ரெண்டு பேரு.

(iii) Q: நீங்க ரெண்டு பேரும் என்னவா இருக்குறீங்க ?
A: நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க.

(iv) Q: யாருக்குத் தமிழ்ப் பேப்பர் வேணும் ?
A: எனக்குத் தமிழ்ப் பேப்பர் வேணும்.

(v) Q: உங்களுக்கு வேறே என்ன வேணும் ?
A: எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்.

e. Substitution drill

(i) எங்களுக்கு ஒரு ரூம் வேணும்.

எங்களுக்கு ஒரு ரூம் வேணும்.

Substitute

எனக்கு

எனக்கு ஒரு ரூம் வேணும்.

நமக்கு	நமக்கு ஒரு ரூம் வேணும்.
உனக்கு	உனக்கு ஒரு ரூம் வேணும்.
உங்களுக்கு	உங்களுக்கு ஒரு ரூம் வேணும்.
இவனுக்கு	இவனுக்கு ஒரு ரூம் வேணும்.
இவளுக்கு	இவளுக்கு ஒரு ரூம் வேணும்.
இவருக்கு	இவருக்கு ஒரு ரூம் வேணும்.
இவங்களுக்கு	இவங்களுக்கு ஒரு ரூம் வேணும்.

(ii) நாங்க ரெண்டு பேரு. — நாங்க ரெண்டு பேரு.

Substitute

நாம	நாம ரெண்டு பேரு.
நீங்க	நீங்க ரெண்டு பேரு.
இவங்க	இவங்க ரெண்டு பேரு
அவங்க	அவங்க ரெண்டு பேரு.

(iii) நாங்க ரெண்டு பேரு. — நாங்க ரெண்டு பேரு.

Substitute

மூணு	நாங்க மூணு பேரு.
நாலு	நாங்க நாலு பேரு.
அஞ்சு	நாங்க அஞ்சு பேரு.
ஆறு	நாங்க ஆறு பேரு.
ஏழு	நாங்க ஏழு பேரு.
எட்டு	நாங்க எட்டுப் பேரு.
ஒம்பது	நாங்க ஒம்பது பேரு.
பத்து	நாங்க பத்துப் பேரு.

6 Transformation drill

(i) எங்களுக்கு ரூம் வேணும்.	உங்களுக்கு என்ன வேணும்?
எங்களுக்குப் பேப்பர் வேணும்.	உங்களுக்கு என்ன வேணும்?
எங்களுக்கு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேணும்.	உங்களுக்கு என்ன வேணும்?
(ii) எங்களுக்கு ரூம் வேணும்.	யாருக்கு ரூம் வேணும்?
எங்களுக்குப் பேப்பர் வேணும்.	யாருக்குப் பேப்பர் வேணும்?
எங்களுக்கு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேணும்.	யாருக்கு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேணும்?
(iii) எங்களுக்கு ரூம் வேணும்.	உங்களுக்கு ரூம் வேணுமா?
எங்களுக்குப் பேப்பர் வேணும்.	உங்களுக்குப் பேப்பர் வேணுமா?
எங்களுக்கு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேணும்.	உங்களுக்கு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேணுமா?

(iv) எங்களுக்கு ரூம் வேணும்.	எங்களுக்கு ரூம் வேண்டாம்.
எங்களுக்குப் பேப்பர் வேணும்.	எங்களுக்குப் பேப்பர் வேண்டாம்
எங்களுக்கு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேணும்.	எங்களுக்கு 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' வேண்டாம்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : உங்களுக்கு என்ன.............? (want)
உங்களுக்கு என்ன **வேணும்** ?

(i) சிங்கின் ரூம்................(do not want)
(ii) நாங்க ரெண்டு................(persons)
(iii) இந்தாங்க, ...(key)
(iv) உங்க ரூம் நம்பர்..............(thirty)
(v) உங்களுக்குக்..............பேப்பர் வேணுமா ? (in the morning)
(vi) உங்களுக்கு..............என்ன வேணும் ? (else)
(vii) எங்களுக்கு வேறே..............வேண்டாம். (even one)

h. Fill in the blanks with the appropriate form of the pronouns given in parentheses.

(i) ....தமிழ்ப் பேப்பர் வேணும். (நான்)
(ii) ....ஒரு ரூம் வேணும். (நாங்க)
(iii) ....என்ன வேணும் ? (நீங்க)
(iv) ....தமிழ்ப் பேப்பர் வேணும் ? (யாரு)

i. Write the word represented by the formula.

Example : **எனக்கு** நான் + Dative

(i) நாங்க + Dative : ....
(ii) நாம + Dative : ....
(iii) நீ + Dative : ....
(iv) நீங்க + Dative : ....
(v) அவன் + Dative : ....
(vi) அவ + Dative : ....
(vii) அவரு + Dative : ....
(viii) அவங்க + Dative : ....
(ix) அது + Dative : ....

j. Fill in the blanks using the cues given in parentheses.

(i) ....ரெண்டு பேரு. (we excl.)
(ii) ....நாலு பேரு. (we incl.)
(iii) ....முப்பது பேரு. (you pl.)

(iv) .... இருபத்தியாறு பேரு. (that-they)
(v) .... அம்பத்தியஞ்சு பேரு. (that-they)

k. Give the plural form of these words.

(i) மாணவன் : ....
(ii) மாணவி : ....
(iii) குழந்தெ : ....
(iv) சகோதரி : ....
(v) பொண்ணு : ....

l. Fill in the blanks using the cues with necessary modification

(i) நாங்க .... தமிழ் மாணவங்க. (two persons)
(ii) அவங்க .... மாணவிங்க. (ten persons)
(iii) இவங்க .... ஆசிரியங்க. (fourteen persons)
(iv) நீங்க .... பேராசிரியங்க. (fifteen persons)

m. Change these sentences as in the examples.

Example : எங்களுக்கு சூப் வேணும்.
எங்களுக்கு சூப் வேண்டாம்.

(i) எங்களுக்கு சிக்கன் சூப் வேணும்.
(ii) எனக்குப் பேப்பர் வேணும்.

Example : எங்களுக்கு ஒரு சூப் வேணும்.
உங்களுக்கு என்ன வேணும் ?

(i) எங்களுக்கு ஒரு டபுள் சூப் வேணும்.
(ii) எனக்குப் பேப்பர் வேணும்.

Example : எங்களுக்கு சூப் வேணும்.
யாருக்கு சூப் வேணும் ?

(i) எனக்குத் தமிழ்ப் பேப்பர் வேணும். ?
(ii) எங்களுக்கு டபுள் சூப் வேணும்.

n. Frame sixteen sentences from the table given below.

Example : எனக்குப் பேப்பர் வேணும்.

நான் நாங்க அவங்க அவ	பேப்பர் சூப்	வேணும் வேண்டாம்

o. Answer the questions

(i) உங்க ரூம் நம்பர் என்ன ?
(ii) உங்க வீட்டு நம்பர் என்ன ?

(iii) உங்க ரூம் நம்பர் முப்பதா ?
(iv) உங்களுக்குக் காலையிலே என்ன பேப்பர் வேணும் ?
(v) உங்களுக்குக் காலையிலே வேறே என்ன வேணும் ?
(vi) உங்களுக்கு ஹோட்டல்லே ரூம் வேணுமா ?
(vii) உங்களுக்கு ஹோட்டல்லே சிங்கிள் ரூம் வேணுமா ? டபுள் ரூம் வேணுமா ?

VOCABULARY

வேணும்	'want'	ரூம்	'room'
பேரு	'persons'	டபுள்	'double'
சிங்கிள்	'single'	வேண்டாம்	'do not want'
காலையிலே	'in the morning'	பேப்பர்	'newspaper'
வேறே	'else'	ஒண்ணும்	'even one'
சாவி	'key'	முப்பது	'thirty'

GRAMMAR

3.19.70. Unlike regular verbs, there is a class of verbs in Tamil which is called defective verb. As they do not have all the required forms of conjugation as other regular verbs they are called defective verbs. They are impersonal and common to all genders. They obligatorily require dative as their subject. வேணும் is a defective verb which signifies 'want' or 'be necessary'. Example :

3. 19. 70. எங்களுக்கு ரூம் வேணும்.

The difference between the defective verb and one of the regular verbs இரு 'be' may be illustrated as follows.

நான் மைசூருலே இருக்குறேன்.	எனக்கு வேணும்.
நீங்க மைசூருலே இருக்குறீங்க.	உங்களுக்கு வேணும்.
அவன் மைசூருலே இருக்குறான்.	அவனுக்கு வேணும்.
அவ மைசூருலே இருக்குறா.	அவளுக்கு வேணும்.
அவரு மைசூருலே இருக்குறாரு.	அவருக்கு வேணும்.
அவங்க மைசூருலே இருக்குறாங்க.	அவங்களுக்கு வேணும்.
அது மைசூருலே இருக்குது.	அதுக்கு வேணும்.

The corresponding negative is expressed by வேண்டாம் and it signifies 'do not want' or 'not necessary'. Example :

3. 19. 70. எங்களுக்கு ரூம் வேண்டாம்.

வேணாம் 'do not want' is another form of negative of வேணும் 'want'. In the common speech, this is also frequently used as வேண்டாம் 'do not want'.

3. *19. 71*. பேரு here means 'persons'. It is a plural noun. It is simply qualified by any number as other predicative constructions. Example

3. *19. 71*. நாங்க ரெண்டு பேரு.

3. 19. *72*. The conjunctive partcle -உம் is added to பேரு when the meaning of conjunction is attributed. Example:

3. *19. 72*. நாங்க ரெண்டு பேரும் தமிழ் மாணவங்க.

3. *19. 73*. The numeral ஒண்ணு 'one' and the particle -உம் (as ஒண்ணும்) together give the meaning of complete denial when they are followed by any negative verb. Example:

3. *19. 73*. எங்களுக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்.

Sandhi : உங்களுக்கு + காலெயிலே → உங்களுக்குக் காலெயிலே
(பேப்பர் வேணுமா ?)

எனக்கு + தமிழ்ப் பேப்பர் → எனக்குத் தமிழ்ப் பேப்பர்
(வேணும்)
(Refer 5.18 in 2.14)

UNIT 3

LESSON 20

ABOUT THE HOTEL

DIALOGUE

சுரேஷ் : நரசய்யா, இந்த ஹோட்டல் யாரோ-டது ?	Mr. Narasaiah, whose hotel is this?
நரசய்யா : இது மிஸ்டர் நடராஜ-னோட ஹோட்டல்.... உங்களுக்கு நடராஜ-னைத் தெரியுமா ?	This is Mr. Natarajan's hotel........Do you know Mr. Natarajan?
சுரேஷ் : இல்லை ... எனக்கு அவரைத் தெரியாது.	No....I do not know him.
நரசய்யா : உங்களுக்குத் தாசில்-தார் ராமநாதனைத் தெரியுமா ?	Do you know Tahsildar Ramanathan?

சுரேஷ் : ஓ ! ரொம்ப நல்லாத் தெரியும்.	Yes. I know (him) very well.
நரசய்யா : மிஸ்டர் நடராஜன் தாசில்தார் ராமநாத-னோடெ அக்காவோடெ மருமகன்.	Mr. Natarajan is the son-in-law of Tahsildar Ramanathan's elder sister.
சுரேஷ் : அப்படியா ? அது எனக்குத் தெரியாது.	Is it so ? I do not know that.
நரசய்யா : உங்களுக்கு மிஸ்டர் நாகராஜனெத் தெரி-யுமா ? அவரு இப்ப நாகர்கோயில்லே இருக்-குறாரு.	Do you know Mr. Nagarajan ? Now he is in Nagercoil.
சுரேஷ் : எனக்குத் தெரியும். ஆனா, ரொம்ப நல்லாத் தெரி-யாது.	I know (him). But, (I) do not know (him) very well.
நரசய்யா : அவரோடெ தங்கெ-தான் நடராஜனோடெ மனைவி.	His sister is the wife of Mr. Natarajan.
சுரேஷ் : ஓ !	Oh (I see)

DRILLS

a. Variation drill

3. 20. 74. எனக்கு நாகராஜனெத் தெரியும்.
உங்களுக்கு நடராஜனெத் தெரியுமா ?
எனக்கு நடராஜனெத் தெரியாது.

3. 20. 75. எனக்கு ராமநாதனெ ரொம்ப நல்லாத் தெரியும்.
உங்களுக்கு ராமநாதனெ ரொம்ப நல்லாத் தெரியுமா?
எனக்கு ராமநாதனெ ரொம்ப நல்லாத் தெரியாது.

b. Build up drill

(i) எனக்கு நாகராஜனெத் தெரியும்.	எனக்கு நாகராஜனெத் தெரியும்.
தெரியும்	தெரியும்
நாகராஜனெ	நாகராஜனெத் தெரியும்
எனக்கு	எனக்கு நாகராஜனெத் தெரியும்.

(ii) உங்களுக்கு நடராஜனைத் தெரியுமா ?	உங்களுக்கு நடராஜனைத் தெரியுமா ?
தெரியுமா ?	தெரியுமா ?
நடராஜனை	நடராஜனைத் தெரியுமா ?
உங்களுக்கு	உங்களுக்கு நடராஜனைத் தெரியுமா ?
(iii) எனக்கு ராமநாதனை ரொம்ப நல்லாத் தெரியும்.	எனக்கு ராமநாதனை ரொம்ப நல்லாத் தெரியும்.
தெரியும்	தெரியும்
நல்லா	நல்லாத் தெரியும்
ரொம்ப	ரொம்ப நல்லாத் தெரியும்
ராமநாதனை	ராமநாதனை ரொம்ப நல்லாத் தெரியும்
எனக்கு	எனக்கு ராமநாதனை ரொம்ப நல்லாத் தெரியும்.

c. Expansion drill

(i) எனக்குத் தெரியும்.	எனக்குத் தெரியும்.
ராமநாதனைத் தெரியும்	எனக்கு ராமநாதனைத் தெரியும்.
(ii) எனக்குத் தெரியாது.	எனக்குத் தெரியாது.
நடராஜனைத் தெரியாது	எனக்கு நடராஜனைத் தெரியாது.
(iii) உங்களுக்குத் தெரியுமா ?	உங்களுக்குத் தெரியுமா ?
நாகராஜனைத் தெரியுமா ?	உங்களுக்கு நாகராஜனைத் தெரியுமா ?
(iv) எனக்குத் தெரியும்.	எனக்குத் தெரியும்
ரொம்ப நல்லாத் தெரியும்	எனக்கு ரொம்ப நல்லாத் தெரிய
ராமநாதனைத் தெரியும்	எனக்கு ராமநாதனை ரொம்ப நல்லாத் தெரியும்.
(v) எனக்குத் தெரியாது.	எனக்குத் தெரியாது.
ரொம்ப நல்லாத் தெரியாது	எனக்கு ரொம்ப நல்லாத் தெரியாது.
நாகராஜனைத் தெரியாது	எனக்கு நாகராஜனை ரொம்ப நல்லாத் தெரியாது.

d. Question-Answer drill

(i) Q: உங்களுக்கு நாகராஜனைத் தெரியுமா ?
A: ஆமா. எனக்குத் தெரியும்.

(ii) Q: உங்களுக்கு நடராஜனைத் தெரியுமா ?
A: இல்லை. எனக்கு அவரைத் தெரியாது.

(iii) Q: உங்களுக்கு ராமநாதனைத் தெரியுமா ?
A: ஓ ! ரொம்ப நல்லாத் தெரியும்.

c. Substitution drill

(i) எனக்கு நாகராஜனைத் தெரியும்.	எனக்கு நாகராஜனைத் தெரியும்.
Substitute	
எங்களுக்கு	எங்களுக்கு நாகராஜனைத் தெரியும்.
நமக்கு	நமக்கு நாகராஜனைத் தெரியும்.
உனக்கு	உனக்கு நாகராஜனைத் தெரியும்.
உங்களுக்கு	உங்களுக்கு நாகராஜனைத் தெரியும்.
அவனுக்கு	அவனுக்கு நாகராஜனைத் தெரியும்.
அவளுக்கு	அவளுக்கு நாகராஜனைத் தெரியும்.
அவருக்கு	அவருக்கு நாகராஜனைத் தெரியும்.
அவங்களுக்கு	அவங்களுக்கு நாகராஜனைத் தெரியும்.

(ii) எனக்குத் தெரியும்.	எனக்குத் தெரியும்
Substitute	
தெரியாது	எனக்குத் தெரியாது.
வேணும்	எனக்கு வேணும்.
வேண்டாம்	எனக்கு வேண்டாம்

(iii) எனக்கு அவரைத் தெரியாது.	எனக்கு அவரைத் தெரியாது.
Substitute	
உன்னை	எனக்கு உன்னைத் தெரியாது.
உங்களை	எனக்கு உங்களைத் தெரியாது.
அவனை	எனக்கு அவனைத் தெரியாது.
இவனை	எனக்கு இவனைத் தெரியாது.
அவளை	எனக்கு அவளைத் தெரியாது.
இவளை	எனக்கு இவளைத் தெரியாது.
இவரை	எனக்கு இவரைத் தெரியாது.
அவரை	எனக்கு அவரைத் தெரியாது.
இவங்களை	எனக்கு இவங்களைத் தெரியாது.
அவங்களை	எனக்கு அவங்களைத் தெரியாது.

(iv) இது நடராஜனுடெ ஹோட்டல்.	இது நடராஜனுடெ ஹோட்டல்.
Substitute	
ஹாஸ்டல்	இது நடராஜனுடெ ஹாஸ்டல்.
பள்ளிக்கூடம்	இது நடராஜனுடெ பள்ளிக்கூடம்.
கல்லூரி	இது நடராஜனுடெ கல்லூரி.
வீடு	இது நடராஜனுடெ வீடு.
அறெ	இது நடராஜனுடெ அறெ.

f. Transformation drill

(i) எனக்கு நாகராஜனெத் தெரியும்.	உங்களுக்கு நாகராஜனெத் தெரியுமா ?
எனக்கு நடராஜனெத் தெரியும்.	உங்களுக்கு நடராஜனெத் தெரியுமா ?
எனக்கு ராமநாதனெத் தெரியும்.	உங்களுக்கு ராமநாதனெத் தெரியுமா ?
(ii) எனக்கு நாகராஜனெத் தெரியும்.	எனக்கு நாகராஜனெத் தெரியாது.
எனக்கு நடராஜனெத் தெரியும்.	எனக்கு நடராஜனெத் தெரியாது.
எனக்கு ராமநாதனெத் தெரியும்.	எனக்கு ராமநாதனெத் தெரியாது.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இது நடராஜனுடெ............... (hotel)
இது நடராஜனுடெ ஹோட்டல்.

(i) எனக்கு ராமநாதனெத்...............(know)
(ii) எனக்கு நடராஜனெத்............... (do not know)
(iii) எனக்கு ரொம்ப...............தெரியும் (well)
(iv) நடராஜன் ராமநாதனுடெ அக்காவோடெ...............
(son-in-law)

h. Fill in the blanks with the appropriate form of the pronouns given in parentheses.

(i) ....அவரெத் தெரியாது. (நான்)
(ii) ....நாகராஜனெத் தெரியுமா ? (நீங்க)
(iii) ....ராமநாதனெத் தெரியாது. (நாகராஜன்)

i. Fill in the blanks with the appropriate form of the pronouns given in parentheses.

(i) எனக்கு.............தெரியாது. (அவரு)
(ii) உங்களுக்கு..............தெரியுமா ? (ராமநாதன்)
(iii) உங்களுக்கு ....தெரியுமா ? (நாகராஜன்)

j. Write the word represented by the formula.

Example : **நாகராஜனெ**   நாகராஜன் + Objective

(i) அவரு + Objective : ....
(ii) ராமநாதன் + Objective : ....
(iii) உங்க + Objective : ....
(iv) எங்க + Objective : ....
(v) அவ + Objective : ....

k. Change these sentences as in the examples.

Example : ஆமா, எனக்கு நடராஜனெத் தெரியும்.
உங்களுக்கு நடராஜனெத் தெரியுமா ?

(i) ஆமா, எனக்கு நடராஜனெத் தெரியும்.
(ii) ஆமா, எனக்கு நாகராஜனெத் தெரியும்.

Example : எனக்கு நடராஜனெத் தெரியும்.
எனக்கு நடராஜனெத் தெரியாது.

(i) எனக்கு நாகராஜனெத் தெரியும்.
(ii) எனக்கு ராமநாதனெத் தெரியும்.

Example : எனக்கு நடராஜனெத் தெரியும்.
யாருக்கு நடராஜனெத் தெரியும் ?

(i) எனக்கு ராமநாதனெத் தெரியும்.
(ii) எனக்கு நாகராஜனெத் தெரியும்.

Example : ஆமா, எனக்கு நடராஜனெத் தெரியாது.
உங்களுக்கு நடராஜனெத் தெரியாதா ?

(i) ஆமா, எனக்கு ராமநாதனெத் தெரியாது.
(ii) ஆமா, எனக்கு நாகராஜனெத் தெரியாது.

l. Frame sixteen sentences from the table given below.

Example : எனக்கு அவளெத் தெரியும்.

நான் நாகராஜன் அவ அவங்க	அவள் அவ	தெரியும் தெரியாது

m. Answer these questions.

(i) உங்களுக்குத் தமிழ்த் தெரியுமா ?
(ii) மலெயாளம் தெரியுமா ?
(iii) உங்களுக்கு பேராசிரியரு சுந்தரத்தெத் தெரியுமா ?
(iv) நடராஜன் யாரோடெ மருமகன் ? உங்களுக்குத் தெரியுமா ?
(v) உங்களுக்கு உங்க ஊரு தாசில்தாரெத் தெரியுமா ?
(vi) உங்களுக்கு மிஸ்டர் நாகராஜனெத் தெரியுமா ? அவரு இப்ப எங்கே இருக்குறாரு ?
(vii) உங்களுக்கு உங்க ஆசிரியரோடெ வீடு தெரியுமா ?
(viii) உங்களுக்கு உங்க தமிழ் ஆசிரியரோடெ பேரு தெரியுமா ? அவரு பேரு என்ன ?

VOCABULARY

ஹோட்டல்	'hotel'	தெரியும்	'know'
தெரியாது	'do not know'	தாசில்தார்	'Tahsildar'
நல்லா	'well'	மருமகன்	'son-in-law'

GRAMMAR

2. 20. 74. தெரியும் is a defective verb which signifies 'know'. As already pointed out this verb does not have all the required forms of conjugation as other regular verbs. It is common to all genders and persons. In addition to this, this verb also obligatorily requires dative as its subject like other defective verbs Example :

3. 20. 74. எனக்கு நாகராஜனெத் தெரியும்.

Note that there is an objective (accusative) case in the sentence 3. 20. 74 which is expressed by a noun and the objective case marker -எ (நாகராஜனெ). We shall see in detail the various functions of the objective case later.

The corresponding negative is indicated by தெரியாது 'do not know'. Example :

3. 20. 74. எனக்கு நாகராஜனெத் தெரியாது.

3. 20. 75. நல்லா 'well' is an adverb. In this lesson it is preceded by an intensifier ரொம்ப 'very'. Example :

3. 20. 75. எனக்கு ராமநாதனெ ரொம்ப நல்லாத் தெரியும்.

Sandhi 21. The consonants க், ச், த் and ப் are always doubled after the adverbs. Example

நல்லா + தெரியும் → நல்லாத் தெரியும்
நல்லா + தெரியாது → நல்லாத் தெரியாது
நடராஜனெ + தெரியுமா → நடராஜனெத் தெரியுமா
அவரெ + தெரியாது → அவரெத் தெரியாது (Refer S. 20 in 2.17)

UNIT 3

LESSON 21

BUYING FRUITS

DIALOGUE

கடைக்காரன் : ஸார், உங்களுக்கு என்ன வேணும் ?	Sir, what do you want ?
சுரேஷ் : எனக்கு ஆப்பிள் பழம் வேணும்.	I want apple.
கடைக்காரன் : உங்களுக்குக் கொடைக்கானல் ஆப்பிள் வேணுமா? காஷ்மீர் ஆப்பிள் வேணுமா ?	Do you want Kodaikkanal apple or Kashmir apple ?
சுரேஷ் : காஷ்மீர் ஆப்பிள் வேண்டாம். கொடைக்கானல் ஆப்பிள் போதும். ஒரு கிலோ என்ன விலை ?	(I) do not want Kashmir apple. The Kodaikkanal apple is sufficient (for me) How much does one kilo (of Kodaikkanal apple) cost ?

கடைக்காரன் : ஒரு கிலோ நாலரை ரூபாய்.	One kilo (of Kodaikkanal apple costs) four and a half rupees.
சுரேஷ் : ஆரஞ்சுப் பழம் ஒரு டஜன் என்ன வெலெ ?	How much does one dozen of oranges cost ?
கடைக்காரன் : ஒரு டஜன் ஆரஞ்சுப்பழம் அஞ்சே-முக்கால் ரூபாய். உங்க-ளுக்கு ஒரு டஜன் போதுமா ?	One dozen of oranges (costs) five rupees and seventyfive paise. Will one dozen be sufficient for you ?
சுரேஷ் : எனக்கு ஒரு டஜன் போதாது. ரெண்டு டஜன் வேணும். வாழெப்பழம் டஜன் என்ன வெலெ ?	One dozen is not sufficient for me. I want two dozens. How much does (one) dozen of bananas cost ?
கடைக்காரன் : வாழெப்பழம் ஒரு டஜன் ரெண்டேகால் ரூபாய். ஒரு டஜன் வேணுமா ? ரெண்டு டஜன் வேணுமா ?	[The (cost) of] one dozen of bananas is two rupees and twentyfive paise. Do (you) want one dozen or two dozens ?
சுரேஷ் : எனக்கு ஒரு டஜன் போதாது. ரெண்டு டஜன் வேணும்.	One dozen is not sufficient for me. (I) want two dozens.
கடைக்காரன் : இந்தாங்க ஒரு கிலோ ஆப்பிள் ; ரெண்டு டஜன் ஆரஞ்-சுப்பழம் ; ரெண்டு டஜன் வாழெப்பழம்.	Please take one kilo of apple ; two dozens of oranges and two dozens of bananas.

DRILLS

a. Variation drill

3. 21. 76. எனக்கு ஆப்பிள் போதும்.
எனக்கு ஒரு டஜன் போதும்.
உங்களுக்கு ஒரு டஜன் போதுமா ?
எனக்கு ஒரு டஜன் போதாது.
உங்களுக்கு ஒரு டஜன் போதாதா ?

3. 21. 77. ஒரு டஜன் வாழெப்பழம் ரெண்டேகால் ரூபாய்.
ஒரு கிலோ ஆப்பிள் நாலரை ரூபாய்.
ஒரு டஜன் ஆரஞ்சுப்பழம் அஞ்சேமுக்கால் ரூபாய்.
ஒரு டஜன் வாழெப்பழம் என்ன வெலெ ?

b. Build up drill

(i) எனக்கு ஆப்பிள் போதும்.	எனக்கு ஆப்பிள் போதும்.
போதும்	போதும்
ஆப்பிள்	ஆப்பிள் போதும்
எனக்கு	எனக்கு ஆப்பிள் போதும்.
(ii) எனக்கு ஒரு டஜன் போதாது.	எனக்கு ஒரு டஜன் போதாது.
போதாது	போதாது
ஒரு டஜன்	ஒரு டஜன் போதாது
எனக்கு	எனக்கு ஒரு டஜன் போதாது.
(iii) உங்களுக்கு ஒரு டஜன் போதுமா ?	உங்களுக்கு ஒரு டஜன் போதுமா?
போதுமா ?	போதுமா
ஒரு டஜன்	ஒரு டஜன் போதுமா ?
உங்களுக்கு	உங்களுக்கு ஒரு டஜன் போதுமா?
(iv) ஒரு டஜன் வாழெப்பழம் ரெண்டேகால் ரூபாய்.	ஒரு டஜன் வாழெப்பழம் ரெண்டேகால் ரூபாய்.
ரூபாய்	ரூபாய்
ரெண்டேகால்	ரெண்டேகால் ரூபாய்
வாழெப்பழம்	வாழெப்பழம் ரெண்டேகால் ரூபாய்
ஒரு டஜன்	ஒரு டஜன் வாழெப்பழம் ரெண்டேகால் ரூபாய்.

c. Expansion drill

(i) எனக்குப் போதும்.	எனக்குப் போதும்.
ஆப்பிள் போதும்	எனக்கு ஆப்பிள் போதும்.
ஒரு கிலோ போதும்	எனக்கு ஒரு கிலோ ஆப்பிள் போதும்.
(ii) எனக்குப் போதும்.	எனக்குப் போதும்.
வாழெப்பழம் போதும்	எனக்கு வாழெப்பழம் போதும்.
ரெண்டு டஜன் போதும்	எனக்கு ரெண்டு டஜன் வாழெப்பழம் போதும்.
(iii) எனக்குப் போதாது.	எனக்குப் போதாது.
ஆப்பிள் போதாது	எனக்கு ஆப்பிள் போதாது.
ஒரு கிலோ போதாது	எனக்கு ஒரு கிலோ ஆப்பிள் போதாது.
(iv) எனக்குப் போதாது.	எனக்குப் போதாது.
ஆரஞ்சுப்பழம் போதாது	எனக்கு ஆரஞ்சுப்பழம் போதாது.
ரெண்டு டஜன் போதாது	எனக்கு ரெண்டு டஜன் ஆரஞ்சுப்பழம் போதாது.

(v) உங்களுக்குப் போதுமா ?	உங்களுக்குப் போதுமா ?
ஆரஞ்சுப்பழம் போதுமா ?	உங்களுக்கு ஆரஞ்சுப்பழம் போதுமா ?
ஒரு டஜன் போதுமா ?	உங்களுக்கு ஒரு டஜன் ஆரஞ்சுப்-பழம் போதுமா ?

d. Question-Answer drill

(i) Q : உங்களுக்கு ஒரு டஜன் போதுமா ?
A : எனக்கு ஒரு டஜன் போதாது.

(ii) Q : ஒரு டஜன் வேணுமா ? ரெண்டு டஜன் வேணுமா ?
A : எனக்கு ஒரு டஜன் போதாது. ரெண்டு டஜன் வேணும்.

(iii) Q : ஆரஞ்சுப்பழம் ஒரு டஜன் என்ன வெலெ ?
A : ஒரு டஜன் ஆரஞ்சுப்பழம் அஞ்சேமுக்கால் ரூபாய்.

e. Substitution drill

(i) எனக்கு ஆப்பிள் பழம் போதும்.	எனக்கு ஆப்பிள் பழம் போதும்.
Substitute	
ஆரஞ்சுப்பழம்	எனக்கு ஆரஞ்சுப்பழம் போதும்.
வாழெப்பழம்	எனக்கு வாழெப்பழம் போதும்.
(ii) உங்களுக்குப் போதுமா ?	உங்களுக்குப் போதுமா ?
Substitute	
போதாதா ?	உங்களுக்குப் போதாதா ?
வேணுமா ?	உங்களுக்கு வேணுமா ?
வேண்டாமா ?	உங்களுக்கு வேண்டாமா ?
தெரியுமா ?	உங்களுக்குத் தெரியுமா ?
தெரியாதா ?	உங்களுக்குத் தெரியாதா ?
(iii) ஒரு கிலோ நாலரெ ரூபாய்.	ஒரு கிலோ நாலரெ ரூபாய்.
Substitute	
அஞ்சரெ	ஒரு கிலோ அஞ்சரெ ரூபாய்.
ஆறரெ	ஒரு கிலோ ஆறரெ ரூபாய்.
ஏழரெ	ஒரு கிலோ ஏழரெ ரூபாய்.
எட்டரெ	ஒரு கிலோ எட்டரெ ரூபாய்.
ஒம்பதரெ	ஒரு கிலோ ஒம்பதரெ ரூபாய்.
பத்தரெ	ஒரு கிலோ பத்தரெ ரூபாய்.
(iv) ஒரு டஜன் அஞ்சேமுக்கால் ரூபாய்.	ஒரு டஜன் அஞ்சேமுக்கால் ரூபாய்.
Substitute	
ஆறேமுக்கால்	ஒரு டஜன் ஆறேமுக்கால் ரூபாய்.

ழேமுக்கால்	ஒரு டஜன் ஏழேமுக்கால் ரூபாய்.
ட்டேமுக்கால்	ஒரு டஜன் எட்டேமுக்கால் ரூபாய்.
ம்பதேமுக்கால்	ஒரு டஜன் ஒம்பதேமுக்கால் ரூபாய்.
த்தேமுக்கால்	ஒரு டஜன் பத்தேமுக்கால் ரூபாய்.
ஒரு டஜன் ரெண்டேகால் ரூபாய்.	ஒரு டஜன் ரெண்டேகால் ரூபாய்.
Substitute	
மூணேகால்	ஒரு டஜன் மூணேகால் ரூபாய்.
நாலேகால்	ஒரு டஜன் நாலேகால் ரூபாய்.
அஞ்சேகால்	ஒரு டஜன் அஞ்சேகால் ரூபாய்.
ஆறேகால்	ஒரு டஜன் ஆறேகால் ரூபாய்.
ஏழேகால்	ஒரு டஜன் ஏழேகால் ரூபாய்.
எட்டேகால்	ஒரு டஜன் எட்டேகால் ரூபாய்.
ஒம்பதேகால்	ஒரு டஜன் ஒம்பதேகால் ரூபாய்.
பத்தேகால்	ஒரு டஜன் பத்தேகால் ரூபாய்.

f. Transformation drill

(i) எனக்கு ஆப்பிள் போதும்.	உங்களுக்கு ஆப்பிள் போதுமா ?
எனக்கு ஒரு டஜன் போதும்.	உங்களுக்கு ஒரு டஜன் போதுமா?
எனக்கு வாழெப்பழம் போதும்.	உங்களுக்கு வாழெப்பழம் போதுமா ?
(ii) எனக்கு ஆப்பிள் போதும்.	எனக்கு ஆப்பிள் போதாது.
எனக்கு ஒரு டஜன் போதும்.	எனக்கு ஒரு டஜன் போதாது.
எனக்கு வாழெப்பழம் போதும்.	எனக்கு வாழெப்பழம் போதாது.
(iii) ஒரு டஜன் வாழெப்பழம் ரெண்டேகால் ரூபாய்.	ஒரு டஜன் வாழெப்பழம் என்ன வெலெ ?
ஒரு கிலோ ஆப்பிள் நாலரெ ரூபாய்.	ஒரு கிலோ ஆப்பிள் என்ன வெலெ?
ஒரு டஜன் ஆரஞ்சுப்பழம் அஞ்சேமுக்கால் ரூபாய்.	ஒரு டஜன் ஆரஞ்சுப்பழம் என்ன வெலெ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model: எனக்கு...............வேணும். (apple)
எனக்கு ஆப்பிள் வேணும்.

(i) ஒரு டஜன்..............என்ன வெலெ ? (orange)

(ii) ....டஜன் என்ன வெலெ ? (banana)

(iii) எனக்குக் கொடெக்கானால் ஆப்பிள்.............
(sufficient/enough)

(iv) எனக்கு ஒரு டஜன்.............. (not sufficient/not enough)

(v) ஒரு..............என்ன வெலெ ? (kilo)

(vi) ஒரு கிலோ..............ரூபாய். (four and a half)

(vii) ஒரு டஜன்..............ரூபாய் (five rupees and paise seventyfive /three quarters)

h. Write the word represented by the formula

Example : **ரெண்டேகால்** ரெண்டு + கால்

(i) மூணு + கால் : ....

(ii) நாலு + அரெ : ....

(iii) அஞ்சு + கால் : ....

(iv) ஏழு + அரெ : ....

(v) ஆறு + முக்கால் : ....

(vi) எட்டு + முக்கால் : ....

i. Change these sentences as in the examples

Example : எனக்கு ஆப்பிள் போதும்.
எனக்கு ஆப்பிள் போதாது.

(i) எனக்கு ஒரு டஜன் போதும்.

(ii) எனக்கு வாழெப்பழம் போதும்.

Example : எனக்கு ஒரு கிலோ ஆப்பிள் போதும்.
உங்களுக்கு ஒரு கிலோ ஆப்பிள் போதுமா ?

(i) எனக்கு ஒரு டஜன் போதும்.

(ii) எனக்கு வாழெப்பழம் போதும்.

Example : ஆமா, எனக்கு ஒரு கிலோ போதாது.
உங்களுக்கு ஒரு கிலோ போதாதா ?

(i) ஆமா, எனக்கு ஒரு டஜன் போதாது.

(ii) ஆமா, எனக்கு வாழெப்பழம் போதாது.

j. Frame sixteen sentences from the table given below.
Example : எனக்கு வாழெப்பழம் போதும்.

நான் நீங்க அவன் அவ	வாழெப்பழம் ஆரஞ்சுப்பழம்	போதும் போதாது

k. Answer these questions.

(i) உங்களுக்கு ஆப்பிள் பழம் வேணுமா ?

(ii) உங்களுக்குக் காஷ்மீர் ஆப்பிள் வேண்டாமா ?

(iii) இப்ப, ஒரு டஜன் ஆரஞ்சுப்பழம் என்ன வெலெ ? உங்களுக்குத் தெரியுமா ?

(iv) உங்களுக்கு எத்தனெ டஜன் வாழெப்பழம் வேணும் ? ஒரு டஜன் போதுமா ?

(v) உங்களுக்கு எத்தனெ கிலோ ஆப்பிள் வேணும் ? ஒரு கிலோ ஆப்பிள் போதாதா ?

VOCABULARY

ஆப்பிள்	'an apple'	பழம்	'fruit'
போதும்	'sufficient/ enough'	கிலோ	'kilogram'
அரெ	'half'	ஆரஞ்சுப்பழம்	'an orange'
முக்கால்	'three quarters/	போதாது	'not sufficient/ 'not enough'
முக்கால் ரூபாய்	seventyfive paise'		
வாழெப்பழம்	'banana'	கால்	'quarter'
		கால் ரூபாய்	'twentyfive paise'

GRAMMAR

3. 21. 76. போதும் is a defective verb which signifies 'be sufficient' or 'be enough'. As already pointed out, this verb also does not have all the required forms of conjugation as other regular verbs. It is common to all genders and persons. This verb obligatorily requires dative as its subject like other defective verbs. **Example** :

3. 21. 76. எனக்கு ஆப்பிள் போதும்.

போதாது 'not sufficient' or 'not enough' is the corresponding negative form of this defective verb. Example

3. 21. 76. எனக்கு ஒரு டஜன் போதாது.

3. 21. 77. முக்கால் 'three quarters', அரெ 'half or two quarters' and கால் 'one quarter' are fractions. When they are added to cardinals the final -உ is dropped and -எ is added before முக்கால் 'three quarters' and கால் 'one quarter' i.e., அஞ்சு + முக்கால் → அஞ்சேமுக்கால், ரெண்டு + கால் → ரெண்டேகால் etc. Example :

3. 21. 77. ஒரு டஜன் ஆரஞ்சுப்பழம் அஞ்சேமுக்கால் ரூபாய்.

ஒரு டஜன் வாழெப்பழம் ரெண்டேகால் ரூபாய்.

Sandhi : ஆரஞ்சு + பழம் → ஆரஞ்சுப்பழம்

வாழெ + பழம் → வாழெப்பழம் (Refer S. 4 in 1.2)

உங்களுக்கு + கொடெக்கானல் → உங்களுக்குக் கொடெக்கானல் (ஆப்பிள் வேணுமா ? Refer S. 18 in 2.14)

UNIT 3

LESSON 22

AT THE DINING HALL

DIALOGUE

சுரேஷ் : இந்தாப்பா, சர்வர் ! ரெண்டு சாப்பாடு வேணும்.	Hey server ! (we) want two meals.
சர்வர் : சைவச் சாப்பாடா, மிலிட்டரிச் சாப்பாடா ?	(Do you want) vegetarian meal or non-vegetarian meal ?
சுரேஷ் : எனக்குச் சைவச் சாப்பாடு வேணும். அவருக்கு மிலிட்டரிச் சாப்பாடு வேணும் .... நரசய்யா. உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?	I want vegetarian meal. He wants non-vegetarian meal...Mr. Narasaiah, do you like fish curry ?
நரசய்யா : எனக்கு மீன்கறி பிடிக்-காது.	I do not like fish curry.

சுரேஷ் : கோழிக்கறி பிடிக்குமா ?	(Do you) like chicken curry ?
நரசய்யா : ஆமா. எனக்குக் கோழிக்கறி பிடிக்கும். உங்களுக்கு அளவுச் சாப்பாடு போதுமா ?	Yes. I like chicken curry. Will plate-meal be sufficient for you ?
சுரேஷ் : போதாது. எனக்கு ரெண்டு சப்பாத்தியும் வேணும்.	(It is) not sufficient. I want two chapathis too.
நரசய்யா : உங்களுக்கு ரெண்டு சப்பாத்தி போதுமா ?	Will two chapathis be sufficient for you ?
சுரேஷ் : போதும். எனக்கு ஒரு ஸ்வீட் வேணும்... ரசகுல்லா கெடைக்குமா?	Yes, (two chapathis will be) sufficient (for me). I want a sweet. Will rasagulla be available (here) ?
நரசய்யா : ரசகுல்லா கெடைக்காது... மைசூர்பாகு கெடைக்கும். வேணுமா?	Rasagulla will not be available (here). Mysorepak will be available (here). (Do you) want ?
சுரேஷ் : வேண்டாம்.	No, (I) do not want.
நரசய்யா : உங்களுக்கு ரசகுல்லா ரொம்ப இஷ்டமா ?	Do you like rasagulla very much ?
சுரேஷ் : ஆமா, எனக்கு மைசூர்பாகு அவ்வளவு இஷ்டம் இல்லெ.	Yes, I do not like mysorepak so much.

DRILLS

a. Variation drill

3. 22. 78. எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?
எனக்கு மீன்கறி பிடிக்காது.

3. 22. 79. உங்களுக்கு மைசூர்பாகு கெடைக்கும்.
எனக்கு ரசகுல்லா கெடைக்குமா ?
உங்களுக்கு ரசகுல்லா கெடைக்காது.

3. 22. 80. எனக்கு ரசகுல்லா இஷ்டம்.
உங்களுக்கு மைசூர்பாகு இஷ்டமா ?
எனக்கு மைசூர்பாகு இஷ்டம் இல்லெ.

b. Build up drill

(i) எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.	எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
பிடிக்கும்	பிடிக்கும்
கோழிக்கறி	கோழிக்கறி பிடிக்கும்
எனக்கு	எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
(ii) உங்களுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.	உங்களுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.
கெடெக்கும்	கெடெக்கும்
மைசூர்பாகு	மைசூர்பாகு கெடெக்கும்
உங்களுக்கு	உங்களுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.
(iii) எனக்கு ரசகுல்லா இஷ்டம்.	எனக்கு ரசகுல்லா இஷ்டம்.
இஷ்டம்	இஷ்டம்
ரசகுல்லா	ரசகுல்லா இஷ்டம்
எனக்கு	எனக்கு ரசகுல்லா இஷ்டம்.
(iv) எனக்கு மைசூர்பாகு இஷ்டம் இல்லெ.	எனக்கு மைசூர்பாகு இஷ்டம் இல்லெ.
இல்லெ	இல்லெ
இஷ்டம்	இஷ்டம் இல்லெ
மைசூர்பாகு	மைசூர்பாகு இஷ்டம் இல்லெ
எனக்கு	எனக்கு மைசூர்பாகு இஷ்டம் இல்லெ.
(v) உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?	உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?
பிடிக்குமா ?	பிடிக்குமா ?
மீன்கறி	மீன்கறி பிடிக்குமா ?
உங்களுக்கு	உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?

c. Expansion drill

(i) எனக்குப் பிடிக்கும்.	எனக்குப் பிடிக்கும்.
கோழிக்கறி பிடிக்கும்	எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
(ii) எனக்குப் பிடிக்காது.	எனக்குப் பிடிக்காது.
மீன்கறி பிடிக்காது.	எனக்கு மீன்கறி பிடிக்காது.
(iii) உங்களுக்குக் கெடெக்கும்.	உங்களுக்குக் கெடெக்கும்.
மைசூர்பாகு கெடெக்கும்	உங்களுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.

(iv) உங்களுக்குக் கெடெக்காது.	உங்களுக்குக் கெடெக்காது.
ரசகுல்லா கெடெக்காது	உங்களுக்கு ரசகுல்லா கெடெக்காது.
(v) எனக்கு இஷ்டம்.	எனக்கு இஷ்டம்.
ரசகுல்லா இஷ்டம்	எனக்கு ரசகுல்லா இஷ்டம்.
(vi) எனக்கு இஷ்டம் இல்லெ.	எனக்கு இஷ்டம் இல்லெ.
அவ்வளவு இஷ்டம் இல்லெ	எனக்கு அவ்வளவு இஷ்டம் இல்லெ.
மைசூர்பாகு இஷ்டம் இல்லெ	எனக்கு மைசூர்பாகு அவ்வளவு இஷ்டம் இல்லெ.

d. Question-Answer drill

(i) Q: உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?
A: எனக்கு மீன்கறி பிடிக்காது.

(ii) Q: கோழிக்கறி பிடிக்குமா ?
A: ஆமா, எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.

(iii) Q: ரசகுல்லா கெடெக்குமா ?
A: இல்லெ, ரசகுல்லா கெடெக்காது.

(iv) Q: உங்களுக்கு ரசகுல்லாதான் இஷ்டமா ?
A: ஆமா, எனக்கு மைசூர்பாகு அவ்வளவு இஷ்டம் இல்லெ.

e. Substitution drill

(i) எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.	எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
Substitute	
பிடிக்காது	எனக்குக் கோழிக்கறி பிடிக்காது.
இஷ்டம்	எனக்குக் கோழிக்கறி இஷ்டம்.
கெடெக்கும்	எனக்குக் கோழிக்கறி கெடெக்கும்.
கெடெக்காது	எனக்குக் கோழிக்கறி கெடெக்காது.
வேணும்	எனக்குக் கோழிக்கறி வேணும்.
வேண்டாம்	எனக்குக் கோழிக்கறி வேண்டாம்.
போதும்	எனக்குக் கோழிக்கறி போதும்.
போதாது	எனக்குக் கோழிக்கறி போதாது.
(ii) எனக்கு மீன்கறி பிடிக்காது.	எனக்கு மீன்கறி பிடிக்காது.
Substitute	
எங்களுக்கு	எங்களுக்கு மீன்கறி பிடிக்காது.
நமக்கு	நமக்கு மீன்கறி பிடிக்காது.
உனக்கு	உனக்கு மீன்கறி பிடிக்காது.
உங்களுக்கு	உங்களுக்கு மீன்கறி பிடிக்காது.

(iii) உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?	உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?
Substitute	
கோழிக்கறி	உங்களுக்குக் கோழிக்கறி பிடிக்குமா ?
சப்பாத்தி	உங்களுக்குச் சப்பாத்தி பிடிக்குமா?
(iv) உங்களுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.	உங்களுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.
Substitute	
இவனுக்கு	இவனுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.
இவளுக்கு	இவளுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.
இவருக்கு	இவருக்கு மைசூர்பாகு கெடெக்கும்.
இவங்களுக்கு	இவங்களுக்கு மைசூர்பாகு கெடெக்கும்.
(v) எனக்கு ரசகுல்லா இஷ்டம்.	எனக்கு ரசகுல்லா இஷ்டம்.
Substitute	
அவனுக்கு	அவனுக்கு ரசகுல்லா இஷ்டம்.
அவளுக்கு	அவளுக்கு ரசகுல்லா இஷ்டம்.
அவருக்கு	அவருக்கு ரசகுல்லா இஷ்டம்.
அவங்களுக்கு	அவங்களுக்கு ரசகுல்லா இஷ்டம்.
(vi) எனக்கு 'ஸ்வீட்' இஷ்டம்.	எனக்கு 'ஸ்வீட்' இஷ்டம்.
Substitute	
ரசகுல்லா	எனக்கு ரசகுல்லா இஷ்டம்.
மைசூர்பாகு	எனக்கு மைசூர்பாகு இஷ்டம்.
(vii) எங்களுக்குச் சாப்பாடு வேணும்.	எங்களுக்குச் சாப்பாடு வேணும்.
Substitute	
சைவச் சாப்பாடு	எங்களுக்குச் சைவச் சாப்பாடு வேணும்.
மிலிட்டரிச் சாப்பாடு	எங்களுக்கு மிலிட்டரிச் சாப்பாடு வேணும்.
அளவுச்சாப்பாடு	எங்களுக்கு அளவுச் சாப்பாடு வேணும்.

f Transformation drill

(i) எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.	உங்களுக்குக் கோழிக்கறி பிடிக்குமா ?
எனக்கு மீன்கறி பிடிக்கும்.	உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?
எனக்கு மைசூர்பாகு கெடெக்கும்.	உங்களுக்கு மைசூர்பாகு கெடெக்குமா ?
எனக்கு ரசகுல்லா கெடெக்கும்.	உங்களுக்கு ரசகுல்லா கெடெக்குமா ?
எனக்கு மைசூர்பாகு இஷ்டம்.	உங்களுக்கு மைசூர்பாகு இஷ்டமா ?
எனக்கு ரசகுல்லா இஷ்டம்.	உங்களுக்கு ரசகுல்லா இஷ்டமா ?
(ii) எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.	உங்களுக்கு என்ன பிடிக்கும் ?
எனக்கு ரசகுல்லா கெடெக்கும்.	உங்களுக்கு என்ன கெடெக்கும் ?
எனக்கு மைசூர்பாகு இஷ்டம்.	உங்களுக்கு என்ன இஷ்டம் ?
(iii) எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.	எனக்குக் கோழிக்கறி பிடிக்காது.
எனக்கு ரசகுல்லா கெடெக்கும்.	எனக்கு ரசகுல்லா கெடெக்காது.
எனக்கு மீன்கறி பிடிக்கும்.	எனக்கு மீன்கறி பிடிக்காது.
எனக்கு மைசூர்பாகு இஷ்டம்.	எனக்கு மைசூர்பாகு இஷ்டம் இல்லெ.
எனக்கு ரசகுல்லா இஷ்டம்.	எனக்கு ரசகுல்லா இஷ்டம் இல்லெ.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : எங்களுக்குச்...............வேணும். (meal)
எங்களுக்குச் சாப்பாடு வேணும்.

(i) எனக்கு...............வேணும். (vegetarian meal)
(ii) அவருக்கு...............வேணும். (non-vegetarian meal)
(iii) எனக்கு...............போதாது. (plate meal)
(iv) எனக்கு...............பிடிக்காது. (fish curry)
(v) எனக்குக்...............பிடிக்கும். (chicken curry)
(vi) எனக்குச் ....வேணும். (chapathi)
(vii) உங்களுக்கு...............கெடெக்காது. (rasagulla)
(viii) உங்களுக்கு...............கெடெக்கும் (mysorepak)
(ix) எனக்குக் கோழிக்கறி...

(x) எனக்கு மீன்கறி............ (do not like)
(xi) எனக்கு ரசகுல்லா............ (be available)
(xii) எனக்கு மைசூர்பாகு............ (not available)

h. Change these sentences as in the examples.

Example : எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
எனக்குக் கோழிக்கறி பிடிக்காது.

(i) எனக்கு மீன்கறி பிடிக்கும்.
(ii) உங்களுக்கு ரசகுல்லா கெடெக்கும்.
(iii) எனக்கு மைசூர்பாகு இஷ்டம்.

Example : ஆமா, எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
உங்களுக்குக் கோழிக்கறி பிடிக்குமா ?

(i) ஆமா, எனக்கு மீன்கறி பிடிக்கும்.
(ii) ஆமா, எனக்கு ரசகுல்லா கெடெக்கும்.
(iii) ஆமா, எனக்குச் சப்பாத்தி இஷ்டம்.

i. Frame sixty sentences from the table given below

Example : எனக்கு மீன்கறி பிடிக்கும்.

நான் நீங்க அவரு	மீன்கறி கோழிக்கறி சப்பாத்தி ரசகுல்லா மைசூர்பாகு	பிடிக்கும் பிடிக்காது கெடெக்கும் கெடெக்காது

j. Answer these questions

(i) உங்களுக்கு மீன்கறி பிடிக்குமா ?
(ii) உங்களுக்குக் கோழிக்கறி பிடிக்குமா ?
(iii) உங்களுக்கு அளவுச் சாப்பாடு போதுமா ?
(iv) உங்களுக்குக் காலையிலே எத்தனை சப்பாத்தி வேணும் ?
ரெண்டு போதுமா ?
(v) மைசூரு ஹோட்டல்லே ரசகுல்லா கெடெக்குமா ?
(vi) உங்களுக்குச் சப்பாத்தி இஷ்டமா ?
(vii) உங்களுக்கு ஸ்வீட் இஷ்டம் இல்லையா ?

VOCABULARY

சாப்பாடு	'meal'	சைவ (ம்)	'vegetarian'
மிலிட்டரி	'non-vegetarian'	மீன்கறி	'fish curry'
பிடிக்கும்	'like'	பிடிக்காது	'do not like'
கோழிக்கறி	'chicken curry'	அளவுச் சாப்பாடு	'plate meal'

சப்பாத்தி	'chapathi'	ஸ்வீட்	'sweet'
ரசகுல்லா	'rasagulla, a kind of sweet dish'	கெடைக்கும்	'be available'
கெடைக்காது	'not avilable'	மைசூர்பாகு	'mysurepak, a kind of sweet dish'
இஷ்டம்	'like'		

GRAMMAR

3. 22. 78. As we have seen in the earlier lessons 19, 20 and 21 the defective verbs such as பிடிக்கும்/பிடிக்காது, கெடைக்கும்/கெடைக்காது and இஷ்டம்/இஷ்டம் இல்லெ do not have all the required forms of conjugation as other regular verbs. They are common to all genders and persons. The defective verb இஷ்டம்/இஷ்டம் இல்லெ signifies 'like/do not like'. Example :

> 3. 22. 78. எனக்குக் கோழிக்கறி பிடிக்கும்.
> எனக்கு மீன் கறி பிடிக்காது.

3. 22. 79. கெடைக்கும்/கெடைக்காது signifies 'be available/not available' Example :

> 3. 22. 79. உங்களுக்கு மைசூர்பாகு கெடைக்கும்.
> உங்களுக்கு மைசூர்பாகு கெடைக்காது.

3. 22. 80. இஷ்டம் 'liking' is originally a noun. It is used in the meaning of verb 'like'. The corresponding negative is expressed by இஷ்டம் and the negative verb இல்லெ 'not'. Example :

> 3. 22. 80. எனக்கு ரசகுல்லா இஷ்டம்.
> எனக்கு மைசூர்பாகு இஷ்டம் இல்லெ.

Note that in all the sentences (3. 22. 78, 3. 22. 79 and 3. 22. 80) the defective verbs occur with the dative subject.

Sandhi : சைவம் + சாப்பாடு → சைவ சாப்பாடு (Refer S.2 in 1.1)
சைவ + சாப்பாடு → சைவச் சாப்பாடு
மிலிட்டரி + சாப்பாடு → மிலிட்டரிச் சாப்பாடு
அளவு + சாப்பாடு → அளவுச்சாப்பாடு (Refer S. 4 in 1.2)
எனக்கு + கோழிக்கறி → எனக்குக் கோழிக்கறி (பிடிக்கும்)
(Refer S. 18 in 2.14)

UNIT 3

LESSON 23

DO YOU KNOW TAMIL ?

ↄIALOGUE

சுரேஷ் : நான் பேராசிரியரு சுந்தரத்தோட மாணவன். என் பேரு சுரேஷ்.	I am a student of Professor Sundaram. My name is Suresh.
மூர்த்தி : நான் உங்க பேராசிரியரோட சிநேகிதன். என் பேரு மூர்த்தி. உங்களுக்குத் தமிழ் தெரியுமா ?	I am a friend of your Professor. My name is Murthi. Do you know Tamil ?
சுரேஷ் : ஆமா, எனக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும்.	Yes, I know Tamil a little.
மூர்த்தி : உங்க தாய்மொழி என்ன?	What is your mother tongue ?

சுரேஷ் : என் தாய்மொழி இந்தி.	My mother tongue is Hindi.
மூர்த்தி : ஆங்கிலம் நல்லாப் புரியுமா ?	Do you understand English well?
சுரேஷ் : இல்லெ. எனக்கு ஆங்கிலம் நல்லாப் புரியாது.... இந்தி மாத்திரம் நல்லாப் புரியும்...உங்களுக்கு இந்தி புரியுமா ?	No. I do not understand English well. (I) understand only Hindi well. Do you understand Hindi?
மூர்த்தி : எனக்கு இந்தி நல்லாப் புரியாது...கொஞ்சம் புரியும்.	I do not understand Hindi well. (I) understand a little.
சுரேஷ் : பேராசிரியருக்கு மராத்தி புரியும். உங்களுக்கு மராத்தி புரியுமா ?	Professor (Sundaram) understands Marathi. Do you understand Marathi?
மூர்த்தி : இல்லெ, எனக்கு மராத்தி புரியாது.	No, I do not understand Marathi.

DRILLS

a. Variation drill

3. 23. 81. பேராசிரியருக்கு மராத்தி புரியும்.
எனக்கு இந்தி புரியும்.
எனக்கு ஆங்கிலம் புரியாது.
உங்களுக்கு ஆங்கிலம் புரியுமா ?

3. 23. 82. எனக்கு இந்தி மாத்திரம் புரியும்.
எனக்குத் தமிழ் மாத்திரம் புரியும்.
எனக்கு ஆங்கிலம் மாத்திரம் புரியாது.
எனக்கு மராத்தி மாத்திரம் புரியாது.

b. Build up drill

(i) பேராசிரியருக்கு மராத்தி புரியும்.	பேராசிரியருக்கு மராத்தி புரியும்.
புரியும்	புரியும்
மராத்தி	மராத்தி புரியும்
பேராசிரியருக்கு	பேராசிரியருக்கு மராத்தி புரியும்.
(ii) உங்களுக்கு ஆங்கிலம் புரியுமா ?	உங்களுக்கு ஆங்கிலம் புரியுமா ?
புரியுமா ?	புரியுமா ?
ஆங்கிலம்	ஆங்கிலம் புரியுமா ?
உங்களுக்கு	உங்களுக்கு ஆங்கிலம் புரியுமா ?

(iii) எனக்கு இந்தி மாத்திரம் புரியும்.	எனக்கு இந்தி மாத்திரம் புரியும்
புரியும்	புரியும்
இந்தி மாத்திரம்	இந்தி மாத்திரம் புரியும்
எனக்கு	எனக்கு இந்தி மாத்திரம் புரியும்

c. Expansion drill

(i) பேராசிரியருக்குப் புரியும்.	பேராசிரியருக்குப் புரியும்.
மராத்தி புரியும்	பேராசிரியருக்கு மராத்தி புரியும்.
(ii) எனக்குப் புரியாது.	எனக்குப் புரியாது.
ஆங்கிலம் புரியாது	எனக்கு ஆங்கிலம் புரியாது.
(iii) எனக்குப் புரியும்.	எனக்குப் புரியும்.
இந்தி மாத்திரம் புரியும்	எனக்கு இந்தி மாத்திரம் புரியும்.
(iv) எனக்குப் புரியாது.	எனக்குப் புரியாது.
ஆங்கிலம் மாத்திரம் புரியாது	எனக்கு ஆங்கிலம் மாத்திரம் புரியாது.

d. Question-Answer drill

(i) Q: ஆங்கிலம் நல்லாப் புரியுமா ?
A: இல்லெ, எனக்கு ஆங்கிலம் நல்லாப் புரியாது.
(ii) Q: உங்களுக்கு இந்தி புரியுமா ?
A: எனக்கு இந்தி நல்லாப் புரியாது.
(iii) Q: உங்களுக்கு மராத்தி புரியுமா ?
A: இல்லெ, எனக்கு மராத்தி புரியாது.
(iv) Q: உங்களுக்குத் தமிழ் தெரியுமா ?
A: ஆமா, எனக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும்.

e. Substitution drill

(i) எனக்கு மராத்தி புரியும்.	எனக்கு மராத்தி புரியும்.
Substitute	
இந்தி	எனக்கு இந்தி புரியும்.
ஆங்கிலம்	எனக்கு ஆங்கிலம் புரியும்.
மலையாளம்	எனக்கு மலையாளம் புரியும்.
கன்னடம்	எனக்குக் கன்னடம் புரியும்.
தெலுங்கு	எனக்குத் தெலுங்கு புரியும்.
(ii) எனக்கு ஆங்கிலம் புரியும்.	எனக்கு ஆங்கிலம் புரியும்.
Substitute	
புரியாது	எனக்கு ஆங்கிலம் புரியாது.
தெரியும்	எனக்கு ஆங்கிலம் தெரியும்.
தெரியாது	எனக்கு ஆங்கிலம் தெரியாது.
இஷ்டம்	எனக்கு ஆங்கிலம் இஷ்டம்.

(iii) உங்களுக்கு இந்தி புரியுமா ? | உங்களுக்கு இந்தி புரியுமா ?

Substitute

தெரியுமா ? | உங்களுக்கு இந்தி தெரியுமா ?
புரியாதா ? | உங்களுக்கு இந்தி புரியாதா ?
தெரியாதா ? | உங்களுக்கு இந்தி தெரியாதா ?
இஷ்டமா ? | உங்களுக்கு இந்தி இஷ்டமா ?
பிடிக்குமா ? | உங்களுக்கு இந்தி பிடிக்குமா ?
பிடிக்காதா ? | உங்களுக்கு இந்தி பிடிக்காதா ?

(iv) எனக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும். | எனக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும்.

Substitute

நல்லா | எனக்கு நல்லாத் தமிழ் தெரியும்.

f. Transformation drill

(i) எனக்கு இந்தி புரியும். | உங்களுக்கு இந்தி புரியுமா ?
எனக்கு ஆங்கிலம் புரியும். | உங்களுக்கு ஆங்கிலம் புரியுமா ?
பேராசிரியருக்கு மராத்தி புரியும். | பேராசிரியருக்கு மராத்தி புரியுமா?

(ii) எனக்கு இந்தி மாத்திரம் புரியும். | எனக்கு இந்தி மாத்திரம் புரியாது.
எனக்குத் தமிழ் மாத்திரம் புரியும். | எனக்குத் தமிழ் மாத்திரம் புரியாது.
எனக்கு ஆங்கிலம் மாத்திரம் புரியும். | எனக்கு ஆங்கிலம் மாத்திரம் புரியாது.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : எனக்கு..............தமிழ் தெரியும். (little)
எனக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும்.

(i) எனக்கு இந்தி.............. (understand)
(ii) எனக்கு ஆங்கிலம்.............. (do not understand)
(iii) எனக்கு இந்தி..........புரியும். (only)

h. Change these sentences as in the examples.

Example : எனக்கு மராத்தி புரியும்.
எனக்கு மராத்தி புரியாது.

(i) எனக்கு ஆங்கிலம் புரியும்.
(ii) எனக்கு இந்தி புரியும்.

Example : ஆமா, எனக்கு இந்தி புரியும்.
உங்களுக்கு இந்தி புரியுமா ?

(i) ஆமா, எனக்கு மராத்தி புரியும்.
(ii) ஆமா, எனக்கு ஆங்கிலம் புரியும்.

Example : இல்லெ, எனக்கு இந்தி புரியும்.
உங்களுக்கு இந்தி புரியாதா ?

(i) இல்லெ, எனக்கு மராத்தி புரியும்.
(ii) இல்லெ, எனக்கு ஆங்கிலம் புரியும்.

Example : எனக்கு இந்தி மாத்திரம் புரியும்.
எனக்கு இந்தி மாத்திரம் புரியாது.

(i) எனக்குத் தமிழ் மாத்திரம் புரியும்.
(ii) எனக்கு மராத்தி மாத்திரம் புரியும்.

i. Frame sixteen sentences from the table given below.

Example : எனக்கு இந்தி புரியும்.

நான் சுந்தரம்	இந்தி ஆங்கிலம் தமிழ் மராத்தி	புரியும் புரியாது

j. Here is some information. Put it all together in one sentence using the same order as in the example given below.

Example : நான்
ஆப்பிள்
வேணும்
எனக்கு ஆப்பிள் வேணும்.

(i) அப்பா
என்ன
வேணும்

(ii) யாரு
இந்தி
புரியும்

(iii) நீங்க
நாவல்
பிடிக்கும்
-ஆ

(iv) நீங்க
இந்தி
தெரியும்
-ஆ

(v) யாரு
மூணு
பழம்
வேண்டாம்

(vi) இவன்
பத்து
பழம்
போதும்

(vii) அவரு
வேறே
ஒண்ணும்
தெரியாது

(viii) நீங்க
எத்தனை
வீடு
வேணும்

(ix) நான்
பத்து
ரூபாய்
வேண்டாம்

(x) யாரு
ஒரு
டஜன்
பழம்
வேணும்

(xi) நீ
எத்தனை
ஆரஞ்சுப்பழம்
வேணும்

(xii) நீ
ஒரு
கடிகாரம்
போதாது
-ஆ

(xiii) நீங்க
எந்த
புஸ்தகம்
பிடிக்கும்

(xiv) நீ
ரெண்டு
பழம்
வேணும்
-ஆ

(xv) அவன்
ஆங்கிலம்
மாத்திரம்
தான்
புரியும்
-ஆ

(xvi) நீங்க
ரசகுல்லா
நல்லா
பிடிக்கும்
-ஆ

(xvii) நான்
நாலு
முக்கால்
ரூபாய்
வேணும்

(xviii) நீங்க
அந்த
பையன்
தெரியும்
-ஆ

(xix) நீங்க
சுந்தரம்
தெரியும்
-ஆ

(xx) அவரு
அவனை
தெரியாது

k. Answer these questions.

(i) நீங்க யாரோடெ மாணவரு ?
(ii) உங்க சிநேகிதரு பேரு என்ன ?
(iii) உங்க சிநேகிதருக்குத் தமிழ் தெரியுமா ?
(iv) உங்களுக்கு ஆங்கிலம் நல்லாப் புரியுமா ?

(v) உங்களுக்குப் பிரஞ்சு மொழி புரியுமா ?
(vi) உங்களுக்கு உங்க தாய்மொழி மாத்திரம் தான் தெரியுமா ?
(vii) உங்களுக்கு மராத்தி புரியாதா ?

VOCABULARY

புரியும்	'understand'	புரியாது	'do not understand'
மாத்திரம்	'only'	மராத்தி	'the Marathi language'

GRAMMAR

3. 23. 81. புரியும் is a defective verb which signifies 'understand'. This verb also does not have all the required forms of conjugation as other regular verbs. It is common to all genders and persons. Like other defective verbs this verb also obligatorily requires dative as its subject. Example :

3. 23. 81. பேராசிரியருக்கு மராத்தி புரியும்.

புரியாது 'do not understand' is the corresponding negative form of this defective verb. Example :

3. 23. 81. எனக்கு ஆங்கிலம் புரியாது.

2. 23. 82. மாத்திரம் 'only' is an adverb which is used in the meaning of the limitation of quantity. Example :

3. 23. 82. எனக்கு இந்தி மாத்திரம் புரியும்.

Sandhi : சுந்தரம் + ஒடெ → சுந்தரத்தோடெ (Refer S.17 in 2.13)
உங்களுக்கு + தமிழ் → உங்களுக்குத் தமிழ் (தெரியுமா)
எனக்கு + கொஞ்சம் → எனக்குக் கொஞ்சம் (தமிழ் தெரியும்.)
(Refer S. 18 in 2.14)
நல்லா + புரியுமா → நல்லாப் புரியுமா
நல்லா + புரியாது → நல்லாப் புரியாது (Refer S. 21 in 3.20)
பேராசிரியரு + ஒடெ → பேராசிரியரோடெ (Refer S.3 in 1.2)

UNIT 4

LESSON 24

VISITING A FRIEND'S HOUSE

DIALOGUE

மூர்த்தி : ஸார் ! வரலாமா ?	May (I) come (in), sir ?
சுந்தரம் : அட ! மூர்த்தியா ? வணக்கம் ! வாங்க. உக்காருங்க.	Oh ! Is he Mr. Murthi ? Vanakkam. Please come in, please be seated.
மூர்த்தி : சௌக்கியமா ?	How are you ?
சுந்தரம் : சௌக்கியம். நீங்க சௌக்கியமா இருக்கு-றீங்களா ?	Fine, How are you ?
மூர்த்தி : ஆமா....உங்க மனைவி வீட்டுலே இல்லையா ?	I am fine... Is your wife not at home?

சுந்தரம் : இருக்குறு... கமலா ! கொஞ்சம் இங்கே வாயேன்.	She is (at home)... Kamala, please come here for a while.
கமலா : என்னாங்க, என்ன வேணும் ?	What (is the matter)? What do (you) want ?
சுந்தரம் : இவரு மிஸ்டர் மூர்த்தி..	He is Mr. Murthi...
கமலா : எனக்குத் தெரியும். இந்துக் கல்லூரியிலெ பேராசிரியரா இருக்குறு.	I know (him). (He) is a professor in the Hindu college.
சுந்தரம் : சரி. ரெண்டு கப் காபி கொண்டு வா.	Well, bring two cups of coffee.
கமலா : சரிங்க.	Yes (I do).
மூர்த்தி : நாம இப்பக் கல்லூரிக்குப் போகலாமா ?	Shall we go to the college now ?
சுந்தரம் : மொதலாவது காபியெக் குடிங்க... அப்புறம், நாம கல்லூரிக்குப் போகலாம்.	Please drink the coffee first... Then we shall go to the college.
மூர்த்தி : சரி.	Alright.

DRILLS

a. Variation drill

4. 24. 83. நீ கொண்டு வா.
நீ வா.
நீ போ.
நீ குடி.

4. 24. 84. நீங்க கொண்டு வாங்க.
நீங்க வாங்க.
நீங்க போங்க.
நீங்க குடிங்க.

4. 24. 85. நீ கொண்டு வாயேன்.
நீ வாயேன்.
நீ குடியேன்.

4. 24. 86. நான் வரலாமா ?
நீங்க வரலாம்.

4. 24. 87. நாம கல்லூரிக்குப் போகலாம்.
நாம கல்லூரிக்குப் போகலாமா ?

4. 24. 88. நாம கல்லூரிக்குப் போகலாமா ?
சரி, நாம கல்லூரிக்குப் போகலாம்.

4. 24. 89. அப்புறம், நாம போகலாம்.
அப்புறம், நாம போகலாமா ?

b. Build up drill

(i) நீ கொண்டு வா.	நீ கொண்டு வா.
கொண்டு வா	கொண்டு வா
நீ	நீ கொண்டு வா.
(ii) நீங்க உட்காருங்க.	நீங்க உட்காருங்க.
உட்காருங்க	உட்காருங்க
நீங்க	நீங்க உட்காருங்க.
(iii) நீ குடியேன்.	நீ குடியேன்.
குடியேன்	குடியேன்
நீ	நீ குடியேன்.
(iv) நாம கல்லூரிக்கு போக-லாம்.	நாம கல்லூரிக்குப் போகலாம்.
போகலாம்	போகலாம்
கல்லூரிக்கு	கல்லூரிக்குப் போகலாம்
நாம	நாம கல்லூரிக்குப் போகலாம்.

c. Expansion drill

(i) நீ கொண்டுவா.	நீ கொண்டுவா.
காபி கொண்டு வா	நீ காபி கொண்டு வா.
ஒரு கப் கொண்டு வா	நீ ஒரு கப் காபி கொண்டுவா.
(ii) நீங்க குடிங்க.	நீங்க குடிங்க.
காபியைக் குடிங்க	நீங்க காபியைக் குடிங்க.
மொதலாவது குடிங்க	நீங்க மொதலாவது காபியைக் குடிங்க.
(iii) நீ வாயேன்.	நீ வாயேன்.
இங்கே வாயேன்	நீ இங்கே வாயேன்.
கொஞ்சம் வாயேன்	நீ கொஞ்சம் இங்கே வாயேன்.
(iv) நாம போகலாமா ?	நாம போகலாமா ?
கல்லூரிக்குப் போகலாமா ?	நாம கல்லூரிக்குப் போகலாமா ?
இப்பப் போகலாமா ?	நாம இப்பக் கல்லூரிக்குப் போகலாமா ?

d. Question-Answer drill

(i) Q : நான் வரலாமா ?
A : வாங்க.

(ii) Q : நாம கல்லூரிக்குப் போகலாமா ?
A : சரி, நாம கல்லூரிக்குப் போகலாம்.

(iii) Q : நீங்க சௌக்கியமா இருக்குறீங்களா ?
A : ஆமா, நான் சௌக்கியமா இருக்குறேன்.

e. Substitution drill

(i) நீ கொண்டு வா.	நீ கொண்டு வா.
Substitute	
வா	நீ வா.
போ	நீ போ.
உக்காரு	நீ உக்காரு.
குடி	நீ குடி.

(ii) நீங்க வாங்க.	நீங்க வாங்க.
Substitute and change the verb suitably.	
கொண்டு வா	நீங்க கொண்டு வாங்க.
போ	நீங்க போங்க.
குடி	நீங்க குடிங்க.

(iii) நாம போகலாம்.	நாம போகலாம்.
Substitute	
நாங்க	நாங்க போகலாம்.
நான்	நான் போகலாம்.
நீ	நீ போகலாம்.
நீங்க	நீங்க போகலாம்.
அவன்	அவன் போகலாம்.
அவ	அவ போகலாம்.
அவரு	அவரு போகலாம்.
அவங்க	அவங்க போகலாம்.
அது	அது போகலாம்.

(iv) நான் வரலாமா ?	நான் வரலாமா ?
Substitute and change the verb suitably.	
போ	நான் போகலாமா ?
உக்காரு	நான் உக்காரலாமா ?
கொண்டுவா	நான் கொண்டு வரலாமா ?

(v) நாம கல்லூரிக்குப் போகலாம். — நாம கல்லூரிக்குப் போகலாம்.

Substitute

அறெக்கு	நாம அறெக்குப் போகலாம்.
வீட்டுக்கு	நாம வீட்டுக்குப் போகலாம்.
ஹாஸ்டலுக்கு	நாம ஹாஸ்டலுக்குப் போகலாம்.
பள்ளிக்கூடத்துக்கு	நாம பள்ளிக்கூடத்துக்குப் போகலாம்.

f. Transformation drill

(i) நீ கொண்டு வா.	நீ கொண்டு வாயேன்.
நீ வா.	நீ வாயேன்.
நீ போ.	நீ போயேன்.
நீ குடி.	நீ குடியேன்.
(ii) நீ கொண்டு வா.	நீங்க கொண்டு வாங்க.
நீ வா.	நீங்க வாங்க.
நீ போ.	நீங்க போங்க.
நீ குடி.	நீங்க குடிங்க.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ .... (bring)
நீ கொண்டுவா.

(i) நீ .... (sit)
(ii) நீ .... (go)
(iii) நீ .... (come)
(iv) நீ .... (drink)
(v) நீ ஒரு............காபி கொண்டு வா. (cup)
(vi) நீ ஒரு கப்............கொண்டு வா. (coffee)
(vii) .... நாம போகலாம். (afterwards)
(viii) .... நாம போகலாம். (alright)

h. Fill in the blanks in the following sentences with the correct pronouns required.

(i) ....வாங்க.
(ii) ....போகலாம்.
(iii) ....கொண்டு வா.
(iv) ....குடியேன்.

i. Match the following

நீங்க	வா
நீ	குடிங்க
நீ	போகலாம்
நாம	கொண்டுவாயேன்

j. Fill in the blanks with the suitable case forms of the nouns given in parentheses.

(i) என் மனைவி................இருக்குறா. (வீடு)
(ii) இவரு..................பேராசிரியரா இருக்குறாரு.(கல்லூரி)
(iii) எனக்கு..................தெரியும். (மூர்த்தி)
(iv) நீங்க..................குடிங்க. (காபி)
(v) நாம..................போகலாம். (கல்லூரி)

k. Transform the following as in the models given below.

Model : நீ காபி கொண்டு வா.
நீங்க காபி கொண்டு வாங்க.

(i) நீ வா.
(ii) நீ காபியைக் குடி.
(iii) நீ உட்காரு.
(iv) நீ போ.

Model : நீ வா.
நீ வாயேன்.

(i) நீ காபி கொண்டு வா.
(ii) நீ போ.
(iii) நீ குடி.

Model : நீ வா.
நீ வரலாம்.

(i) நீ காபி கொண்டுவா.
(ii) நீ உட்காரு.
(iii) நீ போ.

Model : நான் வரலாம்.
நான் வரலாமா ?

(i) நாம போகலாம்.
(ii) நாம கொண்டு வரலாம்.
(iii) நான் உட்காரலாம்.

l. Frame sentences from the tables given below.

Example : நாம கல்லூரிக்குப் போகலாம்.

நாம	கல்லூரி	போகலாம் வரலாம்

Example : நீ வா

நீ	வா போ கொண்டுவா உட்காரு குடி

m. Join the following according to the sandhi rules.

(i) வா + ஏன் : ....
போ + ஏன : ....
கொண்டுவா + ஏன் : ....
குடி + ஏன் : ....

(ii) கல்லூரி + இலே : ....
காபி + இலே : ....

(iii) காபி + ஏ : ....
கல்லூரி + ஏ : ....

n. Answer these questions.

(i) வந்தா யாரு ?
(ii) மூர்த்தி என்னவா இருக்குறாரு ?
(iii) கமலா மூர்த்தியோட மனைவியா ?
(iv) மூர்த்தி எங்கே பேராசிரியரா இருக்குறாரு ?
(v) மிஸ்டர் மூர்த்தியைக் கமலாவுக்குத் தெரியுமா ?
(vi) சுந்தரம் சௌக்கியமா இருக்குறாரா ?

VOCABULARY

அட !	'an exclamation showing surprise'	வா	'come'
உட்காரு	'sit'	சௌக்கியமா ?	'how are you ?'
கொஞ்சம்	'for a while'	என்னங்க ?	'what is the matter ?'
சரி	'alright'	கப்	'cup'
காபி	'coffee'	கொண்டுவா	'bring'
போ	'go'	குடி	'drink'
அப்புறம்	'then, afterwards'		

GRAMMAR

4. 24. 83. Sentences like நீ கொண்டுவா 'you bring', நீ வா 'you come' etc., are called imperatives. Every imperative sentence has a predicate, but may or may not have a subject. That is, the subject is understood by the following imperative verb. This verb has no tense marker. Almost all the verbal roots can have the function of imperative in the second person non-honorific singular நீ 'you'. There is no explicit marker to indicate imperative in this type of sentences. Example:

4. 24. 83. நீ கொண்டுவா.
நீ வா.

4. 24. 84. The second person plural/singular honorific imperative is formed by adding the suffix -ங்க to the stem of a verb. Example:

4. 24. 84. நீங்க கொண்டுவாங்க.
நீங்க வாங்க.

4. 24. 85. -ஏன் is the particle which is used in the sense that the choice is left to the hearer to perform the action. Example:

4. 24. 85. நீ கொண்டு வாயேன்.
நீ ஆடேன்.

4. 24. 86. -லாம் is a kind of imperative marker which is used in the sense of granting permission to the hearer to carry out the action. As against the imperative markers, this is immediately suffixed to the infinitive form of a verb. This can cooccur with any noun or pronoun. They do not either agree in number or in gender. Example:

4. 24. 86. நான் வரலாமா ?
நீங்க வரலாம்.

4. 24. 87. The verbs such as வா 'come' and போ 'go' are that which always select a case in which the noun denotes 'location'. The noun and the case marker -க்கு in the following sentences express the meaning of direction.

4. 24. 87. நாம கல்லூரிக்குப் போகலாம்.
நாம கல்லூரிக்குப் போகலாமா ?

The sentences in 4.24.87 are otherwise called hortatory imperatives. In this, the imperative marker -லாம் is suffixed to the infinitive form of a verb in the first person inclusive plural.

போ 'go' and வா 'come' are irregular verbs. The infinitive forms for these verbs respectively are போக and வர.

4.24.88. சரி means 'alright'. See the usage of this form in the following example.

4. 24. 88. நாம கல்லூரிக்குப் போகலாமா ?
சரி (நாம கல்லூரிக்குப் போகலாம்.)

The affirmative is given in parentheses because it is redundant when சரி 'alright' is used

4.24.89. அப்புறம் 'then, afterwards etc.,' is a sentence adverb. Example

4. 24. 89. அப்புறம், நாம போகலாம்.

Sandhi :

இருக்குறீங்க + ஆ → இருக்குறீங்களா ?
(Refer S. 19 in 2.14)
வீடு + லே → வீட்டுலே (Refer S. 16 in 2.13)
மூர்த்தி + ஆ → மூர்த்தியா
கல்லூரி + இலே → கல்லூரியிலே (Refer S. 8 in 1.5)
இந்து + கல்லூரி → இந்துக்கல்லூரி (Refer S. 4 in 1.2)
கல்லூரிக்கு + போகலாமா → கல்லூரிக்குப் போகலாமா ?
(Refer S. 18 in 2.14)
காபியெ + குடிங்க — காபியெக் குடிங்க (Refer S. 20 in 2.17)

UNIT 4

LESSON 25

BUYING A BUS TICKET

DIALOGUE

மூர்த்தி : கண்டக்டர் ஸார்! விருது-நகருக்கு ஒரு டிக்கெட் வேணும்...இப்பப் பஸ் இருக்குதா ?	Conductor sir! I want a ticket to Virudhunagar... Is there (any) bus now (to Virudhunagar)?
கண்டக்டர் : ஆமாங்க...டிக்கெட் கொடுக்கட்டுமா ?	Yes, sir ... Shall (I) give ticket ?
மூர்த்தி : கொடுங்க. எனக்கு ஒரு அரை டிக்கெட்டும் தாங்க.	Please give. Please give me one half ticket too
கண்டக்டர் : நீங்க ஆறு ரூபாய் அம்பது பைசா கொடுங்க.	Please give six rupees and fifty paise.

மூர்த்தி : என்கிட்டெக் சில்லறெ இல்லெ... பத்து ரூபாய் நோட்டுத் தரட்டுமா ?

I do not have change... Shall (I) give a ten rupee note ?

கண்டக்டர் : சரி, கொடுங்க... இந்தாங்க டிக்கெட். சரியா இருக்குதா.... பாருங்க.

Alright, give (it) sir... Please take the ticket. Please check (the ticket).

மூர்த்தி : சரியா இருக்குதுங்க... மீதிப் பணம் ?

(It is) correct... (How about) the balance ?

கண்டக்டர் : சில்லறெ இல்லெ... பாஸெஞ்சர்ஸ் வரட்டும். நீங்க வேகமா வண்டி-யிலே ஏறுங்க.

(I) do not have change... Let passengers come. Please get into the bus quickly.

மூர்த்தி : வண்டி நம்பர் ?

(What is the) number of the bus ?

கண்டக்டர் : வண்டி நம்பர் நூத்தி ஆறு... டிரைவர் ! கௌம்பலாமா ?

The number of the bus is one hundred and six... Driver ! shall (we) start ?

டிரைவர் : சரி, கௌம்பலாம்.

Yes, (we) shall start

DRILLS

a. Variation drill

4. 25. 90. நான் கொடுக்கட்டுமா ?
நான் தரட்டுமா ?
நான் ஏறட்டுமா ?

4. 25. 91. பாஸெஞ்சர்ஸ் வரட்டும்.
பாஸெஞ்சர்ஸ் வரட்டுமா ?
பாஸெஞ்சர்ஸ் ஏறட்டுமா ?
பாஸெஞ்சர்ஸ் ஏறட்டும்.

4. 25. 92. நீங்க எனக்கு ஒரு டிக்கெட் தாங்க.
நீங்க எனக்கு ஒரு டிக்கெட் கொடுங்க.

4. 25. 93. நீங்க வண்டியிலே ஏறுங்க.
நீங்க ஸீட்லே உக்காருங்க.

b. Build up drill

(i) நான் கொடுக்கட்டுமா ?	நான் கொடுக்கட்டுமா ?
கொடுக்கட்டுமா ?	கொடுக்கட்டுமா ?
நான்	நான் கொடுக்கட்டுமா ?

(ii) பாஸெஞ்சர்ஸ் வரட்டும்.	பாஸெஞ்சர்ஸ் வரட்டும்.
வரட்டும்	வரட்டும்
பாஸெஞ்சர்ஸ்	பாஸெஞ்சர்ஸ் வரட்டும்.
(iii) நீங்க எனக்கு ஒரு டிக்கெட் தாங்க.	நீங்க எனக்கு ஒரு டிக்கெட் தாங்க.
தாங்க	தாங்க
டிக்கெட்	டிக்கெட் தாங்க
ஒரு	ஒரு டிக்கெட் தாங்க
எனக்கு	எனக்கு ஒரு டிக்கெட் தாங்க
நீங்க	நீங்க எனக்கு ஒரு டிக்கெட் தாங்க.
(iv) நீங்க வண்டியிலே ஏறுங்க.	நீங்க வண்டியிலே ஏறுங்க.
ஏறுங்க	ஏறுங்க
வண்டியிலே	வண்டியிலே ஏறுங்க
நீங்க	நீங்க வண்டியிலே ஏறுங்க

c. Expansion drill

(i) நான் கொடுக்கட்டுமா ? ஒரு டிக்கெட் கொடுக்கட்டுமா?	நான் கொடுக்கட்டுமா ? நான் ஒரு டிக்கெட் கொடுக்கட்டுமா ?
(ii) பாஸெஞ்சர்ஸ் ஏறட்டும். வண்டியிலே ஏறட்டும்.	பாஸெஞ்சர்ஸ் ஏறட்டும். பாஸெஞ்சர்ஸ் வண்டியிலே ஏறட்டும்.
(iii) நீங்க ஏறுங்க. வண்டியிலே ஏறுங்க வேகமா ஏறுங்க	நீங்க ஏறுங்க. நீங்க வண்டியிலே ஏறுங்க. நீங்க வேகமா வண்டியிலே ஏறுங்க.

d. Question-Answer drill

(i) Q: பத்து ரூபாய் தரட்டுமா ?
A: சரி, கொடுங்க.

(ii) Q: வண்டி நம்பர் என்ன ?
A: வண்டி நம்பர் நாத்தி ஆறு.

(iii) Q: டிரைவர் ! கௌம்பலாமா ?
A: சரி, கௌம்பலாம்.

e. Substitution drill

(i) நான் கொடுக்கட்டுமா ?	நான் கொடுக்கட்டுமா ?
Substitute and change the verb suitably.	
பார்	நான் பார்க்கட்டுமா ?
குடி	நான் குடிக்கட்டுமா ?
(ii) நான் தரட்டுமா ?	நான் தரட்டுமா ?
Substitute	
வா	நான் வரட்டுமா ?
போ	நான் போகட்டுமா ?
கொண்டுவா	நான் கொண்டு வரட்டுமா ?
உக்காரு	நான் உக்காரட்டுமா ?
ஏறு	நான் ஏறட்டுமா ?
(iii) பாஸஞ்சர்ஸ் வரட்டும்.	பாஸஞ்சர்ஸ் வரட்டும்.
Substitute	
அவன்	அவன் வரட்டும்.
இவன்	இவன் வரட்டும்.
அவ	அவ வரட்டும்.
இவ	இவ வரட்டும்.
அவரு	அவரு வரட்டும்.
இவரு	இவரு வரட்டும்.
அவங்க	அவங்க வரட்டும்.
இவங்க	இவங்க வரட்டும்.
அது	அது வரட்டும்.
இது	இது வரட்டும்.
(iv) பாஸஞ்சர்ஸ் வரட்டும்.	பாஸஞ்சர்ஸ் வரட்டும்.
Substitute and change the verb suitably	
தா	பாஸஞ்சர்ஸ் தரட்டும்.
கொண்டுவா	பாஸஞ்சர்ஸ் கொண்டுவரட்டும்.
போ	பாஸஞ்சர்ஸ் போகட்டும்.
உக்காரு	பாஸஞ்சர்ஸ் உக்காரட்டும்.
ஏறு	பாஸஞ்சர்ஸ் ஏறட்டும்.
(v) நாம கௌம்பலாம்.	நாம கௌம்பலாம்.
Substitute and change the verb suitably.	
வா	நாம வரலாம்.
தா	நாம தரலாம்.
கொண்டுவா	நாம கொண்டுவரலாம்.
ஏறு	நாம ஏறலாம்.
உக்காரு	நாம உக்காரலாம்.

(vi) நீங்க வண்டியிலே ஏறுங்க.	நீங்க வண்டியிலே ஏறுங்க.
Substitute	
பாருங்க	நீங்க வண்டியிலே பாருங்க.
உக்காருங்க	நீங்க வண்டியிலே உக்காருங்க.
வாங்க	நீங்க வண்டியிலே வாங்க.
போங்க	நீங்க வண்டியிலே போங்க.
கொண்டுவாங்க	நீங்க வண்டியிலே கொண்டு-வாங்க.

f. Transformation drill

(i) பாஸெஞ்சர்ஸ் வரட்டும்.	பாஸெஞ்சர்ஸ் வரட்டுமா ?
பாஸெஞ்சர்ஸ் ஏறட்டும்.	பாஸெஞ்சர்ஸ் ஏறட்டுமா ?
பாஸெஞ்சர்ஸ் கொடுக்கட்டும்.	பாஸெஞ்சர்ஸ் கொடுக்கட்டுமா ?
பாஸெஞ்சர்ஸ் போகட்டும்.	பாஸெஞ்சர்ஸ் போகட்டுமா ?
பாஸெஞ்சர்ஸ் கௌம்பட்டும்.	பாஸெஞ்சர்ஸ் கௌம்பட்டுமா ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ .... (give)
நீ கொடு.

(i) நீ .... (give)
(ii) நீ .... (check)
(iii) நீ .... (get into)
(iv) நீ .... (start)
(v) ....நம்பர் நூத்தி ஆறு. (bus, vehicle)
(vi) என் கிட்டெ...............இல்லெ. (change)
(vii) நீங்க .... + ஆ ஏறுங்க. (quickness)
(viii) நீங்க...............பைசா கொடுங்க. (fifty)
(ix) வண்டி நம்பர்...............(one hundred and six)

h. Fill in the blanks with the correct pronouns required.

(i) ....கௌம்பலாம்.
(ii) ....பாருங்க.
(iii) ....கொடுக்கட்டுமா ?
(iv) ....ஏறட்டும்.

i. Fill in the blanks with the suitable case forms of the nouns/pronouns given in parentheses.

(i) ....ஒரு டிக்கெட் வேணும். (நான்)
(ii) ....சில்லறெ இல்லெ. (நான்)
(iii) நீங்க...............ஏறுங்க. (வண்டி)

(iv) நீங்க...............உக்காருங்க. (ஸீட்)
(v) நீங்க ....டிக்கெட் தாங்க. (நான்)
(vi) நீங்க ....அம்பது பைசா கொடுங்க. (நான்)

j. Match the following.

நீங்க	கொடுக்கட்டுமா
நான்	ஏறட்டும்
பாஸெஞ்சர்ஸ்	தாங்க

k. Transform the following as in the models given below.

Model : பாஸெஞ்சர்ஸ் வரட்டும்.
பாஸெஞ்சர்ஸ் வரட்டுமா ?

(i) அவன் குடிக்கட்டும்.
(ii) அவன் வரட்டும்.
(iii) பாஸெஞ்சர்ஸ் ஏறட்டும்.

Model : நீங்க வண்டியிலே ஏறுங்க.
நீ வண்டியிலே ஏறு.

(i) நீங்க வண்டியிலே பாருங்க.
(ii) நீங்க வண்டியிலே உக்காருங்க.

l. Frame sentences from the tables given below.

Example : எனக்கு ஒரு டிக்கெட் வேணும்.

நான்	
நாங்க	
நாம	ஒரு டிக்கெட் வேணும்
நீ	
நீங்க	

Example : என்கிட்டெச் சில்லறெ இல்லெ.

நான்	
நீ	சில்லறெ இல்லெ
நாம	
அவன்	

Example : நீங்க கல்லூரிக்கு வாங்க.

நீங்க	கல்லூரி	வா போ கிளம்பு

Example : நீங்க வண்டியிலே ஏறுங்க.

நீங்க	வண்டி	ஏறு உட்காரு

Example : நீங்க எனக்குத் தாங்க.

நீங்க	நான் அவ அவன்	தா கொடு

m. Answer these questions.

(i) எத்தனை மணிக்குப் பஸ் இருக்குது ?
(ii) மூர்த்திக்கு ஒரு அரெ டிக்கெட்டும் வேணுமா ?
(iii) யாருகிட்டெச் சில்லறெ இல்லெ ?
(iv) வண்டி நம்பர் என்ன ?
(v) மூர்த்திக்கு என்ன வேணும் ?
(vi) மூர்த்திகிட்டெ எத்தனை ரூபாய் இருக்குது ?
(vii) உங்களுக்கு முழு டிக்கெட் வேணுமா ?
(viii) உங்க குழந்தெக்கு அரெ டிக்கெட் போதுமா ?
(ix) உங்ககிட்டெ இப்பச் சில்லறெ இருக்குதா ?

VOCABULARY

கண்டக்டர்	'conductor'	டிக்கெட்	'ticket'
பஸ்	'bus'	கொடு	'give'
அரெ டிக்கெட்	'half ticket'	தா	'give'
அம்பது	'fifty'	சில்லறெ	'change'
நோட்டு	'currency'	சரி	'correct'
பாரு	'check'	மீதிப்பணம்	'balance'
பாஸெஞ்சர்ஸ்	'passangers'	வேகம்	'quickness'
வண்டி	'bus, vehicle'	ஏறு	'get into'
நூத்தி ஆறு	'one hundred and six (106)'	டிரைவர்	'driver'
கிளம்பு	'start'		

GRAMMAR

4.25.90. The suffix -ட்டும் is used as a kind of imperative marker. It is added to the infinitives like the suffix -லாம் (Refer 4.24.86) and signifies permission to perform the action indicated by the verb as in the following examples.

வர — ட்டும் = வரட்டும் 'let (someone) come'
தர — ட்டும் = தரட்டும் 'let (someone) give'
ஏற — ட்டும் = ஏறட்டும் 'let (some one) get into'
கொடுக்க — ட்டும் = கொடுக்கட்டும் 'let (someone) give' etc.

This form of imperative is called permissive imperative. This is common to all numbers and genders. But it cooccurs only with the first and third persons. In the first person it always occurs in the form of yes-no questions. Example :

4. 25. 90. நான் கொடுக்கட்டுமா ?
நான் தரட்டுமா ?

The verb root தா 'give' has தர as its infinitive form.

4.25.91. In the third person, the permissive imperative occurs in the forms of affirmative and yes-no question. Example :

4. 25. 91. பாலசுந்தரம் வரட்டும்.
பாலசுந்தரம் ஏறட்டுமா ?

Tamil verbs are divided on the basis of their form into two main classes namely strong verbs and weak verbs. The strong verbs take -க்கு whenever they are inflected for various grammatical categories in the domain of verb phrase. On the contrary, various grammatical markers are immediately added to the weak verb stems. See the following examples :

Weak verbs	Strong verbs
வரட்டுமா ?	குடிக்கட்டுமா ?
ஏறட்டுமா ?	பார்க்கட்டுமா ?
தரட்டுமா ?	கொடுக்கட்டுமா ?

We shall see the distinction between strong and weak verbs in greater detail in Unit 5.

4.25.92. Consider the following sentences.

4. 25. 92. நீங்க எனக்கு ஒரு டிக்கெட் தாங்க.
நீங்க எனக்கு ஒரு டிக்கெட் கொடுங்க.

The verbs like தா 'give, கொடு 'give' etc., always select two cases in order namely indirect and direct objects. The indirect object is expressed by any noun and the case marker -க்கு or -அக்கு or -உக்கு. டிக்கெட் 'ticket' is the direct object. Here the objective marker -ஐ is not marked explicitly.

4.25.93. The verbs like ஏறு 'get into', உக்காரு 'sit' etc., will obligatorily select the locative case that is expressed by a noun and the case marker -லே or -இலே or -உலே. Example :

4. 25. 93. நீங்க வண்டியிலே ஏறுங்க.
நீங்க ஸீட்லே உக்காருங்க.

Sandhi 22. The consonants க், ச், த், and ப் are always doubled after the case suffix -கிட்டெ (locative of possession). Example :

என்கிட்டெ + சில்லறெ → என்கிட்டெச் சில்லறெ (இல்லெ)

சரி + ஆ → சரியா
வண்டி + இலே → வண்டியிலே (Refer S. 8 in 1.5)
மீதி + பணம் → மீதிப்பணம் (Refer S. 4 in 1.2)

UNIT 4

LESSON 26

BOARDING THE BUS

DIALOGUE

மூர்த்தி : கலா, வா; நாம வண்டி-யிலே ஏறலாம்.	Kala, come on ; we shall get into the bus.
கலா : அப்பா ! இந்த வண்டி நம்பர் என்ன ?	Daddy ! what is the number of this bus ?
மூர்த்தி : இந்த வண்டி நம்பர் நூத்தி ஆறு....மெதுவா ஏறம்மா.	The number of this bus is one hundred and six... Get into (the bus) slowly, dear.
கலா : அப்பா, நான் அந்த ஓரத்-துலே உக்காரட்டுமா ?	Daddy ! shall I sit in that corner ?
மூர்த்தி : வேண்டாம். அந்த ஓரத்-துலே உக்காராதே.... இந்த ஸீட்லே உக்காரு. இந்தாப்பா ! அந்தப் பொண்ணுக்குக் கொஞ்சம் எடம் கொடப்பா.	No. Do not sit in that corner... Sit on this seat, Look Mr ! (please) give some space to that girl.

கலா : அப்பா ! இது எக்ஸ்பிரஸ் வண்டியா, லோக்கலா ?	Daddy ! Is this an express bus or a local ?
மூர்த்தி : இது எக்ஸ்பிரஸ் வண்டி.	This is an express bus.
கண்டக்டர் : ஸார், அது சிக-ரெட்டா ?....பஸ்லே சிகரெட் பிடிக்காதீங்க.	Sir, is that (you are smoking) cigarette ? Don't smoke in the bus.
மூர்த்தி : சரியப்பா.	Alright, (conductor).

DRILLS

a. Variation drill

4. 26. 94. நீ கொடப்பா.
நீ கொடம்மா.
நீ ஏறம்மா.
நீ ஏறப்பா.

4. 26. 95. நீ உக்காராதே.
நீ ஏறுதே.
நீ சிகரெட் பிடிக்காதே.

4. 26. 96. நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.
நீங்க கொடுக்காதீங்க.
நீங்க ஏறுதீங்க.

b. Build up drill

(i) நீ கொடப்பா.	நீ கொடப்பா.
கொடப்பா	கொடப்பா
நீ	நீ கொடப்பா.
(ii) நீ ஏறம்மா.	நீ ஏறம்மா.
ஏறம்மா	ஏறம்மா
நீ	நீ ஏறம்மா.
(iii) நீ உக்காராதே.	நீ உக்காராதே.
உக்காராதே	உக்காராதே
நீ	நீ உக்காராதே.
(iv) நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.	நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.
பிடிக்காதீங்க.	பிடிக்காதீங்க.
சிகரெட்	சிகரெட் பிடிக்காதீங்க
நீங்க	நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.

c. Expansion drill

(i) நீ ஏறம்மா.	நீ ஏறம்மா.
வண்டியிலே ஏறம்மா	நீ வண்டியிலே ஏறம்மா.
மெதுவா ஏறம்மா	நீ மெதுவா வண்டியிலே ஏறம்மா.
(ii) இந்தப் பொண்ணுக்குக் கொடப்பா.	இந்தப் பொண்ணுக்குக் கொடப்பா.
எடம் கொடப்பா	இந்தப் பொண்ணுக்கு எடம் கொடப்பா.
கொஞ்சம் கொடப்பா	இந்தப் பொண்ணுக்குக் கொஞ்சம் எடம் கொடப்பா.
(iii) நீ உக்காராதே.	நீ உக்காராதே.
அந்த ஓரத்துலே உக்காராதே.	நீ அந்த ஓரத்துலே உக்காராதே.
(iv) நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.	நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.
பஸ்லே சிகரெட் பிடிக்காதீங்க	நீங்க பஸ்லே சிகரெட் பிடிக்காதீங்க.

d. Question-Answer drill

(i) Q: அப்பா, இந்த வண்டி நம்பர் என்ன ?
A: இந்த வண்டி நம்பர் நூத்தி ஆறு.

(ii) Q: நான் அந்த ஓரத்துலே உக்காரட்டுமா ?
A: வேண்டாம். அந்த ஓரத்துலே உக்காராதே.

(iii) Q: நான் அந்த ஓரத்துலே உக்காரட்டுமா ?
A: வேண்டாம். இந்த ஸீட்லே உக்காரு.

(iv) Q: இது எக்ஸ்பிரஸ் வண்டியா ? லோக்கலா ?
A: இது எக்ஸ்பிரஸ் வண்டி.

e. Substitution drill

(i) நீ கொடப்பா.	நீ கொடப்பா.
Substitute and change the verb suitably.	
ஏறு	நீ ஏறப்பா
வா	நீ வாப்பா.
உக்காரு	நீ உக்காரப்பா.
சிகரெட் பிடி	நீ சிகரெட் பிடியப்பா.
(ii) நீ ஏறம்மா.	நீ ஏறம்மா.
Substitute and change the verb suitably.	
கொடு	நீ கொடம்மா.
உக்காரு	நீ உக்காரம்மா.

போ	நீ போம்மா.
கொண்டுவா	நீ கொண்டு வாம்மா.

(iii) நீ ஏறுதே — நீ ஏறுதே.

Substitute and change the verb suitably.

உக்காரு	நீ உக்காராதே.
வா	நீ வராதே.
கொடு	நீ கொடுக்காதே.
தா	நீ தராதே.
சிகரெட் பிடி	நீ சிகரெட் பிடிக்காதே.

(iv) நீங்க சிகரெட் பிடிக்காதீங்க. — நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.

Substitute and change the verb suitably.

உக்காரு	நீங்க உக்காராதீங்க.
கொடு	நீங்க கொடுக்காதீங்க.
வா	நீங்க வராதீங்க.
போ	நீங்க போகாதீங்க.
தா	நீங்க தராதீங்க.

(v) நான் ஓரத்துலே உக்காரட்டுமா ? — நான் ஓரத்துலே உக்காரட்டுமா ?

Substitute

வண்டியிலே	நான் வண்டியிலே உக்காரட்டுமா?
பஸ்லே	நான் பஸ்லே உக்காரட்டுமா ?

f. Transformation drill

(i) நீ கொடு.	நீ கொடம்மா.
நீ உக்காரு.	நீ உக்காரம்மா.
நீ ஏறு.	நீ ஏறம்மா.
நீ போ.	நீ போம்மா.

(ii) நீ போ.	நீ போப்பா.
நீ ஏறு.	நீ ஏறப்பா.
நீ உக்காரு.	நீ உக்காரப்பா.
நீ கொடு.	நீ கொடப்பா.

(iii) நீ உக்காரு.	நீ உக்காராதே.
நீ ஏறு.	நீ ஏறுதே.
நீ கொடு.	நீ கொடுக்காதே.
நீ போ.	நீ போகாதே.

(iv) நீங்க போங்க.	நீங்க போகாதீங்க.
நீங்க ஏறுங்க.	நீங்க ஏறாதீங்க.
நீங்க கொடுங்க.	நீங்க கொடுக்காதீங்க.
நீங்க உக்காருங்க.	நீங்க உக்காராதீங்க.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ .... (smoke)
நீ சிகரெட் பிடி.

(i) நீ ....ஏறும்மா. (slowly)
(ii) நான்...............உக்காரட்டுமா ? (in the corner)

h. Match the following.

நீ	ஏறலாம்
நாம	உக்காரட்டுமா ?
நான்	உக்காராதே
நீ	சிகரெட் பிடிக்காதீங்க
நீங்க	கொடப்பா

i. Fill in the blanks in the following sentences with the correct pronouns required.

(i) ....வா.
(ii) ....ஏறலாம்.
(iii) ....உக்காரட்டுமா ?
(iv) ....உக்காராதே.
(v) ....கொடப்பா.
(vi) ....சிகரெட் பிடிக்காதீங்க.

j. Fill in the blanks with the suitable case forms of the nouns given in parentheses.

(i) நீ ....ஏறும்பா. (வண்டி)
(ii) நான்...............உக்காரட்டுமா ? (ஓரம்)
(iii) நாம...............ஏறலாம். (வண்டி)
(iv) அந்த...............எடம் கொடப்பா. (பொண்ணு)
(v) நீங்க...............சிகரெட் பிடிக்காதீங்க. (பஸ்)

k. Transform the following as in the models given below.

Model : நீ கொடு.
நீ கொடப்பா.

(i) நீ ஏறு.
(ii) நீ வா.
(iii) நீ தா.

Model : நீ வா.
நீ வாம்மா.

(i) நீ கொண்டுவா.
(ii) நீ உக்காரு.
(iii) நீ போ.
(iv) நீ கௌம்பு.

Model : நீ கொடு.
நீ கொடுக்காதே.

(i) நீ வா.
(ii) நீ தா.
(iii) நீ போ.
(iv) நீ கொண்டுவா.

Model : நீங்க வாங்க.
நீங்க வராதீங்க.

(i) நீங்க உக்காருங்க.
(ii) நீங்க ஏறுங்க.
(iii) நீங்க போங்க.

l. Join the following according to the sandhi rules.

(i) கொடு + அம்மா : ....
ஏறு + அப்பா : ....
உக்காரு + அம்மா : ....

(ii) ஓரம் + லே : ....
எடம் + லே : ....

(iii) வண்டி + இலே : ....
கல்லூரி + இலே : ....

m. Answer these questions.

(i) அந்த வண்டி நம்பர் என்ன ?
(ii) அந்தப் பொண்ணு பேரு என்ன ?
(iii) அது எக்ஸ்பிரஸ் வண்டியா ?
(iv) அது லோக்கலா ?

VOCABULARY

மெதுவா	'slowly'	ஓரத்துலே	'in the corner'
ஸீட்	'seat'	எடம்	'space, seat'
எக்ஸ்பிரஸ்	'express'	லோக்கல்	'local'
சிகரெட்	'cigarette'	சிகரெட் பிடி	'smoke'

GRAMMAR

4.26.94. The forms such as -அப்பா and -அம்மா are very commonly added to the imperative verbs to denote that the speaker shows deference, respect and affection to the hearer. They indicate male and female respectively. Example:

> **4. 26. 94.** நீ கொடப்பா.
> நீ ஏறம்மா.

Note that the final உ in the verb roots like கொடு 'give', ஏறு 'get into' etc., is elided when the forms -அப்பா and -அம்மா are added to them. Example:

> கொடு + அப்பா → கொடப்பா.
> ஏறு + அம்மா → ஏறம்மா.

-ப்பா and -ம்மா are the corresponding variants of -அப்பா and -அம்மா (Refer 1. 7. Notes). They normally occur with the verbs like வா 'come', போ 'go' etc. Example: வாம்மா, போம்மா etc.

4.26.95. The negative form of the imperative is indicated by the negative marker -ஆத்-. It is immediately added to the verb roots and followed by the imperative markers. -ஏ denotes singular imperative. Example:

> **4. 26. 95.** நீ உக்காராதே.
> நீ ஏறாதே.

4.26.96. -ஈங்க is the plural/singular honorific imperative marker which is added after the negative marker -ஆத்- Example:

> **4. 26. 96.** நீங்க சிகரெட் பிடிக்காதீங்க.
> நீங்க கொடுக்காதீங்க.

Like -ங்க the suffix -ஈங்க is also realized as -ஈங்கள் before the particle -ஏன். Example:

4.26.96. நீங்க கொடுக்காதீங்களேன்

Sandhi : ஓரம் + லே → ஓரத்துலே (Refer S. 17 in 2.13)
அந்த + பொண்ணு → அந்தப் பொண்ணு (Refer S. 4 in 1.2)
வண்டி + இலே → வண்டியிலே
வண்டி + ஆ → வண்டியா
சரி + அப்பா → சரியப்பா (Refer S. 8 in 1.5)

UNIT 5

LESSON 27

GOING TO THE MARKET

DIALOGUE

மூர்த்தி : வணக்கம், ஸார்.	Vanakkam, sir.
சுரேஷ் : வணக்கம். எங்கே போறீங்க ?	Vanakkam. Where (are you) going ?
மூர்த்தி : மார்க்கெட்டுக்குப் போறேன்.... நீங்க எங்கே போறீங்க ?	(I am) going to the market.. Where are you going ?
சுரேஷ் : நான் கடைவீதிக்குப் போறேன்.... நீங்க எங்கேயிருந்து வறீங்க ? ...வீட்டுலேயிருந்து வறீங்களா ?	I am going to the bazaar... Where are you coming from ?... (Are you) coming from the house ?

மூர்த்தி : ஆமா. நீங்களும் மார்க்கெட்டுக்கு வறீங்களா ?	Yes. Are you also coming to the market?
சுரேஷ் : இல்லெ. நான் மார்க்கெட்டுலேயிருந்துதான் வறேன்....நீங்க தினசரி மார்க்கெட்டுக்குப் போறீங்களா ?	No. I am coming from the market only... Are you going to the market daily?
மூர்த்தி : இல்லெ....பேராசிரியரு சுந்தரம் நாளெக்குக் கன்னியாகும்மரிக்குப் புறப்படுறாரா ?	No... Is Professor Sundaram leaving for Kanyakumari tomorrow?
சுரேஷ் : எனக்குத் தெரியாது.	I do not know.
மூர்த்தி : நீங்க கன்னியாகுமரிக்குப் போகலெயா ?	Are you not going to Kanyakumari?
சுரேஷ் : இல்லெ, நான் கன்னியாகுமரிக்குப் போகலெ.	No, I am not going to Kanyakumari.
மூர்த்தி : நான் வரட்டுமா ?	Shall I take leave (of you)?
சுரேஷ் : வாங்க.	(Please) do.

DRILLS

a. Variation drill

5\. 27. 97. நான் போறேன்.
நீங்க வறீங்க.
அவரு புறப்படுறாரு.

5\. 27. 98. நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.
நீங்க எங்கே போறீங்க ?
பேராசிரியரு கன்னியாகுமரிக்குப் புறப்படுறாரு.
நான் மார்க்கெட்டுக்குப் போகலெ.

5\. 27. 99. நான் வீட்டுலேயிருந்து வறேன்.
நீங்க எங்கேயிருந்து வறீங்க ?
பேராசிரியரு மார்க்கெட்டுலேயிருந்து புறப்படுறாரு.

b. Build up drill

(i) நான் போறேன்.	நான் போறேன்.
போறேன்	போறேன்
நான்	நான் போறேன்.

(ii) நீங்க வறீங்க.	நீங்க வறீங்க.
வறீங்க	வறீங்க
நீங்க	நீங்க வறீங்க.
(iii) அவரு புறப்படுறாரு.	அவரு புறப்படுறாரு.
புறப்படுறாரு	புறப்படுறாரு
அவரு	அவரு புறப்படுறாரு.
(iv) நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.	நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.
போறேன்	போறேன்
மார்க்கெட்டுக்கு	மார்க்கெட்டுக்குப் போறேன்
நான்	நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.
(v) நான் வீட்டுலேயிருந்து வறேன்.	நான் வீட்டுலேயிருந்து வறேன்.
வறேன்	வறேன்
வீட்டுலேயிருந்து	வீட்டுலேயிருந்து வறேன்.
நான்	நான் வீட்டுலேயிருந்து வறேன்.
(vi) நான் மார்க்கெட்டுக்குப் போகலெ.	நான் மார்க்கெட்டுக்குப் போகலெ.
போகலெ	போகலெ
மார்க்கெட்டுக்கு	மார்க்கெட்டுக்குப் போகலெ
நான்	நான் மார்க்கெட்டுக்குப் போகலெ.
(vii) நீங்க எங்கே போறீங்க ?	நீங்க எங்கே போறீங்க ?
எங்கே போறீங்க ?	எங்கே போறீங்க ?
நீங்க	நீங்க எங்கே போறீங்க ?
(viii) நீங்க எங்கேயிருந்து வறீங்க?	நீங்க எங்கேயிருந்து வறீங்க ?
எங்கேயிருந்து வறீங்க ?	எங்கேயிருந்து வறீங்க ?
நீங்க	நீங்க எங்கேயிருந்து வறீங்க ?

E Expansion drill

(i) நான் போறேன்.	நான் போறேன்.
கடைவீதிக்குப் போறேன்.	நான் கடைவீதிக்குப் போறேன்.
(ii) நீங்க போறீங்களா ?	நீங்க போறீங்களா ?
மார்க்கெட்டுக்குப் போறீங்களா ?	நீங்க மார்க்கெட்டுக்குப் போறீங்களா ?
தினசரி போறீங்களா ?	நீங்க தினசரி மார்க்கெட்டுக்குப் போறீங்களா ?

(iii) நான் போகலெ. கன்னியாகுமரிக்குப் போகலெ.	நான் போகலெ. நான் கன்னியாகுமரிக்குப் போகலெ.
(iv) நீங்க வறீங்களா ? வீட்டுலேயிருந்துவறீங்களா?	நீங்க வறீங்களா ? நீங்க வீட்டுலேயிருந்து வறீங்களா ?

d. Question-Answer drill

(i) Q: எங்கே போறீங்க ?
A: மார்க்கெட்டுக்குப் போறேன்.

(ii) Q: நீங்களும் மார்க்கெட்டுக்கு வறீங்களா ?
A: இல்லெ, நான் மார்க்கெட்டுலேயிருந்துதான் வறேன்.

(iii) Q: நீங்க தினசரி மார்க்கெட்டுக்குப் போறீங்களா ?
A: இல்லெ.

(iv) Q: நீங்க கன்னியாகுமரிக்குப் போகலெயா ?
A: இல்லெ. நான் கன்னியாகுமரிக்குப் போகலெ.

(v) Q: சுந்தரம் நாளெக்குக் கன்னியாகுமரிக்குப் புறப்படுறாரா ?
A: எனக்குத் தெரியாது.

e. Substitution drill

(i) நான் போறேன். Substitute and change the verb accordingly.	நான் போறேன்.
நீங்க	நீங்க போறீங்க.
அவரு	அவரு போறாரு.
(ii) நான் போறேன். Substitute and conjugate suitably.	நான் போறேன்
வா	நான் வறேன்.
தா	நான் தறேன்.
கொண்டுவா	நான் கொண்டுவறேன்.
உக்காரு	நான் உக்காருறேன்.
ஏறு	நான் ஏறுறேன்.
கௌம்பு	நான் கௌம்புறேன்.
புறப்படு	நான் புறப்படுறேன்.
(iii) நீங்க வறீங்க. Substitute and conjugate suitably	நீங்க வறீங்க ?
போ	நீங்க போறீங்க.

தா	நீங்க தறீங்க.
கொண்டுவா	நீங்க கொண்டுவறீங்க.
உக்காரு	நீங்க உக்காருறீங்க.
ஏறு	நீங்க ஏறுறீங்க.
கௌம்பு	நீங்க கௌம்புறீங்க.
புறப்படு	நீங்க புறப்படுறீங்க.
(iv) அவரு புறப்படுறாரு. Substitute and conjugate suitably.	அவரு புறப்படுறாரு.
வா	அவரு வர்ராரு.
போ	அவரு போறாரு.
கொண்டுவா	அவரு கொண்டுவர்ராரு.
தா	அவரு தர்ராரு.
உக்காரு	அவரு உக்காருறாரு.
ஏறு	அவரு ஏறுறாரு.
கௌம்பு	அவரு கௌம்புறாரு.
(v) நான் மார்க்கெட்டுக்குப் போறேன். Substitute	நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.
கடைவீதிக்கு	நான் கடைவீதிக்குப் போறேன்.
வீட்டுக்கு	நான் வீட்டுக்குப் போறேன்.
கன்னியாகுமரிக்கு	நான் கன்னியாகுமரிக்குப் போறேன்.
கல்லூரிக்கு	நான் கல்லூரிக்குப் போ[illegible]
(vi) நான் வீட்டுலேயிருந்து வரேன். Substitute	நான் வீட்டுலேயி[illegible]
கடைவீதியிலேயிருந்து	நான் கடைவீதியிலேயிருந்து வரேன்
கல்லூரியிலேயிருந்து	நான் கல்லூரியிலேயிருந்து வரேன்.
பள்ளிக்கூடத்துலேயிருந்து	நான் பள்ளிக்கூடத்துலேயிருந்து வரேன்.
ஹாஸ்டல்லேயிருந்து	நான் ஹாஸ்டல்லேயிருந்து வரேன்.

f. Transformation drill

(i) நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.	நீங்க எங்கே போறீங்க?
நான் வீட்டுக்குப் போறேன்.	நீங்க எங்கே போறீங்க?
நான் கடைவீதிக்கு வரேன்.	நீங்க எங்கே வறீங்க?

நான் வீட்டுக்கு வரேன்.	நீங்க எங்கே வறீங்க ?
நான் கன்னியாகுமரிக்குப் புறப்படுறேன்.	நீங்க எங்கே புறப்படுறீங்க ?
நான் கடைவீதிக்குப் புறப்படுறேன்.	நீங்க எங்கே புறப்படுறீங்க ?
(ii) நான் மார்க்கெட்டுலேயிருந்து போறேன்.	நீங்க எங்கேயிருந்து போறீங்க ?
நான் கடைவீதியிலேயிருந்து வரேன்.	நீங்க எங்கேயிருந்து வறீங்க ?
நான் கன்னியாகுமரியிலேயிருந்து புறப்படுறேன்.	நீங்க எங்கேயிருந்து புறப்படுறீங்க ?
(iii) நான் வீட்டுக்குப் போறேன்.	நான் வீட்டுக்குப் போகலெ.
நான் கடைவீதிக்கு வரேன்.	நான் கடைவீதிக்கு வரலெ.
நான் கன்னியாகுமரிக்குப் புறப்படுறேன்.	நான் கன்னியாகுமரிக்குப் புறப்படலெ.
(iv) நான் கன்னியாகுமரியிலேயிருந்து புறப்படுறேன்.	நான் கன்னியாகுமரியிலேயிருந்து புறப்படலெ.
நான் கடைவீதியிலேயிருந்து வரேன்.	நான் கடைவீதியிலேயிருந்து வரலெ.
நான் வீட்டுலேயிருந்து போறேன்.	நான் வீட்டுலேயிருந்து போகலெ.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான் .... க்கு போறேன். (market)
நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.

(i) நான்.............க்குப் போறேன். (bazaar)
(ii) நீங்க ....போறீங்க ? (where)
(iii) பேராசிரியரு..............க்கு புறப்படுறாரு ? (tomorrow)
(iv) நீங்க ....மார்க்கெட்டுக்குப் போறீங்களா ? (daily)
(v) பேராசிரியரு கன்னியாகுமரிக்கு..............றாரு ? (start)

h. Match the following.

நான்	புறப்படுறாரு
நீங்க	போறேன்
அவரு	வறீங்க

i. Fill in the blanks using the appropriate conjugated forms (present) of the verb போ 'go'

நான் கடைவீதிக்குப்...............
நீங்க எங்கே...............
அவரு எப்பப்...............

j. Write the words represented by the formula.

Example : போறேன்   போ + Present

(i) வா + Present : ....
(ii) புறப்படு + Present : ....

Example : மார்க்கெட்டுலேயிருந்து   மார்க்கெட்டு + Ablative of motion

(i) எங்கே + Ablative of motion : ....
(ii) வீடு + Ablative of motion : ....
(iii) கன்னியாகுமரி + Ablative of motion : ....

k. Change these sentences as in the examples.

Examples : நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.
நான் மார்க்கெட்டுக்குப் போகலெ.

(i) நான் கடைவீதிக்குப் போறேன்.
(ii) நான் வீட்டுக்குப் போறேன்.

Example : நான் கடைவீதிக்குப் போறேன்.
நீங்க எங்கே போறீங்க ?

(i) நான் கன்னியாகுமரிக்குப் போறேன்
(ii) நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.

Example : நான் வீட்டுலேயிருந்து வறேன்.
நீங்க எங்கேயிருந்து வறீங்க ?

(i) நான் கடைவீதியிலேயிருந்து வறேன்.
(ii) நான் கன்னியாகுமரியிலேயிருந்து வறேன்.

l. Join the following according to the sandhi rules.

(i) போறீங்க + ஆ : ....
வறீங்க + ஆ : ....
புறப்படுறீங்க + ஆ : ....
(ii) மார்க்கெட்டு + லேயிருந்து : ....
(iii) வீடு + லேயிருந்து : ....
(iv) கடைவீதி + இலேயிருந்து : ....
கன்னியாகுமரி + இலேயிருந்து : ....
(v) எங்கே + இருந்து : ....

m. Here is some information. Put it all together in one sentence using the same order as in the example given below.

Example : அவரு
மார்க்கெட்
போ
அவரு மார்க்கெட்டுக்குப் போறாரு.

(i) நீங்க
அறெ
போ
-ஆ

(ii) நான்
வீடு
கல்லூரியிலேயிருந்து
போ

(iii) நான்
என்
வீடு
போ

(iv) நீங்க
உங்க
ஊரு
புறப்படு
-ஆ

(v) நீங்க
எங்கேயிருந்து
ஹோட்டல்
வா

(vi) அவரு
வீட்டுலேயிருந்து
கன்னியாகுமரி
புறப்படு
-ஆ

n. Answer these questions.

(i) மூர்த்தி எங்கே போறாரு ?
(ii) சுரேஷ் எங்கே போறாரு ?
(iii) சுரேஷ் எங்கேயிருந்து வாராரு ?
(iv) மூர்த்தி தினசரி மார்க்கெட்டுக்குப் போறாரா ?
(v) நீங்க தினசரி மார்க்கெட்டுக்குப் போறீங்களா ?
(vi) நீங்க தினசரி எங்கேயிருந்து வாறீங்க ?

VOCABULARY

மார்க்கெட்	'market'	கடைவீதி	'bazaar'
தினசரி	'daily'	நாளைக்கு	'tomorrow'
புறப்படு	'leave/start'		

GRAMMAR

5.27.97. This unit in three lessons (27,28 and 29) deals with the verbs like வா 'come', போ 'go', புறப்படு 'leave' கௌம்பு 'start', etc. which form a class. This class of verbs determine the occurrence of the cases such as dative of direction, ablative of motion and sociative in a sentence. In addition to this the conjugation of the weak verbs in present and past tenses with their corres-

ponding negative is also elaborately dealt with. Attention is paid to the introduction of time adverb and the particle that is used with the imperative verbs.

Tamil verbs may be broadly classified into two, namely, finite and non-finite verbs. The finite verbs are those which distinguish the grammatical categories tense, person, number and gender. Other than tense, the grammatical categories person, number and gender are indicated by the pronominal suffixes. Thus a finite verb in Tamil consists of a verb stem, tense marker and pronominal suffix. This may be represented as follows

Verb stem + Tense + Pronominal suffix

In Tamil, all the verb forms are derived from two kinds of stems. The first kind of stem is identical in form with the root. It is called weak verb. வா 'come', போ 'go', புறப்படு 'start' etc., are weak verbs. The tense markers are immediately added to them. The second kind of stem is formed by the verb root and the suffix -க்கு. It is called strong verb. இரு 'be' is a strong verb. Its verb stem is formed by the root and the suffix -க்கு i. e., இருக்கு- (Refer 2.13) This classification of verb stems in general identify the tense markers with which they can occur.

There are three tenses in Tamil. They are (i) present tense (ii) past tense and (iii) future tense. The verbs are conjugated in these tenses along with pronominal suffixes. The present tense marker is -ற்-. It is added to the weak and strong verb stems and followed by the pronominal suffix that shows a relationship with the subject. The present tense marker may be added as follows :

போ + ற் + ஏன் = போறேன்.
வ + ற் + ஈங்க = வறீங்க.
புறப்படு + ற் + ஆரு = புறப்படுறாரு.

Note that the வா 'come', has an alternant வ before the present tense marker -ற-.

As we mentioned earlier each finite verb in Tamil establishes a relationship with its subject in terms of person, number and gender. This is indicated by the terminations in the finite verbs called pronominal suffixes and the relationship is known as 'concord'. The pronominal suffixes vary for person and number in the case of third person.

Therefore, subjects are mostly understood rather than overtly expressed in Tamil. A few pronominal suffixes are listed below along with their subject pronouns.

நான் -ஏன்
நீங்க -ஈங்க
அவரு -ஆரு

Example :

5. 27. 97. நான் போறேன்.
நீங்க வரீங்க.
அவரு புறப்படுறாரு.

5.27.98. We noticed in the lesson 2.13 that the array of cases are inherently understood by the verb that holds a relationship with them. Let us consider the following sentences

5. 27. 98. நான் மார்க்கெட்டுக்குப் போறேன்.
பேராசிரியரு கன்னியாகுமரிக்குப் புறப்படுறாரு.

The verbs like போ 'go', வா 'come', புறப்படு 'start' etc., establish a relationship with the case forms மார்க்கெட்டுக்கு 'the market-to', கன்னியாகுமரிக்கு 'Kanyakumari-to' etc., in the meaning of direction. This may be called dative of direction. It is expressed mostly by a place noun and the case marker -க்கு i.e., மார்க்கெட்டு + க்கு மார்க்கெட்டுக்கு, கன்னியாகுமரி + க்கு கன்னியா-குமரிக்கு. They are correspondingly questioned by எங்கே 'where'. Example :

5. 27. 98. நீங்க எங்கே போறீங்க ?

The present tense negative is commonly expressed by the infinitive followed by -லே. Example :

வர + லே — வரலே 'do/does not come'
போக + லே — போகலே 'do/does not go'
புறப்பட + லே — புறப்படலே 'do/does not start'

It does not distinguish any person or number or gender.

Example :

5. 27. 98. நான் மார்க்கெட்டுக்குப் போகலே.
(நீங்க மார்க்கெட்டுக்குப் போகலே.)
(அவரு மார்க்கெட்டுக்குப் போகலே, etc.)

5.27.99. The forms like வீட்டுலேயிருந்து 'the house-from' மார்க்கெட்டுலே-யிருந்து 'the market-from' etc., are also understood by the above mentioned verbs in sentences. This may be called ablative of motion. It is expressed by a noun, the locative case marker -லே, -இலே, -உலே in the case of inanimate nouns and -கிட்டெ in the case of animate (Refer 7.35) and the particle -இருந்து. (i.e. -லேயிருந்து, -இலேயிருந்து, -உலேயிருந்து and -கிட்டெ-யிருந்து) Example :

5. 27. 99. நான் வீட்டுலேயிருந்து வரேன்.
பேராசிரியரு மார்க்கெட்டுலேயிருந்து புறப்படுறாரு.

The corresponding question form of the ablative of motion is எங்கேயிருந்து 'where-from'. Example :

5. 27. 99. நீங்க எங்கேயிருந்து வரீங்க ?

It is important to note that the particle -இருந்து alone is suffixed to எங்கே 'where' (as well as இங்கே 'here' and அங்கே 'there') without the locative case marker.

Sandhi : வறீங்க + ஆ → வறீங்களா
போறீங்க + ஆ → போறீங்களா (Refer S.19 in 2.14)

மார்க்கெட்டுக்கு + போறேன் → மார்க்கெட்டுக்குப் போறேன்
கடைவீதிக்கு + போறேன் → கடைவீதிக்குப் போறேன்
எனக்கு + தெரியாது → எனக்குத் தெரியாது (Refer S.18 in 2.14)
வீடு + லேயிருந்து → வீட்டுலேயிருந்து (Refer S.16 in 2.13)
போகலெ + ஆ → போகலெயா (Refer S.8 in 1.5)

UNIT 5

LESSON 28

PREPARATION TO GO TO KANYAKUMARI

DIALOGUE

சுரேஷ் : பேராசிரியரு எப்பக் கன்னியாகுமரிக்குப் புறப்படுறாரு ?	When is Professor (Sundaram) leaving for Kanyakumari ?
கமலா : நாளைக்குக் காலையிலே பத்து மணிக்குப் புறப்படுறாரு.	(He) starts tomorrow at ten o'clock in the morning.
சுரேஷ் : நீங்களும் பேராசிரியரு கூடப் போறீங்களா ?	Are you also going with Professor (Sundaram) ?
கமலா : ஆமா. நானும் பேராசிரியரு கூடப் போறேன்.	Yes, I am also going with Professor (Sundaram).

சுரேஷ் : மிஸ்டர் ராமுவும் உங்க கூடக் கன்னியா-குமரிக்கு வர்றாரா ?	Is Mr. Ramu also coming to Kanya-kumari with you?
கமலா : ஆமா. அவன் மைசூரி-லேயிருந்து இன்னைக்கு ராத்திரி அவன் மனைவிகூட மதுரெக்கு வர்றான்.	Yes. He is coming to Madurai tonight from Mysore along with his wife.
சுரேஷ் : அவங்க மதுரெயிலே-யிருந்து உடனே கன்னியாகுமரிக்குக் கௌம்புறாங்க, இல்லே ?	They are starting to Kanyakumari immediately from Madurai, are they not ?
கமலா : ஆமா... நீங்களும் எங்க-கூட வாங்களேன்.	Yes... Why don't you also come with us ?
சுரேஷ் : இல்லெ. எனக்கு நெறெய வேலெ இருக்குது. நான் நாளெக்குக் காலெயிலே பஸ் ஸ்டாண்டுக்கு வர்றேன்.	No. I have a lot of work. I will come to the bus stand tomorrow morning.
கமலா : நீங்க யாருகூட வர்றீங்க ?	With whom are you coming to the bus stand ?
சுரேஷ் : நான் நடராஜாகூட வர்றேன்...வரட்டுமா ?	I will come with Mr. Natarajah. Shall I take leave (of you) ?
கமலா : வாங்க	Please do.

DRILLS

a. Variation drill

5. 28. 100. நான் வர்றேன்.
நீங்க வர்றீங்க.
அவன் வர்றான்.
அவரு புறப்படுறாரு.
இவங்க கௌம்புறாங்க.

5. 28. 101. நான் பேராசிரியரு கூடப் போறேன்.
நீங்க பேராசிரியருகூடப் போறீங்களா ?
ராமு உங்ககூட வர்றாரா ?
நீங்க யாருகூட வர்றீங்க ?

5. 28. 102. நான் நண்பன்கூட ஹாஸ்டல்லேயிருந்து பஸ்-ஸ்டாண்டுக்கு வரேன்.
நீங்க யாருகூட ஹாஸ்டல்லேயிருந்து பஸ்ஸ்டாண்-டுக்கு வரீங்க ?
அவன் மனைவிகூட மைசூருலேயிருந்து மதுரெக்கு வரான்.

5. 28. 103. நான் நாளெக்குக் காலெயிலே வரேன்.
பேராசிரியரு நாளெக்குக் காலெயிலே புறப்படுறாரு.
பேராசிரியரு எப்பப் புறப்படுறாரு.

5. 28. 104. நீங்க எங்ககூட வாங்களேன்.
நீங்களும் எங்ககூட வாங்களேன்.

b. Build up drill

(i) அவன் வரான்.	அவன் வரான்.
வரான்	வரான்
அவன்	அவன் வரான்.
(ii) இவங்க கெளம்புறாங்க.	இவங்க கெளம்புறாங்க.
கெளம்புறாங்க	கெளம்புறாங்க
இவங்க	இவங்க கெளம்புறாங்க.
(iii) நான் பேராசிரியருகூடப் போறேன்.	நான் பேராசிரியருகூடப் போறேன்.
போறேன்	போறேன்
பேராசிரியருகூட	பேராசிரியருகூடப் போறேன்
நான்	நான் பேராசிரியருகூடப் போறேன்.
(iv) நீங்க யாருகூட வரீங்க ?	நீங்க யாருகூட வரீங்க ?
யாருகூட வரீங்க ?	யாருகூட வரீங்க ?
நீங்க	நீங்க யாருகூட வரீங்க ?
(v) பேராசிரியரு நாளெக்குக் காலெயிலே புறப்படுறாரு.	பேராசிரியரு நாளெக்குக் காலெயிலே புறப்படுறாரு.
புறப்படுறாரு	புறப்படுறாரு
காலெயிலே	காலெயிலே புறப்படுறாரு
நாளெக்கு	நாளெக்குக் காலெயிலே புறப்படுறாரு
பேராசிரியரு	பேராசிரியரு நாளெக்குக் காலெயிலே புறப்படுறாரு.

(vi) நீங்களும் எங்ககூட வாங்களேன்	நீங்களும் எங்ககூட வாங்களேன்.
வாங்களேன்	வாங்களேன்
எங்ககூட	எங்ககூட வாங்களேன்
நீங்களும்	நீங்களும் எங்ககூட வாங்களேன்.

c. Expansion drill

(i) நான் வரேன்.	நான் வரேன்.
பஸ்ஸ்டாண்டுக்கு வரேன்	நான் பஸ்ஸ்டாண்டுக்கு வரேன்.
ஹாஸ்டல்லேயிருந்து வரேன்	நான் ஹாஸ்டல்லேயிருந்து பஸ்ஸ்டாண்டுக்கு வரேன்.
நாசய்யாகூட வரேன்	நான் நாசய்யாகூட ஹாஸ்டல்லே-யிருந்து பஸ்ஸ்டாண்டுக்கு வரேன்.
(ii) பேராசிரியரு புறப்படுறாரு.	பேராசிரியரு புறப்படுறாரு.
பத்துமணிக்குப் புறப்படுறாரு.	பேராசிரியரு பத்துமணிக்குப் புறப்படுறாரு.
காலையிலே புறப்படுறாரு	பேராசிரியரு காலையிலே பத்து மணிக்குப் புறப்படுறாரு.
நாளைக்குப் புறப்படுறாரு	பேராசிரியரு நாளைக்குக் காலை-யிலே பத்துமணிக்குப் புறப்-படுறாரு.

d. Question-Answer drill

(i) Q: பேராசிரியரு எப்பக் கன்னியாகுமரிக்குப் புறப்படுறாரு?
A: நாளைக்குக் காலையிலே பத்துமணிக்குப் புறப்படுறாரு.

(ii) Q: நீங்களும் பேராசிரியருகூடப் போறீங்களா?
A: ஆமா, நான் பேராசிரியருகூடப் போறேன்.

(iii) Q: ராமுவும் உங்ககூடக் கன்னியாகுமரிக்கு வர்றாரா?
A: ஆமா.

(iv) Q: அவங்க மதுரையிலேயிருந்து உடனே கன்னியாகுமரிக்குக் கௌம்புறாங்க, இல்லே?
A: ஆமா.

e. Substitution drill

(i) அவன் போறான்.	அவன் போறான்.
Substitute and change the verb accordingly.	
நான்	நான் போறேன்.
நீங்க	நீங்க போறீங்க.

இவன்	இவன் போறான்.
அவரு	அவரு போறாரு.
இவரு	இவரு போறாரு.
அவங்க	அவங்க போறாங்க.
இவங்க	இவங்க போறாங்க.

(ii) அவன் போறான். — அவன் போறான்.

Substitute and conjugate suitably.

வா	அவன் வறான்.
கொண்டுவா	அவன் கொண்டுவறான்.
தா	அவன் தறான்.
புறப்படு	அவன் புறப்படுறான்.
கௌம்பு	அவன் கௌம்புறான்.
உக்காரு	அவன் உக்காருறான்.
ஏறு	அவன் ஏறுறான்.

(iii) அவங்க கௌம்புறாங்க. — அவங்க கௌம்புறாங்க.

Substitute and conjugate suitably

புறப்படு	அவங்க புறப்படுறாங்க.
உக்காரு	அவங்க உக்காருறாங்க.
ஏறு	அவங்க ஏறுறாங்க.
வா	அவங்க வறாங்க.
கொண்டுவா	அவங்க கொண்டுவறாங்க.
தா	அவங்க தறாங்க.
போ	அவங்க போறாங்க.

(iv) ராமு உங்ககூட வறாரா ? — ராமு உங்ககூட வறாரா ?

Substitute

பேராசிரியருகூட	ராமு பேராசிரியருகூட வறாரா ?
எங்ககூட	ராமு எங்ககூட வறாரா ?
மனைவிகூட	ராமு மனைவிகூட வறாரா ?

(v) பேராசிரியரு காலேஜிலே புறப்படுறாரு. — பேராசிரியரு காலேஜிலே புறப்படுறாரு.

Substitute

ராத்திரி	பேராசிரியரு ராத்திரி புறப்படுறாரு.
நாளைக்கு	பேராசிரியரு நாளைக்குப் புறப்படுறாரு.
இன்னைக்கு	பேராசிரியரு இன்னைக்குப் புறப்படுறாரு.

(vi) பேராசிரியரு பத்துமணிக்குப் புறப்படுறாரு.	பேராசிரியரு பத்துமணிக்குப் புறப்படுறாரு.
Substitute	
ஒருமணிக்கு	பேராசிரியரு ஒருமணிக்குப் புறப்படுறாரு.
ரெண்டுமணிக்கு	பேராசிரியரு ரெண்டுமணிக்குப் புறப்படுறாரு.
மூணுமணிக்கு	பேராசிரியரு மூணுமணிக்குப் புறப்படுறாரு.
நாலுமணிக்கு	பேராசிரியரு நாலுமணிக்குப் புறப்படுறாரு.
அஞ்சுமணிக்கு	பேராசிரியரு அஞ்சுமணிக்குப் புறப்படுறாரு.
(vii) நீங்களும் வாங்களேன்.	நீங்களும் வாங்களேன்.
Substitute and change the verb suitably.	
போ	நீங்களும் போங்களேன்.
தா	நீங்களும் தாங்களேன்.
கொண்டுவா	நீங்களும் கொண்டுவாங்களேன்.
புறப்படு	நீங்களும் புறப்படுங்களேன்.
கௌம்பு	நீங்களும் கௌம்புங்களேன்.
உக்காரு	நீங்களும் உக்காருங்களேன்.
ஏறு	நீங்களும் ஏறுங்களேன்.

f Transformation drill

(i) நான் பேராசிரியருகூடப் போறேன்.	நீங்க யாருகூடப் போறீங்க ?
நான் நரசய்யா கூட வறேன்.	நீங்க யாருகூட வறீங்க ?
நான் ராமு கூட வறேன்.	நீங்க யாருகூட வறீங்க ?
(ii) நீங்க வாங்க.	நீங்க வாங்களேன்.
நீங்க போங்க.	நீங்க போங்களேன்.
நீங்க புறப்படுங்க.	நீங்க புறப்படுங்களேன்.
நீங்க தாங்க.	நீங்க தாங்களேன்.
(iii) நான் நாளெக்கு வறேன்.	நீங்க எப்ப வறீங்க ?
நான் காலெயிலே புறப்படுறேன்.	நீங்க எப்பப் புறப்படுறீங்க ?
நான் நாளெக்குப் போறேன்.	நீங்க எப்பப் போறீங்க ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : பேராசிரியரு............... புறப்படுறாரு.
(in the morning)
பேராசிரியரு **காலையிலே** புறப்படுறாரு.

(i) அவன் .... வறான். (today)
(ii) அவன் .... வறான். (night)
(iii) அவங்க .... கௌம்புறாங்க. (immediately)
(iv) எனக்கு .... வேலெ இருக்குது. (a lot of)
(v) எனக்கு நெறெய .... இருக்குது. (work)

h. Match the following.

நான்	வறான்
நீங்க	கௌம்புறாங்க
அவன்	புறப்படுறான்
இவன்	போறேன்
அவரு	புறப்படுறாங்க
இவரு	வறீங்க
அவங்க	புறப்படுறாரு
இவங்க	வறாரு

i. Fill in the blanks using the appropriate conjugated forms (present) of the verb போ 'go'.

(i) நான் நாளைக்குப் ....
(ii) நீங்க பேராசிரியருகூடப் ....
(iii) அவன் மைசூருலேயிருந்து ....
(iv) அவரு எப்பப் ....
(v) அவங்க கன்னியாகுமரிக்குப் ....

j. Write the words represented by the formula.

Example: **உங்ககூட** நீங்க + Sociative

(i) நான் + Sociative : ....
(ii) நாங்க + Sociative : ....
(iii) நாம + Sociative : ....
(iv) நீ + Sociative : ....
(v) அவன் + Sociative : ....
(vi) அவ + Sociative : ....
(vii) அவரு + Sociative : ....
(viii) அவங்க + Sociative : ....
(ix) அது + Sociative : ....

k. Change these sentences as in the examples

Example : அவன் பரிமளாகூட வரான்.
அவன் யாருகூட வரான் ?

(i) ராமு உங்ககூட வராரு.
(ii) நீங்க எங்ககூட வரீங்க.

Example : அவன் மதுரெக்கு வரான்.
அவன் எங்கே வரான் ?

(i) ராமு கன்னியாகுமரிக்கு வராரு.
(ii) அவங்க கன்னியாகுமரிக்குக் கௌம்புறாங்க.

Examples நீங்க வாங்க.
நீங்க வாங்களேன்.

(i) நீங்க கொண்டுவாங்க.
(ii) நீங்க தாங்க.
(iii) நீங்க கௌம்புங்க.

Example : பேராசிரியரு காலெயிலே புறப்படுறாரு.
பேராசிரியரு எப்பப் புறப்படுறாரு ?

(i) பேராசிரியரு நாளெக்குப் புறப்படுறாரு.
(ii) அவங்க பத்து மணிக்குக் கௌம்புறாங்க.
(iii) ராமு ராத்திரி வரான்.

l. Answer these questions

(i) பேராசிரியரு எப்பக் கன்னியாகுமரிக்குப் புறப்படுறாரு ?
(ii) ராதா பேராசிரியரு கூடப் போறாங்களா ?
(iii) நீங்க கன்னியாகுமரிக்குப் போறீங்களா ?
(iv) ராமு மைசூருலேயிருந்து யாருகூட வரான் ?
(v) யாருக்கு நெறைய வேலெ இருக்குது ?
(vi) நீங்களும் உங்க மனெவிகூடக் கன்னியாகுமரிக்குப் போறீங்களா ?

VOCABULARY

இன்னெக்கு	'to day'	உடனே	'immediately'
நெறைய	'a lot of/much'	வேலெ	'work'
பஸ் ஸ்டாண்டு	'bus stand'		

GRAMMAR

5.28.100. –ஆன் and –ஆங்க are the pronominal suffixes of the masculine singular nouns/pronouns and the human plural nouns/pronouns respectively (Refer 5.27.97). Example :

5. 28. 100. அவன் வருன்.
இவங்க கௌம்புறுங்க.

5.28.101. As it is understood in the preceding lessons, the same class of verbs consisting of வா 'come' போ 'go', புறப்படு 'start' etc., may also have the sociative case in a sentence. It is formed by a noun and the sociative marker -கூட. Example:

5. 28. 101. நான் பேராசிரியரு கூடப் போறேன்.
நீங்க யாருகூட வறீங்க ?

5.28.102. We had noticed in the lesson (2.13) that the same case connot occur more than once in a simple sentence. But different cases can be sequenced in a simple sentence as in the following example. This does not mean that all the cases can be combined with each other.

5. 28. 102. நான் நரசய்யாகூட ஹாஸ்டல்லேயிருந்து பஸ் ஸ்டாண்டுக்கு வறேன்.

Note that cases such as sociative (நரசய்யாகூட 'Narasaiah-with'), ablative of motion (ஹாஸ்டல்லேயிருந்து 'hostel-from') and dative of direction (பஸ் ஸ்டாண்டுக்கு 'bus stand-to') are arranged in order in the above sentence.

5.28.103. நாளெக்கு 'tomorrow', காலெயிலே 'in the morning' are time adverbs. In Tamil, they are mostly expressed by nouns denoting time and the locative case marker. Example;

5. 28. 103. நான் நாளெக்குக் காலெயிலே வறேன்.

எப்ப 'when' is the corresponding question time adverb. Example:

5. 28. 103. பேராசிரியரு எப்பப் புறப்படுறாரு ?

5.28.104. -ஏன் is a particle.

The second person plural/singular honorific imperative marker -ங்க is realized as -ங்களேன் before this particle. Example.

5. 28. 104. நீங்க எங்ககூட வாங்களேன்.

Sandhi: 23. The consonants க், ச், த் and ப் are always doubled after the sociative case suffix -கூட. Example;

பேராசிரியருகூட + போறீங்களா → பேராசிரியரு கூடப் போறீங்களா ?

உங்ககூட + கன்னியாகுமரிக்கு → உங்ககூடக் கன்னியாகுமரிக்கு (வருரா ?)

போறீங்க + ஆ → போறீங்களா ? (Refer S.11 in 2.14)

எப்ப + கன்னியாகுமரிக்கு → எப்பக் கன்னியாகுமரிக்குப் (புறப்படுறீங்க ?) (Refer S.21 in 3.20)

கன்னியாகுமரிக்கு + புறப்படுறாரு → கன்னியாகுமரிக்குப் புறப்படுறாரு

நாளெக்கு + காலெயிலே → நாளெக்குக் காலெயிலே (Refer S.19 in 2.14)

UNIT 5

LESSON 29

RECEIVING A FRIEND

DIALOGUE

சுரேஷ் : ஹலோ ராமு, சௌக்கியமா ?	Hallo Ramu, how are you ?
ராமு : சௌக்கியந்தான். நீங்க சௌக்கியமா இருக்கு-ரீங்களா ?	Fine. How are you ?
சுரேஷ் : ஆமா, எப்ப மைசூருலே-யிருந்து வந்தீங்க ?	I am fine. When did (you) come from Mysore ?
ராமு : நேத்து ராத்திரி வந்தேன்.	I came yesterday night
சுரேஷ் : பிரயாணம் எப்படி இருந்தது ?	How was the journey ?

ராமு : பிரயாணம் கொஞ்சம் கஷ்டமா இருந்தது.... பெங்களூருலேயிருந்து மதுரெக்கு உடனே பஸ் கெடெக்கலெ.	The journey was a bit hard... I did not get bus from Bangalore to Madurai immediately.
சுரேஷ் : பெங்களூருலேயிருந்து எப்பக் கொளம்புனீங்க?	When did (you) start from Bangalore?
ராமு : நேத்து மத்தியானம் கெளம்புனேன்.	(I) started yesterday afternoon.
சுரேஷ் : உங்க மனைவியும் உங்ககூட வந்தாங்களா?	Did your wife also come with you?
ராமு : இல்லெ, அவ என்கூட வரலெ. அவ அவ அப்பா வீட்டுக்குப் போனா.	No, she did not come with me. She went to her father's house.
சுரேஷ் : வீட்டுலேயிருந்து எப்பப் புறப்பட்டீங்க?	When did (you) start from the house?
ராமு : நாங்க ஒம்பது மணிக்குப் புறப்பட்டோம்.	We started at nine O' clock.
சுரேஷ் : பேராசிரியரு எங்கே?	Where is Professor (Sundaram)?
ராமு : அந்த ஹோட்டலுக்குப் போனாரு.	(He) went to that hotel.
சுரேஷ் : நான் அவரெப் பார்க்கட்டுமா?	Shall I (go and) see him?
ராமு : சரி, பாருங்க.	Please do.

DRILLS

a. Variation drill

5. 29. 105. நான் கெளம்புனேன்.
நாங்க புறப்பட்டோம்.
நீங்க வந்தீங்க.
அவன் வந்தான்.
அவ போனா.
அவரு போனாரு.
அவங்க வந்தாங்க.
பிரயாணம் கஷ்டமா இருந்தது.

5. 29. 106. நான் வந்தேன்.
நாங்க புறப்பட்டோம்.
நீங்க கௌம்புனீங்க.
அவ வரலெ.

b. Build up drill

(i) நாங்க புறப்பட்டோம்.	நாங்க புறப்பட்டோம்.
புறப்பட்டோம்	புறப்பட்டோம்
நாங்க	நாங்க புறப்பட்டோம்.
(ii) அவ போனா.	அவ போனா.
போனா	போனா
அவ	அவ போனா.
(iii) பிரயாணம் கஷ்டமா இருந்தது.	பிரயாணம் கஷ்டமா இருந்தது.
இருந்தது	இருந்தது
கஷ்டமா	கஷ்டமா இருந்தது
பிரயாணம்	பிரயாணம் கஷ்டமா இருந்தது.
(iv) அவ வரலெ.	அவ வரலெ.
வரலெ	வரலெ
அவ	அவ வரலெ.

c. Expansion drill

(i) நாங்க புறப்பட்டோம்.	நாங்க புறப்பட்டோம்.
ஒம்பதுமணிக்குப் புறப்பட்டோம்	நாங்க ஒம்பதுமணிக்குப் புறப்பட்டோம்.
காலையிலே புறப்பட்டோம்	நாங்க காலையிலே ஒம்பதுமணிக்குப் புறப்பட்டோம்.
இன்னெக்குப் புறப்பட்டோம்.	நாங்க இன்னெக்குக் காலையிலே ஒம்பது மணிக்குப் புறப்பட்டோம்
(ii) அவ போனா.	அவ போனா.
அவளோடெ வீட்டுக்குப் போனா	அவ அவளோடெ வீட்டுக்குப் போனா.
(iii) நான் வந்தேன்.	நான் வந்தேன்.
ராத்திரி வந்தேன்	நான் ராத்திரி வந்தேன்.
நேத்து வந்தேன்	நான் நேத்து ராத்திரி வந்தேன்.
(iv) அவ வரலெ.	அவ வரலெ.
என்கூட வரலெ	அவ என்கூட வரலெ.

(v) நீங்க எப்ப வந்தீங்க ? மைதுருலேயிருந்து எப்ப வந்தீங்க ?	நீங்க எப்ப வந்தீங்க ? நீங்க மைதுருலேயிருந்து எப்ப வந்தீங்க ?

d. Question-Answer drill

(i) Q : நீங்க எப்ப மைதுருலேயிருந்து வந்தீங்க ?
A : நேத்து ராத்திரி வந்தேன்.

(ii) Q : பிரயாணம் எப்படி இருந்தது ?
A : பிரயாணம் கொஞ்சம் கஷ்டமா இருந்தது.

(iii) Q : உங்க மனைவியும் உங்ககூட வந்தாங்களா ?
A : இல்லெ. அவ என்கூட வரலெ.

(iv) Q : பேராசிரியரு எங்கே ?
A : அந்த ஹோட்டலுக்குப் போனாரு.

(v) Q : நான் அவரெப் பார்க்கட்டுமா ?
A : சரி, பாருங்க.

e. Substitution drill

(i) நாங்க புறப்பட்டோம். Substitute and change the verb accordingly.	நாங்க புறப்பட்டோம்.
நான்	நான் புறப்பட்டேன்.
நீங்க	நீங்க புறப்பட்டீங்க.
அவன்	அவன் புறப்பட்டான்.
இவன்	இவன் புறப்பட்டான்.
அவ	அவ புறப்பட்டா.
இவ	இவ புறப்பட்டா.
அவரு	அவரு புறப்பட்டாரு.
இவரு	இவரு புறப்பட்டாரு.
அவங்க	அவங்க புறப்பட்டாங்க.
இவங்க	இவங்க புறப்பட்டாங்க.
(ii) நான் வந்தேன். Substitute and change the verb accordingly.	நான் வந்தேன்.
நாங்க	நாங்க வந்தோம்.
நீங்க	நீங்க வந்தீங்க.
அவன்	அவன் வந்தான்.
அவ	அவ வந்தா.
அவரு	அவரு வந்தாரு.
அவங்க	அவங்க வந்தாங்க.

(iii) நாங்க புறப்பட்டோம். — நாங்க புறப்பட்டோம்.

Substitute and conjugate suitably

வா	நாங்க வந்தோம்.
போ	நாங்க போனோம்.
கௌம்பு	நாங்க கௌம்புனோம்.
கொண்டு வா	நாங்க கொண்டு வந்தோம்.

(iv) அவ போனா. — அவ போனா.

Substitute and conjugate suitably

வா	அவ வந்தா.
கொண்டு வா	அவ கொண்டு வந்தா.
கௌம்பு	அவ கௌம்புனா.
புறப்படு	அவ புறப்பட்டா.

(v) அவங்க வந்தாங்க. — அவங்க வந்தாங்க.

Substitute and conjugate suitably.

கொண்டு வா	அவங்க கொண்டு வந்தாங்க.
கௌம்பு	அவங்க கௌம்புனாங்க.
போ	அவங்க போனாங்க.
புறப்படு	அவங்க புறப்பட்டாங்க.

(vi) அவ வரலெ. — அவ வரலெ.

Substitute

அவன்	அவன் வரலெ.
அவரு	அவரு வரலெ.
அவங்க	அவங்க வரலெ.
நான்	நான் வரலெ.
நாங்க	நாங்க வரலெ.
நீ	நீ வரலெ.
நீங்க	நீங்க வரலெ.

(vii) அவ என்கூட வரலெ. — அவ என்கூட வரலெ.

Substitute

எங்ககூட	அவ எங்ககூட வரலெ.
உங்ககூட	அவ உங்ககூட வரலெ.
அவன்கூட	அவ அவன்கூட வரலெ.
அவகூட	அவ அவகூட வரலெ.
அவருகூட	அவ அவருகூட வரலெ.
அவங்ககூட	அவ அவங்ககூட வரலெ.

(viii) நான் நேத்துக் கௌம்புனேன். நான் நேத்துக் கௌம்புனேன்.

Substitute

மத்தியானம்	நான் மத்தியானம் கௌம்புனேன்.
ராத்திரி	நான் ராத்திரி கௌம்புனேன்.
காலெயிலே	நான் காலெயிலே கௌம்புனேன்.
ரெண்டுமணிக்கு	நான் ரெண்டுமணிக்குக் கௌம்புனேன்.
இன்னெக்கு	நான் இன்னெக்குக் கௌம்புனேன்.

f. Transformation drill

(i) நான் நேத்து வந்தேன்.	நீங்க எப்ப வந்தீங்க ?
நான் மத்தியானம் கௌம்புனேன்.	நீங்க எப்பக் கௌம்புனீங்க ?
நான் ராத்திரி போனேன்.	நீங்க எப்பப் போனீங்க ?
(ii) அவ வந்தா.	அவ வரலெ.
அவ போறா.	அவ போகலெ.
அவ கௌம்புறா.	அவ கௌம்பலெ.
அவ புறப்பட்டா.	அவ புறப்படலெ.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான் ....வந்தேன். (yesterday)
நான் நேத்து வந்தேன்.

(i) நான்..............கௌம்புனேன். (noon)
(ii) ....எப்படி இருந்தது ? (journey)
(iii) பிரயாணம்..............ஆ இருந்தது. (hard)
(iv) எனக்கு டைம்.............. (not available)
(v) நீங்க அவளெப்..............ங்க. (see)

h. Match the following.

நான்	கஷ்டமா இருந்தது
நாங்க	புறப்பட்டாங்க
நீங்க	வரலெ
அவன்	போறு
அவ	வந்தேன்
இவ	வரூரு
அவரு	வந்தாங்க
அவங்க	கௌம்புறான்
பிரயாணம்	புறப்பட்டோம்

i. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verb வா 'come'.

(i) நான் மைசூருலேயிருந்து................
(ii) நீங்க ஒம்பது மணிக்கு..............
(iii) நாங்க நேத்து..............
(iv) அவன் வீட்டுக்கு................
(v) அவ அப்பா வீட்டுக்கு..............
(vi) அவரு ஹோட்டலுக்கு..............
(vii) அவங்க உங்ககூட..............

j. Write the word represented by the formula.

Example : வந்தேன் வா + Past

(i) இரு + Past : ....
(ii) கௌம்பு + Past : ....
(iii) போ + Past : ....
(iv) புறப்படு + Past : ....

k. Change these sentences as in the examples.

Example : நாங்க புறப்பட்டோம்.
நாங்க புறப்படுறோம்.

(i) அவ போறா.
(ii) நான் வந்தேன்.
(iii) அவரு போனாரு.
(iv) பிரயாணம் கஷ்டமா இருந்தது.

Example : அவ போறா.
அவ போனா.

(i) அவங்க கௌம்புறாங்க.
(ii) அவரு ஏறுறாரு.

Example : நான் வர்றேன்.
நான் வந்தேன்.

(i) நாங்க தர்றோம்.
(ii) நீங்க கொண்டு வர்றீங்க.
(iii) நான் இருக்குறேன்.
(iv) அவன் உட்காருறான்.

l. Answer these questions.

(i) ராமு மைசூருலேயிருந்து எப்ப வந்தாரு ?
(ii) நீங்க ஊருலேயிருந்து எப்ப வந்தீங்க ?
(iii) உங்க பிரயாணம் எப்படி இருந்தது ?

(iv) நீங்க மைசூருக்கு யாருகூட வந்தீங்க?

(v) உங்களோட உங்க மனைவி வந்தாங்களா?

(vi) நீங்க ஊருக்கு எப்பக் கௌம்புறீங்க?

VOCABULARY

நேத்து	'yesterday'	பிரயாணம்	'journey, travel'
கஷ்டம்	'hard'	கெடெக்கலெ	'did not get'
மத்தியானம்	'noon/afternoon'	பாரு	'see'

GRAMMAR

5.29.105. We noticed in the lesson 5.27 that there are three major tenses in Tamil, namely, present, past and future. In this lesson we mainly deal with the past tense. It is denoted by many markers unlike the present tense. Before going into the details of these past tense markers and their environment of occurrence mention may be made about the pronominal suffixes in continuation of the earlier lessons. The pronouns such as நாங்க, இவ/அவ and இது/அது establish their agreement with the pronominal suffixes -ஓம், -ஆ and -அது respectively. The pronouns and the corresponding pronominal suffixes are listed below.

நாங்க	-ஓம்
இவ/அவ	-ஆ
இது/அது	-அது

Example :

5. 29. 105. நாங்க புறப்பட்டோம்.
அவ போனா.
பிரயாணம் கஷ்டமா இருந்தது.

5.29.106. -த்த்-, -ட்- and -ன்- are the past tense markers. They are added to the weak verb stems as shown below.

வ + த்த் + ஏன்	கௌம்பு + ன் + ஏன்	புறப்படு + ட் + ஓம்
இரு + த்த் + அது	போ + ன் + ஏன்	
கொண்டு வ + த்த் + ஆன்		

Example :

5. 29. 106. நான் வந்தேன்.
நாங்க புறப்பட்டோம்.
நீங்க கௌம்புனீங்க.

It should be noted that the pronominal suffixes are the same for all tenses.

The negative past tense verbs are formed by adding -லெ to the infinitive as we have seen in the case of the present negative. That is, the past negative is as same as the present negative in form. The formation may be represented as follows.

V Root	Infinitive	Past Negative	
போக்-	போக	போகலெ	'did not go'
வா-	வர	வரலெ	'did not come'
புறப்படு-	புறப்பட	புறப்படலெ	'did not start/ leave'
கொண்டு வா-	கொண்டு வர	கொண்டு வரலெ	'did not bring'
கெளம்பு-	கெளம்ப	கெளம்பலெ	'did not start'

Sandhi 24. The word final -ம் before -த் is changed into -ந். Example:

செளக்கியம் + தான் → செளக்கியந்தான்

இருக்குறீங்க + ஆ → இருக்குறீங்களா
வந்தாங்க + ஆ → வந்தாங்களா (Refer S.19 in 2.14)
அவ + ஒடெ → அவளோடெ (Refer S.13 in 1.10)
அவரெ + பார்க்கட்டுமா → அவரெப் பார்க்கட்டுமா (Refer S.20 in 2.17)
மனெவி + உம் → மனெவியும் (Refer S.8 in 1.5)

UNIT 5

LESSON 30

SENDING OFF A FRIEND

DIALOGUE

சுந்தரம் : வாங்க, மிஸ்டர் சுரேஷ் ! உங்ககூட நரசய்யா வரலெயா ?	Mr. Suresh ! Didn't Mr. Narasaiah come with you?
சுரேஷ் : இல்லெ. இப்பத்தான் அவரெ ஊருக்கு அனுப்புனேன்.	No. Just now I have sent him off to (his) native place.
சுந்தரம் : நரசய்யா எங்கே போறாரு ?	Where is Mr. Narasaiah going ?
சுரேஷ் : அவரு ஹைதராபாத்துக்குப் போறாரு.... இது உங்க காரா ?	He is going to Hyderabad.... Is it your car, sir ?

சுந்தரம் : ஆமா. கார்லே ஏறுங்க.	Yes. Please get into the car.
சுரேஷ் : பஸ் ஸ்டாண்டுக்குத் தானே காரெக் கௌப்புறீங்க ?	Are you starting the car to the bus stand ?
சுந்தரம் : ஆமா. பஸ் ஸ்டாண்டுக்குத்தான் காரெ ஓட்டுறேன்..காலையிலே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனீங்களா ?.... அவரெ வழியனுப்பினீங்களா ?	Yes. I am driving the car to the bus stand. Did you go to the railway station in the morning ?... Did (you) see him off ?
சுரேஷ் : ஆமா. காலையிலே அவரெ ஹைதராபாத்துக்கு வழியனுப்பினேன்.	Yes. I (went to) see him off to Hyderabad in the morning.
சுந்தரம் : ரயில் எத்தனெ மணிக்கு ஸ்டேஷனுக்கு வந்தது ?	At what time the train arrived at the station ?
சுரேஷ் : சரியா ஆறு மணிக்கு ஸ்டேஷனுக்கு வந்தது.	It arrived at the station exactly at 6 O'clock.
சுந்தரம் : வாங்க, நாம எறங்கலாம்.	Come on, let us get down.

DRILLS

a. Variation drill

5. 30. 107. நான் அவரெ ஊருக்கு அனுப்புனேன்.
நான் காரெப் பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டுறேன்.
நீங்க காரெப் பஸ் ஸ்டாண்டுக்குக் கௌப்பு-
றீங்களா ?

5. 30. 108. நீங்க பஸ் ஸ்டாண்டுக்குத் தானே காரெக் கௌப்புறீங்க ?
ஆமா, நான் பஸ் ஸ்டாண்டுக்குத் தான் காரெக் கௌப்புறேன்.

b. Build up drill

(i) நான் அவரெ அனுப்புனேன்.	நான் அவரெ அனுப்புனேன்
அனுப்புனேன்	அனுப்புனேன்
அவரெ	அவரெ அனுப்புனேன்
நான்	நான் அவரெ அனுப்புனேன்.

(ii) நீங்க காரெ பஸ் ஸ்டாண்டு-க்குக் கௌப்புறீங்களா ?	நீங்க காரெ பஸ் ஸ்டாண்டுக்குக் கௌப்புறீங்களா ?
கௌப்புறீங்களா ?	கௌப்புறீங்களா ?
பஸ் ஸ்டாண்டுக்கு	பஸ் ஸ்டாண்டுக்குக் கௌப்பு-றீங்களா ?
காரெ	காரெ பஸ் ஸ்டாண்டுக்குக் கௌப்புறீங்களா ?
நீங்க	நீங்க காரெ பஸ் ஸ்டாண்டுக்குக் கௌப்புறீங்களா ?
(iii) நான் நரசய்யாவெ ஹைதரா-பாத்துக்கு வழியனுப்புனேன்.	நான் நரசய்யாவெ ஹைதரா-பாத்துக்கு வழியனுப்புனேன்.
வழியனுப்புனேன்	வழியனுப்புனேன்
ஹைதராபாத்துக்கு	ஹைதராபாத்துக்கு வழியனுப்பு-னேன்
நரசய்யாவெ	நரசய்யாவெ ஹைதராபாத்துக்கு வழியனுப்புனேன்
நான்	நான் நரசய்யாவெ ஹைதராபா-த்துக்கு வழியனுப்புனேன்.
(iv) ரயில் ஸ்டேஷனுக்கு வந்தது.	ரயில் ஸ்டேஷனுக்கு வந்தது.
வந்தது	வந்தது
ஸ்டேஷனுக்கு	ஸ்டேஷனுக்கு வந்தது
ரயில்	ரயில் ஸ்டேஷனுக்கு வந்தது.

c. Expansion drill

(i) நான் ஓட்டுறேன்.	நான் ஓட்டுறேன்.
பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டுறேன்	நான் பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டுறேன்.
காரெ ஓட்டுறேன்	நான் காரெ பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டுறேன்.
(ii) ரயில் வந்தது.	ரயில் வந்தது.
ஸ்டேஷனுக்கு வந்தது	ரயில் ஸ்டேஷனுக்கு வந்தது.
ஆறுமணிக்கு வந்தது	ரயில் ஆறுமணிக்கு ஸ்டேஷனுக்கு வந்தது.
சரியா வந்தது	ரயில் சரியா ஆறுமணிக்கு ஸ்டேஷனுக்கு வந்தது.
(iii) நான் கௌப்புறேன்.	நான் கௌப்புறேன்.
காரெக் கௌப்புறேன்	நான் காரெக் கௌப்புறேன்.
பஸ் ஸ்டாண்டுக்குத் தான் கௌப்புறேன்	நான் பஸ் ஸ்டாண்டுக்குத் தான் காரெக் கௌப்புறேன்.

d Question-Answer drill

(i) Q : காலையிலே ரயில்லே ஸ்டேஷனுக்குப் போனீங்களா ?
A : ஆமா.

(ii) Q : நீங்க நரசய்யாவெ வழியனுப்புனீங்களா ?
A : ஆமா. காலையிலே அவரெ ஹைதராபாத்துக்கு வழியனுப்புனேன்.

(iii) Q : ரயில் எத்தனெ மணிக்கு ஸ்டேஷனுக்கு வந்தது ?
A : சரியா ஆறுமணிக்கு ஸ்டேஷனுக்கு வந்தது.

(iv) Q : பஸ் ஸ்டாண்டுக்குத் தானே காரெக் கௌப்புறீங்க ?
A : ஆமா. பஸ் ஸ்டாண்டுக்குத் தான் காரெ ஓட்டுறேன்.

e. Substitution drill

(i) நான் அனுப்புனேன்.	நான் அனுப்புனேன்.
Substitute and conjugate suitably.	
போ	நான் போனேன்.
வழியனுப்பு	நான் வழியனுப்புனேன்.
புறப்படு	நான் புறப்பட்டேன்.
கௌம்பு	நான் கௌம்புனேன்.
ஓட்டு	நான் ஓட்டுனேன்.

(ii) நான் ஓட்டுறேன்.	நான் ஓட்டுறேன்.
Substitute and conjugate suitably.	
போ	நான் போறேன்.
வா	நான் வறேன்.
கௌம்பு	நான் கௌம்புறேன்.
வழியனுப்பு	நான் வழியனுப்புறேன்.
அனுப்பு	நான் அனுப்புறேன்.
புறப்படு	நான் புறப்படுறேன்.

(iii) நான் நரசய்யாவெ வழியனுப்புனேன்.	நான் நரசய்யாவெ வழியனுப்பு-னேன்.
Substitute and change the verb accordingly.	
நாங்க	நாங்க நரசய்யாவெ வழியனுப்பு-னோம்.
நீங்க	நீங்க நரசய்யாவெ வழியனுப்பு-னீங்க.
அவன்	அவன் நரசய்யாவெ வழியனுப்பு-னான்.

அவ	அவ நரசய்யாவெ வழியனுப்புனு-
அவரு	அவரு நரசய்யாவெ வழியனுப்பு-னாரு.
அவங்க	அவங்க நரசய்யாவெ வழியனுப்பு-னாங்க.
(iv) நான் காரெ ஓட்டுறேன். Substitute and change the verb accordingly.	நான் காரெ ஓட்டுறேன்.
நாங்க	நாங்க காரெ ஓட்டுறோம்.
நீங்க	நீங்க காரெ ஓட்டுறீங்க.
அவன்	அவன் காரெ ஓட்டுறான்.
அவரு	அவரு காரெ ஓட்டுறாரு.
அவங்க	அவங்க காரெ ஓட்டுறாங்க.
(v) ரயில் ஆறுமணிக்கு வந்தது. Substitute and conjugate suitably.	ரயில் ஆறுமணிக்கு வந்தது.
போ	ரயில் ஆறுமணிக்குப் போனது.
புறப்படு	ரயில் ஆறுமணிக்குப் புறப்பட்டது.
(vi) ரயில் ஆறுமணிக்கு வந்தது. Substitute	ரயில் ஆறுமணிக்கு வந்தது.
பஸ்	பஸ் ஆறுமணிக்கு வந்தது.
கார்	கார் ஆறுமணிக்கு வந்தது.
வண்டி	வண்டி ஆறுமணிக்கு வந்தது.

f. Transformation drill

(i) அவரு ஹைதராபாத்துக்குப்-போனாரு.	அவரு எங்கே போனாரு ?
அவரு பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டுனாரு.	அவரு எங்கே ஓட்டுனாரு ?
ரயில் ஸ்டேஷனுக்கு வந்தது.	ரயில் எங்கே வந்தது ?
(ii) ரயில் ஆறுமணிக்கு வந்தது.	ரயில் எத்தனெ மணிக்கு வந்தது ?
கார் நாலுமணிக்குப் புறப்-பட்டது.	கார் எத்தனெ மணிக்குப் புறப்பட்டது ?
பஸ் ரெண்டுமணிக்கு வந்தது.	பஸ் எத்தனெ மணிக்கு வந்தது ?
(iii) நரசய்யா வந்தாரு.	நரசய்யா வரலெ.
நான் வழியனுப்புனேன்.	நான் வழியனுப்பலெ.
நான் காரெ ஓட்டுனேன்.	நான் காரெ ஓட்டலெ.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : அவரெ..............னேன். (send)
நான் அவரெ அனுப்புனேன்.

(i) நீங்க காரெ..............றீங்களா ? (start)
(ii) நீங்க நரசய்யாவெ..............றீங்களா ? (send him off)
(iii) நான் காரெ..............றேன். (drive)
(iv) நீங்க..............ங்க. (get down)
(v) ரயில்..............ஆறு மணிக்கு வந்தது. (exactly)

h. Match the following.

நான் நீங்க அவரு ரயில்	வந்தது போறாரு போனீங்க அனுப்புனேன்

i. Write the words represented by the formula.

Example : **அனுப்புனேன்** அனுப்பு + Past

(i) வழியனுப்பு + Past : ....
(ii) வா + Past : ....

Example : **போறாரு** போ + Present

(i) கௌம்பு + Present : ....
(ii) கௌப்பு + Present : ....
(iii) ஓட்டு + Present : ....
(iv) அனுப்பு + Present : ....
(v) வழியனுப்பு + Present : ....

j. Frame questions for the answers given below following the models.

Model A : இல்லெ, நான் ஸ்டேஷனுக்குப் போகலெ.
Q : நீங்க ஸ்டேஷனுக்குப் போனீங்களா ?

(i) இல்லெ, நான் ஊருக்கு அனுப்பலெ.
(ii) இல்லெ, நான் ஊருக்கு வழியனுப்பலெ.
(iii) இல்லெ, நான் பஸ் ஸ்டாண்டுக்கு வரலெ.

Model A : ஆமா, பஸ் ஸ்டாண்டுக்குத் தான் காரெக் கௌப்புறேன்.

Q : பஸ் ஸ்டாண்டுக்குத் தானே காரெக்
கௌப்புறீங்க ?

(i) ஆமா, நான்தான் அவரெ ஊருக்கு அனுப்புனேன்.
(ii) ஆமா, அவரு ஹைதராபாத்துக்குத் தான் போறாரு.

k. Answer these questions.

(i) நரசய்யா எங்கே போறாரு ?
(ii) நீங்க கார் ஓட்டுறீங்களா ?
(iii) உங்க மனைவி உங்களெ மைசூருக்கு வழியனுப்புனாங்களா ?
(iv) உங்க மனைவி/கணவரு உங்களோட வரலெயா ?
(v) நீங்க நேத்துக் காலெயிலே ஹாஸ்டலுக்குப் போனீங்களா ?

VOCABULARY

அனுப்பு	'send (a person off)'	கார்	'motor car'
கௌப்பு	'start'	ஓட்டு	'drive'
ரயில்வே ஸ்டேஷன்	'railway station'	வழியனுப்பு	'send a person off'
ஸ்டேஷன்	'station'	சரியா	'exactly'
எறங்கு	'get down'		

GRAMMAR

5.30.107. We inherently understand the presence of a sequence of cases namely, objective and dative of direction when we use the verbs like அனுப்பு 'send (a person off'), ஓட்டு 'drive', கௌப்பு 'make someone to start' etc. These verbs are called 'transitive' verbs. They are dealt with in detail in 12.48, 12.49 and 12.50. Example :

5. 30. 107. நான் அவரெ ஊருக்கு அனுப்புனேன்.
நான் காரெப் பஸ் ஸ்டாண்டுக்கு ஓட்டுறேன்.
நீங்க காரெப் பஸ் ஸ்டாண்டுக்குக்
கௌப்புறீங்களா ?

5.30.108. -ஏ is a kind of interrogative marker. When it is added to the emphatic particle தான் it has the function of tag-question (Refer 1.3.12). That is, in this type of question, the speaker presupposes that what he says is true and expects the hearer to confirm it. Example :

5. 30. 108. நீங்க பஸ் ஸ்டாண்டுக்குத் தானே காரெக்
கௌப்புறீங்க ?
ஆமா. நான் பஸ் ஸ்டாண்டுக்குத்தான் காரெக்
கௌப்புறேன்.

Sandhi : இப்ப + தான் → இப்பத்தான் (Refer S. 21 in 3.20)
காரெ + கௌப்புறீங்க→காரெக் கௌப்புறீங்க (Refer S.20 in 2.17)
ஹைதராபாத்துக்கு + போறாரா → ஹைதராபாத்துக்குப் போறாரா
பஸ் ஸ்டாண்டுக்கு + தான் → பஸ் ஸ்டாண்டுக்குத்தான்
(Refer S. 18 in 2.14)

UNIT 6

LESSON 31

WRITING HOME ASSIGNMENTS

DIALOGUE

செல்வி : கலா, என்ன செய்றே ?	Kala, what are you doing ?
கலா : நான் பாடம் படிக்குறேன்.	I am reading (my) lessons.
செல்வி : நீ வீட்டுப்பாடம் எழுதலெயா ?	Don't you write the homework ?
கலா : இல்லெ. நான் ராத்திரி எழுதுவேன்....நீ எப்ப எழுதுவே ?	No. I will write in the night... When will you write ?
செல்வி : நான் நாளெக்குக் காலெயிலெ எழுதுவேன்.... ராத்திரி பாடம் படிப்பேன்...அப்புறம், படம் வரெவேன்....நீ இப்ப எத்தனாம் பாடம் படிக்குறே ?	I will write tomorrow morning...(I) will read (my) lesson in the night... Afterwards, I will draw the pictures... What lesson are you reading now ?

கலா : நான் பதினாறும் பாடம்- படிக்குறேன். நீயும் அதெ படிப்பேயா ?	I am reading the sixteenth lesson. Will you also read that lesson?
செல்வி : இல்லெ. நான் பதினாறும் பாடம் படிக்கமாட்டேன் ...அந்தப்பாடம் எனக்கு நல்லாப் புரியலெ...நாம நாளெக்குக் காலெயிலெ ஒம்பதுமணிக்குப் பள்ளிக் கூடத்துக்குப் போ- வோமா ?	No. I will not read the sixteenth lesson... I did not understand that lesson well.. Shall we go to the school at nine O'clock in the morning tomorrow?
கலா : சரி, போவோம்.	Okay, (We) shall go.

DRILLS

a. Variation drill

6. 31. 109. நீ படிக்குறே.
நாம போவோம்.

6. 31. 110. நான் படிக்குறேன்.
நீ என்ன செய்றே ?
நான் எழுதுவேன்
நீ என்ன செய்வே ?

6. 31. 111. நான் பாடம் படிக்குறேன்.
நான் வீட்டுப்பாடம் எழுதுவேன்.
நான் படம் வரெவேன்.

6. 31. 112. நான் பாடம் படிப்பேன்
நான் படம் வரெவேன்.
நான் பாடம் படிக்கமாட்டேன்.

b. Build up drill

(i) நாம போவோம். போவோம் நாம	நாம போவோம். போவோம் நாம போவோம்.
(ii) நீ படிக்குறே. படிக்குறே நீ	நீ படிக்குறே. படிக்குறே நீ படிக்குறே.

(iii) நீ என்ன செய்றே ?	நீ என்ன செய்றே ?
என்ன செய்றே ?	என்ன செய்றே ?
நீ	நீ என்ன செய்றே ?
(iv) நான் வீட்டுப்பாடம் எழுது-வேன்.	நான் வீட்டுப்பாடம் எழுதுவேன்.
எழுதுவேன்	எழுதுவேன்
வீட்டுப்பாடம்	வீட்டுப்பாடம் எழுதுவேன்
நான்	நான் வீட்டுப்பாடம் எழுதுவேன்.
(v) நான் பாடம் படிப்பேன்.	நான் பாடம் படிப்பேன்.
படிப்பேன்	படிப்பேன்
பாடம்	பாடம் படிப்பேன்
நான்	நான் பாடம் படிப்பேன்.
(vi) நான் பாடம் படிக்க மாட்டேன்.	நான் பாடம் படிக்கமாட்டேன்.
மாட்டேன்	மாட்டேன்
படிக்க	படிக்கமாட்டேன்
பாடம்	பாடம் படிக்கமாட்டேன்
நான்	நான் பாடம் படிக்கமாட்டேன்.

c. Expansion drill

(i) நான் எழுதுவேன்.	நான் எழுதுவேன்.
வீட்டுப்பாடம் எழுதுவேன்	நான் வீட்டுப்பாடம் எழுதுவேன்.
ராத்திரி எழுதுவேன்	நான் ராத்திரி வீட்டுப்பாடம் எழுதுவேன்.
(ii) நீ எப்ப எழுதுவே ?	நீ எப்ப எழுதுவே ?
வீட்டுப்பாடம் எப்ப எழுதுவே ?	நீ வீட்டுப்பாடம் எப்ப எழுதுவே ?
(iii) நாம போவோமா ?	நாம போவோமா ?
பள்ளிக்கூடத்துக்குப் போவோமா ?	நாம பள்ளிக்கூடத்துக்குப் போவோமா ?
ஒம்பது மணிக்கே போவோமா ?	நாம ஒம்பதுமணிக்கே பள்ளிக்கூடத்துக்குப் போவோமா ?
காலையிலே போவோமா ?	நாம காலையிலே ஒம்பதுமணிக்கே பள்ளிக்கூடத்துக்குப் போவோமா ?
நாளைக்குப் போவோமா ?	நாம நாளைக்குக் காலையிலே ஒம்பதுமணிக்கே பள்ளிக்கூடத்துக்குப் போவோமா ?

d. Question-Answer drill

(i) Q: நீ என்ன செய்றே ?
A: நான் பாடம் படிக்குறேன்.

(ii) Q: நீ எப்பப் பாடம் எழுதுவே ?
A: நான் நாளெக்கு எழுதுவேன்.

(iii) Q: நீ அஞ்சாம் பாடம் படிப்பேயா ?
A: இல்லெ, நான் அஞ்சாம் பாடம் படிக்கமாட்டேன்.

(iv) Q: நாம நாளெக்குக் காலெயிலெ போவோமா ?
A: சரி, போவோம்.

e. Substitution drill

(i) நான் படிக்குறேன். Substitute and change the verb accordingly.	நான் படிக்குறேன்.
நாங்க	நாங்க படிக்குறோம்.
நாம	நாம படிக்குறோம்.
நீ	நீ படிக்குறே.
நீங்க	நீங்க படிக்குறீங்க.
(ii) நான் எழுதுவேன். Substitute and change the verb accordingly.	நான் எழுதுவேன்.
நாங்க	நாங்க எழுதுவோம்.
நாம	நாம எழுதுவோம்.
நீ	நீ எழுதுவே.
நீங்க	நீங்க எழுதுவீங்க.
அவன்	அவன் எழுதுவான்.
அவ	அவ எழுதுவா.
அவரு	அவரு எழுதுவாரு.
அவங்க	அவங்க எழுதுவாங்க.
(iii) நாம போவோம். Substitute and conjugate the verb suitably.	நாம போவோம்.
படி	நாம படிப்போம்.
குடி	நாம குடிப்போம்.
வரெ	நாம வரெவோம்.
எழுது	நாம எழுதுவோம்.
செய்	நாம செய்வோம்.
(iv) நீ என்ன செய்றே ? Substitute and conjugate the verb suitably.	நீ என்ன செய்றே ?

எழுது	நீ என்ன எழுதுறே ?
படி	நீ என்ன படிக்குறே ?
குடி	நீ என்ன குடிக்குறே ?
வரெ	நீ என்ன வரெறே ?

(v) நான் படிக்கமாட்டேன்.	நான் படிக்கமாட்டேன்.
Substitute and change the verb accordingly.	
நாங்க	நாங்க படிக்கமாட்டோம்.
நாம	நாம படிக்கமாட்டோம்.
நீ	நீ படிக்கமாட்டே.
நீங்க	நீங்க படிக்கமாட்டீங்க.
இவன்	இவன் படிக்கமாட்டான்.
இவ	இவ படிக்கமாட்டா.
இவரு	இவரு படிக்கமாட்டாரு.
இவங்க	இவங்க படிக்கமாட்டாங்க.

f. Transformation drill

(i) நான் படிக்குறேன்.	நான் படிப்பேன்.
நான் குடிக்குறேன்.	நான் குடிப்பேன்.
நான் எழுதுறேன்.	நான் எழுதுவேன்.
நான் வரெறேன்.	நான் வரெவேன்.
(ii) நான் படிக்குறேன்.	நீ என்ன செய்றே ?
நான் குடிக்குறேன்.	நீ என்ன செய்றே ?
நான் எழுதுறேன்.	நீ என்ன செய்றே ?
(iii) நான் பாடம் படிப்பேன்.	நீ என்ன செய்வே ?
நான் படம் வரெவேன்.	நீ என்ன செய்வே ?
நான் வீட்டுப்பாடம் எழுதுவேன்.	நீ என்ன செய்வே ?
(iv) நான் படம் வரெவேன்.	நான் படம் வரெயமாட்டேன்.
நான் பாடம் படிப்பேன்.	நான் பாடம் படிக்கமாட்டேன்.
நான் வீட்டுப்பாடம் எழுதுவேன்.	நான் வீட்டுப்பாடம் எழுதமாட்டேன்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ என்ன...............றே ? (do)
நீ என்ன **செய்றே** ?

(i) நான் பாடம்..............க்குறேன். (read)
(ii) நான் காலெயிலே..............வேன். (write)
(iii) நான் படம்..............வேன். (draw)
(iv) அந்தப் பாடம் எனக்குப்..............யலே. (understand)
(v) நான்..............படிக்குறேன். (lesson)
(vi) நான்..............எழுதுவேன். (homework)
(vii) நான்..............வரெவேன். (picture)
(viii) நான்..............க்கு எழுதுவேன். (tomorrow)

h. Match the following.

நான் நாம நீ	போவோம் படிப்பே எழுதுவேன்

i. Fill in the blanks using the appropriate conjugated forms (future) of the verb எழுது 'write'.

(i) நீ என்ன..............
(ii) நாம..............
(iii) நான் பாடம்..............
(iv) நாங்க..............

j. Fill in the blanks using the appcopriate conjugated forms **(future negative)** of the verb படி 'read'.

(i) நான் அஞ்சாம் பாடம்..............
(ii) நாம ராத்திரி..............
(iii) நீ பாடம்..............

k. Frame questions for the answers given below following the models.

Model : A: நான் பாடம் படிக்குறேன்.
Q. நீ என்ன செய்றே ?

(i) நான் அஞ்சாம் பாடம் படிக்குறேன்.
(ii) நான் நாளெக்குக் காலெயிலே எழுதுவேன்.
(iii) நான் அப்புறம் படம் வரெவேன்.

Model A: நான் ராத்திரி எழுதுவேன்.
Q: நீ எப்ப எழுதுவே ?

(i) நான் நாளெக்கு வரெவேன்.
(ii) நான் காலெயிலே பாடம் படிப்பேன்.
(iii) நான் காலெயிலே படிக்கமாட்டேன்.

l. Change these sentences as in the example.

Example : நான் படிக்குறேன்.
நான் படிப்பேன்.

(i) நான் எழுதுறேன்.
(ii) நான் வரெறேன்.
(iii) நான் செய்றேன்.
(iv) நாம போறோம்.

m. Write the words represented by the formulae.

Example : போவோம் போ + Future

(i) படி + Future : ....
(ii) கொடு + Future : ....
(iii) குடி + Future : ....
(iv) எழுது + Future : ....
(v) வரெ + Future : ....

Example : படிக்கமாட்டேன் படி + Future neg.

(i) எழுது + Future neg : ....
(ii) வரெ + Future neg : ....
(iii) குடி + Future neg : ....
(iv) கொடு + Future neg : ....
(v) வா + Future neg : ....

Example : படிக்க படி + Inf.

(i) கொடு + Inf. : ....
(ii) குடி + Inf. : ....
(iii) வா + Inf. : ....
(iv) எழுது + Inf. : ....
(v) செய் + Inf. : ....
(vi) வரெ + Inf. : ....

n. Answer these questions.

(i) நீங்க காலெயிலே படிக்குறீங்களா ?
(ii) நீங்க ராத்திரி எழுதுவீங்களா ?
(iii) நீங்க இப்ப எத்தனும் பாடம் படிக்குறீங்க ?
(iv) நீங்க எத்தனெ மணிக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போவீங்க ?
(v) நீங்க நேத்து வீட்டுப்பாடம் எழுதலெயா ?
(vi) நீங்க காலெயிலே என்ன செய்வீங்க ?
(vii) நீங்க ப்ரெஞ்சுமொழி படிப்பீங்களா ?

VOCABULARY

செய்	'do'	பாடம்	'lesson'
படி	'read'	வீட்டுப்பாடம்	'homework'
எழுது	'write'	படம்	'picture'
வரை	'draw'	புரி	'understand'

GRAMMAR

6.31 109. This Unit mainly deals with objective case in general and future tense in particular. As we have seen earlier in 5.27.97 the finite verb in Tamil establishes a relationship with its subject in terms of person, number and gender indicated by the pronominal suffixes. This lesson introduces the pronominal suffixes -ஏ and -ஓம். Their occurrence in the finite verb is conditioned by the subjects நீ 'you (sg)' and நாம 'we (excl. pl.)' respectively. This may be represented as follows.

நீ	-ஏ
நாம	-ஓம்

Example

6. 31. 109. நீ படிக்கிறே.
நாம போவோம்.

6.31.110. என்ன செய் is a verb form which questions any verb in a statement. Like other verbs this is also conjugated for all tenses in all persons. See the following examples.

6. 31. 110. நீ என்ன செய்கிறே ?
நீ என்ன செய்வே ?

6.31.111. Before going into the details of the future tense mention may be made about the objective case. The objective case is that which obligatorily needs the presence of a transitive verb in the predicate. This objective case is expressed by a noun and the case marker -ஐ (*Refer* 3.20.74).

Unlike other cases, the use of this case is restricted only to denote an object of action expressed by a transitive verb. That is, the transitive verbs like படி 'study', வரை 'draw', எழுது 'write' etc., identify the noun and the objective case marker as their object. Let us now consider the following sentences.

6. 31. 111. நான் பாடம் படிக்கிறேன்.
நான் வீட்டுப்பாடம் எழுதுவேன்.
நான் படம் வரைவேன்.

In the sentences 6.31.111, as we know, பாடம் 'lesson', வீட்டுப்பாடம் 'homework' and படம் 'picture' are the objects required by the transitive verbs படி 'study', எழுது 'write' and வரை 'draw' respectively. But no case marker is found in objects. We may say that the objective case marker is covertly

expressed in these sentences and the condition for this may be that it is not oblitgatory to add the objective case marker if a noun refers to an inanimate object.

6.31.112. -ப்ப்- and -வ்- are the future tense markers and they are immediately added to the strong and weak verb stems respectively. Example :

6. 31. 112. நான் பாடம் படிப்பேன்.
நான் படம் வரைவேன்.

Unlike the present and past tense negative the future negative has two kinds of forms. Of them, the first kind of negative occurs with human nouns. It is expressed by infinitive, the negative marker -மாட்ட்- and the pronominal suffix. Example :

6. 31. 112. நான் பாடம் படிக்கமாட்டேன்.

Sandhi : எழுதலெ + ஆ → எழுதலெயா
படிப்பெ + ஆ → படிப்பெயா (Refer S. 8 in 1.5)

நாளெக்கு + காலெயிலே → நாளெக்குக் காலெயிலே
எனக்கு + புரியலெ → எனக்குப் புரியலெ
பள்ளிக்கூடத்துக்கு + போவோமா → பள்ளிக்கூடத்துக்குப் போவோமா ? (Refer S.18 in 2.14)
அந்த + பாடம் → அந்தப் பாடம் (Refer S.4 in 1.2)

UNIT 6

LESSON 32

AT THE TIFFIN HALL

DIALOGUE

சுரேஷ் : இந்தாப்பா சர்வர், டிபன் என்ன இருக்குது?	Look (here) server, what tiffin (do you have)?
சர்வர் : இட்லி வடை, பூரி கெழங்கு, உப்புமா இருக்குதுங்க.	Idli and Vada, Puri and potato curry and Uppuma are (available), sir.
சுரேஷ் : இட்லி சூடா இருக்குமா?	Will Idli be hot?
சர்வர் : இல்லெ, அவ்வளவு சூடா இருக்காது ; சுமாரா இருக்கும்.	No, (it) will not be so hot; (but) it will be tolerably hot
சுரேஷ் : சரி, எனக்கு ஒரு பிளேட் இட்லி வடை கொண்டு வா..., நரசய்யா நீங்க என்ன சாப்பிடுறீங்க?	Alright, bring one plate of Idli and Vada for me--- Mr. Narasaiah, what would you (like to) eat?

நரசய்யா : நான் ஒரு மசால்தோசெ சாப்பிடுறேன் ... இங்கே மசால்தோசெ எப்படி இருக்கும் ?	I will eat one Masala Dosa... How is Masala Dosa here ?
சுரேஷ் : நல்லா இருக்கும்.	(It) will be good.
நரசய்யா : அப்படீன்னா...சர்வர் ! எனக்கு ஒரு மசால் தோசெ கொடு.	If it is so... Server ! give me one Masala Dosa.
சர்வர் : சார் ! உங்களுக்குச் சாம்பார் வேணுமா, சட்னி வேணுமா ?	Sir, do you want Sambar or Chutney ?
சுரேஷ் : சாம்பார் கொடு... கொஞ்சம் தண்ணீரும் கொடு.	Give Sambar (to me)---- Give (me) some water too.
சர்வர் : இது ஐஸ் வாட்டர். இதெக் குடிக்குறீங்களா ?	This is ice water. (Would you like to) drink this ?
சுரேஷ் : சரி, கொடு...அதெயே குடிக்குறேன்.	Alright, give (that)... (I) will drink the same.

DRILLS

a. Variation drill

6. 32. 113. இட்லி சுமாரா இருக்கும்.
இட்லி சூடா இருக்குமா ?
இட்லி சூடா இருக்காது.

6. 32. 114. நான் அதெக் குடிக்குறேன்.
நீங்க இதெக் குடிக்குறீங்களா ?

6. 32. 115. நீ ஒரு பிளேட் இட்லி வடெ கொண்டுவா.
இட்லி, வடெ, பூரி கெழங்கு இருக்குது.

b. Build up drill

(i) இட்லி சுமாரா இருக்கும்.	இட்லி சுமாரா இருக்கும்.
இருக்கும்	இருக்கும்
சுமாரா	சுமாரா இருக்கும்
இட்லி	இட்லி சுமாரா இருக்கும்.
(ii) இட்லி சூடா இருக்காது.	இட்லி சூடா இருக்காது.
இருக்காது	இருக்காது
சூடா	சூடா இருக்காது
இட்லி	இட்லி சூடா இருக்காது.

(iii) நான் அதெக் குடிக்குறேன்.	நான் அதெக் குடிக்குறேன்.
குடிக்குறேன்	குடிக்குறேன்
அதெ	அதெக் குடிக்குறேன்
நான்	நான் அதெக் குடிக்குறேன்.

c. Expansion drill

(i) நான் குடிக்குறேன்.	நான் குடிக்குறேன்.
அதெயே குடிக்குறேன்.	நான் அதெயே குடிக்குறேன்.
(ii) நீங்க குடிக்குறீங்களா ?	நீங்க குடிக்குறீங்களா ?
இதெக் குடிக்குறீங்களா ?	நீங்க இதெக் குடிக்குறீங்களா ?
(iii) இட்லி சூடா இருக்காது.	இட்லி சூடா இருக்காது.
அவ்வளவு சூடா இருக்காது.	இட்லி அவ்வளவு சூடா இருக்காது.
(iv) நீ கொண்டு வா.	நீ கொண்டு வா.
வடெ கொண்டு வா	நீ வடெ கொண்டு வா.
இட்லி கொண்டுவா	நீ இட்லி வடெ கொண்டு வா.
ஒரு பிளேட் கொண்டுவா	நீ ஒரு பிளேட் இட்லி வடெ கொண்டுவா.

d. Question-Answer drill

(i) Q: டிபன் என்ன இருக்குது ?
A: இட்லி வடெ, பூரி கெழங்கு, உப்புமா இருக்குது.

(ii) Q: இட்லி சூடா இருக்குமா ?
A: அவ்வளவு சூடா இருக்காது, சுமாரா இருக்கும்.

e. Substitution drill

(i) நீங்க என்ன சாப்பிடுறீங்க ?	நீங்க என்ன சாப்பிடுறீங்க ?
Substitute and ch:nge the verb accordingly.	
அவன்	அவன் என்ன சாப்பிடுறான் ?
அவ	அவ என்ன சாப்பிடுறா ?
அவரு	அவரு என்ன சாப்பிடுறாரு ?
அவங்க	அவங்க என்ன சாப்பிடுறாங்க ?
(ii) இட்லி சுமாரா இருக்கும்.	இட்லி சுமாரா இருக்கும்.
Substitute	
சூடா	இட்லி சூடா இருக்கும்.
பெரியதா	இட்லி பெரியதா இருக்கும்.
அழகா	இட்லி அழகா இருக்கும்.

(iii) இட்லி சூடா இருக்காது. — இட்லி சூடா இருக்காது
Substitute
வடெ — வடெ சூடா இருக்காது.
பூரி — பூரி சூடா இருக்காது.
கெழங்கு — கெழங்கு சூடா இருக்காது.
உப்புமா — உப்புமா சூடா இருக்காது.
மசால் தோசெ — மசால்தோசெ சூடா இருக்காது.
சப்பாத்தி — சப்பாத்தி சூடா இருக்காது.

(iv) உங்களுக்குச் சாம்பார் வேணுமா ? — உங்களுக்குச் சாம்பார் வேணுமா ?
Substitute
சட்னி — உங்களுக்குச் சட்னி வேணுமா ?
தண்ணீரு — உங்களுக்குத் தண்ணீரு வேணுமா ?
காபி — உங்களுக்குக் காபி வேணுமா ?

f. Transformation drill

(i) நான் அதெக் குடிக்குறேன். — நீங்க அதெக் குடிக்குறீங்களா ?
நான் அதெச் சாப்பிடுறேன். — நீங்க அதெச் சாப்பிடுறீங்களா ?
நான் அதெப் படிக்குறேன். — நீங்க அதெப் படிக்குறீங்களா ?

(ii) இட்லி சூடா இருக்குது. — இட்லி சூடா இருக்கும்.
வடெ சுமாரா இருக்குது. — வடெ சுமாரா இருக்கும்.
பூரி சூடா இருக்குது. — பூரி சூடா இருக்கும்.

(iii) இட்லி சூடா இருக்கும். — இட்லி சூடா இருக்காது.
வடெ சுமாரா இருக்கும். — வடெ சுமாரா இருக்காது.
பூரி சூடா இருக்கும். — பூரி சூடா இருக்காது.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ....இருக்குது. (Vada, a cake of black gram)
வடெ இருக்குது.

(i) ....இருக்குது. (Idli)
(ii) ....இருக்குது. (Puri)
(iii) .... இருக்குது. (Uppuma)
(iv) ....வேணுமா ? (Chutney)
(v) ....வேணுமா ? (Sambar, a sauce prepared with dhall)
(vi) .... கொடு. (water)
(vii) நீங்க என்ன............றீங்க ? (eat)

(viii) இட்லி ....இருக்கும். (tolerably)
(ix) இட்லி..............இருக்குமா ? (hot)

h. Fill in the blanks using the appropriate conjugated forms (future) of the verb இரு 'be'.

(i) இட்லி சுமாரா..............
(ii) பூரி கெழங்கு சூடா..............
(iii) உப்புமா நல்லா..............

i. Fill in the blanks using the appropriate conjugated forms (future negative) of the verb இரு 'be'.

(i) இட்லி வடெ சூடா..............
(ii) பூரி கெழங்கு சுமாரா..............
(iii) உப்புமா நல்லா..............

j. Frame questions for the answers given below following the models.

Model A : இட்லி இருக்குது.
Q : என்ன இருக்குது ?

(i) வடெ இருக்குது.
(ii) பூரி கெழங்கு இருக்குது.
(iii) உப்புமா இருக்குது.

Model A : இட்லி சுமாரா இருக்கும்.
Q : இட்லி எப்படி இருக்கும் ?

(i) இட்லி வடெ சூடா இருக்கும்.
(ii) மசால்தோசெ நல்லா இருக்கும்.
(iii) உப்புமா சுமாரா இருக்கும்.

Model A : இல்லெ. இட்லி அவ்வளவு சூடா இருக்காது.
Q : இட்லி சூடா இருக்குமா ?

(i) இல்லெ. வடெ அவ்வளவு நல்லா இருக்காது.

k. Change these sentences as in the example.

Example : இட்லி சூடா இருக்கும்.
இட்லி சூடா இருக்காது.

(i) இட்லி சுமாரா இருக்கும்.
(ii) மசால்தோசெ நல்லா இருக்கும்.

l. Write the words represented by the formulae.

Example : இருக்கும் இரு + Future

(i) படி + Future : ....
(ii) தொடு + Future : ....
(iii) குடி + Future : ....

Example : இருக்காது இரு + Future nec

(i) கொடு + Future neg.: ....

(ii) குடி + Future neg.: ....

(iii) படி + Future neg.: ....

m. Answer these questions.

(i) உங்களுக்கு இட்லி வடெ பிடிக்குமா ?

(ii) உங்களுக்குச் சாம்பார் பிடிக்குமா ? சட்னி பிடிக்குமா ?

(iii) நீங்க காலெயிலே என்ன சாப்பிடுறீங்க ?

(iv) உங்க ஹாஸ்டல்லே இட்லி சூடா இருக்குமா ?

(v) ஹோட்டல்லே உப்புமா இருக்குமா ?

(vi) ஹாஸ்டல்லே மசால்தோசெ நல்லா இருக்குமா ?

(vii) நீங்க காலெயிலே ஐஸ்வாட்டர் குடிக்குறீங்களா ?

(viii) உங்க வீட்டுலே தோசெ எப்படி இருக்கும் ?

VOCABULARY

டிபன்	'tiffin'	இட்லி	'Idli, a kind of cake prepared by steaming a dough of rice and black gram.
வடெ	'Vada, a cake of black gram'	பூரி	'Puri, a confectionary prepared out of wheat flour'
கெழங்கு	'a curry prepared out of potatoes and onions'	உப்புமா	'Uppuma, a preparation of flour cooked with salt'
சூடு	'hotness'	சுமாரா	'tolerably'
பிலேட்	'plate'	சாப்பிடு	'eat'
மசால்தோசெ	'masala Dosa, a kind of rice cake prepared with curry stuff'	அப்படின்னா	'if that is so'
சாம்பார்	'Sambar, a sauce prepared with dhall'	சட்னி	'a relish fur food (chutney)'
தண்ணீரு	'drinking water'	ஐஸ்வாட்டர்	'ice water'

GRAMMAR

6.32.113. –ம் is the future tense marker which is immediately added to both strong and weak verb stems when non-human nouns occur as subjects. Example :

> 6. 32. 113. இட்லி சுமாரா இருக்கும்.
> இட்லி சூடா இருக்குமா ?

Note that there is no pronominal suffix in the above sentences. The suffix –ம் denotes the agreement between the subject and predicate and the future tense marker. We noticed in the lesson (6.31) that the future negative has two kinds of forms and the first kind of negative occurs with human nouns (Refer 6.31.112). The second kind of negative occurs with non-human nouns. It is expressed by verb stem (strong or weak), the negative marker –ஆ– and the pronominal suffix –து. Example :

> 6. 32. 113. இட்லி சூடா இருக்காது.

6.32.114. The objective case marker –ஐ is obligatory when a transitive verb identifies a pronoun as its object. Example :

> 6. 32. 114. நான் அதெக் குடிக்கிறேன்.
> நீங்க இதெக் குடிக்கிறீங்களா ?

6.32.115. In Tamil, several nouns may be sequenced one after another without any conjunctive particle if they are semantically related. Example

> 6. 32. 115. நீ ஒரு பிளேட் இட்லி வடெ கொண்டுவா.
> இட்லி வடெ, பூரி கெழங்கு இருக்குது.

Sandhi : குடிக்கிறீங்க + ஆ → குடிக்கிறீங்களா (Refer 5.19 in 2.14)
இதெ + குடிக்கிறீங்களா → இதெக் குடிக்கிறீங்களா ?
(Refer 5.20 in 2.17)
உங்களுக்கு + சாம்பார் → உங்களுக்குச் சாம்பார் (வேணுமா ?
Refer 5.18 in 2.14)

UNIT 6

LESSON 33

BUYING A SAREE

DIALOGUE

கடெக்காரன் : வாங்க, என்ன வேணும் ?	Please come, what do (you) want ?
கமலா : பொடவெ வேணும்.	(I) want sarees.
கடெக்காரன் : உக்காருங்க..இதெ-ல்லாம் காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப் பொட-வெங்க . . . அதெல்லாம் லேட்டஸ்ட் நைலான் நைலக்ஸ் ஸாரிங்க... உங்களுக்கு எது வேணும் ?	Please sit down... These are all Kanjeevaram and Banaras silk sarees, madam ... Those are all the latest (modern) nylon and nylex sarees ... Which one do you want?

கமலா : எனக்குப் பட்டுப்பொடவெ வேணும்...அந்தக் கறுப்புப் பட்டுப் பொடவெயெ எடுங்க.	I want silk sarees... Please take that black silk saree.
கடெக்காரன் : இந்தாங்க....இந்தப் பொடவெயெயும் பாருங்க.	Please see this.... Please see this saree too,madam.
கமலா : அது வேண்டாம்.	(I) do not want that (saree).
கடெக்காரன் : நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க ?	Which saree do you buy ?
கமலா : நான் இந்தப் பச்செப் பொடவெயெ வாங்குறேன்....என்ன வெலெ ?	I buy this green saree... How much does (it) cost ?
கடெக்காரன் : நாங்க நூத்தியம்பது ரூபாய்க்கு விக்குறோம் .... உங்களுக்கு நூத்திநாப்பதுக்குத் தரோம்...எடுங்க.	We sell this saree for one hundred and fifty rupees .. We will give you for one hundred and forty... Please take, madam.
கமலா : இந்தாங்க பணம். பில் கொடுங்க.	Please take this money. Give (me) the bill.

DRILLS

a. Variation drill

6. 33. 116. நீங்க அந்தப் பட்டுப் பொடவெயெ எடுங்க.
நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க ?
நான் இந்தப் பச்செப் பொடவெயெ வாங்குறேன்.

6. 33. 117. இதெல்லாம் காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப் பொடவெ.
அதெல்லாம் நைலான், நைலக்ஸ் ஸாரி.

b. Build up drill

(i) நீங்க அந்தப் பொடவெயெ எடுங்க.	நீங்க அந்தப் பொடவெயெ எடுங்க.
எடுங்க	எடுங்க
பொடவெயெ	பொடவெயெ எடுங்க
அந்த	அந்தப் பொடவெயெ எடுங்க
நீங்க	நீங்க அந்தப் பொடவெயெ எடுங்க.

(ii) இதெல்லாம் காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப்பொடவெ.	இதெல்லாம் காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப்பொடவெ.
பொடவெ	பொடவெ
பட்டு	பட்டுப்பொடவெ
பனாரஸ்	பனாரஸ் பட்டுப்பொடவெ
காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப்-பொடவெ
இதெல்லாம்	இதெல்லாம் காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப்பொடவெ.

c. Expansion drill

(i) நான் வாங்குறேன்.	நான் வாங்குறேன்.
இந்தப் பச்செப் பொடவெயெ வாங்குறேன்	நான் இந்தப் பச்செப் பொட-வெயெ வாங்குறேன்.
(ii) நீங்க எடுங்க.	நீங்க எடுங்க.
அந்தப் பட்டுப் பொடவெயெ எடுங்க	நீங்க அந்தப் பட்டுப் பொடவெயெ எடுங்க.
(iii) அதெல்லாம் ஸாரி.	அதெல்லாம் ஸாரி.
நைலக்ஸ் ஸாரி	அதெல்லாம் நைலக்ஸ் ஸாரி.
நைலான் ஸாரி	அதெல்லாம் நைலான், நைலக்ஸ் ஸாரி.
லேட்டஸ்ட் ஸாரி	அதெல்லாம் லேட்டஸ்ட் நைலான், நைலக்ஸ் ஸாரி.

d. Question-Answer drill

(i) Q: வாங்க, என்ன வேணும்?
A: பொடவெ வேணும்.

(ii) Q: உங்களுக்கு எது வேணும்?
A: எனக்கு அந்தக் கறுப்புப் பட்டுப்பொடவெ வேணும்.

(iii) Q: நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க?
A: நான் இந்தப் பச்செப் பொடவெயெ வாங்குறேன்.

e. Substitution drill

(i) நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க?	நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க?
Substitute and change the noun accordingly.	
ஸாரி	நீங்க எந்த ஸாரியெ வாங்குறீங்க?
ப்ராக்கு	நீங்க எந்தப் ப்ராக்கெ வாங்கு-றீங்க?

பாவாடெ	நீங்க எந்தப் பாவாடெயெ வாங்குறீங்க ?
ஜாக்கெட்டு	நீங்க எந்த ஜாக்கெட்டெ வாங்குறீங்க ?
தாவணி	நீங்க எந்தத் தாவணியெ வாங்குறீங்க ?

(ii) இதெல்லாம் நைலான் ஸாரி.	இதெல்லாம் நைலான் ஸாரி.
Substitute	
நைலக்ஸ்	இதெல்லாம் நைலக்ஸ் ஸாரி.
காஞ்சிபுரம்	இதெல்லாம் காஞ்சிபுரம் ஸாரி.
பனாரஸ்	இதெல்லாம் பனாரஸ் ஸாரி.
பட்டு	இதெல்லாம் பட்டு ஸாரி.

(iii) நான் இந்தப் பச்செப் பொடவெயெ வாங்குறேன்.	நான் இந்தப் பச்செப் பொட-வெயெ வாங்குறேன்.
Substitute	
வெள்ளெ	நான் இந்த வெள்ளெப் பொட-வெயெ வாங்குறேன்.
செவப்பு	நான் இந்தச் செவப்புப் பொட-வெயெ வாங்குறேன்.
நீல(ம்)	நான் இந்த நீலப் பொடவெயெ வாங்குறேன்.
மஞ்சள்	நான் இந்த மஞ்சள் பொடவெயெ வாங்குறேன்.
கறுப்பு	நான் இந்தக் கறுப்புப் பொட-வெயெ வாங்குறேன்.

f. Transformation drill

(i) எனக்குப் பட்டுப் பொடவெ வேணும்.	உங்களுக்கு எது வேணும் ?
எனக்கு நைலான் ஸாரி வேணும்.	உங்களுக்கு எது வேணும் ?
எனக்கு நைலக்ஸ் ஸாரி வேணும்.	உங்களுக்கு எது வேணும் ?

(ii) நான் இந்தப் பொடவெயெ வாங்குறேன்.	நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க ?
நான் இந்த நைலான் ஸாரியெ எடுக்குறேன்.	நீங்க எந்த நைலான் ஸாரியெ எடுக்குறீங்க ?
நான் இந்த நைலக்ஸ் ஸாரியெ வாங்குறேன்.	நீங்க எந்த நைலக்ஸ் ஸாரியெ வாங்குறீங்க ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இதெல்லாம் காஞ்சிபுரம்............ பொடவெங்க. (silk)

இதெல்லாம் காஞ்சிபுரம் பட்டுப் பொடவெங்க.

(i) இந்தாங்க............... (money)
(ii) அந்தக்.............பட்டுப் பொடவெயெ எடுங்க. (black)
(iii) நான் இந்தப்..............பொடவெயெ வாங்குறேன். (green)
(iv) நாங்க..............ரூபாய்க்கு விக்குறோம். (one hundred and fifty)
(v) உங்களுக்கு ....ரூபாய்க்குத் தர்றோம். (one hundred and forty)
(vi) அந்தக் கறுப்புப் பட்டுப் பொடவெயெ..............ங்க. (take)
(vii) இந்தப் பொடவெயெயும்..............ங்க. (see/have a glance)
(viii) நீங்க எந்தப் பொடவெயெ..............றீங்க? (buy)

h. Transform the following singular non-honorific imperatives into singular honorific imperatives.

(i) நீ கொடு.
(ii) நீ எடு.
(iii) நீ வாங்கு.
(iv) நீ பாரு.

i. Frame questions for the answers given below following the models.

Model A : எனக்கு அந்தக் கறுப்புப் பொடவெ வேணும்.
Q : உங்களுக்கு எது வேணும்?

(i) எனக்கு இந்தப் பச்செப் பொடவெ வேணும்.
(ii) எனக்கு அந்த நைலக்ஸ் ஸாரி வேணும்.

j. Write the word represented by the formula.

Example : **பொடவெயெ** பொடவெ + Objective

(i) ஸாரி + Objective ....
(ii) பட்டு + Objective : ....
(iii) காஞ்சிபுரம் + Objective ....
(iv) ரூபாய் + Objective ....

k. Answer these questions

(i) நீங்க உங்க மனெவிக்குப் பட்டுப் பொடவெ வாங்குறீங்களா?
(ii) கடெக்காரன் அந்தப் பச்செப் பொடவெயெ எத்தனெ ரூபாய்க்கு விக்குறான்?

(iii) உங்க மனைவிக்கு லேட்டஸ்ட் நைலக்ஸ் ஸாரி
வாங்குவீங்களா ?

(iv) உங்களுக்குக் கறுப்புப் பட்டுப் பொடவெ பிடிக்குமா ?

(v) உங்களுக்குப் பச்செப் பட்டுப் பொடவெ பிடிக்காதா ?

VOCABULARY

பட்டு	'silk'	லேட்டஸ்ட்	'latest'
நைலான்	'nylon'	நைலக்ஸ்	'nylex'
ஸாரி	'sari'	கறுப்பு	'black'
எடு	'take'	பாரு	'see/have a glance'
வாங்கு	'buy, purchase'	பச்செ	'green'
நூத்தியம்பது	'one hundred and fifty'	வில்	'sell'
நூத்திநாப்பது	'one hundred and forty'	பணம்	'money'
பில்	'bill'		

GRAMMAR

6.33.116. It was said in lesson 6.31 that the objective case marker is optional if a noun refers to an inanimate object. But it is almost obligatory when an inanimate object is preceded by any demonstrative adjective. Example:

6. 33. 116 நீங்க அந்தப் பட்டுப் பொடவெயெ எடுங்க.
நீங்க எந்தப் பொடவெயெ வாங்குறீங்க ?
நான் இந்தப் பச்செப் பொடவெயெ வாங்குறேன்.

6.33.117. In Tamil, several attributes may be sequenced one after another before a noun without any conjunctive particle if they are semantically related (Refer 6.32.115). Example:

6. 33. 117. இதெல்லாம் காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப் பொடவெ.
அதெல்லாம் நைலான், நைலக்ஸ் ஸாரி.

Sandhi : இது + எல்லாம் → இதெல்லாம்
அது + எல்லாம் → அதெல்லாம் (Refer S.3 in 1.2)

பட்டு + பொடவெ → பட்டுப்பொடவெ
கறுப்பு + பொடவெ → கறுப்புப் பொடவெ
எந்த + பொடவெ → எந்தப் பொடவெ
பச்செ + பொடவெ → பச்செப் பொடவெ (Refer S.4 in 1.2)

UNIT 7

LESSON 34

RECEIVING A TELEGRAM

DIALOGUE

நரசய்யா : சுரேஷ் ! நாளைக்கு மிஸஸ் ராமு மைசூருலே-யிருந்து வருங்களாம்.	Suresh ! (It seems) that Mrs. Ramu is coming from Mysore tomorrow evening.
சுரேஷ் : அப்படியா ? உங்களுக்கு எப்படித் தெரியும் ?	Is that so ? How do you know ?
நரசய்யா : இதோ ! ராமுவோடெ தந்தி.	Look ! (Here is) Ramu's telegram.
சுரேஷ் : எங்கே ? ...அதெ என்-கிட்டெக் காட்டுங்க.	Where (it is)... Please show it to me.
நரசய்யா : இந்தாங்க... இதெக் கமலா அம்மாவுக்குக் காண்பிக்கிறீங்களா ?	Please take this... Will you please show this to Kamala madam ?

சுரேஷ் : சரி, காண்பிக்குறேன்... நீங்க இப்ப எங்கே போறீங்க?	Alright, (I) will show (it to her)... Where are you going now?
நாசய்யா : நான் இப்ப இன்ஸ்டி-டியூட்டுக்குப் போறேன்.	Now I am going to the Institute.
சுரேஷ் : பேராசிரியரு இன்ஸ்டி-டியூட்டுலே இருக்குறாராம்.. இந்தச் சேதியெ அவரு-கிட்டேயும் தெரிவிங்க... நான் கமலா அம்மா-வுக்குச் சொல்லுறேன்.	(It seems that) Professor (Sundaram) is in the Institute---Please inform this news to him also...I will tell Kamala madam.
நாசய்யா : சரி. நான் வரட்டுமா?	Alright! Shall I take leave of you?

DRILLS

a. Variation drill

7. 34. 118. நீங்க இதெக் கமலா அம்மாவுக்குக்
காண்பிக்குறீங்களா?
நீங்க சேதியெ அவருக்கும் தெரிவிங்க.
நீங்க அதெ எனக்குக் காட்டுங்க.
நான் சேதியெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன்.

7. 34. 119. நீங்க இதெக் கமலா அம்மாகிட்டேக்
காண்பிக்குறீங்களா?
நீங்க சேதியெ அவருகிட்டேயும் தெரிவிங்க.
நீங்க அதெ என்கிட்டேக் காட்டுங்க.
நான் சேதியெக் கமலா அம்மாகிட்டேச்
சொல்லுறேன்.

7. 34. 120. மிஸஸ் ராமு வராங்களாம்.
பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.

b. Build up drill

(i) நான் சேதியெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன்.	நான் சேதியெக் கமலா அம்மா-வுக்குச் சொல்லுறேன்.
சொல்லுறேன்	சொல்லுறேன்
கமலா அம்மாவுக்கு	கமலா அம்மாவுக்குச் சொல்லு-றேன்
சேதியெ	சேதியெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன்
நான்	நான் சேதியெக் கமலா அம்மா-வுக்குச் சொல்லுறேன்.

(ii)	நீங்க அதெ என்கிட்டெக் காட்டுங்க.	நீங்க அதெ என்கிட்டெக் காட்டுங்க.
	காட்டுங்க	காட்டுங்க
	என்கிட்டெ	என்கிட்டெக் காட்டுங்க
	அதெ	அதெ என்கிட்டெக் காட்டுங்க
	நீங்க	நீங்க அதெ என்கிட்டெக் காட்டுங்க
(iii)	பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.	பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.
	இருக்குறாராம்	இருக்குறாராம்
	இன்ஸ்டிடியூட்டுலே	இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்
	பேராசிரியரு	பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.

c. Expansion drill

(i)	நீங்க தெரிவிங்க.	நீங்க தெரிவிங்க.
	அவருக்கும் தெரிவிங்க	நீங்க அவருக்கும் தெரிவிங்க.
	சேதியெத் தெரிவிங்க	நீங்க சேதியெ அவருக்கும் தெரிவிங்க.
(ii)	நீங்க காண்பிக்குறீங்களா ?	நீங்க காண்பிக்குறீங்களா ?
	கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?	நீங்க கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
	இந்தத் தந்தியெக் காண்பிக்குறீங்களா ?	நீங்க இந்தத் தந்தியெக் கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
	இப்பக் காண்பிக்குறீங்களா ?	நீங்க இப்ப இந்தத் தந்தியெக் கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
(iii)	மிஸஸ் ராமு வருங்களாம்.	மிஸஸ் ராமு வருங்களாம்.
	மாலெயிலே வருங்களாம்	மிஸஸ் ராமு மாலெயிலே வருங்களாம்.
	நாளெக்கு வருங்களாம்	மிஸஸ் ராமு நாளெக்கு மாலெயிலே வருங்களாம்.

d. Question-Answer drill

(i) Q: உங்களுக்கு எப்படித் தெரியும்?
A: இதோ! ராமுவோடெ தந்தி.

(ii) Q: இதெக் கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா?
A: சரி, காண்பிக்குறேன்.

e. Substitution drill

(i) நீங்க எனக்குக் காட்டுங்க.	நீங்க எனக்குக் காட்டுங்க.
Substitute and change the noun accordingly.	
நாங்க	நீங்க எங்களுக்குக் காட்டுங்க.
அவன்	நீங்க அவனுக்குக் காட்டுங்க.
அவ	நீங்க அவளுக்குக் காட்டுங்க.
அவரு	நீங்க அவருக்குக் காட்டுங்க.
அவங்க	நீங்க அவங்களுக்குக் காட்டுங்க.
அது	நீங்க அதுக்குக் காட்டுங்க.
(ii) நீங்க என்கிட்டெக் காட்டுங்க.	நீங்க என்கிட்டெக் காட்டுங்க.
Substitute and change the noun accordingly.	
நாங்க	நீங்க எங்ககிட்டெக் காட்டுங்க.
இவன்	நீங்க இவன்கிட்டெக் காட்டுங்க.
இவ	நீங்க இவகிட்டெக் காட்டுங்க.
இவரு	நீங்க இவருகிட்டெக் காட்டுங்க.
இவங்க	நீங்க இவங்ககிட்டெக் காட்டுங்க.
இது	நீங்க இதுகிட்டெக் காட்டுங்க.
(iii) நான் காண்பிக்குறேன்.	நான் காண்பிக்குறேன்.
Substitute and conjugate the verb suitably.	
தெரிவி	நான் தெரிவிக்குறேன்.
படி	நான் படிக்குறேன்.
குடி	நான் குடிக்குறேன்.
கொடு	நான் கொடுக்குறேன்.
எடு	நான் எடுக்குறேன்.
(iv) நான் இப்பப் போறேன்.	நான் இப்பப் போறேன்.
Substitute	
மாலெயிலே	நான் மாலெயிலே போறேன்.
இன்னெக்கு	நான் இன்னெக்குப் போறேன்.
ராத்திரி	நான் ராத்திரி போறேன்.
(v) அவங்க வறாங்களாம்.	அவங்க வறாங்களாம்.
Substitute and change the verb accordingly.	
போ	அவங்க போறாங்களாம்.
தா	அவங்க தறாங்களாம்.

f. Transformation drill

(i) நான் காண்பிக்குறேன்.	நீங்க காண்பிக்குறீங்களா ?
நான் சொல்லுறேன்.	நீங்க சொல்லுறீங்களா ?
நான் தெரிவிக்குறேன்.	நீங்க தெரிவிக்குறீங்களா ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : மீனாவும் ராமு..........வருவாங்களாம். (in the evening)
மீனாவும் ராமு மாலையிலே வருவாங்களாம்.

(i) இதோ ! ராமுகோடெ.......... (telegram)
(ii) இந்தச்..........யெ அவருகிட்டெயும் தெரிவிங்க. (news)
(iii) அதெ என்கிட்டெக..........ங்க. (show)
(iv) இதெக் கமலா அம்மாவுக்குக்..........க்குறீங்களா ? (show)
(v) இந்தச் சேதியெ அவருகிட்டெயும்..........ங்க. (inform)
(vi) நான் கமலா அம்மாகிட்டெ..........றேன். (say)

h. Change these sentences as in the example

Example : அதெ எனக்குக் காட்டுங்க.
அதெ என்கிட்டெக் காட்டுங்க.

(i) இந்தச் சேதியெ அவருக்குத் தெரிவிங்க.
(ii) இதெக் கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா ?
(iii) நான் இதெக் கமலா அம்மாவுக்குச் சொல்லுறேன்.

i. Write the word represented by the formula.

Example : அவருகிட்டெ   அவரு + Locative

(i) நான் + Locative : ....
(ii) நாங்க + Locative : ....
(iii) நீ + Locative : ....
(iv) நீங்க + Locative : ....
(v) அவங்க + Locative : ....
(vi) இவ + Locative : ....

j. Include the indirect object form of the item given in parentheses as shown in the example.

Example : நீங்க அதெக் காட்டுங்க. (நான்)
நீங்க அதெ எனக்குக் காட்டுங்க.

(i) நீங்க இதெக் காண்பிக்குறீங்களா ? (ராதாம்மா)
(ii) நீங்க இந்தச் சேதியெத் தெரிவிங்க. (அவரு)
(iii) நான் இதெச் சொல்லுறேன். (அவங்க)

k. Combine the following sentences as in the model.

Model : நீங்க தெரிவிங்க.
இது சேதி.
அவரு பேராசிரியரு.

நீங்க சேதியெப் பேராசிரியருகிட்டெத் தெரிவிங்க.
(நீங்க சேதியெப் பேராசிரியருக்குத் தெரிவிங்க)

(i) நீங்க என்கிட்டெக் காட்டுங்க.
இது தந்தி.

(ii) நீங்க காண்பிக்குறீங்களா ?
இது தந்தி.
இவங்க கமலா அம்மா.

(iii) நான் சொல்லுறேன்.
இது சேதி.
இவங்க கமலா அம்மா.

I. Answer these questions

(i) அது யாரோடெ தந்தி ?
(ii) இன்னைக்கு மாலெயிலே உங்க ஆசிரியரு உங்க அறெக்கு வருரா ?
(iii) நீங்க வீட்டுப்பாடத்தெத் தினந்தோறும் உங்க ஆசிரியரு-கிட்டெக் காட்டுறீங்களா ?
(iv) இன்ஸ்டிடியூட்டுலெயிருந்து மொதலாவது உங்களுக்கு தந்தி வந்ததா ?
(v) நீங்க மாலெயிலே எங்கே போறீங்க ?

VOCABULARY

மாலெயிலே	'in the evening'	மிஸஸ்	'Mrs'
அப்படியா ?	'is it so ?'	இதோ !	'Look !'
தந்தி	'telegram'	காட்டு	'show'
காண்பி	'show'	இன்ஸ்டிடியூட்டு	'institute'
சேதி	'news'	தெரிவி	'inform'
சொல்லு	'say'		

GRAMMAR

7.34.118. In the lessons 2.14, 3.19-23, 5.28-30, 6.31 and 6.33 we dealt with various uses of a noun and the case marker -க்கு/-உக்கு/-அக்கு. In this Unit the other meanings and uses of the same form are explained in three lessons (7.34, 7.35 and 7.36). Consider the following sentences.

7. 34. 118. நீங்க அதெ எனக்குக் காட்டுங்க.
நீங்க சேதியெ அவருக்கும் தெரிவிங்க.

The transitive verbs like காட்டு 'show', தெரிவி 'inform' etc., identify the noun and the objective case marker as their object as we mentioned earlier. This object may be called direct object. In addition to this, unlike the sentences 6.31.111, 6.32.114 and 6.33.116, these sentences have a noun and the case marker -க்கு/ -உக்கு/ -அக்கு to denote indirectly another object of

action that is expressed by the same set of verbs. This object may be called indirect object. e.g., எனக்கு 'me-to', அவருக்கு him-to' etc.

7.34.119. See the following examples.

> கமலா அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா ?
> அவருக்கும் தெரிவிங்க.
> எனக்குக் காட்டுங்க.
> அம்மாவுக்குச் சொல்லுறேன்.

The verbs காண்பி 'show', தெரிவி 'inform', காட்டு 'show', சொல்லு 'tell' etc., may identify the locative form which is expressed by a noun and the case marker -கிட்டெ in the meaning of indirect object as follows :

> கமலா அம்மாகிட்டெக் காண்பிக்குறீங்களா ?
> அவருகிட்டெயும் தெரிவிங்க.
> என்கிட்டெக் காட்டுங்க.
> கமலா அம்மாகிட்டெச் சொல்லுறேன்.

Example :

> **7. 34. 119.** நீங்க இதெக் கமலா அம்மாகிட்டெக்
> காண்பிக்குறீங்களா ?
> நீங்க சேதியெ அவருகிட்டெயும் தெரிவிங்க.

7.34.120. -ஆம் is a kind of reportive particle which means 'it is said', is always added to a sentence. Example:

> **7. 34. 120.** மிஸஸ் ராமு வருங்களாம்.
> பேராசிரியரு இன்ஸ்டிடியூட்டுலே இருக்குறாராம்.

Sandhi : எப்படி + தெரியும் → எப்படித் தெரியும் (Refer S.21 in 3.20)
என்கிட்டெ + காட்டுங்க → என்கிட்டெக் காட்டுங்க (Refer S.22 in 4.25)
அம்மாவுக்கு + காண்பிக்குறீங்களா → அம்மாவுக்குக் காண்பிக்குறீங்களா
இன்ஸ்டிடியூட்டுக்கு + போறேன் → இன்ஸ்டிடியூட்டுக்குப் போறேன்
அம்மாவுக்கு + சொல்லுறேன் → அம்மாவுக்குச் சொல்லுறேன்
(Refer S.18 in 2.14)
அப்படி + ஆ → அப்படியா
சேதி + எ → சேதியெ
அவருகிட்டெ + உம் → அவருகிட்டெயும் (Refer S.8 in 1.5)
ராமு + ஓடெ → ராமுவோடெ
அம்மா + உக்கு → அம்மாவுக்கு (Refer S.9 in 1.7)
காண்பிக்குறீங்க + ஆ → காண்பிக்குறீங்களா ?
வருங்க + ஆ → வருங்களா (Refer S.19 in 2.14)

UNIT 7

LESSON 35

DEPARTING FROM THE HOUSE

DIALOGUE

சுமதி : அத்தெ, நீங்க எந்த மாசம் ஊருலேயிருந்து திரும்புவீங்க?	Aunty, in which month will you return from (your) native place ?
அமலா : ஜூலை மாசம் திரும்புவேன்.	(I) will return (from my native place) in the month of July.
சுமதி : எத்தனாம் தேதி ?	On which date ?

கமலா : பத்தாம் தேதி புறப்படுவேன்... பதினாலாம் தேதி இங்கே வருவேன்... நீ வீட்டிலே ஜாக்கிரதையா இரு. ராமுவுக்கு நாளைக்குப் பணம் அனுப்பு... வீட்டுக்காரனுக்கு வாடகையைக் கொடு. பால்காரன் நாளன்னைக்கு வருவான். நீ அவன்கிட்டெயிருந்து நமக்கு ஒரு கிலோ வெண்ணெ வாங்கு... செடிகளுக்கெல்லாம் தண்ணீர் ஊத்து... காய்கறிச் செடிக்கு உரம் போடு... நீ சாயங்காலம் கடெவீதிக்குப் போறியா ?	I will start on 10th... (I) will reach here on 14th... (You must) be careful in the house. (You) send money to Rama tomorrow...Give the rent to the house owner. The milkman will come day after tomorrow. You buy one kilo of butter from him for us... Water all the plants...Put manure to the vegetable plants. Are you going to the bazaar this evening?
சுமதி : ஆமாங்க. ஆறரை மணிக்குப் போவேன்.	Yes, aunty. I will go at half past six.
கமலா : குழந்தைக்கு ஒரு சட்டை எடு... நான் வரட்டுமா ?	Buy a shirt for the child...Shall I take leave of you?
சுமதி : சரிங்க. ஜாக்கிரதையாப் போங்க.	Alright. Please go carefully,(aunty) (Be careful while you go).

DRILLS

a. Variation drill

7. 35. 121. நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.
நீ செடிக்குத் தண்ணீர் ஊத்து.
நீ செடிக்கு உரம் போடு.
நீ குழந்தைக்குச் சட்டை எடு.

b. Build up drill

(i) நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.	நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.
அனுப்பு	அனுப்பு
பணம்	பணம் அனுப்பு
ராமுவுக்கு	ராமுவுக்குப் பணம் அனுப்பு
நீ	நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.

(ii) நீ குழந்தெக்குச் சட்டெ எடு.	நீ குழந்தெக்குச் சட்டெ எடு.
எடு	எடு
சட்டெ	சட்டெ எடு
குழந்தெக்கு	குழந்தெக்குச் சட்டெ எடு
நீ	நீ குழந்தெக்குச் சட்டெ எடு.
(iii) அவன்கிட்டெயிருந்து ஒரு கிலோ வெண்ணெ வாங்கு.	அவன்கிட்டெயிருந்து ஒரு கிலோ வெண்ணெ வாங்கு.
வாங்கு	வாங்கு
வெண்ணெ	வெண்ணெ வாங்கு
ஒரு கிலோ	ஒரு கிலோ வெண்ணெ வாங்கு
அவன்கிட்டெயிருந்து	அவன்கிட்டெயிருந்து ஒரு கிலோ வெண்ணெ வாங்கு.

c. Expansion drill

(i) நீ கொடு.	நீ கொடு.
வாடகெயெக் கொடு	நீ வாடகெயெக் கொடு.
வீட்டுக்காரனுக்குக் கொடு	நீ வீட்டுக்காரனுக்கு வாடகெயெக் கொடு.
(ii) நீ எடு.	நீ எடு.
சட்டெ எடு	நீ சட்டெ எடு.
குழந்தெக்கு எடு	நீ குழந்தெக்குச் சட்டெ எடு.
கடெவீதியிலே எடு	நீ கடெவீதியிலே குழந்தெக்குச் சட்டெ எடு.
மாலெயிலே எடு	நீ மாலெயிலே கடெவீதியிலே குழந்தெக்குச் சட்டெ எடு.
(iii) நீ ஊத்து.	நீ ஊத்து.
தண்ணீரு ஊத்து	நீ தண்ணீரு ஊத்து.
செடிக்கெல்லாம் ஊத்து	நீ செடிக்கெல்லாம் தண்ணீரு ஊத்து.
(iv) நீ வாங்கு.	நீ வாங்கு.
வெண்ணெ வாங்கு	நீ வெண்ணெ வாங்கு.
அவன்கிட்டெயிருந்து வாங்கு	நீ அவன்கிட்டெயிருந்து வெண்ணெ வாங்கு.
நமக்கு வாங்கு	நீ நமக்கு அவன்கிட்டெயிருந்து வெண்ணெ வாங்கு.

d. Question-Answer drill

(i) Q: நீங்க எப்ப ஊருலேயிருந்து திரும்புவீங்க?
A: பத்தாம் தேதி திரும்புவேன்.

(ii) Q: நீ மாலெயிலே கடெவீதிக்குப் போறேயா ?
A: ஆமா, ஆறரெ மணிக்குப் போவேன்.

a. Substitution drill

(i) நீ ராமுவுக்கு அனுப்பு. — நீ ராமுவுக்கு அனுப்பு.

Substitute

கொடு	நீ ராமுவுக்குக் கொடு.
எடு	நீ ராமுவுக்கு எடு.
காட்டு	நீ ராமுவுக்குக் காட்டு.
காண்பி	நீ ராமுவுக்குக் காண்பி.
தெரிவி	நீ ராமுவுக்குத் தெரிவி.
வாங்கு	நீ ராமுவுக்கு வாங்கு.

(ii) நீ நாளன்னைக்கு வாங்கு. — நீ நாளன்னைக்கு வாங்கு.

Substitute

நாளைக்கு	நீ நாளைக்கு வாங்கு.
இன்னைக்கு	நீ இன்னைக்கு வாங்கு.

(iii) நான் ஜூலை மாசம் திரும்புவேன். — நான் ஜூலை மாசம் திரும்புவேன்.

Substitute

ஜனவரி	நான் ஜனவரி மாசம் திரும்புவேன்.
பெப்ரவரி	நான் பெப்ரவரி மாசம் திரும்புவேன்.
மார்ச்	நான் மார்ச் மாசம் திரும்புவேன்.
ஏப்ரல்	நான் ஏப்ரல் மாசம் திரும்புவேன்.
மே	நான் மே மாசம் திரும்புவேன்.
ஜூன்	நான் ஜூன் மாசம் திரும்புவேன்.
ஆகஸ்ட்	நான் ஆகஸ்ட் மாசம் திரும்புவேன்.
செப்டம்பர்	நான் செப்டம்பர் மாசம் திரும்புவேன்.
அக்டோபர்	நான் அக்டோபர் மாசம் திரும்புவேன்.
நவம்பர்	நான் நவம்பர் மாசம் திரும்புவேன்.
டிசம்பர்	நான் டிசம்பர் மாசம் திரும்புவேன்.

(iv) நான் பத்தாம் தேதி திரும்புவேன். — நான் பத்தாம் தேதி திரும்புவேன்.

Substitute and change the cardinal number accordingly.

பதினொண்ணு	நான் பதினொண்ணாம் தேதி திரும்புவேன்.
பன்னிரெண்டு	நான் பன்னிரெண்டாம் தேதி திரும்புவேன்.

பதிமூணு	நான் பதிமூணாம் தேதி திரும்புவேன்.
பதினாறு	நான் பதினாறாம் தேதி திரும்புவேன்.
பதினஞ்சு	நான் பதினஞ்சாம் தேதி திரும்புவேன்.
இருபது	நான் இருபதாம் தேதி திரும்புவேன்.
முப்பது	நான் முப்பதாம் தேதி திரும்புவேன்.
(v) பால்காரன் வருவான். Substitute and conjugate the verb suitably.	பால்காரன் வருவான்.
தா	பால்காரன் தருவான்.
ஊத்து	பால்காரன் ஊத்துவான்.
போடு	பால்காரன் போடுவான்.
காட்டு	பால்காரன் காட்டுவான்.
(vi) நீ அவன்கிட்டெயிருந்து வாங்கு. Substitute and change the noun accordingly.	நீ அவன்கிட்டெயிருந்து வாங்கு.
நான்	நீ என்கிட்டெயிருந்து வாங்கு.
நாங்க	நீ எங்ககிட்டெயிருந்து வாங்கு.
இவன்	நீ இவன்கிட்டெயிருந்து வாங்கு.
இவ	நீ இவகிட்டெயிருந்து வாங்கு.
இவரு	நீ இவருகிட்டெயிருந்து வாங்கு.
இவங்க	நீ இவங்ககிட்டெயிருந்து வாங்கு.

f. Transformation drill

(i) நான் ஜூலை மாசம் திரும்புவேன்.	நீங்க எந்த மாசம் திரும்புவீங்க?
நான் ஆகஸ்ட் மாசம் புறப்படுவேன்.	நீங்க எந்த மாசம் புறப்படுவீங்க?
நான் செப்டம்பர் மாசம் போவேன்.	நீங்க எந்த மாசம் போவீங்க?
நான் அக்டோபர் மாசம் வருவேன்.	நீங்க எந்த மாசம் வருவீங்க?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான் ஜூலை ....திரும்புவேன். (month)
நான் ஜூலை மாசம் திரும்புவேன்.

(i) எத்தனாம் .... ? (date)
(ii) ....பால்காரன் வருவான். (day after tomorrow)
(iii) ....+ உக்கு வாடகெயெக் கொடு. (house owner)
(iv) ....வருவான். (milk man)
(v) அவன்கிட்டெயிருந்து............வாங்கு. (butter)
(vi) காய்கறிச்............க்கு ஒரம் போடு. (plant)
(vii) ....செடிக்கு ஒரம் போடு. (vegetable)
(viii) காய்கறிச் செடிக்கு............போடு. (manure)
(ix) குழந்தெக்கு ஒரு............எடு. (shirt)
(x) ஒரம்............ (put)
(xi) ஒரு கிலோ வெண்ணெ............ (buy)
(xii) ராமுவுக்குப் பணம் .... (send)
(xiii) செடிக்கெல்லாம் தண்ணீரு............ (pour)

h. Write the words represented by the formulae.

Example : வீட்டுக்காரனுக்கு வீட்டுக்காரன் + Indirect object

(i) ராமு + Indirect object : ....
(ii) அவன் + Indirect object : ....
(iii) செடி + Indirect object : ....
(iv) குழந்தெ + Indirect object : ....
(v) பால்காரன் + Indirect object : ....

Example : திரும்புவேன் திரும்பு + Future

(i) புறப்படு + Future : ....
(ii) வா + Future : ....
(iii) அனுப்பு + Future : ....
(iv) ஊத்து + Future : ....
(v) போடு + Future : ....

i. Include the indirect object form of the item given in parentheses as shown in the example.

Example : நீ வாடகெயெக் கொடு. (வீட்டுக்காரன்)
நீ வீட்டுக்காரனுக்கு வாடகெயெக் கொடு.

(i) நீ பணம் அனுப்பு. (ராமு)

(ii) நீ தண்ணி ஊத்து. (செடி)
(iii) நீ ஒரம் போடு. (காய்கறிச் செடி)
(iv) நீ சட்டெ எடு. (குழந்தெ)
(v) நீ வெண்ணெ வாங்கு. (ராமு)

j. Combine the following sentences as in the model.

Model : நீ அனுப்பு.
இவரு ராமு.
இது பணம்.
நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.

(i) நீ கொடு.
அவன் வீட்டுக்காரன்.
இது வாடகெ.

(ii) நீ ஊத்து.
இதெல்லாம் செடி.
இது தண்ணி.

(iii) நீ போடு.
இது காய்கறிச் செடி.
இது ஒரம்.

(iv) நீ எடு.
இது குழந்தெ.
இது ஒரு சட்டெ.

k. Answer these questions.

(i) நீங்க எந்த மாசம் ஊருக்குத் திரும்புவீங்க ?
(ii) நீங்க எத்தனாம் தேதி மைசூருக்கு வந்தீங்க ?
(iii) நீங்க உங்க வீட்டுக்கு எத்தனெ ரூபாய் வாடகெ கொடுக்கு-
றீங்க ?
(iv) நீங்க மாசம் எத்தனெ ரூபாய் உங்க மனைவிக்கு அனுப்புறீங்க ?
(v) நீங்க எத்தனெ கிலோ வெண்ணெ வாங்குறீங்க ?
(vi) கமலா அம்மா எந்த மாசம் ஊருலேயிருந்து திரும்புறாங்க ?
(vii) சுமதி எப்பக் கடைவீதிக்குப் போறா ?

VOCABULARY

அத்தெ	'mother-in-law, aunt'	மாசம்	'month'
திரும்பு	'return'	ஜுலெ	'July, name of the month'
தேதி	'date'	ஜாக்கிரதெ	'carefulness'
அனுப்பு	'send (as money)'	வீட்டுக்காரன்	'house owner'

வாடகெ	'rent'	பால்காரன்	'milk man'
நாளென்னெக்கு	'day after tomorrow'	வெண்ணெ	'butter'
செடி	'plant'	ஊத்து	'pour, as water'
காய்கறி	'vegetables'	உரம்	'manure'
போடு	'put'	சட்டெ	'shirt'

GRAMMAR

7.35.121. The verbs like அனுப்பு 'send', ஊத்து 'pour, as water', போடு 'put', எடு 'take' etc., form another class of verbs. This class implies the existence of indirect object when the verbs are used in sentences. Example :

7. 35. 121. நீ ராமுவுக்குப் பணம் அனுப்பு.
நீ செடிக்குத் தண்ணீரு ஊத்து.
நீ குழந்தெக்குச் சட்டெ எடு.

Note that the indirect objects ராமுவுக்கு 'Ramu-to', செடிக்கு 'plant-to', குழந்தெக்கு 'child-to' etc., cannot be replaced by the locative form i.e., noun -கிட்டெ as in 7.34.119. The following sentences are ungrammatical,

* நீ ராமுகிட்டெ பணம் அனுப்பு.
* நீ செடிகிட்டெ தண்ணீரு ஊத்து.
* நீ குழந்தெகிட்டெ சட்டெ எடு.

பணம் 'money', தண்ணீரு 'water', உரம் 'manure', சட்டெ 'shirt' etc., are direct objects and being inanimate nouns the objective case marker is optional.

Sandhi : நாளெக்கு + பணம் அனுப்பு → நாளெக்குப் பணம் அனுப்பு
ஆறரெமணிக்கு + போவேன் → ஆறரெமணிக்குப் போவேன்
(Refer S.18 in 2.14)

வாடகெயெ + கொடு → வாடகெயெக்கொடு (Refer S.20 in 2.17)
காய்கறி + செடி → காய்கறிச் செடி (Refer S.4 in 1.2)

UNIT 7

LESSON 36

IN THE KITCHEN

DIALOGUE

கமலா : சுமதி, என்ன செய்றே ?	Sumathi, what are (you) doing ?
சுமதி : சமையக்கட்டுலே வேலையா இருக்குறேன்.	(I am occupied with) work in the kitchen.
கமலா : நீ இன்னைக்கு என்னம்மா சமைக்குறே ?	What are you cooking today, dear ?
சுமதி : உருளைக்கெழங்கு பொரியல், ரசம், அப்பளம்... அவ்வளவுதான்.	Potato fry, rasam and pappad... That's all.
கமலா : சாப்பாடு ரெடியா ?	Is meal ready ?
சுமதி : ரெடி. அப்பளம் வறுக்குறேன்...அப்புறமா நாம சாப்பிடலாம்.	(It is) ready. (I am) frying pappad... Then we shall eat.

கமலா : குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குது.... அதுக்கு மொதல்லே சோறு ஊட்டு. அப்புறம் உன் மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு.	Baby is very hungry...First of all, (you) feed rice to him. Then (you) serve meal to your uncle.
சுமதி : சரி, அத்தெ.	Alright, aunty.
கமலா : இந்தா குழந்தெ...எனக்குக் காலு ரொம்ப வலிக்குதம்மா. நான் கொஞ்சம் படுக்குறேன்.	Please take the baby...My leg pains very much, dear. I will lie down for a while.
சுமதி : சரிங்க.	Alright, aunty.

DRILLS

a. Variation drill

7. 36. 122. குழந்தெக்கு வயிறு பசிக்குது.
எனக்குக் காலு வலிக்குது.

7. 36. 123. நீ ஏன்னம்மா சமெக்குறே ?
எனக்குக் காலு வலிக்குதம்மா.

7. 36. 124. குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குது.
எனக்குக் காலு ரொம்ப வலிக்குது.

b. Build up drill

(i) குழந்தெக்கு வயிறு பசிக்குதம்மா.	குழந்தெக்கு வயிறு பசிக்குதம்மா.
பசிக்குதம்மா	பசிக்குதம்மா
வயிறு	வயிறு பசிக்குதம்மா
குழந்தெக்கு	குழந்தெக்கு வயிறு பசிக்குதம்மா.
(ii) எனக்குக் காலு ரொம்ப வலிக்குது.	எனக்குக் காலு ரொம்ப வலிக்குது.
வலிக்குது	வலிக்குது
ரொம்ப	ரொம்ப வலிக்குது
காலு	காலு ரொம்ப வலிக்குது
எனக்கு	எனக்குக் காலு ரொம்ப வலிக்குது.
(iii) நான் சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன்.	நான் சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன்.
இருக்குறேன்	இருக்குறேன்

வேலெயா	வேலெயா இருக்குறேன்
சமெயக்கட்டுலே	சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன்
நான்	நான் சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன்.

c. Expansion drill

(i) எனக்கு வலிக்குது.	எனக்கு வலிக்குது.
ரொம்ப வலிக்குது	எனக்கு ரொம்ப வலிக்குது.
காலு வலிக்குது	எனக்குக் காலு ரொம்ப வலிக்குது.
(ii) குழந்தெக்குப் பசிக்குதம்மா.	குழந்தெக்குப் பசிக்குதம்மா.
ரொம்பப் பசிக்குதம்மா	குழந்தெக்கு ரொம்பப் பசிக்குதம்மா.
வயிறு பசிக்குதம்மா	குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குதம்மா.
(iii) நீ பரிமாறு.	நீ பரிமாறு.
சாப்பாடு பரிமாறு	நீ சாப்பாடு பரிமாறு.
உன் மாமாவுக்குப் பரிமாறு	நீ உன் மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு.

d. Question-Answer drill

(i) Q: சுமதி, என்ன செய்றே ?
A: சமெயக்கட்டுலே வேலெயா இருக்குறேன்.

(ii) Q: நீ இண்ணெக்கு என்னம்மா சமெக்குறே ?
A: உருளெக்கெழங்கு பொரியல், ரசம், அப்பளம்... அவ்வளவுதான்.

(iii) Q: சாப்பாடு ரெடியா ?
A: ரெடி

e Substitution drill

(i) நீ மாமாவுக்குச் சாபபாடு பரிமாறு.	நீ மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு.
Substitute	
சமெ	நீ மாமாவுக்குச் சாப்பாடு சமெ.
கொடு	நீ மாமாவுக்குச் சோறு கொடு.
(ii) நீ குழந்தெக்குச் சோறு ஊட்டு.	நீ குழந்தெக்குச் சோறு ஊட்டு.
Substitute	
பரிமாறு	நீ குழந்தெக்குச் சோறு பரிமாறு.
சமெ	நீ குழந்தெக்குச் சோறு சமெ.
கொடு	நீ குழந்தெக்குச் சோறு கொடு.

(iii) நான் வறுக்குறேன்.	நான் வறுக்குறேன்.
Substitute and change the verb accordingly.	
நாங்க	நாங்க வறுக்குறோம்.
நாம	நாம வறுக்குறோம்.
நீ	நீ வறுக்குறே.
நீங்க	நீங்க வறுக்குறீங்க.
அவென்	அவென் வறுக்குறான்.
அவ	அவ வறுக்குறா.
அவரு	அவரு வறுக்குறாரு.

(iv) நான் படுக்குறேன்.	நான் படுக்குறேன்.
Substitute and conjugate the verb suitably.	
கொடு	நான் கொடுக்குறேன்.
எடு	நான் எடுக்குறேன்.
வறு	நான் வறுக்குறேன்.
படி	நான் படிக்குறேன்.
குடி	நான் குடிக்குறேன்.
சமெ	நான் சமெக்குறேன்.

(v) குழந்தெக்குப் பசிக்குது.	குழந்தெக்குப் பசிக்குது.
Substitute and change the noun accordingly.	
மாமா	மாமாவுக்குப் பசிக்குது.
அத்தெ	அத்தெக்குப் பசிக்குது.
அப்பா	அப்பாவுக்குப் பசிக்குது.
அம்மா	அம்மாவுக்குப் பசிக்குது.
அக்கா	அக்காவுக்குப் பசிக்குது.
தங்கெ	தங்கெக்குப் பசிக்குது.
தம்பி	தம்பிக்குப் பசிக்குது.

f. Transformation drill

(i) நான் சமெக்குறேன்.	நீ என்ன செய்றே ?
நான் படுக்குறேன்.	நீ என்ன செய்றே ?
நான் வறுக்குறேன்.	நீ என்ன செய்றே ?
நான் பரிமாறுறேன்.	நீ என்ன செய்றே ?

(ii) நான் சமெக்குறேன்.	நீ என்னம்மா சமெக்குறே ?
நான் வறுக்குறேன்.	நீ என்னம்மா வறுக்குறே ?
நான் பரிமாறுறேன்.	நீ என்னம்மா பரிமாறுறே ?
நான் ஊட்டுறேன்.	நீ என்னம்மா ஊட்டுறே ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ……………… (potato)
உருளைக்கெழங்கு

(i) ……………… (fried food)
(ii) ……………… (thin disc-like preparation of black gram)
(iii) ……………… (cooked rice)
(iv) ……………… (meal)
(v) குழந்தெக்கு ……………… பசிக்குது. (stomach)
(vi) எனக்குக் ……………… வலிக்குது. (leg)
(vii) குழந்தெக்குச் சோறு ……………… (feed)
(viii) உன் மாமாவுக்குச் சாப்பாடு ……………… (serve)
(ix) குழந்தெக்கு வயிறு ……………… க்குது. (hunger)
(x) எனக்குக் காலு ……………… க்குது. (pain)
(xi) நான் கொஞ்சம் ……………… க்குறேன். (lie down)

h. Write the word represented by the formula.

Example : **பசிக்குது** பசி + Present

(i) வலி – Present : ………………
(ii) இரு + Present : ………………
(iii) படு + Present : ………………
(iv) சமெ + Present : ………………

i. Include the indirect object form of the item given in parentheses as shown in the example

Example : நீ மொதல்லே சோறு ஊட்டு. (குழந்தெ)
நீ குழந்தெக்கு மொதல்லே சோறு ஊட்டு.

(i) நீ சாப்பாடு பரிமாறு. (உன் மாமா)

j. Combine the following sentences as in the model.

Model : நீ பரிமாறு.
இவரு உன் மாமா.
இது சாப்பாடு.
நீ உன் மாமாவுக்குச் சாப்பாடு பரிமாறு.

(i) நீ மொதல்லே ஊட்டு.
அது குழந்தெ.
இது சோறு.

k. Answer these questions.

(i) சுமதி என்ன செய்றாங்க ?
(ii) இன்னொக்கு உங்க மனெவி என்ன சமெக்குறாங்க ?
(iii) உங்களுக்கு உங்க மனெவி சாப்பாடு பரிமாறுறாங்களா ?
(iv) நீங்க எப்பப் படுக்குறீங்க ?
(v) உங்களுக்கு இப்ப வயிறு பசிக்குதா ?
(vi) உங்களுக்கு உருளெக்கெழங்குப் பொரியல் பிடிக்குமா ?

VOCABULARY

சமெயக்கட்டு	'kitchen'	சமெ	'cook'
உருளெக் கெழங்கு	'potato'	பொரியல்	'any fried food'
ரசம்	'Rasam, a kind of soup prepared out of tamarind, pepper and tomato'	அப்பளம்	'thin disc-like preparation of black gram'
ரெடி	'ready'	வறு	'fry'
வயிறு	'stomach'	பசி	'hunger'
சோறு	'cooked rice'	ஊட்டு	'feed'
பரிமாறு	'serve'	காலு	'leg'
வலி	'pain'	படு	'lie down'

GRAMMAR

7.36.122. The verbs பசி 'be hungry', வலி 'pain' etc., have the subject which is expressed by a noun and the case marker -க்கு/ -உக்கு/ -அக்கு. Example :

7. 36. 122. குழந்தெக்கு வயிறு பசிக்குது.
எனக்குக் காலு வலிக்குது.

7.36.123. -ம்மா is a truncated form of -அம்மா. It is, in spoken Tamil, added to any sentence (Refer 1.7.30). Here it is added to the question form என்ன 'what'. Example :

7. 36. 123. நீ என்னம்மா சமெக்குறே ?

7.36.124. ரொம்ப is an adverb. It is functionally different from the intensifier ரொம்ப (Refer 1.4.17). It occurs immediately before a verb.

7. 36. 124. எனக்குக் காலு ரொம்ப வலிக்குதம்மா.
குழந்தெக்கு வயிறு ரொம்பப் பசிக்குது.

Sandhi : ரொம்ப + பசிக்குது → ரொம்பப் பசிக்குது. (Refer S. 14 in 1.11)
மாமாவுக்கு + சாப்பாடு → மாமாவுக்குச் சாப்பாடு (பரிமாறு)
எனக்கு + காலு → எனக்குக் காலு (ரொம்ப வலிக்குதம்மா
Refer S. 18 in 2.14)

UNIT 8

LESSON 37

WHERE DID YOU STUDY ?

DIALOGUE

சுரேஷ் : வணக்கம், ஸார் !	Vanakkam, sir.
மூர்த்தி : வாங்க சுரேஷ், உக்காருங்க... நீங்க எங்கே பி.ஏ. படிச்சீங்க ?	Please come Mr. Suresh. Please be seated... Where did you study B.A. ?
சுரேஷ் : நான் ரோஹ்தக்லே ஜெயின் கல்லூரியிலே படிச்சேன்.	I studied in Jain college in Rohtak.
மூர்த்தி : நான் போன வருஷம் ஒரு கருத்தரங்குலே உங்களைப் பார்த்தேன்.	I saw you in a seminar last year.
சுரேஷ் : எங்கே ?... அண்ணாமலை யுனிவர்சிட்டியிலேயா ?	Where ?...(Was it) in Annamalai University ?

மூர்த்தி : ஆமா. நீங்க அங்கே படிச்சீங்களா ?	Yes. Did you study there ?
சுரேஷ் : ஆமா. நான் அங்கேதான் ஆங்கிலம் எம். ஏ. படிச்சேன்.	Yes. I studied M. A. English there.
மூர்த்தி : நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?	Did you stay in the hostel ?
சுரேஷ் : ஆமா. நான் பி. ஜி. ஹாஸ்டல்லே தங்கு-னேன்.	Yes. I stayed in the P.G. Hostel.
மூர்த்தி : எந்த மெஸ்லே சாப்பிட்-டீங்க ?	In which mess did you dine ?
சுரேஷ் : பி.ஜி. மெஸ்லே சாப்பிட்-டேன்... நீங்களும் அண்ணாமலை யுனிவர்-சிட்டி தானா ?	I took my food in the P. G. mess. Are you too from Annamalai University ?
மூர்த்தி : ஆமா. நானும் அதே யுனிவர்சிட்டி தான். நீங்க இப்ப எங்கே போறீங்க ?	Yes. I too (studied) in the same University. Where are you going now ?
சுரேஷ் : போஸ்டாபீசுக்குப் போறேன். அடுத்த-வாரம் என் நண்பர் திரிவேதி இங்கே வருரு. அவருக்கு அவசரமா ஒரு தந்தி அனுப்புறேன்... வரட்டுமா ?	(I am) going to the post-office. My friend Trivedi is coming here next week. I am sending a telegram to him urgently. Shall (I) take leave of you ?
மூர்த்தி : சரி, வாங்க.	Alright, please do.

DRILLS

a. Variation drill

8. 37. 125. நான் ரோஹ்தக்லே படிச்சேன்.
நான் பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்.
நீங்க எங்கே படிச்சீங்க ?
நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?

b. Build up drill

(i) நான் ரோஹ்தக்லே படிச்-சேன்.	நான் ரோஹ்தக்லே படிச்சேன்.
படிச்சேன்	படிச்சேன்
ரோஹ்தக்லே	ரோஹ்தக்லே படிச்சேன்
நான்	நான் ரோஹ்தக்லே படிச்சேன்.
(ii) நீங்க எங்கே படிச்சீங்க ?	நீங்க எங்கே படிச்சீங்க ?
எங்கே படிச்சீங்க ?	எங்கே படிச்சீங்க ?
நீங்க	நீங்க எங்கே படிச்சீங்க ?
(iii) நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ?	நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ?
தங்குனீங்களா ?	தங்குனீங்களா ?
ஹாஸ்டல்லே	ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?
நீங்க	நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ?
(iv) நீங்க அங்கே படிச்சீங்களா ?	நீங்க அங்கே படிச்சீங்களா ?
படிச்சீங்களா ?	படிச்சீங்களா ?
அங்கே	அங்கே படிச்சீங்களா ?
நீங்க	நீங்க அங்கே படிச்சீங்களா ?

c. Expansion drill

(i) நான் பார்த்தேன்.	நான் பார்த்தேன்.
உங்களெப் பார்த்தேன்	நான் உங்களெப் பார்த்தேன்.
ஒரு செமினார்லே பார்த்தேன்	நான் ஒரு செமினார்லே உங்களெப் பார்த்தேன்.
போன வருஷம் பார்த்தேன்	நான் போன வருஷம் ஒரு செமி-னார்லே உங்களெப் பார்த்தேன்.
(ii) நீங்க தங்குனீங்களா ?	நீங்க தங்குனீங்களா ?
ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ?	நீங்க ஹாஸ்டல்லே தங்கு-னீங்களா ?

d. Question-Answer drill

(i) Q : நீங்க எங்கே பி. ஏ. படிச்சீங்க ?
A : நான் ஜெயின் கல்லூரியிலே படிச்சேன்.

(ii) Q : நீங்க அங்கே படிச்சீங்களா ?
A : ஆமா, நான் அங்கே தான் ஆங்கிலம் எம். ஏ. படிச்சேன்.

(iii) Q : நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?
A : ஆமா, நான் பி. ஜி. ஹாஸ்டல்லே தான் தங்குனேன்.

(iv) Q: எந்த மெஸ்லே சாப்பிட்டீங்க?
A: பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்.

(v) Q: நீங்களும் அண்ணாமலெ யுனிவர்சிட்டிதானா?
A: ஆமா. நானும் அதே யுனிவர்சிட்டிதான்.

e. Substitution drill

(i) நான் செமினார்லே பார்த்தேன்.	நான் செமினார்லே பார்த்தேன்.
Substitute and change the noun accordingly.	
கல்லூரி	நான் கல்லூரியிலே பார்த்தேன்.
யுனிவர்சிட்டி	நான் யுனிவர்சிட்டியிலே பார்த்தேன்.
போஸ்டாபீஸ்	நான் போஸ்டாபீஸ்லே பார்த்தேன்.
ஹாஸ்டல்	நான் ஹாஸ்டல்லே பார்த்தேன்.
பள்ளிக்கூடம்	நான் பள்ளிக்கூடத்துலே பார்த்தேன்.
வீடு	நான் வீட்டுலே பார்த்தேன்.
(ii) நான் ஹாஸ்டல்லே தங்குனேன்.	நான் ஹாஸ்டல்லே தங்குனேன்.
Substitute and change the verb accordingly.	
நாங்க	நாங்க ஹாஸ்டல்லே தங்குனோம்
நாம	நாம ஹாஸ்டல்லே தங்குனோம்.
நீ	நீ ஹாஸ்டல்லே தங்குனே.
நீங்க	நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்க.
அவன்	அவன் ஹாஸ்டல்லே தங்குனான்.
அவ	அவ ஹாஸ்டல்லே தங்குனா.
அவரு	அவரு ஹாஸ்டல்லே தங்குனாரு.
அவங்க	அவங்க ஹாஸ்டல்லே தங்குனாங்க.
(iii) நான் தங்குனேன்.	நான் தங்குனேன்.
Substitute and conjugate the verb suitably	
கட்டு	நான் கட்டுனேன்.
போ	நான் போனேன்.
பரிமாறு	நான் பரிமாறுனேன்.
அனுப்பு	நான் அனுப்புனேன்.
(iv) நான் படிச்சேன்.	நான் படிச்சேன்.
Substitute and conjugate the verb suitably.	
குடி	நான் குடிச்சேன்.
சமெ	நான் சமெச்சேன்

(v) நான் பார்த்தேன்	நான் பார்த்தேன்
Substitute and conjugate the verb suitably.	
கொடு	நான் கொடுத்தேன்.
எடு	நான் எடுத்தேன்.
படி	நான் படித்தேன்.
வறு	நான் வறுத்தேன்.

f. Transformation drill

(i) நான் ஜெயின் கல்லூரியிலே படிச்சேன்.	நீங்க எங்கே படிச்சீங்க?
நான் ஹோட்டலிலே தங்குனேன்.	நீங்க எங்கே தங்குனீங்க?
நான் மெஸ்ஸிலே சாப்பிட்டேன்.	நீங்க எங்கே சாப்பிட்டீங்க?
நான் சென்னையிலே பார்த்தேன்.	நீங்க எங்கே பார்த்தீங்க?
(ii) நான் பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்.	நீங்க எந்த மெஸ்லே சாப்பிட்டீங்க?
நான் ஜெயின் கல்லூரியிலே படிச்சேன்.	நீங்க எந்தக் கல்லூரியிலே படிச்சீங்க?
நான் பி. ஜி. ஹோட்டலிலே தங்குனேன்.	நீங்க எந்த ஹோட்டலிலே தங்குனீங்க?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீங்க எங்கே ....ச்சீங்க? (study)
நீங்க எங்கே படிச்சீங்க?

(i) நான்.............. உங்களைப் பார்த்தேன். (last year)
(ii) நான் ஹோட்டலிலே..............னேன். (stay)
(iii) என் நண்பர் .... வர்றார். (next week)
(iv) நான்..............அனுப்பறேன். (urgently)

h. Match the following

நான்	தங்குனேன்
நீங்க	வர்றாரு
அவரு	படிச்சீங்களா

i. Include the locative form of the item given in parentheses as shown in the example.

Example : நான் படிச்சேன். (கல்லூரி)
நான் கல்லூரியிலே படிச்சேன்.

(i) நான் உங்களெப் பார்த்தேன். (செமினார்)
(ii) நீங்க படிச்சீங்களா ? (அண்ணாமலெ யுனிவர்சிட்டி)
(iii) நான் தங்குனேன். (ஹாஸ்டல்)
(iv) நான் சாப்பிட்டேன். (மெஸ்)

j. Write the word represented by the formula.

Example : கல்லூரியிலே கல்லூரி + Locative.

(i) செமினார் + Locative : ....
(ii) ஹாஸ்டல் + Locative : ....
(iii) மெஸ் + Locative : ....

k. Frame questions for the answers given below following the model.

Model : A: நான் ரோஹ்தக்லே படிச்சேன்.
Q: நீங்க எங்கே படிச்சீங்க ?

(i) நான் பி. ஜி. மெஸ்லே சாப்பிட்டேன்.
(ii) நான் ஹாஸ்டல்லே தங்குனேன்.
(iii) நான் ஒரு செமினார்லே உங்களெப் பார்த்தேன்.
(iv) நான் அங்கே ஆங்கிலம் படிச்சேன்.

l. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verb தங்கு 'stay'.

(i) நான் ஹாஸ்டல்லே..............
(ii) நீங்க ஹாஸ்டல்லே..............
(iii) நண்பர் திரிவேதி..............

m. Answer these questions.

(i) நீங்க எங்கே பி.ஏ/பி.எஸ்ஸி படிச்சீங்க ?
(ii) நீங்க ஹாஸ்டல்லே தங்குனீங்களா ?
(iii) உங்க யுனிவர்சிட்டியோடெ பேரு என்ன ?
(iv) நீங்க மெஸ்லே சாப்பிட்டீங்களா ?
(v) நீங்க காலெஜிலே போஸ்டாபீஸுக்குப் போனீங்களா ?

VOCABULARY

படி	'study'	போன	'last'
செமினார்	'seminar'	தங்கு	'stay'
மெஸ்	'mess'	போஸ்டாபீஸ்	'post-office'
அடுத்த	'next'	வாரம்	'week'
அவசரமா	'urgently'		

GRAMMAR

8.37.125. This Unit exclusively deals with locative case and its various uses. As in other cases, the locative case marker follows the noun it qualifies. There are three locative case markers in Tamil (Refer 2.13.53). The chief characteristic uses of the locative case are

(i) to denote a place where an action takes place,

(ii) to denote a thing in which an action is performed,

(iii) to denote time expression,

(iv) to denote the meaning of 'by' and

(v) to denote a person with whom an action is performed.

In this lesson, the locative is used to denote a place where an action takes place. The locative case marker is always suffixed to a place noun in this case. Example :

8. 37. 125. நான் ஜோஸப்தக்கேல படிக்கிறேன்.
நான் பி. ஜி. ஹாஸ்டல்லெ தங்குறேன்.

This locative form is correspondingly questioned using எங்கே 'where'. Example :

S. 37. 125. நீங்க எங்கே படிக்கிறீங்க ?

Sandhi : படிக்கிறீங்க + ஆ → படிக்கிறீங்களா ?
தங்குறீங்க + ஆ → தங்குறீங்களா (Refer S.19 in 2.14)

கல்லூரி + இலே → கல்லூரியிலே

யுனிவர்சிட்டி + இலே → யுனிவர்சிட்டியிலே (Refer S.8 in 1.5)

UNIT 8

LESSON 38

WHEN DID YOU JOIN THE JOB ?

DIALOGUE

மூர்த்தி : சுரேஷ், நேத்துப் பேப்பர் பாத்தீங்களா ?... பேராசிரியர் அகத்தியலிங்கம் அமெரிக்கா போறாராம்... உங்களுக்கு அவரைத் தெரியுமா ?

Mr. Suresh, did you read newspaper yesterday ? (It is said that) Professor Agasthialingam is going to America. Do you know him ?

சுரேஷ் : ஓ ! ரொம்ப நல்லாத் தெரியும்... அண்ணாமலை யுனிவர்சிட்டியிலே மொழியியலில் பேராசிரியரா இருக்காரு. நான் அவரை ஒரு கூட்டத்துலே சந்திச்சேன் . . . அவருகூடக் கொஞ்ச நேரம் பேசினேன்.

Oh ! (I know (him) very well. He is a Professor of Linguistics in Annamalai University. I met him in a meeting. I spoke with him for some time.

மூர்த்தி : நீங்க எந்த மொழியிலே அப்பப் பேசினீங்க ?	In what language did you speak (with him) at that time ?
சுரேஷ் : ஆங்கிலத்துலே தான் பேசினோம். ஏன்னா, அப்ப எனக்குத் தமிழ் தெரியாது. அவரும் என்கூட ஆங்கிலத்துலே பேசினாரு.	(I) spoke (with him) only in English because I did not know Tamil at that time. He too spoke with me in English
மூர்த்தி : எந்த ஆண்டுலே அண்ணாமலை யுனிவர்சிட்டியிலே படிச்சீங்க ?	In which year did you study in Annamalai University ?
சுரேஷ் : ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்திரெண்டாம் ஆண்டுலே படிச்சேன்.	(I) studied in the year 1972.
மூர்த்தி : எப்ப வேலையிலே சேர்ந்தீங்க ?	When did you join the job ?
சுரேஷ் : ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தியஞ்சு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி சேர்ந்தேன் ... நீங்க நாளைக்குக் காலையிலே விருதுநகர் போறீங்களா ?	(I) joined on the 22nd of August 1975. Are you going to Virudhunagar tomorrow morning ?
மூர்த்தி : ஆமா. அதிகாலையிலே போவேன்	Yes (I) will go in the early morning
சுரேஷ் : எதுலே போறீங்க ?	How are you going ?
மூர்த்தி : ரயில்லே போறேன்.	(I) am going by train

DRILLS

a. Variation drill

8. 38. 126. நான் ஆங்கிலத்துலே பேசினேன்.
நான் வேலையிலே சேர்ந்தேன்.
நீங்க எந்த மொழியிலே பேசினீங்க ?

8. 38. 127. நான் அதிகாலையிலே போவேன்.
நீங்க காலையிலே போறீங்களா ?
நீங்க எப்ப வேலையிலே சேர்ந்தீங்க ?

8. 38. 128. நான் ரயில்லே போறேன்.
நீங்க எதுலே போறீங்க ?

8. 38. 129. நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.
ஏன்னா, எனக்குத் தமிழ் தெரியாது.

b. Build up drill

(i) நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.	நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.
பேசுனேன்	பேசுனேன்
ஆங்கிலத்துலே	ஆங்கிலத்துலே பேசுனேன்
நான்	நான் ஆங்கிலத்துலே பேசுனேன்.
(ii) நீங்க காலையிலே போறீங்களா ?	நீங்க காலையிலே போறீங்களா ?
போறீங்களா ?	போறீங்களா ?
காலையிலே	காலையிலே போறீங்களா ?
நீங்க	நீங்க காலையிலே போறீங்களா ?
(iii) அகஸ்தியலிங்கம் அமெரிக்கா போறாராம்.	அகஸ்தியலிங்கம் அமெரிக்கா போறாராம்.
போறாராம்	போறாராம்
அமெரிக்கா	அமெரிக்கா போறாராம்
அகஸ்தியலிங்கம்	அகஸ்தியலிங்கம் அமெரிக்கா போறாராம்.
(iv) நான் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலையிலே சேர்ந்தேன்.	நான் ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலையிலே சேர்ந்தேன்.
சேர்ந்தேன்	சேர்ந்தேன்
வேலையிலே	வேலையிலே சேர்ந்தேன்
இருபத்திரெண்டாம் தேதி	இருபத்திரெண்டாம் தேதி வேலையிலே சேர்ந்தேன்
ஆகஸ்ட் மாசம்	ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலையிலே சேர்ந்தேன்
அஞ்சாம் ஆண்டு	அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலையிலே சேர்ந்தேன்

எழுபத்தி	எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன்
தொள்ளாயிரத்தி	தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன்
ஆயிரத்தி	ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி அஞ்சாம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் இருபத்திரெண்டாம் தேதி வேலெயிலே சேர்ந்தேன்
அப்பா	அப்பா என்னெக் கம்பாலெ அடிப்பாங்க.

(ii) நீ வீட்டுப்பாடத்தெப் பால்-பாயிண்ட் பேனாவாலெ எழுதாதே.	நீ வீட்டுப்பாடத்தெப் பால்-பாயிண்ட் பேனாவாலெ எழுதாதே.
எழுதாதே	எழுதாதே
பேனாவாலெ	பேனாவாலெ எழுதாதே
பால்பாயிண்ட்	பால்பாயிண்ட் பேனாவாலெ எழுதாதே
வீட்டுப்பாடத்தெ	வீட்டுப்பாடத்தெப் பால்பாயிண்ட் பேனாவாலெ எழுதாதே
நீ	நீ வீட்டுப்பாடத்தெப் பால்-பாயிண்ட் பேனாவாலெ எழுதாதே.
(iii) நீங்க இந்தப் பென்சிலெக் கத்தியாலெ சீவுறீங்களா ?	நீங்க இந்தப் பென்சிலெக் கத்தி-யாலெ சீவுறீங்களா ?
சீவுறீங்களா ?	சீவுறீங்களா ?
கத்தியாலெ	கத்தியாலெ சீவுறீங்களா ?
பென்சிலெ	பென்சிலெக் கத்தியாலெ சீவுறீங்களா ?
இந்த	இந்தப் பென்சிலெக் கத்தியாலெ சீவுறீங்களா ?
நீங்க	நீங்க இந்தப் பென்சிலெக் கத்தி-யாலெ சீவுறீங்களா ?
(iv) நீ வீட்டுப்பாடத்தெச் சாதா-ரணப் பேனாவாலெ எழுது	நீ வீட்டுப் பாடத்தெச் சாதாரணப் பேனாவாலெ எழுது.
எழுது	எழுது
பேனாவாலெ	பேனாவாலெ எழுது
சாதாரண	சாதாரணப் பேனாவாலெ எழுது
வீட்டுப்பாடத்தெ	வீட்டுப் பாடத்தெச் சாதாரணப் பேனாவாலெ எழுது
நீ	நீ வீட்டுப் பாடத்தெச் சாதாரணப் பேனாவாலெ எழுது.

c. Expansion drill

(i) நீ எழுது.	நீ எழுது.
சாதாரணப் பேனாவாலெ எழுது	நீ சாதாரணப் பேனாவாலெ எழுது.
வீட்டுப் பாடத்தெ எழுது	நீ வீட்டுப் பாடத்தெச் சாதாரணப் பேனாவாலெ எழுது.

(ii) அப்பா அடிப்பாங்க.	அப்பா அடிப்பாங்க.
கம்பாலெ அடிப்பாங்க	அப்பா கம்பாலெ அடிப்பாங்க.
என்னெ அடிப்பாங்க	அப்பா என்னெக் கம்பாலெ அடிப்பாங்க.
(iii) நீங்க சீவுறீங்களா ?	நீங்க சீவுறீங்களா ?
கத்தியாலெ சீவுறீங்களா ?	நீங்க கத்தியாலெ சீவுறீங்களா ?
கொஞ்சம் சீவுறீங்களா ?	நீங்க கொஞ்சம் கத்தியாலெ சீவுறீங்களா ?
பென்சிலெச் சீவுறீங்களா ?	நீங்க பென்சிலெக் கொஞ்சம் கத்தியாலெ சீவுறீங்களா ?
(iv) நீ எழுதாதேம்மா.	நீ எழுதாதேம்மா.
பால்பாயிண்ட் பேனாவாலெ எழுதாதேம்மா	நீ பால்பாயிண்ட் பேனாவாலெ எழுதாதேம்மா.
வீட்டுப் பாடத்தெ எழுதா-தேம்மா	நீ வீட்டுப்பாடத்தெப் பால்-பாயிண்ட் பேனாவாலெ எழுதா-தேம்மா.

d. Question-Answer drill

(i) Q : அது என்ன ?
A : இது பால்பாயிண்ட் பேனா, மாமா.

(ii) Q : உன்கிட்டெப் பென்சில் இருக்குதா ?
A : இருக்குது, மாமா.

(iii) Q : இந்தப் பென்சிலெக் கொஞ்சம் கத்தியாலெ சீவுறீங்களா ?
A : சரி, கொடு.

(iv) Q : உன்கிட்டெப் பேனா இல்லெயா ?
A : என்கிட்டெ இல்லெ. அப்பாகிட்டெ இருக்குது.

(v) Q : நீ அப்பா பேனாவெ எடுக்கமாட்டேயா ?
A : நான் எடுக்கமாட்டேன்.

(vi) Q : அப்பா எங்கே ?
A : அப்பா கடைவீதிக்குப் போறாங்க.

e. Substitution drill

(i) நீ பேனாவாலெ எழுது.	நீ பேனாவாலெ எழுது.
Substitute	
பென்சிலாலெ	நீ பென்சிலாலெ எழுது.
(ii) நான் எடுக்கமாட்டேன்.	நான் எடுக்கமாட்டேன்.
Substitute and conjugate the verb suitably	

கொடு	நான் கொடுக்கமாட்டேன்.
படு	நான் படுக்கமாட்டேன்.
அடி	நான் அடிக்கமாட்டேன்.
குடி	நான் குடிக்கமாட்டேன்.

(iii) அப்பா கொடுத்தாங்க. — அப்பா கொடுத்தாங்க.

Substitute

அம்மா	அம்மா கொடுத்தாங்க.
மாமா	மாமா கொடுத்தாங்க.
அத்தெ	அத்தெ கொடுத்தாங்க.
அக்கா	அக்கா கொடுத்தாங்க.

f. Transformation drill

(i)

நான் பேனாவாலெ எழுதுவேன்.	நான் பேனாவாலெ எழுதமாட்டேன்.
நான் கத்தியாலெ சீவுவேன்.	நான் கத்தியாலெ சீவமாட்டேன்.
நான் கம்பாலெ அடிப்பேன்.	நான் கம்பாலெ அடிக்கமாட்டேன்.
நான் பேனாவெ எடுப்பேன்.	நான் பேனாவெ எடுக்கமாட்டேன்.

(ii)

நான் பேனாவாலெ எழுத மாட்டேன்.	நீ பேனாவாலெ எழுதமாட்டேயா?
நான் கத்தியாலெ சீவமாட்டேன்.	நீ கத்தியாலெ சீவமாட்டேயா?
நான் கம்பாலெ அடிக்கமாட்டேன்.	நீ கம்பாலெ அடிக்கமாட்டேயா?
நான் பேனாவெ எடுக்கமாட்டேன்.	நீ பேனாவெ எடுக்கமாட்டேயா?

(iii)

என்கிட்டெ பேனா இல்லெ.	உன்கிட்டெ பேனா இல்லெயா?
என்கிட்டெ பென்சில் இல்லெ.	உன்கிட்டெ பென்சில் இல்லெயா?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model: இது .... (ball point pen)
இது பால்பாயிண்ட் பேனா.

(i) ....பேனாவாலெ எழுது. (ordinary)
(ii) இந்தப் பென்சிலெ ....றீங்களா? (sharpen)
(iii) அப்பா............ஆலெ அடிப்பாங்க. (stick)
(iv) அப்பா கம்பாலெ............ப்பாங்க. (beat)

h. Include the instrumental form of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : நீ வீட்டுப்பாடத்தெ எழுது. (பேனா)
நீ வீட்டுப்பாடத்தெப் பேனாவாலெ எழுது.

(i) நீ வீட்டுப்பாடத்தெ எழுதாதே. (பென்சில்)
(ii) இந்தப் பென்சிலெச் சீவுறீங்களா ? (கத்தி)
(iii) அப்பா என்னெ அடிப்பாங்க. (கம்பு)

i. Give the future negative form of the verb given in parentheses.

(i) நான் .... (எடு)
(ii) நாங்க.............. (கொடு)
(iii) நீ.............. (போ)
(iv) நீங்க .... (வா)
(v) அவன்.............. (அடி)
(vi) அவ.............. (எழுது)
(vii) அவெரு.............. (சீவு)
(viii) அவங்க.............. (உக்காரு)

j. Frame eight sentences from the table given below.

Example : நீ பேனாவாலெ எழுது.

நீ நீங்க	பேனா பென்சில்	எழுது வரெ

k. Join the following according to the sandhi rules.

(i) பேனா + ஆலெ : ....
(ii) பேனா + ஏ : ....
(iii) கம்பு + ஆலெ : ....
(iv) கத்தி + ஆலெ : ....

l. Answer these questions.

(i) உங்ககிட்டெப் பால்பாயிண்ட் பேனா இருக்குதா ?
(ii) நீங்க உங்க மாணவங்களெக் கம்பாலெ அடிப்பீங்களா ?
(iii) கலா எந்தப் பேனாவாலெ வீட்டுப்பாடம் எழுதுறா ?
(iv) நீங்க தினசரி வீட்டுப்பாடம் எழுதுறீங்களா ?
(v) நீங்க உங்க மனெவியோடெ/கணவரோடெ பேனாவெ எடுக்கமாட்டீங்களா ?

VOCABULARY

பால்பாயிண்ட் பேனா	'ball point pen'	சாதாரண	'ordinary'
கத்தி	'knife'	சீவு	'sharpen'
கம்பு	'stick'	அடி	'beat'

GRAMMAR

11.44.137. The case form which consists of a noun and the case marker -ஆலெ is called instrumental case. It is used in the following meanings.

(i) To denote an instrument with which the action is performed.

(ii) To denote an object by means of which the action is performed

(iii) To denote the cause and agent of the action.

(iv) To denote the object which is used in implementing the action.

The different uses of the instrumental case mentioned above are determined by the different classes of verbs and the various kinds of nouns with which the marker -ஆலெ occurs. In this lesson the instrumental case marker -ஆலெ is used in the first meaning listed above. Example :

11. 44. 137. நீ வீட்டுப்பாடத்தெச் சாதாரணப் பேனாவாலெ எழுது.
அப்பா என்னெக் கம்பாலெ அடிப்பாங்க.

In these sentences, பேனா 'pen' and கம்பு 'stick' are the instruments with which the actions of writing and beating are performed respectively.

Sandhi : என் + எ → என்னெ (Refer S.11 in 1.8)
மூர்த்தி + ஓடெ → மூர்த்தியோடெ
கத்தி + ஆலெ → கத்தியாலெ
சரி + அம்மா → சரியம்மா (Refer S.8 in 1.5)
பேனா + ஆலெ → பேனாவாலெ
பேனா + எ → பேனாவெ (Refer S.9 in 1.7)

UNIT 11

LESSON 45

WHAT DO WE DO WITH LEGS ?

DIALOGUE

சுரேஷ் : கலா, நான் ஒரு கேள்வி கேக்குறேன்... நீ பதில் சொல்லுறேயா ?	Kala, I will ask a question... Will you answer ?
கலா : சரி மாமா. கேளுங்க.	Okey uncle. Please ask.
சுரேஷ் : கண்ணு, காது, மூக்கு, வாய், கை, காலு இதெல்லாம் உடல் உறுப்பு, இல்லையா ? இதாலெ நாம என்ன செய்றோம் ?	Eyes, ears, nose, mouth, hands and legs are all body parts, are they not ? What do we do with them ?

கலா : இது ரொம்பச் சின்னக் கேள்வி, மாமா. விடை சொல்லட்டுமா....? நாம கண்ணுலெ பார்க்குறோம் ; காதாலெ கேக்குறோம்.	It is a very simple question, uncle. Shall (I) answer...? We see with eyes; and hear with ears.
சுரேஷ் : எதாலெ சுவாசிக்குறோம்?	With which do we breathe ?
கலா : மூக்காலெ சுவாசிக்குறோம்.	(We) breathe with nose.
சுரேஷ் : அப்புறம் ?	Then ?
கலா : வாயாலெ பேசுறோம் ; சாப்பிடுறோம் ; கையாலெ வேலெ செய்றோம் ;	(We) speak with mouth ; eat (with mouth) ; and work with hands.
சுரேஷ் : ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ?	Howmany fingers are in a hand ?
கலா : ஒரு கையிலெ அஞ்சு வெரலு இருக்குது.	There are five fingers in a hand.
சுரேஷ் : காலாலெ என்ன செய்றோம்....? உனக்குத் தெரியுமா ?	What do (we) do with legs...Do you know ?
கலா : தெரியும்...காலாலெ நடக்குறோம்.... மாமா, அப்பா வறுங்க.	(Yes I) know....(we) walk with legs... Uncle, father is coming.
சுரேஷ் : கெட்டிக்காரி !	Clever girl !

DRILLS

a. Variation drill

11. 45. 138. நாம கண்ணுலெ பார்க்குறோம்.
நாம காதாலெ கேக்குறோம்.
நாம கையாலெ வேலெ செய்றோம்.
நாம கையாலெ என்ன செய்றோம் ?
நாம எதாலெ வேலெ செய்றோம் ?

b. Build up drill

(1) நாம கண்ணுலெ பார்க்குறோம்.	நாம கண்ணுலெ பார்க்குறோம்.
பார்க்குறோம்	பார்க்குறோம் —

கண்ணுலெ	கண்ணுலெ பார்க்குறோம்
நாம	நாம கண்ணுலெ பார்க்குறோம்.
(ii) நாம காதாலெ கேக்குறோம்.	நாம காதாலெ கேக்குறோம்.
கேக்குறோம்	கேக்குறோம்
காதாலெ	காதாலே கேக்குறோம்
நாம	நாம காதாலெ கேக்குறோம்.
(iii) நாம கையாலெ வேலெ செய்றோம்.	நாம கையாலெ வேலெ செய்-றோம்.
செய்றோம்	செய்றோம்
வேலெ	வேலெ செய்றோம்
கையாலெ	கையாலெ வேலெ செய்றோம்
நாம	நாம கையாலெ வேலெ செய்-றோம்.
(iv) நாம இதாலெ என்ன செய்-றோம்.	நாம இதாலெ என்ன செய்றோம் ?
என்ன செய்றோம் ?	என்ன செய்றோம் ?
இதாலெ	இதாலெ என்ன செய்றோம் ?
நாம	நாம இதாலெ என்ன செய்றோம் ?
(v) நாம எதாலெ சுவாசிக்கு-றோம் ?	நாம எதாலெ சுவாசிக்குறோம் ?
எதாலெ சுவாசிக்குறோம் ?	எதாலெ சுவாசிக்குறோம் ?
நாம	நாம எதாலெ சுவாசிக்குறோம் ?

c. Expansion drill

(i) நாம செய்றோம்.	நாம செய்றோம்.
வேலெ செய்றோம்	நாம வேலெ செய்றோம்.
கையாலெ செய்றோம்	நாம கையாலெ வேலெ செய்றோம்.
(ii) நாம பேசுறோம்.	நாம பேசுறோம்.
வாயாலெ பேசுறோம்	நாம வாயாலெ பேசுறோம்.
(iii) நாம சுவாசிக்குறோம்.	நாம சுவாசிக்குறோம்.
மூக்காலெ சுவாசிக்குறோம்	நாம மூக்காலெ சுவாசிக்குறோம்.
(iv) நாம நடக்குறோம்.	நாம நடக்குறோம்.
காலாலெ நடக்குறோம்	நாம காலாலெ நடக்குறோம்.

d. Question-Answer drill

(i) Q : நான் ஒரு கேள்வி கேக்குறேன், நீ பதில் சொல்லு-றேயா ?

A : சரி, கேளுங்க.

(ii) Q: ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ?
A: ஒரு கையிலே அஞ்சு வெரலு இருக்குது.

(iii) Q: காலாலெ என்ன செய்றோம் ?
A: காலாலெ நடக்குறோம்.

(iv) Q: எதாலெ சுவாசிக்குறோம் ?
A: நாம மூக்காலெ சுவாசிக்குறோம்.

e. Substitution drill

(i) நாம வாயாலெ சாப்பிடுறோம்.	நாம வாயாலெ சாப்பிடுறோம்.
Substitute and change the noun suitably.	
கை	நாம கையாலெ சாப்பிடுறோம்.
(ii) நாம மூக்காலெ சுவாசிக்கு-றோம்.	நாம மூக்காலெ சுவாசிக்குறோம்.
Substitute and change the noun suitably.	
வாய்	நாம வாயாலெ சுவாசிக்குறோம்.
(iii) ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ?	ஒரு கையிலே எத்தனெ வெரலு இருக்குது ?
Substitute and change the noun suitably.	
காலு	ஒரு காலுலே எத்தனெ வெரலு இருக்குது ?
(iv) கண்ணு ஒரு உறுப்பு.	கண்ணு ஒரு உறுப்பு.
Substitute	
காது	காது ஒரு உறுப்பு.
மூக்கு	மூக்கு ஒரு உறுப்பு.
வாய்	வாய் ஒரு உறுப்பு.
கை	கை ஒரு உறுப்பு.
வெரலு	வெரலு ஒரு உறுப்பு.
காலு	காலு ஒரு உறுப்பு.

f. Transformation drill

(i) நாம மூக்காலெ சுவாசிக்கு-றோம்.	நாம எதாலெ சுவாசிக்குறோம் ?
நாம கண்ணாலெ பார்க்கு-றோம்.	நாம எதாலெ பார்க்குறோம் ?
நாம காதாலெ கேக்குறோம்.	நாம எதாலெ கேக்குறோம் ?
நாம வாயாலெ பேசுறோம்.	நாம எதாலெ பேசுறோம் ?
நாம கையாலெ வேலெ செய்றோம்.	நாம எதாலெ வேலெ செய்றோம் ?
நாம காலாலெ நடக்குறோம்.	நாம எதாலெ நடக்குறோம் ?

(ii) நாம காலாலெ நடக்குறோம்.	நாம காலாலெ என்ன செய்றோம்?
நாம வாயாலெ பேசுறோம்.	நாம வாயாலெ என்ன செய்றோம்?
நாம காதாலெ கேக்குறோம்.	நாம காதாலெ என்ன செய்றோம்?
நாம மூக்காலெ சுவாசிக்கு-றோம்.	நாம மூக்காலெ என்ன செய்றோம்?
நாம கண்ணாலெ பார்க்குறோம்	நாம கண்ணாலெ என்ன செய்-றோம் ?
நாம கையாலெ வேலெ செய்றோம்.	நாம கையாலெ என்ன செய்-றோம் ?

EXERCISES

1. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான் ஒரு..............கேக்குறேன். (question)
நான் ஒரு கேள்வி கேக்குறேன்.

(i) நீ..............றோ ? (answer)
(ii) கை உடம்பு.............. (human body part)
(iii) நான்..............சொல்லட்டுமா ? (answer)
(iv) நாம..............+ ஆலெ பார்க்குறோம். (eye)
(v) நாம..............+ ஆலெ கேக்குறோம். (ear)
(vi) நாம..............+ ஆலெ சுவாசிக்குறோம். (nose)
(vii) மூக்காலெ..............க்குறோம். (breathe)
(viii) ....+ ஆலெ பேசுறோம். (mouth)
(ix) ....+ ஆலெ வேலெ செய்றோம். (hand)
(x) கையிலே எத்தனெ..............இருக்குது ? (finger)
(xi) காலாலெ..............க்குறோம். (walk)
(xii) நீ.............. (clever girl)

Include the instrumental form of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : நாம பார்க்குறோம். (கண்ணு)
நாம கண்ணாலெ பார்க்குறோம்.

(i) நாம கேக்குறோம். (காது)
(ii) நாம சுவாசிக்குறோம். (மூக்கு)
(iii) நாம சாப்பிடுறோம். (வாய்)
(iv) நாம என்ன செய்றோம். (இது)

Select the right word and use it in the blank with suitable form.

பாரு, கேளு, சுவாசி, நட, சாப்பிடு

(i) நாம காதாலெ..............

(ii) நாம காலாலே...............

(iii) நாம மூக்காலே...............

(iv) நாம கண்ணாலே...............

(v) நாம வாயாலே...............

j. Write the word represented by the formula.

Example : செய்றோம்   செய் + Present

(i) சாப்பிடு + Present : ....

(ii) பாரு + Present : ....

(iii) பேச + Present : ....

(iv) கேளு + Present : ....

(v) சுவாசி + Present : ....

k. Match the following.

நான் நாம நீ அப்பா வெரலு	சாப்பிடுறோம் கேக்குறேன் இருக்குது வாரு சொல்லுறே

l. Frame eight sentences from the table given below.

Example : நாம கையாலே வேலெ செய்றோம்.

நாம நாங்க	கை	வேலெ செய் கொடு எடு வாங்க

m. Join the following according to the sandhi rules.

(i) கண்ணு + ஆலெ : ....,   (ii) கை + இலே :

காது + ஆலெ : ....,

காலு + ஆலெ : ....

இது + ஆலெ : ....,

n. Answer the questions.

(i) எதெல்லாம் [illegible] உறுப்பு ?

(ii) நாம கண்ணாலெ என்ன செய்றோம் ?

(iii) நாம காதாலெ என்ன செய்றோம் ?

(iv) ஒரு கையிலே எத்தனை வெரலு இருக்குது ?

(v) நாம எதாலெ நடக்குறோம் ?

VOCABULARY

கேள்வி	'question'	பதில்	'answer (noun)'
பதில் சொல்லு	'answer (verb)'	கண்ணு	'eye'
காது	'ear'	மூக்கு	'nose'
வாய்	'mouth'	கை	'hand'
உடலு	'(human) body'	உறுப்பு	'(human) body part'
விடை	'answer (noun)'	கேளு	'hear'
சுவாசி	'breathe'	வேலெ செய்	'work'
வெரலு	'finger'	நட	'walk'
கெட்டிக்காரி	'clever girl'		

GRAMMAR

11.45.138. The instrumental case illustrated in this lesson forms a class of nouns by means of which the action is performed. This meaning of the instrumental case is again indicated by its case marker –ஆலெ. Example :

11. 45. 138. நாம கண்ணாலெ பார்க்குறோம்.
நாம காதாலெ கேக்குறோம்.
நாம கையாலெ வேலெ செய்றோம்.
நாம எதாலெ வேலெ செய்றோம் ?

It is important to note that the case marker –ஆலெ is used in Tamil whenever the function of the human/non-human body parts is to be expressed.

Sandhi : இது + ஆலெ → இதாலெ
காது + ஆலெ → காதாலெ
கண்ணு + ஆலெ → கண்ணாலெ
எது + ஆலெ → எதாலெ
மூக்கு + ஆலெ → மூக்காலெ (Refer S.3 in 1.2)
சின்ன + கேள்வி → சின்னக் கேள்வி (Refer S.4 in 1.2)

UNIT 11

LESSON 46

MEETING A FRIEND FOR RECOMMENDATION

DIALOGUE

சுரேஷ் : வணக்கம், மூர்த்தி ஸார்!	Vanakkam, Mr. Murthi.
மூர்த்தி : வணக்கம், மிஸ்டர் சுரேஷ்...ரொம்ப நேரம் காத்திருக்குறீங்களா ?	Vanakkam, Mr. Suresh... Are (you) waiting for a long time ?
சுரேஷ் : இல்லெங்க. இப்பத்தான் வந்தோம் ... பஸ் லேட்டா ?	No sir (We) came just now... Was the bus late ?
மூர்த்தி : ஆமாங்க. அரைமணி-நேரம் லேட்டா வந்தது. அதனாலெ கொஞ்சம் தாமதம்... உக்காருங்க.	Yes. It came late by a half an hour. That is why (I) am a bit late...Please be seated.

சுரேஷ் : இவன் என்னோடெ நண்பன் திரிவேதி. இவன் தங்கெ எங்க இன்ஸ்டிடியூட்டுலே ஸ்டெனோ வேலெக்கு மனுப்போடுறா .... நீங்க அவளுக்காகச் சிபாரிசு பண்ணுவீங்களா... ? உங்களாலெ முடியுமா ?

He is my friend Trivedi. His younger sister is applying for the post of a steno in our institute. Would you please give her your recommendation... ? Can you do (this) ?

மூர்த்தி : நான் டைரக்டர்கிட்டெச் சொல்லுறேன்...அவ்வளவு தான் என்னாலெ முடியும். அதுவும் உங்களுக்காக இந்தக் காரியத்தெச் செய்றேன்.

I will tell the director---That is all I can do. That too, (I) am doing this favour because of you only.

சுரேஷ் : அது போதும் ஸார். ரொம்ப நன்றி. எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம். இந்த உதவியெ எப்பவும் மறக்க மாட்டேன். நாங்க வரட்டுமா ?

That is enough, sir. Thank (you) very much. We are putting you into great trouble. (I) will never forget this help. Shall we take leave of you ?

மூர்த்தி : வாங்க. வணக்கம்.

Please do. Vanakkam !

DRILLS

a. Variation drill

11. 46. 139. எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
அதனாலெ கொஞ்சம் தாமதம்.

11. 46. 140. என்னாலெ முடியும்
உங்களாலெ முடியுமா ?

b. Build up drill

(i) எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம்.	எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
சிரமம்	சிரமம்
ரொம்ப	ரொம்பச் சிரமம்
உங்களுக்கு	உங்களுக்கு ரொம்பச் சிரமம்
எங்களாலெ	எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம்.

(ii) உங்களாலெ முடியுமா ?	உங்களாலெ முடியுமா ?
முடியுமா ?	முடியுமா ?
உங்களாலெ	உங்களாலெ முடியுமா ?
(iii) என்னாலெ முடியும்.	என்னாலெ முடியும்.
முடியும்	முடியும்
என்னாலெ	என்னாலெ முடியும்.
(iv) அதனாலெ கொஞ்சம் தாமதம்.	அதனாலெ கொஞ்சம் தாமதம்.
தாமதம்	தாமதம்
கொஞ்சம்	கொஞ்சம் தாமதம்
அதனாலெ	அதனாலெ கொஞ்சம் தாமதம்.

c. Expansion drill

(i) என்னாலெ முடியும்.	என்னாலெ முடியும்.
அவ்வளவுதான் முடியும்	என்னாலெ அவ்வளவுதான் முடியும்.
(ii) உங்களுக்குச் சிரமம்.	உங்களுக்குச் சிரமம்.
ரொம்பச் சிரமம்	உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
எங்களாலெ சிரமம்	உங்களுக்கு எங்களாலெ ரொம்பச் சிரமம்.
(iii) அதனாலெ தாமதம்.	அதனாலெ தாமதம்.
கொஞ்சம் தாமதம்	அதனாலெ கொஞ்சம் தாமதம்.

d. Question-Answer drill

(i) Q : நீங்க ரொம்ப நேரமாக் காத்திருக்குறீங்களா ?
A : இல்லெங்க, இப்பத்தான் வந்தோம்.

(ii) Q : பஸ் லேட்டா ?
A : ஆமா, அரெமணிநேரம் லேட்டா வந்தது.

(iii) Q : உங்களாலெ முடியுமா ?
A : என்னாலெ முடியும்.

(iv) Q : நாங்க வரட்டுமா ?
A : வாங்க, வணக்கம்.

e. Substitution drill

(i) உங்களாலெ முடியுமா ?	உங்களாலெ முடியுமா ?
Substitute and change the pronoun suitably.	
நான்	என்னாலெ முடியுமா ?
நாம	நம்மாலெ முடியுமா ?
நீ	உன்னாலெ முடியுமா ?

அவன்	அவனாலெ முடியுமா ?
அவ	அவளாலெ முடியுமா ?
அவரு	அவராலெ முடியுமா ?
அவங்க	அவங்களாலெ முடியுமா ?

(ii) உங்களுக்காகச் செய்றேன். — உங்களுக்காகச் செய்றேன்.
Substitute and change the pronoun suitably.

இவன்	இவனுக்காகச் செய்றேன்
இவ	இவளுக்காகச் செய்றேன்.
இவரு	இவருக்காகச் செய்றேன்.
இவங்க	இவங்களுக்காகச் செய்றேன்.
இது	இதுக்காகச் செய்றேன்.

(iii) உங்களுக்கு ரொம்பச் சிரமம். — உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
Substitute and change the pronoun suitably.

நான்	எனக்கு ரொம்பச் சிரமம்.
அவன்	அவனுக்கு ரொம்பச் சிரமம்.
அவ	அவளுக்கு ரொம்பச் சிரமம்.
அவங்க	அவங்களுக்கு ரொம்பச் சிரமம்.
அது	அதுக்கு ரொம்பச் சிரமம்.

(iv) அரெமணி நேரம் லேட்டா வந்தது. — அரெமணி நேரம் லேட்டா வந்தது.
Substitute

கால்	கால்மணி நேரம் லேட்டா வந்தது.
முக்கால்	முக்கால்மணி நேரம் லேட்டா வந்தது.
ஒரு	ஒருமணி நேரம் லேட்டா வந்தது.
ரெண்டு	ரெண்டுமணி நேரம் லேட்டா வந்தது.

f. Transformation drill

(i) எங்களாலெ உங்களுக்குச் சிரமம்.	யாராலெ உங்களுக்குச் சிரமம் ?
அவங்களாலெ உங்களுக்குச் சிரமம்.	யாராலெ உங்களுக்குச் சிரமம் ?
அவளாலெ உங்களுக்குச் சிரமம்.	யாராலெ உங்களுக்குச் சிரமம் ?
அவராலெ உங்களுக்குச் சிரமம்.	யாராலெ உங்களுக்குச் சிரமம் ?

(ii) என்னாலெ முடியும். — என்னாலெ முடியாது.
உன்னாலெ முடியும். — உன்னாலெ முடியாது.
இவராலெ முடியும். — இவராலெ முடியாது.
இவளாலெ முடியும். — இவளாலெ முடியாது.

(iii) உங்களாலெ முடியுமா ? — உங்களாலெ முடியாதா ?
அவங்களாலெ முடியுமா ? — அவங்களாலெ முடியாதா ?
அவளாலெ முடியுமா ? — அவளாலெ முடியாதா ?
அவராலெ முடியுமா ? — அவராலெ முடியாதா ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : அதனாலெ கொஞ்சம்.............. (late)
அதனாலெ கொஞ்சம் தாமதம்.

(i) உங்களாலெ.............+ ஆ. (can)
(ii) எங்களாலெ உங்களுக்கு.............. (trouble)
(iii) இந்த..............+ எ மறக்கமாட்டேன். (help)
(iv) இந்த உதவியெ..............மறக்கமாட்டேன். (ever)
(v) இந்த உதவியெ எப்பவும்..............க்கமாட்டேன். (forget)

h. Change the given nouns in to the instrumental (in the meaning of 'causal') and add at the beginning of the sentences given below.

(i) நாங்க : உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
(ii) நான் : உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
(iii) அவன் : உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
(iv) அவ : கொஞ்சம் தாமதம்.
(v) அவங்க : கொஞ்சம் தாமதம்.
(vi) அது : கொஞ்சம் தாமதம்.

Include the dative form (in the purposive meaning) of the item given in parentheses against each of the sentences given below.

(i) இவன் தங்கெ மனுப்போடுறு. (ஸ்டேஷனு வேலெ)
(ii) நீங்க சிபாரிசு பண்ணுவீங்களா ? (அவ)

j. Frame questions for the answers given below following the model.

Model : A: என்னாலெ முடியும்.
Q: உங்களாலெ முடியுமா ?

(i) எங்களாலெ முடியும்.
(ii) உன்னாலெ முடியும்.

k. Frame twelve sentences from the table given below.

Example : உன்னாலெ முடியுமா ?

நான் நாங்க நாம நீ நீங்க அவன்	முடியுமா ? முடியும்

l. Join the following according to the sandhi rule.

(i) எங்க + ஆலெ : .... அவங்க + ஆலெ : ....
உங்க + ஆலெ : .... அவ + ஆலெ : ....

m. Answer these questions.

(i) லதா என்ன வேலெக்கு மனுப்போடுறா ?
(ii) சுரேஷோடெ நண்பனோடெ பேரு என்ன ?
(iii) நீங்க நேத்து வகுப்புக்கு லேட்டா வந்தீங்களா ?
(iv) நீங்க இந்தக் கவிதெயெப் படிக்குறீங்களா ? உங்களாலெ முடியுமா ?
(v) நீங்க வகுப்புக்குத் தினந்தோறும் தாமதமா வறீங்களா ?
(vi) நீங்க எந்த வருஷம் ஆசிரியரு வேலெக்கு மனுப்போட்டீங்க ?
(vii) உங்க ஆசிரியரு வேலெக்கு உங்க நண்பரு சிபாரிசு பண்ணுனாரா ?
(viii) உங்க ஆசிரியரு வேலெக்காக யாரு சிபாரிசு பண்ணுனாங்க ?

VOCABULARY

நேரம்	'time'	லேட்	'late'
தாமதம்	'late'	முடியும்	'can'
காரியம்	'work'	சிரமம்	'trouble'
உதவி	'help'	எப்பவும்	'ever'
மற	'forget'		

GRAMMAR

11. 46. 139. In this lesson, as we mentioned earlier, the case marker -ஆலெ is added to the nouns to express the meaning of the cause and agent of the action. Example :

11. 46. 139. எங்களாலெ உங்களுக்கு ரொம்பச் சிரமம்.
அதனாலெ கொஞ்சம் தாமதம்.

The case marker -ஆலெ is here suffixed to the noun எங்க(ள்) and together it has the force of meaning 'because of us'.

11. 46. 140. Like defective verbs, the verbs முடியும் 'can' and முடியாது 'cannot' do not have all the required forms of conjugation. They are impersonal and common to all genders. Unlike the other defective verbs these verbs obligatorily require instrumental as their subject. Example :

11. 46. 140. என்னாலெ முடியும்.
உங்களாலெ முடியுமா ?

Sandhi : *காத்திருக்குறீங்க + ஆ → காத்திருக்குறீங்களா ?*
சிபாரிசு பண்ணுவீங்க + ஆ → சிபாரிசு பண்ணுவீங்களா ?
(Refer S.19 in 2.14)
அவளுக்காக + கொஞ்சம் → அவளுக்காகக் கொஞ்சம் (*சிபாரிசு பண்ணுவீங்களா ?*) (Refer S.25 in 10.42)
உங்க + ஆலெ → உங்களாலெ
உங்க + உக்காக → உங்களுக்காக
உங்க + உக்கு → உங்களுக்கு (Refer S.6 in 1.5)
ரொம்ப + சிரமம் → ரொம்பச் சிரமம் (Refer S.14 in 1.11)

UNIT 11

LESSON 47

MADURAI

DIALOGUE

சுரேஷ் : திரிவேதி, இதுதான் மதுரெ மீனாட்சி அம்மன் கோயில்.	Trivedi, this is Madurai Meenakshi-amman temple.
திரிவேதி : இந்தக் கோயிலெ யாரு கட்டுனாங்க ?	Who built this temple ?
சுரேஷ் : இந்தக் கோயிலெ ஒரு பாண்டிய அரசரு கட்டுனாரு. அவரு பேரு சுந்தர பாண்டியன். அவரு இந்தக்கோயில் பூராவெயும் கல்லாலெயே கட்டுனாரு. ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு இல்லெயா ? அதேமாதிரி திருமலெ நாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே திருமலெ நாயக்கர் கட்டுனாரு.	A Pandya king built this temple. His name is Sundara Pandyan. He built this whole temple only with stones. Shahjahan built Taj Mahal with marbles only, isn't it ? Like that Thirumalai Naikkar built the Thirumalai Naikkar Mahal with bricks only.

திரிவேதி : அந்த மகால் எங்கே இருக்குது ?	Where is that Mahal ?
சுரேஷ் : பக்கத்துலே தான் இருக்குது. அதோ ! அது தங்கக் கொடிமரம்.	(It) is very near. Look ! That is the golden flagstaff.
திரிவேதி : அந்தக் கொடிமரத்தெத் தங்கத்தாலெயே செய்-தாங்களா ?	Did they make that flagstaff with gold only ?
சுரேஷ் : இல்லெ. வெறும் மரத்-துலே செய்தாங்க. அப்-புறம் தங்கத் தகட்டுலே வெய்ஞ்சாங்க. இங்கே 'சித்திரெப் பௌர்ணமி' ரொம்ப விசேஷம். அண்ணெக்குக் கள்ள-ழகர் ஆத்துலே எறங்கு-வாரு. அண்ணெக்குக் கள்ளழகரெப் பூவாலெ அலங்கரிப்பாங்க. ஊர்-வலமும் நடத்துவாங்க.	No. (They) made it only of wood. Then (they) wrapped (it) with gold plates. The 'Chaitra fullmoon' festival is the speciality here. The Lord Kallazhahar would step in to the river on that day. The Lord Kallazhahar will be adorned with flowers on that day. (They) will hold the procession also.
திரிவேதி : சரி, நாம இப்ப திரு-மலெ நாயக்கர் மகாலுக்-குப் போகலாமா ?	Alright, shall we go to Thirumalai Naikkar Mahal now ?
சுரேஷ் : சரி, போவோம்.	Okey, we shall go.

DRILLS

a. Variation drill

11. 47. 141. ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.
அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு.
அந்தக் கொடிமரத்தெ எதாலெ செய்தாங்க ?

11. 47. 142. திருமலெ நாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு.
கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.
கொடிமரத்தெ எதுலே செய்தாங்க ?

11. 47. 143. திருமலெநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனாரு.
அந்தக் கொடிமரத்தெ வெறும் தங்கத்தாலெயே செய்தாங்களா ?

b. Build up drill

(i) ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.	ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.
கட்டுனாரு	கட்டுனாரு
கல்லாலெ	கல்லாலெ கட்டுனாரு
பளிங்கு	பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு
தாஜ்மகாலெ	தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு
ஷாஜஹான்	ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.
(ii) அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு.	அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு.
கட்டுனாரு	கட்டுனாரு
கல்லாலெ	கல்லாலெ கட்டுனாரு
கோயிலெ	கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு
அவரு	அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு.
(iii) திருமலைநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு.	திருமலைநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு.
கட்டுனாரு	கட்டுனாரு
செங்கல்லுலே	செங்கல்லுலே கட்டுனாரு
மகாலெ	மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு
திருமலைநாயக்கர்	திருமலைநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு.
(iv) அந்தக் கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க.	அந்தக் கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க.
வேய்ஞ்சாங்க	வேய்ஞ்சாங்க
தங்கத்தகட்டுலே	தங்கத்தகட்டுலே வேய்ஞ்சாங்க
கொடிமரத்தெ	கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க
அந்த	அந்தக் கொடிமரத்தெத் தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க.
(v) திருமலைநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனாரு.	திருமலைநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனாரு.
கட்டுனாரு	கட்டுனாரு
செங்கல்லுலே	செங்கல்லுலே கட்டுனாரு
வெறும்	வெறும் செங்கல்லுலே கட்டுனாரு

மகாலெ	மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுறாரு
திருமலெ நாயக்கர்	திருமலெநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுறாரு.

c. Expansion drill

(i) ஷாஜஹான் கட்டுறாரு.	ஷாஜஹான் கட்டுறாரு.
பளிங்குக்கல்லாலெ கட்டுறாரு	ஷாஜஹான் பளிங்குக் கல்லாலெ கட்டுறாரு.
தாஜ்மகாலெக் கட்டுறாரு	ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுறாரு.
(ii) திருமலெநாயக்கர் கட்டுறாரு.	திருமலெ நாயக்கர் கட்டுறாரு.
செங்கல்லுலே கட்டுறாரு	திருமலெ நாயக்கர் செங்கல்லுலே கட்டுறாரு.
மகாலெக் கட்டுறாரு	திருமலெ நாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுறாரு.

d. Question-Answer drill

(i) Q: அந்த மகால் எங்கே இருக்குது ?
A: பக்கத்துலேதான் இருக்குது ?

(ii) Q: திருமலெநாயக்கர் மகாலுக்குப் போகலாமா ?
A: சரி. போவோம்.

(iii) Q: அந்தக் கொடி மரத்தெ வெறும் தங்கத்தாலெயே செய்தாங்களா ?
A: இல்லெ. தங்கத் தகட்டுலே வேய்ஞ்சாங்க.

e. Substitution drill

(i) தங்கத்தாலெயே செய்தாங்களா ? Substitute and change the noun suitably	தங்கத்தாலெயே செய்தாங்களா ?
கல்லு	கல்லாலெயே செய்தாங்களா ?
பளிங்குக் கல்லு	பளிங்குக் கல்லாலெயே செய்தாங்களா ?
செங்கல்லு	செங்கல்லாலெயே செய்தாங்களா ?
(ii) அவரு செங்கல்லுலே கட்டுறாரு. Substitute and change the noun suitably	அவரு செங்கல்லுலே கட்டுறாரு.

தங்கம்	அவரு தங்கத்துலே கட்டுறாரு.
கல்லு	அவரு கல்லுலே கட்டுறாரு.
பளிங்குக் கல்லு	அவரு பளிங்குக் கல்லுலே கட்டுறாரு.
(iii) அவரு இந்தக் கோயிலெக் கட்டுறாரு. Substitute and change the noun suitably.	அவரு இந்தக் கோயிலெக்கட்டு-றாரு.
மகால்	அவரு இந்த மகாலெக் கட்டுறாரு.
வீடு	அவரு இந்த வீட்டெக் கட்டுறாரு.
பள்ளிக்கூடம்	அவரு இந்தப் பள்ளிக்கூடத்தெக் கட்டுறாரு.
கல்லூரி	அவரு இந்தக கல்லூரியெக் கட்டுறாரு.
கோபுரம்	அவரு இந்தக் கோபுரத்தெக் கட்டுறாரு.
(iv) அவங்க வேய்ஞ்சாங்க. Substitute and change the verb suitably.	அவங்க வேய்ஞ்சாங்க.
நான்	நான் வேய்ஞ்சேன்.
நாம	நாம வேய்ஞ்சோம்.
நாங்க	நாங்க வேய்ஞ்சோம்.
நீ	நீ வேய்ஞ்சே.
நீங்க	நீங்க வேய்ஞ்சீங்க.
அவன்	அவன் வேய்ஞ்சான்.
அவ	அவ வேய்ஞ்சா.
அவரு	அவரு வேய்ஞ்சாரு.
(v) இது சித்திரெ மாசம். Substitute	இது சித்திரெ மாசம்.
வைகாசி	இது வைகாசி மாசம்.
ஆனி	இது ஆனி மாசம்.
ஆடி	இது ஆடி மாசம்.
ஆவணி	இது ஆவணி மாசம்.
புரட்டாசி	இது புரட்டாசி மாசம்.
ஐப்பசி	இது ஐப்பசி மாசம்.
கார்த்திகெ	இது கார்த்திகெ மாசம்.
மார்கழி	இது மார்கழி மாசம்.
தை	இது தை மாசம்.
மாசி	இது மாசி மாசம்.
பங்குனி	இது பங்குனி மாசம்.

f. Traneformation drill

(i) அவரு கல்லுலே கட்டுறாரு.	அவரு கல்லாலெ கட்டுறாரு.
அவரு செங்கல்லுலே கட்டுறாரு.	அவரு செங்கல்லாலெ கட்டுறாரு.
அவரு பளிங்குக் கல்லுலே கட்டுறாரு.	அவரு பளிங்குக் கல்லாலெ கட்டுறாரு.
அவரு தங்கத்துலே கட்டுறாரு.	அவரு தங்கத்தாலெ கட்டுறாரு.
(ii) அவரு கல்லாலெ கட்டுறாரு.	அவரு எதாலெ கட்டுறாரு ?
அவரு பளிங்குக் கல்லாலெ கட்டுறாரு.	அவரு எதாலெ கட்டுறாரு ?
அவரு செங்கல்லாலெ கட்டுறாரு.	அவரு எதாலெ கட்டுறாரு ?
(iii) அவரு கல்லுலே கட்டுறாரு.	அவரு எதுலே கட்டுறாரு ?
அவரு தங்கத்துலே கட்டுறாரு.	அவரு எதுலே கட்டுறாரு ?
அவரு செங்கல்லுலே கட்டுறாரு.	அவரு எதுலே கட்டுறாரு ?
(iv) ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுறாரு.	ஜ்மகாலெக் கட்டுறாங்க ?
திருமலெநாயககா மகாலெக் கட்டுறாரு.	யாரு மகாலெக் கட்டுறாங்க ?
சுந்தரபாண்டியன் மீனாட்சி அம்மன் கோயிலெக் கட்டுறாரு.	யாரு மீனாட்சி அம்மன் கோயிலெக் கட்டுறாங்க ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இதுதான்............... (temple)
இதுதான் கோயில்.

(i) ஒரு..............கட்டுறாரு. (king)
(ii) அவரு கல்லாலெயே..............றாரு. (build)
(iii) ....லெயும் கல்லாலெயே கட்டுறாரு. (complete, whole)
(iv) அவரு..............+ஆலெயே கட்டுறாரு. (stone)
(v) தாஜ்மகாலெ..............+ஆலெ கட்டுறாரு. (marble stone)
(vi) அதே..............கட்டுறாரு. (like)
(vii) அவரு..............+எக் கட்டுறாரு. (palace)
(viii) அவரு..............+லே கட்டுறாரு. (bricks)
(ix) அது தங்க.............. (flagstaff)
(x) அதுக்குமேலே..............+லே வெய்ஞ்சாங்க. (gold sheet)

(xi) அதுக்கு மேலே..............ச்சாங்க. (wrap)
(xii) ....கள்ளழகர் ஆத்துலே எறங்குவாரு. (on that day)
(xiii) கள்ளழகரெ..............+ஆலெ அலங்கரிப்பாங்க. (flower)
(xiv) கள்ளழகர்..............+லே எறங்குவாரு. (river)
(xv) கள்ளழகரெப் பூவாலெ..............ப்பாங்க. (adorn)
(xvi) ....நடத்துவாங்க. (procession)
(xvii) ஊர்வலம்..............வாங்க. (hold the procession)

h. Include the instrumental form of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுனாரு. (பளிங்குக் கல்லு)
ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.

(i) அவரு இந்தக் கோயிலெக் கட்டுனாரு. (கல்லு)
(ii) திருமலெ நாயக்கர் ஒரு மகாலெக் கட்டுனாரு. (செங்கல்லு)
(iii) கொடி மரத்தெச் செய்தாங்க. (தங்கத்தகடு)

i. Include the locative form (in the meaning of instrumental) of the item given in parentheses against each of the sentences as shown in the example.

Example : அவரு இந்தக் கோயிலெக் கட்டுனாரு. (கல்லு)
அவரு இந்தக் கோயிலெக் கல்லுலெ கட்டுனாரு.

(i) திருமலெநாயக்கர் ஒரு மகாலெக் கட்டுனாரு. (செங்கல்லு)
(ii) கொடிமரத்தெச் செய்தாங்க. (தங்கத்தகடு)
(iii) ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுனாரு. (பளிங்குக்கல்லு)

j. Write the word represented by the formula.

Example : கல்லாலெ கல்லு + Instrumental.

(i) பூ + Instrumental ....
(ii) தங்கம் + Instrumental : ....
(iii) தங்கத்தகடு + Instrumental : ....
(iv) மரம் + Instrumental : ....
(v) செங்கல்லு + Instrumental : ....

k. Write the word represented by the formula.

Example : நடத்துவாங்க நடத்து + Future

(i) எறங்கு + Future : ....
(ii) வெய் + Future : ....
(iii) கட்டு + Future : ....
(iv) செய் + Future : ....

l. Frame questions for the answers given below following the model.

Model : A: அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு.
Q: அவரு கோயிலெ எதாலெ கட்டுனாரு ?

(i) ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.
(ii) அந்தக் கொடிமரத்தெ மரத்தாலெ செய்தாங்க.
(iii) திருமலெநாயக்கர் மகாலெச் செங்கல்லாலெ கட்டுனாரு.

Model : A: ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லுலே கட்டுனாரு.
Q: ஷாஜஹான் தாஜ்மகாலெ எதுலே கட்டுனாரு?

(i) திருமலெநாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு.
(ii) அந்தக் கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.
(iii) அவரு கோயிலெக் கல்லுலே கட்டுனாரு.

m. Write twelve sentences about the months of the year.

Example : *சித்திரெ தமிழ் ஆண்டுலே மொதலாவது மாசம்.*

n. Ask who did each of these things.

Example : ஷாஜஹான் தாஜ்மகாலெக் கட்டுனாரு.
யாரு தாஜ்மகாலெக் கட்டுனாங்க ?

(i) திருமலெ நாயக்கர் மகாலெக் கட்டுனாரு.
(ii) அவங்க மகாலுக்குப் போனாங்க.
(iii) கள்ளழகர் ஆத்துலே எறங்குவாரு.
(iv) அவங்க கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.
(v) அவங்க கள்ளழகரெப் பூவாலெ அலங்கரிப்பாங்க.

o. Join the following according to the sandhi rules.

(i) கல்லு + ஆலெ : ....
செங்கல்லு + ஆலெ : ....
(ii) பூ + ஆலெ : ....
(iii) தங்கம் + ஆலெ : ....
கொடிமரம் + எ : ....
(iv) தங்கத்தகடு + லே : ....
(v) ஆறு + லே : ....

p. Answer these questions.

(i) மீனாட்சி அம்மன் கோயிலெ யாரு கட்டுனாங்க ?
(ii) அவரு கோயில் பூராவெயும் எதாலெ கட்டுனாரு ?
(iii) தாஜ்மகாலெ யாரு கட்டுனாங்க ?
(iv) கொடிமரத்தெ எதுலே செய்தாங்க ?
(v) கள்ளழகரெ எதாலெ அலங்கரிப்பாங்க ?
(vi) எங்கே சித்திரெப் பௌர்ணமி ரொம்ப விசேஷம் ?

VOCABULARY

கோயில்	'temple'	கட்டு	'build'
பாண்டிய(ன்)	'the Pandya king'	அரசு	'king'
பூரா	'complete, whole'	கல்லு	'stone'
பளிங்குக் கல்லு	'marble stone'	மாதிரி	'like'
மகால்	'palace'	வெறும்	'only'
செங்கல்லு	'brick(s)'	தங்க (ம்)	'gold'
கொடிமரம்	'flagstaff'	செய்	'make'
மரம்	'wood'	தங்கத்தகடு	'gold plate'
வேய்	'wrap'	சித்திரெ	'Chittirai, name of the Tamil month'
பௌர்ணமி	'full moon'	விசேஷம்	'special (festival)'
எறங்கு	'step into'	ஆறு	'river'
அலங்கரி	'adorn'	பூ	'flower'
ஊர்வலம் நடத்து	'hold the procession'	ஊர்வலம்	'procession'

GRAMMAR

11.47.141. It has been already remarked in 11.44 that the instrumental case has got various functions in Tamil. At times, when a case marker is used to indicate a particular meaning, it may be replaced by another case marker without any change in meaning. This is one of the chief characteristics of case in general and this phenomenon is called 'case overlapping'. Let us consider the following examples.

11. 47. 141. ஷாஜஹான் தாஜ்மகாலெப் பளிங்குக் கல்லாலெ கட்டுனாரு.
அவரு கோயிலெக் கல்லாலெ கட்டுனாரு.

11.47.142. The instrumental marker -ஆலெ is added to the nouns to denote the objects that are used in implementing the action of கட்டு 'build'. That is, பளிங்குக் கல்லு 'marble stone', கல்லு 'stone' etc., are the objects that are used for the construction. In this meaning, the locative case marker can have the position of the instrumental case marker as follows.

11. 47. 142. திருமலெ நாயக்கர் மகாலெச் செங்கல்லுலே கட்டுனாரு.
கொடிமரத்தெ மரத்துலே செய்தாங்க.

11.47.143. வெறும் 'merely, only' is a kind of modifier. Example :

> 11. 47. 143. திருமலைநாயக்கர் மகாலெ வெறும் செங்கல்லுலே கட்டுனாரு.
> அந்தக் கொடிமரத்தெ வெறும் தங்கத்தாலேயே செய்தாங்களா ?

Sandhi 26. The word final -று is dropped when it is followed by any case. The nominal base and the case suffix, again, are linked by the increment -த்த-. Example

ஆறு + உலே → ஆத்துலே

தங்கம் + கொடிமரம் → தங்க கொடிமரம்
தங்கம் + தகடு → தங்க தகடு (Refer S.2 in 1.1)
தங்க + கொடிமரம் → தங்கக் கொடிமரம்
தங்க + தகடு → தங்கத்தகடு
பளிங்கு + கல்லு → பளிங்குக் கல்லு
இந்த + கோயில் → இந்தக்கோயில்
அந்த + கொடிமரம் → அந்தக் கொடிமரம் (Refer S.3 in 1.2)
பக்கம் + உலே → பக்கத்துலே
தங்கம் + ஆலே → தங்கத்தாலே
மரம் + உலே → மரத்துலே (Refer S.17 in 2.13)
தகடு + உலே → தகட்டுலே (Refer S.16 in 2.13)

UNIT 12

LESSON 48

CONSULTING A DOCTOR

DIALOGUE

சுரேஷ் : வணக்கம், டாக்டர் !	Vanakkam, doctor !
டாக்டர் : வணக்கம். உங்க உடம்புக்கு என்ன ?	Vanakkam. What happened to (your) health ?
சுரேஷ் : ரெண்டு மூணு நாளா இருமலா இருக்குதுங்க... லேசாக் காய்ச்சலும் இருக்குது.	(I) have cough for two or three days ...(I) have slight fever also.
டாக்டர் : ராத்திரி நல்லாத் தூங்குறீங்களா ?	Are (you) sleeping well during nights ?
சுரேஷ் : இல்லீங்க. ராத்திரிப் பூராவும் இருமல்தாங்க.	No sir. I am coughing all through the night, sir.

டாக்டர் : காய்ச்சல் எப்பவும் இருக்குதா ?	Do (you) have fever all the time ?
சுரேஷ் : காய்ச்சல் எப்பவும் இல்லெங்க, மாலெ-யிலே லேசாக் காய்ச்சல் அடிக்கும். ராத்திரி ஒரு-தரம் உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும். உடனே காய்ச்சலும் குறெயும். ஆனா எப்ப-வும் இருமுறேங்க.	(I) do not have fever all the time (in a day) There is slight fever inthe evening. The whole body perspires once in the night. Then fever is reduced. But (I) cough all the time.
டாக்டர் : அடிக்கடி தும்மு-றீங்களா ?	Are (you) sneezing often ?
சுரேஷ் : ஆமாங்க. தும்மல் இருக்-குது ; கூடவே சளியும் இருக்குது.	Yes, sir. (I) have sneezing. I have also cold.
டாக்டர் : ஒண்ணுமில்லேங்க. இந்த மருந்தெ ஒரு நாளெக்கு நாலுவேளெ சாப்பிடுங்க... நீங்க தனி-யாவா போறீங்க ?	There is nothing. You take this medicine four times a day...Are you going alone ?
சுரேஷ் : இல்லெங்க. கூடவே என் நண்பரும் வராரு. வரேங்க.	No, sir. My friend is also coming along with me. I take leave of you, sir.
டாக்டர் : வணக்கம்.	Vanakkam.

DRILLS

a. Variation drill

12. 48. 144. நீங்க நல்லாத் தூங்குறீங்களா ?
உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
நீங்க அடிக்கடி தும்முறீங்களா ?

12. 48. 145. கூடவே என் நண்பரும் வராரு.
கூடவே சளியும் இருக்குதுங்க.

b. Build up drill

(i) நீங்க நல்லாத் தூங்கு-றீங்களா ?	நீங்க நல்லாத் தூங்குறீங்களா ?
தூங்குறீங்களா ?	தூங்குறீங்களா ?
நல்லா	நல்லாத் தூங்குறீங்களா ?
நீங்க	நீங்க நல்லாத் தூங்குறீங்களா ?
(ii) உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.	உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
வேர்க்கும்	வேர்க்கும்
நல்லா	நல்லா வேர்க்கும்
பூராவும்	பூராவும் நல்லா வேர்க்கும்
உடம்பு	உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
(iii) கூடவே என் நண்பரும் வருரு.	கூடவே என் நண்பரும் வருரு.
வருரு	வருரு
நண்பரும்	நண்பரும் வருரு
என்	என் நண்பரும் வருரு
கூடவே	கூடவே என் நண்பரும் வருரு.

c. Expansion drill

(i) ராத்திரி வேர்க்கும்.	ராத்திரி வேர்க்கும்.
நல்லா வேர்க்கும்.	ராத்திரி நல்லா வேர்க்கும்.
உடம்பு பூராவும் வேர்க்கும்.	ராத்திரி உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
ஒரு தரம் வேர்க்கும்	ராத்திரி ஒருதரம் உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
(ii) நீங்க தும்முறீங்களா ?	நீங்க தும்முறீங்களா ?
அடிக்கடி தும்முறீங்களா ?	நீங்க அடிக்கடி தும்முறீங்களா ?
(iii) என் நண்பரும் வருரு.	என் நண்பரும் வருரு.
கூடவே வருரு	என் நண்பரும் கூடவே வருரு.

d. Question-Answer drill

(i) Q : உங்க உடம்புக்கு என்ன ?
A : ரெண்டு மூணு நாளா இருமலா இருக்குதுங்க.... லேசாக் காய்ச்சலும் இருக்குது.

(ii) Q : காய்ச்சல் எப்பவும் இருக்குதா ?
A : எப்பவும் இல்லெங்க.

(iii) Q : அடிக்கடி தும்முறீங்களா ?
A : ஆமாங்க. தும்மல் இருக்குது ; கூடவே சளியும் இருக்குதுங்க.

(iv) Q : நீங்க தனியாவா போறீங்க ?
A : இல்லெங்க. கூடவே என் நண்பரும் வர்றாரு.

e. Substitution drill

(i) நீங்க தூங்குறீங்களா ? — நீங்க தூங்குறீங்களா ?
Substitute and change the verb accordingly.

நீ	நீ தூங்குறேயா ?
சுரேஷ்	சுரேஷ் தூங்குறாரா ?
மணி	மணி தூங்குறானா ?
மாணவங்க	மாணவங்க தூங்குறாங்களா ?
மாலா	மாலா தூங்குறாளா ?
அது	அது தூங்குதா ?

(ii) என் நண்பரும் வர்றாரு. — என் நண்பரும் வர்றாரு.
Substitute and conjugate the verb suitably.

இருமு	என் நண்பரும் இருமுறாரு.
தூங்கு	என் நண்பரும் தூங்குறாரு.
தும்மு	என் நண்பரும் தும்முறாரு.
போ	என் நண்பரும் போறாரு.

(iii) காய்ச்சல் அடிக்கும். — காய்ச்சல் அடிக்கும்.
Substitute and conjugate the verb suitably.

இரு	காய்ச்சல் இருக்கும்.
குறை	காய்ச்சல் குறையும்.
வா	காய்ச்சல் வரும்.
போ	காய்ச்சல் போகும்.

(iv) காய்ச்சல் இருக்குது. — காய்ச்சல் இருக்குது.
Substitute and conjugate the verb suitably.

குறை	காய்ச்சல் குறையுது.
அடி	காய்ச்சல் அடிக்குது.
வா	காய்ச்சல் வருது.
போ	காய்ச்சல் போகுது.

(v) மூணு நாளா இருமலா இருக்குதுங்க. — மூணு நாளா இருமலா இருக்குதுங்க.
Substitute and change the noun accordingly.

காய்ச்சல்	மூணு நாளாக் காய்ச்சலா இருக்குதுங்க.
தும்மல்	மூணு நாளாத் தும்மலா இருக்குதுங்க.
சளி	மூணு நாளாச் சளியா இருக்கு-துங்க.
(vi) உங்க உடம்புக்கு என்ன ? Substitute and change the noun accordingly.	உங்க உடம்புக்கு என்ன ?
காலு	உங்க காலுக்கு என்ன ?
கண்ணு	உங்க கண்ணுக்கு என்ன ?
மூக்கு	உங்க மூக்குக்கு என்ன ?
கை	உங்க கைக்கு என்ன ?
உடலு	உங்க உடலுக்கு என்ன ?
(vii) கூடவே என் நண்பரும் வறாரு. Substitute and change the noun accordingly.	கூடவே என் நண்பரும் வறாரு.
மாமா	கூடவே என் மாமாவும் வறாரு.
அப்பா	கூடவே என் அப்பாவும் வறாரு.
கணவரு	கூடவே என் கணவரும் வறாரு.
சிநேகிதரு	கூடவே என் சிநேகிதரும் வறாரு.

f. Transformation drill

(i) நான் தூங்குறேன்.	நீங்க தூங்குறீங்களா ?
நான் இருமுறேன்.	நீங்க இருமுறீங்களா ?
நான் தும்முறேன்.	நீங்க தும்முறீங்களா ?
(ii) எனக்கு இருமலா இருக்குது.	எனக்கு இருமலா இருந்தது.
எனக்குத் தும்மலா இருக்குது.	எனக்குத் தும்மலா இருந்தது.
எனக்குக் காய்ச்சலா இருக்குது.	எனக்குக் காய்ச்சலா இருந்தது.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model: உங்க................க்கு என்ன ? (health/body)
உங்க உடம்புக்கு என்ன ?

(i) மூணு நாளா................+ ஆ இருக்குதுங்க. (cough)
(ii) லேசா................+ உம் இருக்குது. (fever)
(iii) ராத்திரி நல்லாத்................றீங்களா ? (sleep)

(iv) காய்ச்சல்................இருக்குதா ? (always)
(v) உடம்பு நல்லா................க்கும். (sweat)
(vi) உடனே காய்ச்சலும்................யும். (reduce)
(vii) அடிக்கடி................றீங்களா ? (sneeze)
(viii) ....இருக்குது. (sneezing)
(ix) ....யும் இருக்குதுங்க. (cold)
(x) இந்த................+எச் சாப்பிடுங்க. (medicine)
(xi) நாலு................சாப்பிடுங்க. (times)
(xii) நீங்க................போறீங்களா ? (alone)

h. Write the word represented by the formula.

Example : அடிக்கும் அடி + Future

(i) வேர் + Future : ....
(ii) குறை + Future : ....
(iii) தும்மு + Future : ....
(iv) இருமு + Future : ....
(v) சாப்பிடு + Future : ....
(vi) வா + Future : ....
(vii) தூங்கு + Future : ....

i. Include the adverb form of the item given in parentheses as shown in the example.

Example : ரெண்டு மூணுநாளா இருக்குதுங்க. (இருமல்)
ரெண்டு மூணுநாளா இருமலா இருக்குதுங்க.

(i) ரெண்டு மூணுநாளா இருக்குதுங்க. (காய்ச்சல்)
(ii) மாலையிலே அஞ்சுமணிக்குக் காய்ச்சல் அடிக்கும். (லேசு)
(iii) நீங்க போறீங்களா ? (தனி)
(iv) ஆமாங்க, இருக்குதுங்க. (தும்மல்)
(v) இருமலா இருக்குதுங்க. (மூணு நாளு)

j. Transform the followihg singular non-honorific imperatives into singular honorific imperatives

(i) நீ சாப்பிடு.
(ii) நீ தூங்கு.
(iii) நீ போ.
(iv) நீ வா.
(v) நீ இருமு.

k. Answer these questions.

(i) உங்க உடம்புக்கு என்ன ?
(ii) நீங்க ராத்திரி நல்லாத் தூங்குறீங்களா ?

(iii) நேத்து ராத்திரி உங்களுக்குக் காய்ச்சல் அடிச்சதா ?

(iv) உங்க அறையிலே ரொம்ப வேர்க்குதா ?

(v) நீங்க தினந்தோறும் பள்ளிக்கூடத்துக்குத் தனியாவா போறீங்க ?

(vi) கூடவே உங்க மனைவியும்/கணவரும் மைசூருக்கு வந்தாங்களா ?

(vii) நீங்க இப்ப மருந்து சாப்பிடுறீங்களா ?

(viii) நீங்க இருமலுக்கு என்ன மருந்து சாப்பிடுறீங்க ?

VOCABULARY

டாக்டர்	'medical doctor'	உடம்பு	'human body / health'
இருமல்	'cough'	லேசா	'slightly'
காய்ச்சல்	'fever'	தூங்கு	'sleep'
பூரா (வும்)	'throughout, whole'	எப்பவும்	'always'
காய்ச்சல் அடி	'get fever'	(ஒரு) தரம்	'once'
வேர்	'sweat'	குறை	'reduce'
இருமு	'cough'	தும்மு	'sneeze'
தும்மல்	'sneezing'	சளி	'cold'
மருந்து	'medicine'	வேளை	'times'
தனியா	'alone'		

GRAMMAR

12.48.144. Tamil verbs may be broadly classified into two, namely, intransitive and transitive. As Arden says 'the intransitive verb usually expresses experiencing, enduring, and action which is confined to the subject of the verb and does not pass on to an object. The verbs such as தூங்கு. 'sleep', வேர் 'sweat' தும்மு 'sneeze' and இருமு 'cough' are intransitive verbs. These verbs suggest that the subjects in the following sentences are experiencing the actions expressed by them. Note that there is no object in these sentences.

12. 48. 144. நீங்க நல்லாத் தூங்குறீங்களா ?
உடம்பு பூராவும் நல்லா வேர்க்கும்.
நீங்க அடிக்கடி தும்முறீங்களா ?

12.48.145. We noticed in 5.28.101 that கூட- is a sociative case marker. Unlike other case markers this can occur alone without noun. It signifies 'along with'. -ஏ is an emphatic marker. Example :

12. 48. 145. கூடவே என் நண்பரும் வறாரு.
கூடவே சளியும் இருக்குதுங்க.

Sandhi : கூட + ஏ → கூடவே
தனியா + ஆ → தனியாவா (Refer S.9 in 1.9)
நல்லா + தூங்குறீங்களா → நல்லாத் தூங்குறீங்களா
(Refer S.21 in 3.20)

UNIT 12

LESSON 49

WITH THE SERVANT BOY

DIALOGUE

கணேஷ் : மணி, நீ எப்ப எழுந்தே?	Mani, when did you get up?
மணி : நான் அஞ்சு மணிக்கே எழுந்தேன் சார்.	I got up at five o'clock sir.
கணேஷ் : யாரு உன்னைப் படுக்கையிலேயிருந்து எழுப்பினாங்க?	Who woke you up from the bed?
மணி : நாராயணா சார் எழுப்பினாங்க. பெட் காப்பிக்குப் பாலைக் காய்ச்சட்டுமா?	Mr Narayaiah woke me up sir. Shall (I) boil the milk for bed coffee?
கணேஷ் : பாலு அடுப்புலே காயுது. அதை அடுப்புலேயிருந்து எறக்கு. பூசைக்குப் பூ வாங்கினியா?	The milk is being heated in the oven. You remove it from the oven. Did you buy flowers for pooja?

மணி : இல்லெ, ஸார். தோட்டத்துலேயிருந்து பறிக்கட்டுமா ?	No, sir. Shall (I) pluck (flowers) from the garden ?
சுரேஷ் : சரி. அந்தக் குழாயிலேயிருந்து தண்ணீரு கசியுது, பாரு. அதெ இறுக்கமா மூடு. அலமாரியிலேயிருந்து பல்பொடி டப்பாவெ எடு... கெணத்துலேயிருந்து ஒரு வாளி தண்ணீரு எறெ.	Alright, Look ! The water is leaking from that tap. Close it tightly. Take the tooth powder tin from the almirah. Draw a bucket of water from the well.
மணி : சரிங்க. வாளியிலேயிருந்து தண்ணீரு ஒழுகுது ஸார்.	Alright, sir. The water is leaking from the bucket, sir.
சுரேஷ் : நாளெக்கு ஒரு புது வாளி வாங்கலாம் .... குழுலே திரிவேதி தூங்குறாரு .... அவரெச் சீக்கிரமா எழுப்பு.	(We) shall buy a new bucket tomorrow. Mr. Trivedi is sleeping in the room. Wake him up quickly.
மணி : சரிங்க.	Alright, sir.

DRILLS

a. Variation drill

12. 49. 146. யாரு உன்னெ எழுப்புனுங்க ?
நான் பாலெக் காய்ச்சட்டுமா ?
நீ அதெ இறுக்கமா மூடு.
நீ அவரெ எழுப்பு.

12. 49. 147. நான் அஞ்சுமணிக்கே எழுந்தேன்,
நரசப்பா தான் என்னெ எழுப்புனாரு.
பால் அடுப்புலே காயுது.
நான் பாலெக் காய்ச்சட்டுமா ?

12. 49. 148. யாரு உன்னெப் படுக்கெயிலேயிருந்து
எழுப்புனுங்க ?
நீ கடையிலேயிருந்து பூ வாங்குனேயா ?
அலமாரியிலேயிருந்து பல்பொடி டப்பாவெ எடு.

b. Build up drill

(i) நான் காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா ?	நான் காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா ?
காய்ச்சட்டுமா ?	காய்ச்சட்டுமா ?
பாலெ	பாலெக் காய்ச்சட்டுமா ?
காபிக்கு	காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா?
நான்	நான் காபிக்குப் பாலெக் காய்ச்சட்டுமா ?
(ii) நரசய்யாதான் என்னெ எழுப்புனு.	நரசய்யாதான் என்னெ எழுப்புனு.
எழுப்புனு	எழுப்புனு
என்னெ	என்னெ எழுப்புனு
நரசய்யாதான்	நரசய்யாதான் என்னெ எழுப்புனு.
(iii) நீ கடெயிலேயிருந்து பூ வாங்குனேயா ?	நீ கடெயிலேயிருந்து பூ வாங்குனேயா ?
வாங்குனேயா ?	வாங்குனேயா ?
பூ	பூ வாங்குனேயா ?
கடெயிலேயிருந்து	கடெயிலேயிருந்து பூ வாங்குனேயா ?
நீ	நீ கடெயிலேயிருந்து பூ வாங்குனேயா ?

c. Expansion drill

(i) நீ மூடு.	நீ மூடு.
இறுக்கமா மூடு	நீ இறுக்கமா மூடு.
அதெ மூடு	நீ அதெ இறுக்கமா மூடு.
(ii) நீ எழுப்பு.	நீ எழுப்பு.
அவரெ எழுப்பு	நீ அவரெ எழுப்பு.
சீக்கிரமா எழுப்பு	நீ சீக்கிரமா அவரெ எழுப்பு.
(iii) நீ வாங்குனேயா ?	நீ வாங்குனேயா ?
பூ வாங்குனேயா ?	நீ பூ வாங்குனேயா ?
பூசெக்கு வாங்குனேயா ?	நீ பூசெக்குப் பூ வாங்குனேயா ?
கடெயிலேயிருந்து வாங்குனேயா ?	நீ கடெயிலேயிருந்து பூசெக்குப் பூ வாங்குனேயா ?
(iv) அந்தக் குழாயிலெயிருந்து கசியுது.	அந்தக் குழாயிலேயிருந்து கசியுது.
தண்ணீரு கசியுது	அந்தக் குழாயிலேயிருந்து தண்ணீரு கசியுது.

d. Question-Answer drill

(i) Q : நீ எப்ப எழுந்தே ?
A : நான் அஞ்சுமணிக்கே எழுந்தேன், ஸார்.

(ii) Q : யாரு உன்னெ எழுப்புனாங்க ?
A : நரசய்யாதான் எழுப்புனாரு.

(iii) Q : கடெயிலெயிருந்து பூசெக்குப் பூ வாங்குனெயா ?
A : இல்லெ ஸார்.

e. Substitution drill

(i) அவரு எழுப்புனாரு. Substitute and change the verb accordingly.	அவரு எழுப்புனாரு.
நான்	நான் எழுப்புனேன்.
தாங்க	தாங்க எழுப்புனோம்.
நாம	நாம எழுப்புனோம்.
நீ	நீ எழுப்புனே.
நீங்க	நீங்க எழுப்புனீங்க
அவன்	அவன் எழுப்புனான்.
அவ	அவ எழுப்புனா.
இவங்க	இவங்க எழுப்புனாங்க.

(ii) யாரு உன்னெ எழுப்புனாங்க? Substitute and change the noun accordingly.	யாரு உன்னெ எழுப்புனாங்க ?
நான்	யாரு என்னெ எழுப்புனாங்க ?
மணி	யாரு மணியெ எழுப்புனாங்க ?
நரசய்யா	யாரு நரசய்யாவெ எழுப்புனாங்க ?
அவரு	யாரு அவரெ எழுப்புனாங்க ?
நாங்க	யாரு எங்களெ எழுப்புனாங்க ?
நாம	யாரு நம்மெ எழுப்புனாங்க ?

(iii) நான் எழுப்புனேன். Substitute and conjugate the verb suitably.	நான் எழுப்புனேன்.
பாரு	நான் பார்த்தேன்
காய்ச்சு	நான் காய்ச்சுனேன்.
எறக்கு	நான் எறக்குனேன்.
வாங்கு	நான் வாங்குனேன்.
பறி	நான் பறிச்சேன்.
மூடு	நான் மூடுனேன்.
எறெ	நான் எறெச்சேன்.
எடு	நான் எடுத்தேன்.

(iv) அது காயுது.	அது காயுது.
Substitute and conjugate the verb suitably.	
கசி	அது கசியுது.
ஒழுகு	அது ஒழுகுது.

i. Transformation drill

(i) திரிவேதி தூங்குறாரு.	திரிவேதி தூங்குனாரு.
நரசய்யா எழுப்புறாரு.	நரசய்யா எழுப்புனாரு.
நான் பறிக்குறேன்.	நான் பறிச்சேன்.
நான் எடுக்குறேன்.	நான் எடுத்தேன்.
(ii) அது காயுது.	அது காயும்.
அது கசியுது.	அது கசியும்.
அது ஒழுகுது.	அது ஒழுகும்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீ எப்ப..............ந்தே ? (get up)
நீ எப்ப எழுந்தே ?

(i) யாரு உன்னெ..............னுங்க. (wake up)
(ii) நான்.............. + எக் காய்ச்சட்டுமா ? (milk)
(iii) நான்.............. + அட்டுமா ? (boil)
(iv) பாலு ....து. (be boiled)
(v) .... லேயிருந்து எறக்கு. (oven)
(vi) .... + இலேயிருந்து வாங்குனேயா ? (shop)
(vii) .... + உலேயிருந்து பறிக்கட்டுமா ? (garden)
(viii) அந்த.............. + இலேயிருந்து தண்ணீரு கசியுது. (pipe)
(ix) தண்ணீரு..............யுது (leak)
(x) அதெ.............. + ஆ மூடு. (tightness)
(xi) அதெ.............. (close)
(xii) டப்பாவெ.............. (take)
(xiii) தண்ணீரு..............து. (leak)
(xiv) ....டப்பாவெ எடு. (tooth powder)
(xv) நீ.............. + எ எடு. (tin container)

h. Write the word represented by the formula.

Example : உன்னெ   நீ + Objective

(i) பாலு + Objective : ....

(ii) காபி + Objective : ....
(iii) அடுப்பு + Objective : ....
(iv) கடெ + Objective : ....
(v) பூசெ + Objective : ....
(vi) பூ + Objective : ....
(vii) வாளி + Objective : ....

i. Include the objective form of the item given in parentheses as shown in the example.

Example : யாரு எழுப்புறாங்க ? (நீ)
யாரு உன்னெ எழுப்புறாங்க ?

(i) நான் காய்ச்சட்டுமா? (பாலு)
(ii) நீ எறக்கு. (அது)
(iii) நீ பூசெக்கு வாங்குனேயா ? (பூ)
(iv) நீ எடு (பல்பொடி டப்பா)
(v) நீ சீக்கிரமா எழுப்பு (அவரு)

j. Include the ablative form of the item given in parentheses as shown in the example.

Example : நான் எழுந்தேன். (படுக்கெ)
நான் படுக்கெயிலேயிருந்து எழுந்தேன்.

(i) யாரு உன்னெ எழுப்புறாங்க ? (படுக்கெ)
(ii) அதெ எறக்கு. (அடுப்பு)
(iii) பூசெக்குப் பூ வாங்குனேயா ? (கடெ)
(iv) நான் பறிக்கட்டுமா ? (தோட்டம்)
(v) தண்ணீரு கசியுது. (குழாய்)
(vi) நீ அந்த டப்பாவெ எடு. (அலமாரி)
(vii) ஒரு வாளி தண்ணீரு எறெ. (கெணறு)

k. Join the following according to the sandhi rules.

(i) படுக்கெ + இலேயிருந்து : ....
கடெ + இலேயிருந்து : ....
வாளி + இலேயிருந்து : ....
(ii) அது + எ : ....
(iii) டப்பா + எ : ....
பூ + எ : ....
(iv) கெணறு + உலேயிருந்து : ....
வயிறு + உலேயிருந்து : ....

l. Answer the questions

(i) நீங்க காலெயிலே எத்தனெ மணிக்கு எழுந்தீங்க ?
(ii) உங்களெ யாரு படுக்கெயிலேயிருந்து எழுப்புறாங்க ?

(iii) நீங்க தினந்தோறும் பாலு குடிப்பீங்களா ?

(iv) நீங்க தினந்தோறும் பூசெ செய்றீங்களா ?

(v) உங்க வீட்டுக் குழாயிலெயிருந்து எப்பவும் தண்ணீரு வருமா ?

VOCABULARY

எழு	'get up'	படுக்கெ	'bed'
எழுப்பு	'wake up'	பாலு	'milk'
காய்ச்சு	'boil'	அடுப்பு	'oven'
காய்	'be boiled'	எறக்கு	'remove'
கடெ	'shop'	பூசெ	'pooja'
தோட்டம்	'garden'	பறி	'pluck'
குழாய்	'pipe'	கசி	'leak'
பாரு	'look'	இறுக்கமா	'tightly'
மூடு	'close'	பல்பொடி	'toothpowder'
டப்பா	'tin, container'	கெணறு	'well'
எறெ	'draw water from the well'	சீக்கிரமா	'quickly'
ஒழுகு	'leak'		

GRAMMAR

12.49.146. We noticed in 12.48.144. that Tamil verbs are classified into two, namely, intransitive and transitive. The transitives again can be classified into inherent transitive and derived transitive. In this lesson, we mainly deal with inherent transitive verbs and derived transitive verbs in contrast with intransitive verbs.

As Arden says, 'a transitive verb denotes certain action that does pass over to an object.' The verbs like எழுப்பு 'wake up', காய்ச்சு 'boil', வாங்கு 'buy', மூடு 'close' etc., are transitive verbs. Note that the actions expressed by these verbs are passed on to the objects in the following examples.

12. 49. 146. யாரு உன்னெ எழுப்புறுங்க ?
நான் பாலெக் காய்ச்சட்டுமா ?
நீ அதெ இறுக்கமா மூடு.

உன்னெ 'you-obj', பாலெ 'milk-obj', அதெ 'that-obj' are the objects of the sentences mentioned above (Also refer 6.31.111).

12.49.147. Now let us consider the relationship between the following sets of verbs.

(i) எழு எழுப்பு
(ii) காய் காய்ச்சு
(iii) எறங்கு எறக்கு

We notice a phonetic resemblance between the two sets of verbs. But there is a little phonetic difference that establishes the fact that they are different in function and meaning. The verbs listed in the first and the second columns are called intransitive and (derived) transitive respectively. This does not mean that a transitive verb can be derived from any and all instranstive verbs. The following examples illustrate the grammatical behaviour of these verbs.

12. 49. 147. நான் அஞ்சுமணிக்கே எழுந்தேன்.
நாசய்யா தான் என்னெ எழுப்புறாரு.
பால் அடுப்புலே காயுது.
நான் பாலெக் காய்ச்சட்டுமா ?

The verb which is not derived from any intransitive verb is called inherent transitive. For example, the verbs like வாங்கு 'buy' பறி 'pluck', மூடு 'close', எடு 'take' etc., are inherent transitive verbs : Example : நீ பூசெக்குப் பூ வாங்குனேயா?; தோட்டத்துலேயிருந்து பறிக்கட்டுமா ? : அதெ இறுக்கமா மூடு.; பல்பொடி டப்பாவெ எடு. etc.

12.49.148. See the following sentences.

12. 49. 148. யாரு உன்னெப் படுக்கெயிலேயிருந்து
எழுப்புனாங்க ?
நீ கடையிலேயிருந்து பூ வாங்குனேயா ?
அலமாரியிலேயிருந்து பல்பொடி டப்பாவெ எடு.

Let us recall the function of the case 'ablative of motion' (Refer 5.27.99). The case forms like படுக்கெயிலேயிருந்து, 'bed-from' கடெயிலேயிருந்து 'shop-from', அலமாரியிலேயிருந்து, 'almirah-from' and கெணத்துலேயிருந்து 'well-from' are the same as the case forms we have in the following sentences.

5. 27. 99. நான் வீட்டுலேயிருந்து வரேன்.
நீங்க எங்கேயிருந்து வரீங்க ?
பேராசிரியரு மார்க்கட்டுலேயிருந்து புறப்படுறாரு.

The difference we find in these two sets of sentences is that the ablative of motion is understood along with an object in the former set of sentences whereas it is understood without an object in the later set of sentences.

Sandhi : படுக்கெ + இலேயிருந்து → படுக்கெயிலேயிருந்து
கடெ + இலேயிருந்து → கடெயிலேயிருந்து
அலமாரி + இலேயிருந்து → அலமாரியிலேயிருந்து
வாளி + இலேயிருந்து → வாளியிலேயிருந்து (Refer S.8 in 1.5)
தோட்டம் + உலேயிருந்து → தோட்டத்துலேயிருந்து
(Refer S. 17 in 2.13)
கெணறு + உலேயிருந்து → கெணத்துலேயிருந்து (Refer S. 26 in 11.47)

UNIT 12

LESSON 50

INSTRUCTING A COOK

DIALOGUE

மணி : ஸார், தோட்டத்துலெ எல்லாப் பூச்செடியும் நல்லா வளருதுங்க. இந்தாங்க பூசெக்குப் பூ.	Sir, all the flower plants are growing well in the graden. Here are the flowers for Pooja !
சுரேஷ்: இந்த மொட்டெல்லாம் ஏன்டா பறிச்சே ? .... இந்தப் பூவெல்லாம் இன்னும் சரியா விரி-யலெ. நாளெக்கு இப்படிப் பறிக்காதே.	Hey ! why did you pluck all these buds ? They have not yet fully blossomed. Don't pluck (the buds) like this tomorrow.
மணி : சரிங்க.... டிபன் தயார் பண்ணட்டுமா ?	Alright, sir. Shall (I) prepare tiffin ?

சுரேஷ் : சரி. இன்னைக்கு என்ன டிபன் ?	Okey. What is the tiffin today ?
மணி : தோசெ சுட்டுமா ?	Shall (I) make dosai ?
சுரேஷ் : தோசெ வேண்டாம். சப்பாத்தி போடு. என்ன கூட்டு வைப்பே ?	(I) do not want dosai (You) prepare chappathi. What curry will (you) prepare ?
மணி: உருளைக் கெழங்குக் கூட்டு வைக்குறேன். விருந்தாளிக்காகக் கொஞ்சம் ரவாகேசரியும் கிண்டு-றேன்.	(I) will prepare potato curry. (I) will also prepare a little ravakesari for the guest.
சுரேஷ் : சரி. மத்தியானம் என்ன சமெக்குறே ?	Alright. What will (you) cook for the noon ?
மணி : வெஜிடபிள் பிரியாணி சமெக்குறேன். ஒரு இனிப்பும் பண்ணுறேன்.	(I) will cook vegetable biriyani. (I) will also prepare a sweet.
சுரேஷ் : இனிப்புக்குப் பதிலாப் பாயசம் வையேன். திரி-வேதிக்குப் பாயசம் ரொம்பப் பிடிக்கும் ... கொஞ்சம் வடகமும் பொரி.	Instead of sweet, prepare payasam. Trivedi likes payasam very much . (You)fry a few vadagam also
மணி : சரிங்க.	Alright, sir.

DRILLS

a. Variation drill

12. 50. 149. நான் டிபன் தயார் பண்ணட்டுமா ?
உருளைக்கெழங்குக் கூட்டு வைக்குறேன்.
நான கொஞ்சம் ரவாகேசரியும் கிண்டுறேன்.
ரவாகேசரிக்குப் பதிலாப் பாயசம் வையேன்.
நீ கொஞ்சம் வடகமும் பொரி.

12. 50. 150. இந்த மொட்டெயெல்லாம் ஏன்டா பறிச்சே ?

b. Build up drill

(i) நான் உருளெக்கெழங்குக் கூட்டு வைக்குறேன்.	நான் உருளெக்கெழங்குக் கூட்டு வைக்குறேன்.
வைக்குறேன்	வைக்குறேன்
கூட்டு	கூட்டு வைக்குறேன்
உருளெக்கெழங்கு	உருளெக்கெழங்குக் கூட்டு வைக்குறேன்
நான்	நான் உருளெக்கெழங்குக் கூட்டு வைக்குறேன்.
(ii) ரவாகேசரிக்குப் பதிலாப் பாயசம் வையேன்.	ரவாகேசரிக்குப் பதிலாப் பாயசம் வையேன்.
வையேன்	வையேன்
பாயசம்	பாயசம் வையேன்
ரவாகேசரிக்குப் பதிலா	ரவாகேசரிக்குப் பதிலாப் பாயசம் வையேன்.
(iii) இந்த மொட்டெயெல்லாம் ஏண்டா பறிச்சே ?	இந்த மொட்டெயெல்லாம் ஏண்டா பறிச்சே ?
ஏண்டா பறிச்சே ?	ஏண்டா பறிச்சே ?
மொட்டெயெல்லாம்	மொட்டெயெல்லாம் ஏண்டா பறிச்சே ?
இந்த	இந்த மொட்டெயெல்லாம் ஏண்டா பறிச்சே ?

c Expansion drill

(i) நான் திண்டுறேன்.	நான் திண்டுறேன்.
ரவாகேசரியும் திண்டுறேன்	நான் ரவாகேசரியும் திண்டுறேன்.
கொஞ்சம் திண்டுறேன்	நான் கொஞ்சம் ரவாகேசரியும் திண்டுறேன்.
விருந்தாளிக்காக திண்டுறேன்.	நான் விருந்தாளிக்காகக் கொஞ்சம் ரவாகேசரியும் திண்டுறேன்.
(ii) இந்தப் பூவெல்லாம் விரியலெ.	இந்தப் பூவெல்லாம் விரியலெ.
சரியா விரியலெ	இந்தப் பூவெல்லாம் சரியா விரியலெ.
இன்னும் விரியலெ	இந்தப் பூவெல்லாம் இன்னும் சரியா விரியலெ
(iii) நீ பொரி.	நீ பொரி.
வடகமும் பொரி	நீ வடகமும் பொரி.
கொஞ்சம் பொரி	நீ கொஞ்சம் வடகமும் பொரி.

d. Question-Answer drill

(i) Q: டிபன் தயார் பண்ணட்டுமா ?
A: சரி.

(ii) Q: தோசெ சுடட்டுமா ?
A: தோசெ வேண்டாம். சப்பாத்தி போடு.

(iii) Q: என்ன கூட்டு வைப்பே ?
A: உருளெக்கெழங்குக் கூட்டு வைக்குறேன்.

e. Substitution drill

(i) நீ ஏன் பறிச்சே ?	நீ ஏன் பறிச்சே ?
Substitute and change the verb accordingly.	
நீங்க	நீங்க ஏன் பறிச்சீங்க ?
அவன்	அவன் ஏன் பறிச்சான் ?
அவ	அவ ஏன் பறிச்சா ?
அவரு	அவரு ஏன் பறிச்சாரு ?
அவங்க	அவங்க ஏன் பறிச்சாங்க ?
(ii) நான் வைக்குறேன்.	நான் வைக்குறேன்.
Substitute and conjugate the verb suitably	
பறி	நான் பறிக்குறேன்.
தயார் பண்ணு	நான் தயார் பண்ணுறேன்.
சுடு	நான் சுடுறேன்.
போடு	நான் போடுறேன்.
கிண்டு	நான் கிண்டுறேன்.
பொரி	நான் பொரிக்குறேன்.
(iii) அது விரியலெ	அது விரியலெ.
Substitute and change the verb accordingly.	
வளரு	அது வளரலெ.
பறி	அது பறிக்கலெ.
போடு	அது போடலெ.
வை	அது வைக்கலெ.
செய்	அது செய்யலெ.
(iv) அது வளருது.	அது வளருது.
Substitute and change the verb accordingly.	
செய்	அது செய்யுது.
விரி	அது விரியுது.

(v) நீ பறிச்சே.	நீ பறிச்சே.
Substitute and conjugate the verb suitably.	
வளரு	நீ வளர்ந்தே.
போடு	நீ போட்டே.
வை	நீ வைச்சே.
செய்	நீ செய்தே.
பொரி	நீ பொரிச்சே.
கிண்டு	நீ கிண்டுனே.
சுடு	நீ சுட்டே.

f. Transformation drill

(i) அது வளருது.	அது வளரலெ.
அது விரியுது.	அது விரியலெ.
அது செய்யுது.	அது செய்யலெ.
(ii) நீ போடு.	நீ போடாதே.
நீ வை.	நீ வைக்காதே.
நீ பறி.	நீ பறிக்காதே.
நீ பொரி.	நீ பொரிக்காதே

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : எல்லாப் பூச்செடியும் நல்லா ....து. (grow)
எல்லாப் பூச்செடியும் நல்லா வளருது.

(i) இந்தாங்க .... (flower)
(ii) பூவெல்லாம் சரியா ....யலெ. (blossom)
(iii) நீ ....க்காதே. (pluck)
(iv) நான் தோசெ .... + அட்டுமா. (roast)
(v) நீ என்ன ....வைப்பே ? (a kind of curry)
(vi) ....க்காக ரவாகேசரி கிண்டுறேன். (guest)
(vii) ....சமெக்குறேன். (biriyani)
(viii) ஒரு ....பண்ணுறேன். (sweet)
(ix) ஒரு இனிப்பு ....றேன். (prepare)
(x) நீ ....வையேன். (sweet semi-liquid food)
(xi) கொஞ்சம் ....பொரி. (spiced and dried lumps of flour)
(xii) நீ .... (fry)

h. Frame questions for the answers given below following the model

Model : நான் பிரியாணி சமெக்குறேன்.
நீ என்ன சமெக்குறே ?

(i) நான் பூப் பறிக்குறேன்.
(ii) நான் கூட்டு வைக்குறேன்.
(iii) நான் வடகமும் பொரிக்குறேன்.
(iv) நான் சப்பாத்தி போடுறேன்.
(v) நான் ஒரு இஸ்டூப் பண்ணுறேன்.

i. Write the word represented by the formula.

Example : விரிய   விரி + Inf

(i) வளரு + Inf : ....
(ii) பறி + Inf : ....
(iii) சுடு + Inf : ....
(iv) போடு + Inf : ....
(v) வை + Inf : ....
(vi) தின்டு + Inf : ....
(vii) செய் + Inf : ....
(viii) பொரி + Inf : ....

Example : சமைக்குறேன்   சமை + Present

(i) தின்டு + Present : ....
(ii) வை + Present : ....
(iii) பொரி + Present : ....
(iv) வளரு + Present : ....
(v) பறி + Present : ....

j. Join the following according to the sandhi rules.

(i) தோட்டம் + உலே : ....   (ii) பூ + எல்லாம் : ....
பாயசம் + ஏ : ....

k. Answer these questions.

(i) உங்க வீட்டுலே எல்லாப் பூச்செடியும் இருக்குதா ?
(ii) நீங்க காலையிலே என்ன டிபன் சாப்பிட்டீங்க ?
(iii) இன்னைக்கு உங்க ஹாஸ்டல்லே பாயசம் வைச்சாங்களா ?
(iv) உங்களுக்கு உருளைக்கிழங்குக் கூட்டுப் பிடிக்குமா ?
(v) உங்க மனைவி வெஜிடபிள் பிரியாணி சமைப்பாங்களா ?

VOCABULARY

வளரு	'grow'	மொட்டு	'bud'
இன்னும்	'yet'	சரியா	'properly/fully'
விரி	'blossom'	இப்படி	'like this'
தயார் பண்ணு	'prepare'	சுடு	'roast'
போடு	'prepare'	கூட்டு	'a kind of curry'
வை	'prepare'	விருந்தாளி	'guest'

ரவாகேசரி	'a sweet dish prepared out of wheat and sugar'	கிண்டு	'stir/prepare'
வெஜிடபிள்	'vegetable'	பிரியாணி	'biriyani'
இனிப்பு	'sweet'	பண்ணு	'prepare'
பதிலா	'instead of'	பாயசம்	'sweet semi-liquid food'
வடகம்	'spiced and dried lumps of flour'	பொரி	'fry'

GRAMMAR

12.50.149. We noticed in the lesson 6.31 that the objective case marker -எ is sometimes covertly expressed in certain grammatical contexts. In this lesson we see some of the transitive verbs that are preceded by the objects which do not have the objective case marker explicitly. Example :

12. 50. 149. நான் டிபன் தயார் பண்ணட்டுமா ?
உருளைக்கிழங்குக் கூட்டு வைக்கிறேன்.
நான் கொஞ்சம் ரவாகேசரியும் கிண்டுறேன்.
ரவாகேசரிக்குப் பதிலாப் பாயசம் வையேன்.
நீ கொஞ்சம் வடகமும் பொரி.

This composition of a noun and a verb appears to be a compound verb wherein the noun may be expanded with the objective case marker -எ. See the following examples.

கூட்டு வை	கூட்டெ வை
ரவாகேசரி கிண்டு	ரவாகேசரியெக் கிண்டு
பாயசம் வை	பாயசத்தெ வை
வடகம் பொரி	வடகத்தெப் பொரி

12.50.150. Like -ம்மா and -ப்பா (Refer 1.7. Notes), -டா can also be added to any word or sentence. It is used by the speaker when the hearer is young and/or socially inferior. It also indicates that the speaker and hearer are on intimate terms, childhood friends etc. Sometimes it is used to indicate that speaker shows affection to the hearer. Example : ஏன்டா (ஏன் + டா); வாடா ; போடா etc. See the following sentence.

12. 50. 150. இந்த மொட்டெயெல்லாம் ஏன்டா பறிச்சே ?

Sandhi : பூ + செடி → பூச்செடி (Refer S.4 in 1.2)
பூச்செடி + உம் → பூச்செடியும்
மொட்டெ + எல்லாம் → மொட்டெயெல்லாம்
சரி + ஆ → சரியா (Refer S.8 in 1.5)
பூ + எல்லாம் → பூவெல்லாம் (Refer S.9 in 1.7)

UNIT 13

LESSON 51

WE TEACH TAMIL

DIALOGUE

சுந்தரம் : என் பேரு சுந்தரம் .... நான் மதுரெப் பல்கலெக் கழகத்துலே தமிழ்ப் பேராசிரியரா வேலெ பார்க்குறேன். இங்கே பதினஞ்சு மாணவங்க தமிழ் எம். ஏ. படிக்குறாங்க. அவங்களெத் தவிர வெளிநாட்டுக்காரங்க செலரும் தமிழ் 'டிப்ளோமா' படிக்குறாங்க. நாங்க அவங்களுக்குத் தமிழ் மொழியெக் கற்பிக்குறோம்.

My name is Sundaram. I work as a Professor of Tamil in Madurai University. Fifteen students study Tamil M.A. here. Other than these (students) some foreigners are also studying for Tamil Diploma. We teach the Tamil language to them. They study Tamil (here) for one year. Within this one year they speak Tamil well. At the end of the year we conduct an examination. Almost all (of them) will pass that examination. We give diploma to them.

அவங்க ஒரு வருஷம் தமிழ் படிக்குறாங்க. இந்த ஒரு வருஷத்துலே தமிழ்லே நல்லாப் பேசு-றாங்க; எழுதுறாங்க. வருஷக் கடைசியிலே, ஒரு தேர்வு நடத்துறோம். அந்தத் தேர்வுலே அநேகமா எல்லாரும் பாஸ் பண்ணுறாங்க. அவங்களுக்கு நாங்க 'டிப்ளமோ' பட்டம் கொடுக்குறோம்.	
திரிவேதி : சுரேஷ் உங்க மாண-வரா.... ? அவரு என்ன படிக்குறாரு ?	Is Mr. Suresh your student ?... what is he studying ?
சுந்தரம் : சுரேஷ் என் மாணவரு தான்....அவரு தமிழ் 'டிப்ளமோ' படிக்குறாரு. உங்களுக்கு அவரைத் தெரியுமா ?	(Yes) Mr. Suresh is my student ..He is studying Tamil diploma. Do you know him ?
திரிவேதி : தெரியுங்க.	(Yes, I) know (him sir).

DRILLS

a. Variation drill

13. 51. 151. மாணவங்க தமிழ் படிக்குறாங்க.
நாங்க அவங்களுக்குக் கற்பிக்குறோம்.
அவங்க தமிழ் நல்லாப் பேசுறாங்க.
நாங்க கடைசியிலே தேர்வு நடத்துறோம்.

b. Build up drill

(i) மாணவங்க தமிழ் படிக்கு-றாங்க.	மாணவங்க தமிழ் படிக்குறாங்க.
படிக்குறாங்க	படிக்குறாங்க
தமிழ்	தமிழ் படிக்குறாங்க
மாணவங்க	மாணவங்க தமிழ் படிக்குறாங்க.
நாங்க அவங்களுக்குக் கற்பிக்குறோம்.	நாங்க அவங்களுக்குக் கற்பிக்கு-றோம்.
கற்பிக்குறோம்	கற்பிக்குறோம்

அவங்களுக்கு நாங்க	அவங்களுக்குக் கற்பிக்குறோம் நாங்க அவங்களுக்குக் கற்பிக்கு- றோம்.
(iii) அவங்க தமிழ்லே நல்லாப் பேசுறாங்க. பேசுறாங்க நல்லா தமிழ்லே அவங்க	அவங்க தமிழ்லே நல்லாப் பேசுறாங்க. பேசுறாங்க நல்லாப் பேசுறாங்க தமிழ்லே நல்லாப் பேசுறாங்க அவங்க தமிழ்லே நல்லாப் பேசுறாங்க.
(iv) நாங்க கடெசியிலே தேர்வு நடத்துறோம். நடத்துறோம் தேர்வு கடெசியிலே நாங்க	நாங்க கடெசியிலே தேர்வு நடத்துறோம். நடத்துறோம் தேர்வு நடத்துறோம் கடெசியிலே தேர்வு நடத்துறோம் நாங்க கடெசியிலே தேர்வு நடத்துறோம்.

c. Expansion drill

(i) நான் வேலெ பார்க்குறேன். பேராசிரியரா வேலெ பார்க்குறேன் பல்கலெக்கழகத்துலே வேலெ பார்க்குறேன்	நான் வேலெ பார்க்குறேன். நான் பேராசிரியரா வேலெ பார்க்குறேன். நான் பல்கலெக்கழகத்துலே பேராசிரியரா வேலெ பார்க்குறேன்.
(ii) நாங்க கற்பிக்குறோம். தமிழ்மொழியெக் கற்பிக்கு- றோம் அவங்களுக்குக் கற்பிக்கு- றோம்	நாங்க கற்பிக்குறோம். நாங்க தமிழ்மொழியெக் கற்பிக்- குறோம். நாங்க அவங்களுக்குத் தமிழ் மொழியெக் கற்பிக்குறோம்.
(iii) அவங்க படிக்குறாங்க. தமிழ் படிக்குறாங்க ஒரு வருஷம் படிக்குறாங்க	அவங்க படிக்குறாங்க. அவங்க தமிழ் படிக்குறாங்க. அவங்க ஒரு வருஷம் தமிழ் படிக்குறாங்க.
(iv) நாங்க கொடுக்குறோம். டிப்ளமோ கொடுக்குறோம் அவங்களுக்குக் கொடுக்கு- றோம்.	நாங்க கொடுக்குறோம். நாங்க டிப்ளமோ கொடுக்குறோம். நாங்க அவங்களுக்கு டிப்ளமோ கொடுக்குறோம்.

d. Question-Answer drill

(i) Q: சுரேஷ் உங்க மாணவரா ?
A: ஆமா. அவரு தமிழ் டிப்ளமோ படிக்குறாரு.

(ii) Q: உங்களுக்கு அவரெத் தெரியுமா ?
A: தெரியுங்க. அவரு என் நண்பரு.

e. Substitution drill

(i) நாங்க கற்பிக்குறோம்.	நாங்க கற்பிக்குறோம்.
Substitute and conjugate the verb suitably.	
வேலெ பாரு	நாங்க வேலெ பார்க்குறோம்.
நடத்து	நாங்க நடத்துறோம்.
பாஸ்பண்ணு	நாங்க பாஸ்பண்ணுறோம்.
படி	நாங்க படிக்குறோம்.
(ii) வெளிநாட்டுக்காரங்க படிக்-குறாங்க.	வெளிநாட்டுக்காரங்க படிக்கு-றாங்க.
Substitute and conjugate the verb suitably.	
கற்பி	வெளிநாட்டுக்காரங்க கற்பிக்கு-றாங்க.
பாஸ்பண்ணு	வெளிநாட்டுக்காரங்க பாஸ் பண்ணுறாங்க.
கொடு	வெளிநாட்டுக்காரங்க கொடுக்கு-றாங்க.
(iii) நான் பல்கலெக்கழகத்துலே வேலெ பார்க்குறேன்.	நான் பல்கலெக்கழகத்துலே வேலெ பார்க்குறேன்.
Substitute	
கல்லூரியிலே	நான் கல்லூரியிலே வேலெ பார்க்குறேன்.
பள்ளிக்கூடத்துலே	நான் பள்ளிக்கூடத்துலே வேலெ பார்க்குறேன்.
ஆபீஸ்லே	நான் ஆபீஸ்லே வேலெ பார்க்-குறேன்.

f. Transformation drill.

(i) அவரு டிப்ளமோ படிக்-குறாரு.	அவரு என்ன படிக்குறாரு ?
வெளிநாட்டுக்காரங்க தமிழ் படிக்குறாங்க.	வெளிநாட்டுக்காரங்க என்ன படிக்குறாங்க ?
அவங்க தமிழ் கற்பிக்குறாங்க.	அவங்க என்ன கற்பிக்குறாங்க ?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான்..............+ லே வேலெபார்க்குறேன். (university)

நான் பல்கலெக்கழகத்துலே வேலெ பார்க்குறேன்.

(i) நான் பேராசிரியரா..............க்குறேன். (work)
(ii) வெளிநாட்டுக்காரங்க தமிழ்..............க்குறாங்க. (learn)
(iii) நாங்க தமிழ் மொழியெக்..............க்குறோம். (teach)
(iv) அவங்க ஒரு..............தமிழ் படிக்குறாங்க. (year)
(v) வருஷக்..............+ இலே தேர்வு நடத்துறோம். (at the end)
(vi) நாங்க தேர்வு..............றோம். (conduct)
(vii) எல்லாரும்..............றாங்க. (pass)

h. Change these sentences to the future.

(i) நான் பேராசிரியரா வேலெ பார்க்குறேன்.
(ii) வெளிநாட்டுக்காரங்க தமிழ் படிக்குறாங்க.
(iii) நாங்க தமிழ் மொழியெக் கற்பிக்குறோம்.
(iv) அவங்க நல்லாத் தமிழ் பேசுறாங்க.
(v) அந்தத் தேர்வுலே எல்லாரும் பாஸ்பண்ணுறாங்க.

i. Change these sentences to the negative.

(i) நான் தமிழ்ப் பேராசிரியரா வேலெ பார்க்குறேன்.
(ii) நாங்க தமிழ்மொழியெக் கற்பிக்குறோம்.
(iii) அவங்க நல்லா எழுதுறாங்க.
(iv) வருஷக் கடெசியிலே தேர்வு நடத்துறோம்.
(v) வெளிநாட்டுக்காரங்க தமிழ் படிக்குறாங்க.

j. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verbs given in parentheses.

(i) நான் பல்கலெக்கழகத்துலே.............. (வேலெ பாரு)
(ii) மாணவங்க தமிழ்.............. (படி)
(iii) நாங்க தமிழ்மொழியெக்.............. (கற்பி)
(iv) அவங்க தமிழ்லே நல்லா.............. (எழுது)
(v) அவங்க தமிழ்லே நல்லாப்.............. (பேசு)
(vi) நாங்க ஒரு தேர்வு.............. (நடத்து)
(vii) அநேகமா எல்லாரும்.............. (பாஸ்பண்ணு)

k. Change the given nouns into the locative and add at the left to the verb in the sentences given below

(i) பல்கலைக்கழகம் : நான் வேலெ பார்க்குறேன்.
(ii) தேர்வு : எல்லாரும் பாஸ்பண்ணுறாங்க.
(iii) கடைசி : நாங்க தேர்வு நடத்துறோம்.
(iv) கல்லூரி : அவரு படிக்குறாரு.

l. Give the plural form of these words.

(i) மாணவன் = ...
(ii) வெளிநாட்டுக்காரன் = ...
(iii) மாணவி = ...
(iv) ஆசிரியன் = ...

m. Frame questions for the answers given below following the model.

Model : அவரு டிப்ளோமா படிக்குறாரு.
அவரு என்ன படிக்குறாரு ?

(i) வெளிநாட்டுக்காரங்க தமிழ் படிக்குறாங்க.
(ii) அவங்க தமிழ் கற்பிக்குறாங்க.

n. Answer these questions.

(i) நீங்க எங்கே வேலெ பார்க்குறீங்க ?
(ii) நீங்க என்னவா வேலெ பார்க்குறீங்க ?
(iii) உங்ககூட வெளிநாட்டுக்காரங்க தமிழ் படிக்குறாங்களா ?
(iv) நீங்களும் தமிழ் டிப்ளோமா படிக்குறீங்களா ?
(v) உங்களுக்கு யாரு தமிழ் மொழியெக் கற்பிக்குறாங்க ?
(vi) நீங்க எப்படித் தமிழ்லே எழுதுறீங்க ?
(vii) உங்க வகுப்புலே தேர்வு நடத்துறாங்களா ?

VOCABULARY

பல்கலைக்கழகம்	'university'	வேலெபாரு	'work'
தவிர	'except/other than'	வெளிநாட்டுக்காரங்க	'foreigners'
செலரு	'some people'	டிப்ளோமா	'diploma'
படி	'learn'	கற்பி	'teach'
கடைசியிலே	'at the end'	தேர்வு	'examination, test'
நடத்து	'conduct'	அநேகமா	'almost'
பாஸ்பண்ணு	'pass (the examination)'		

GRAMMAR

13.51.151. In addition to denote tense, the present and future tense markers are used to express habit too. The finite verbs are called 'habitual' verbs. They are dealt with in detail in lessons 51 and 52.

In this lesson, we are primarily concerned with the use of present tense marker to express habit. Example :

13. 51. 151. மாணவங்க தமிழ் படிக்குறாங்க.
நாங்க அவங்களுக்குக் கற்பிக்குறோம்.
அவங்க தமிழ் நல்லாப் பேசுறாங்க.
நாங்க கடெசியிலே தேர்வு நடத்துறோம்.

Sandhi : மதுரெ + பல்கலெக்கழகம் → மதுரெப் பல்கலெக்கழகம்
தமிழ் + பேராசிரியரு → தமிழ்ப் பேராசிரியரு
வருஷை + கடெசி → வருஷைக்கடெசி
அந்த + தேர்வு → அந்தத் தேர்வு (Refer S.4 in 1.2)

தெரியும் + ங்க → தெரியுங்க (Refer S.1 in 1.1)

UNIT 13

LESSON 52

MORNING DUTIES

DIALOGUE

சுரேஷ் : நீங்க அதிகாலையிலே வாக்கிங் போவீங்களா ?	Do you go for walking early in the morning ?
சுந்தரம் : ஆமா... நான் காலை-யிலே அஞ்சரை மணிக்கு எழுந்திருப்பேன். அப்புறம் பல் வெளக்குவேன். கொஞ்ச நேரம் நடப்பேன். ஆறரை மணிக்கு எங்க வீட்டுப் பால்காரன் வருவான். உடனே கமலா எனக்குக் காபி தருவா. அதெக் குடிப்–	Yes... I get up at five thirty in the morning. Then, (I) brush (my) teeth. (I) walk for a while. Our milkman comes at six thirty. Kamala gives me coffee immediately. (I) drink that. The paper boy comes at seven o' clock. (I) read newspaper for a while. (I) take bath at nine o' clock. At nine thirty, (I) eat tiffin... At nine forty five (I) start for college.

பேன். ஏழு மணிக்கு பேப்பர்க்காரன் வருவான். கொஞ்சநேரம் பேப்பர் படிப்பேன். ஒம்பது மணிக்குக் குளிப்பேன். ஒம்பதரெ மணிக்கு டிபன் சாப்பிடுவேன்.... ஒம்பதே முக்காலுக்குக் கல்லூரிக்குப் புறப்படுவேன்.

சுரேஷ் : நீங்க என்ன பேப்பர் படிக்குறீங்க ?	What news paper do you read ?
சுந்தரம் : 'இந்து' பேப்பர் படிக்குறேன்.	(I) read 'The Hindu'

DRILLS

a. Variation drill

13. 52. 152. நான் காலெயிலே எழுந்திருப்பேன்.
பால்காரன் ஆறரெமணிக்கு வருவான்.
கமலா எனக்குக் காபி தருவா.
நான் ஒம்பது மணிக்குக் குளிப்பேன்.

b. Build up drill

(i) நான் காலெயிலே எழுந்திருப்பேன்.	நான் காலெயிலே எழுந்திருப்பேன்.
எழுந்திருப்பேன்	எழுந்திருப்பேன்
காலெயிலே	காலெயிலே எழுந்திருப்பேன்
நான்	நான் காலெயிலே எழுந்திருப்பேன்.
(ii) பால்காரன் ஆறரெமணிக்கு வருவான்.	பால்காரன் ஆறரெமணிக்கு வருவான்.
வருவான்	வருவான்
ஆறரெமணிக்கு	ஆறரெமணிக்கு வருவான்
பால்காரன்	பால்காரன் ஆறரெமணிக்கு வருவான்.
(iii) கமலா எனக்குக் காபி தருவா.	கமலா எனக்குக் காபி தருவா.
தருவா	தருவா
காபி	காபி தருவா
எனக்கு	எனக்குக் காபி தருவா
கமலா	கமலா எனக்குக் காபி தருவா.

(iv) நான் ஒம்பதுமணிக்குக் குளிப்பேன்.	நான் ஒம்பதுமணிக்குக் குளிப்பேன்
குளிப்பேன்	குளிப்பேன்
ஒம்பதுமணிக்கு	ஒம்பதும பேன்
நான்	நான் ஒம்பது குளிப்பேன்.

c. Expansion drill

(i) நான் எழுந்திருப்பேன்.	நான் எழுந்திருப்பேன்.
அஞ்சரெ மணிக்கு எழுந்திருப்பேன்.	நான் அஞ்சரெமணிக்கு எழுந்திருப்பேன்.
காலெயிலே எழுந்திருப்பேன்.	நான் காலெயிலே அஞ்சரெ மணிக்கு எழுந்திருப்பேன்.
(ii) கமலா தருவா.	கமலா தருவா.
காபி தருவா	கமலா காபி தருவா.
எனக்குத் தருவா	கமலா எனக்குக் காபி தருவா.
உடனே தருவா	கமலா உடனே எனக்குக் காபி தருவா.
(iii) நான் படிப்பேன்.	நான் படிப்பேன்.
பேப்பர் படிப்பேன்	நான் பேப்பர் படிப்பேன்.
கொஞ்சநேரம் படிப்பேன்	நான் கொஞ்சநேரம் பேப்பர் படிப்பேன்.
காலெயிலே படிப்பேன்.	நான் காலெயிலே கொஞ்சநேரம் பேப்பர் படிப்பேன்.
(iv) நான் புறப்படுவேன்.	நான் புறப்படுவேன்.
கல்லூரிக்குப் புறப்படுவேன்	நான் கல்லூரிக்குப் புறப்படுவேன்.
ஒம்பதேமுக்காலுக்குப் புறப்படுவேன்	நான் ஒம்பதேமுக்காலுக்குக் கல்லூரிக்குப் புறப்படுவேன்.
காலெயிலே புறப்படுவேன்	நான் காலெயிலே ஒம்பதேமுக்காலுக்குக் கல்லூரிக்குப் புறப்படுவேன்.

d. Question-Answer drill

(i) Q : நீங்க அதிகாலெயிலே வாக்கிங் போவீங்களா, ஸார்?
A : ஆமா.

(ii) Q : நீங்க என்ன பேப்பர் படிக்குறீங்க?
A : 'இந்து' பேப்பர் படிக்குறேன்.

e. Substitution drill

(i) நான் காலையிலே எழுந்திருப்பேன்.	நான் காலையிலே எழுந்திருப்பேன்.
Substitute and conjugate the verb suitably.	
நட	நான் காலையிலே நடப்பேன்.
படி	நான் காலையிலே படிப்பேன்.
குளி	நான் காலையிலே குளிப்பேன்.
கற்பி	நான் காலையிலே கற்பிப்பேன்.
வேலைபாரு	நான் காலையிலே வேலைபார்ப்பேன்.
(ii) நான் புறப்படுவேன்.	நான் புறப்படுவேன்.
Substitute and conjugate the verb suitably.	
சாப்பிடு	நான் சாப்பிடுவேன்.
வா	நான் வருவேன்.
தா	நான் தருவேன்.
போ	நான் போவேன்.
(iii) நான் எழுந்திருப்பேன்.	நான் எழுந்திருப்பேன்.
Substitute and conjugate the verb accordingly.	
நாங்க	நாங்க எழுந்திருப்போம்.
நாம	நாம எழுந்திருப்போம்.
நீ	நீ எழுந்திருப்பே.
நீங்க	நீங்க எழுந்திருப்பீங்க.
அவன்	அவன் எழுந்திருப்பான்.
அவ	அவ எழுந்திருப்பா.
அவரு	அவரு எழுந்திருப்பாரு.
அவங்க	அவங்க எழுந்திருப்பாங்க.
(iv) நீங்க அதிகாலையிலே போவீங்களா ?	நீங்க அதிகாலையிலே போவீங்களா ?
Substitute	
காலையிலே	நீங்க காலையிலே போவீங்களா ?
மத்தியானம்	நீங்க மத்தியானம் போவீங்களா ?
மாலையிலே	நீங்க மாலையிலே போவீங்களா ?
ராத்திரி	நீங்க ராத்திரி போவீங்களா ?

f. Transformation drill

(i) நான் காலையிலே எழுந்திருப்பேன்.	நான் காலையிலே எழுந்திருக்கிறேன்.

நான் கொஞ்சநேரம் நடப்பேன்.	நான் கொஞ்ச நேரம் நடக்குறேன்.
நான் பேப்பர் படிப்பேன்.	நான் பேப்பர் படிக்குறேன்.
நான் ஒம்பது மணிக்குக் குளிப்பேன்.	நான் ஒம்பது மணிக்குக் குளிக்குறேன்.
நான் அவுங்களுக்குக் கற்பிப்பேன்.	நான் அவுங்களுக்குக் கற்பிக்குறேன்.
(ii) பால்காரன் ஆறரெமணிக்கு வருவான்.	பால்காரன் ஆறரெமணிக்கு வருன்.
கமலா காபி தருவா.	கமலா காபி தரு.
நான் கல்லூரிக்குப் புறப்படுவேன்.	நான் கல்லூரிக்குப் புறப்படுறேன்.
அப்புறம் பல் வெளக்குவேன்.	அப்புறம் பல் வெளக்குறேன்.
அவுரு காலெயிலே வாக்கிங் போவாரு.	அவுரு காலெயிலே வாக்கிங் போருரு.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான் காலெயிலே..............ப்பேன். (get up)
நான் காலெயிலே எழுந்திருப்பேன்.

(i) அப்புறம், பல் ....வேன். (brush)
(ii) கொஞ்சநேரம்..............ப்பேன். (walk)
(iii) ஒம்பதரெமணிக்கு..............சாப்பிடுவேன். (tiffin)

h. Change these sentences to the present.

(i) நான் காலெயிலே எழுந்திருப்பேன்.
(ii) நான் காலெயிலே பல் வெளக்குவேன்.
(iii) கமலா எனக்குக் காபி தருவா.
(iv) நான் ஒம்பது மணிக்குக் குளிப்பேன்.
(v) ஒம்பதரெ மணிக்கு டிபன் சாப்பிடுவேன்.

i. Change these sentences to the negative.

(i) நான் காலெயிலே எழுந்திருப்பேன்.
(ii) நான் பல் வெளக்குவேன்.
(iii) நான் நடப்பேன்.
(iv) ஆறரெமணிக்குப் பால்காரன் வருவான்.
(v) நான் ஒம்பதுமணிக்குக் குளிப்பேன்.
(vi) கமலா எனக்குக் காபி தருவா.

j. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verbs given in parentheses.

(i) நான் காலெயிலே...............(எழுந்திரு)
(ii) அப்புறம், பல் .... (வெளக்கு)
(iii) நான் கொஞ்சநேரம்..............(நட)
(iv) எங்க வீட்டுப் பால்காரன்............... (வா)
(v) ஒம்பது மணிக்குக்............... (குளி)
(vi) ஒம்பதேமுக்காலுக்குக் கல்லூரிக்குப்..............., (புறப்படு)

k. Change the given nouns into the dative and add at the left to the verb in the sentences given below.

(i) அஞ்சரெமணி : நான் எழுந்திருப்பேன்.
(ii) கல்லூரி : நான் ஒம்பதே முக்காலுக்குப் புறப்படுவேன்.
(iii) வீடு : பேப்பர்க்காரன் வருவான்.
(iv) நான் : கமலா தருவா.

l. Answer these questions.

(i) நீங்க அதிகாலெயிலே வாக்கிங் போவீங்களா ?
(ii) நீங்க காலெயிலே எத்தனெ மணிக்கு எழுந்திருப்பீங்க ?
(iii) எத்தனெமணிக்கு உங்க வீட்டுப் பால்காரன் வருவான் ?
(iv) காலெயிலே நீங்க காபி குடிப்பீங்களா ?
(v) நீங்க காலெயிலே என்ன பேப்பர் படிக்குறீங்க ?
(vi) நீங்க மாலெயிலே என்ன செய்வீங்க ?
(vii) ராத்திரி கொஞ்சநேரம் நடப்பீங்களா ?

VOCABULARY

வாக்கிங்	'walking'	எழுந்திரு	'get up'
பல்	'tooth'	வெளக்கு	'brush, as teeth'
பேப்பர்க்காரன்	'paper boy'	குளி	'take bath'

GRAMMAR

13.52.152. As it is remarked in the previous lesson, besides their use to denote future time the future tense markers -வ்-, -ப்-, -ப்ப்- and -ம் are used to express habit as well. Example :

13. 52. 152. நான் காலெயிலே எழுந்திருப்பேன்.
பால்காரன் ஆறரெமணிக்கு வருவான்.
நான் ஒம்பதுமணிக்குக் குளிப்பேன்.

Sandhi : எனக்கு + காபி — எனக்குக் காபி (தருவா).
ஒம்பது மணிக்கு + குளிப்பேன் — ஒம்பதுமணிக்குக் குளிப்பேன்.
கல்லூரிக்கு + புறப்படுவேன் — கல்லூரிக்குப் புறப்படுவேன்.
(Refer S. 18 in 2.14)

UNIT 14

LESSON 53

ARE ALL THE EXAMINATIONS OVER ?

DIALOGUE

மூர்த்தி : ஹலோ, சுரேஷ்! பரீட்செ யெல்லாம் முடிஞ்சுதா ?	Hallo, Suresh ! Are all the examinations over ?
சுரேஷ் : ஆமாங்க.	Yes, sir.
மூர்த்தி : நல்லா எழுதுனீங்களா ....? மொதல் ரேங்கு கெடைக்கலாம், இல்லையா ?	Did (you) write well ...? (you) may get first rank, mayn't you ?
சுரேஷ் : இல்லீங்க மொதல் ரேங்கு கெடைக்காது... நிச்சயமா மொதல் வகுப்பு கெடைக்கும்... நரசய்யாவுக்கு மொதல்	No, sir. (I) won't get first rank... Certainly, (I) will get first class... ... Narasaiah may get first rank. He wrote all the examinations very well.

ரேங்கு கெடெக்கலாம். அவரு எல்லாப் பரீட்-செயும் நல்லா எழு-தினரு	
மூர்த்தி : அவரும் சினிமாவுக்கு வருரா ?	Is he also coming for cinema ?
சுரேஷ் : ஒருவேளெ வரலாம். என்கிட்டெ அவரு ஒண்ணும் சொல்லலெ.	Perhaps he may come. He did not say anything to me.
மூர்த்தி : சரி, நாம கொஞ்சநேரம் காத்திருப்போம். அவரு வருரா, பார்க்கலாம்.	Alright, let us wait for sometime. Let (us) see whether he comes (for the movie).
சுரேஷ் : ஒரு வேளெ அவரு நேராத் தியேட்டருக்குப் போகலாம். நாமும் தியேட்டருக்குப் போக-லாமே ?	Sometimes, he may go to the theatre straight. (I think) we may also go to the theatre
மூர்த்தி : சரி, தியேட்டருக்கே போவோம்.	Alright, Let (us) go to the theatre.

DRILLS

a. Variation drill

14. 53. 153. நரசய்யாவுக்கு மொதல் ரேங்கு கெடெக்கலாம்.
நரசய்யா சினிமாவுக்கு வரலாம்.
அவரு நேராத் தியேட்டருக்குப் போகலாம்

b. Build up drill

(i) நரசய்யாவுக்கு மொதல் ரேங்கு கெடெக்கலாம்.	நரசய்யாவுக்கு மொதல் ரேங்கு கெடெக்கலாம்.
கெடெக்கலாம்	கெடெக்கலாம்
ரேங்கு	ரேங்கு கெடெக்கலாம்
மொதல்	மொதல் ரேங்கு கெடெக்கலாம்
நரசய்யாவுக்கு	நரசய்யாவுக்கு மொதல் ரேங்கு கெடெக்கலாம்.
(ii) நரசய்யா சினிமாவுக்கு வரலாம்.	நரசய்யா சினிமாவுக்கு வரலாம்.
வரலாம்	வரலாம்
சினிமாவுக்கு	சினிமாவுக்கு வரலாம்
நரசய்யா	நரசய்யா சினிமாவுக்கு வரலாம்.

(iii) அவரு நேராத் தியேட்-டருக்குப் போகலாம்.	அவரு நேராத் தியேட்டருக்குப் போகலாம்.
போகலாம்	போகலாம்
தியேட்டருக்கு	தியேட்டருக்குப் போகலாம்
நேரா	நேராத் தியேட்டருக்குப் போகலாம்
அவரு	அவரு நேராத் தியேட்டருக்குப் போகலாம்.

c. Expansion drill

(i) நரசய்யாவுக்கு கெடெக்-கலாம்.	நரசய்யாவுக்குக் கெடெக்கலாம்.
மொதல்ரேங்கு கெடெக்க-லாம்	நரசய்யாவுக்கு மொதல் ரேங்கு கெடெக்கலாம்.
நிச்சயமாக் கெடெக்கலாம்	நரசய்யாவுக்கு நிச்சயமா மொதல் ரேங்கு கெடெக்கலாம்.
(ii) அவரு போகலாம்.	அவரு போகலாம்.
தியேட்டருக்குப் போகலாம்	அவரு தியேட்டருக்குப் போகலாம்.
நேராப் போகலாம்	அவரு நேராத் தியேட்டருக்குப் போகலாம்.
ஒருவேளெ போகலாம்	அவரு ஒருவேளெ நேராத் தியேட்டருக்குப் போகலாம்.
(iii) அவரும் வரலாம்.	அவரும் வரலாம்.
சினிமாவுக்கு வரலாம்	அவரும் சினிமாவுக்கு வரலாம்.
ஒருவேளெ வரலாம்	அவரும் ஒருவேளெ சினிமாவுக்கு வரலாம்.

d. Question-Answer drill

(i) Q : பரீட்செ எல்லாம் முடிஞ்சதா ?
A : ஆமாங்க.

(ii) Q : மொதல் ரேங்கு கெடெக்கலாம், இல்லெயா ?
A : இல்லெங்க. மொதல் ரேங்கு கெடெக்காது.

(iii) Q : அவரும் சினிமாவுக்கு வறாரா ?
A : ஒருவேளெ வரலாம்.

(iv) Q : நாமும் தியேட்டருக்கே போகலாமா ?
A : சரி, தியேட்டருக்கே போவோம்.

e. Substitution drill

(i) அவரு வரலாம்.	அவரு வரலாம்.
Substitute and change the verb suitably.	
போ	அவரு போகலாம்.
எழுது	அவரு எழுதலாம்.
சொல்லு	அவரு சொல்லலாம்.
தா	அவரு தரலாம்.
சாப்பிடு	அவரு சாப்பிடலாம்.
(ii) அவரு போகலாம்.	அவரு போகலாம்.
Substitute and change the verb suitably.	
நட	அவரு நடக்கலாம்.
காத்திரு	அவரு காத்திருக்கலாம்.
பாரு	அவரு பார்க்கலாம்.
கற்பி	அவரு கற்பிக்கலாம்.
குளி	அவரு குளிக்கலாம்.
வேலெபாரு	அவரு வேலெ பார்க்கலாம்.

f. Transformation drill

(i) அவரு வருவாரு.	அவரு வரலாம்.
அவரு எழுதுவாரு.	அவரு எழுதலாம்.
அவரு சொல்லுவாரு.	அவரு சொல்லலாம்.
அவரு காத்திருப்பாரு.	அவரு காத்திருக்கலாம்.
(ii) அவரு சொன்னாரு.	அவரு சொல்லலெ.
பரீட்செ முடிஞ்சது.	பரீட்செ முடியலெ.
அவரு வந்தாரு.	அவரு வரலெ.
அவரு போனாரு.	அவரு போகலெ.
அவரு காத்திருந்தாரு.	அவரு காத்திருக்கலெ.
அவரு பார்த்தாரு.	அவரு பார்க்கலெ.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : பரீட்செ எல்லாம்...............ஞ்சதா ? (be over)
பரீட்செ எல்லாம் முடிஞ்சதா ?

(i) நரசய்யாவுக்கு மொதல்...............கெடெக்கலாம். (rank)
(ii) நாம...............டக்குப் போகலாம். (theatre)

h. Fill in the blanks using the appropriate future subjunctive form of the verbs given in parentheses.

(i) எனக்கு மொதல் ரேங்கு............... (கெடெ)
(ii) அவரு ஒருவேளெ சினிமாவுக்கு............... (வா)
(iii) அவரு நேராத் தியேட்டருக்குப்............... (போ)
(iv) அவரு ஒருவேளெ சினிமா............... (பாரு)

i. Write the word represented by the formula.

Example : வரலாம்   வா + Fut. subjunctive

(i) படி + Fut. subjunctive : ....
(ii) எழுது + Fut. subjunctive : ....
(iii) கற்பி + Fut. subjunctive : ....
(iv) கல் + Fut. subjunctive : ....
(v) கொடு + Fut. subjunctive : ....
(vi) பாரு + Fut. subjunctive : ....
(vii) குடி + Fut. subjunctive : ....

j. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verbs given in parentheses.

(i) பரீட்செ எல்லாம்............... (முடி)
(ii) மொதல் ரேங்கு............... (கெடெ)
(iii) அவரு சினிமாவுக்கு............... (வா)
(iv) என்கிட்டெ அவரு............... (சொல்லு)
(v) நாம கொஞ்ச நேரம்............... (காத்திரு)
(vi) அவரு நேராத் தியேட்டருக்குப்............... (போ)

k. Change these sentences to the future subjunctive.

(i) அவரு பரீட்செ எழுதுவாரு.
(ii) நரசய்யா ஒருவேளெ சினிமாவுக்கு வருவாரு.
(iii) நரசய்யாவுக்கு மொதல் ரேங்கு கெடெக்கும்.
(iv) அவரு நேராத் தியேட்டருக்குப் போவாரு.

l. Change the given nouns into the dative and add at the left to the verb in the sentences given below.

(i) சினிமா : அவரும் வர்றாரா ?
(ii) நரசய்யா : மொதல் ரேங்கு கெடெக்கலாம்.
(iii) தியேட்டர் : அவரு நேராப் போகலாம்.
(iv) அவரு : ரேங்கு கெடெக்காது.

m. Change these sentences to the negative.

(i) பரீட்செ எல்லாம் முடிஞ்சது.
(ii) அவரு நல்லா எழுதுனாரு.

(iii) அவரு சொன்னாரு.
(iv) நாங்க காத்திருந்தோம்.
(v) அவரு நேராத் தியேட்டருக்குப் போனாரு.

II. Answer these questions.

(i) உங்க பரீட்செ எல்லாம் முடிஞ்சதா ?
(ii) உங்களுக்குத் தமிழ் டிப்ளமோவுலே மொதல் வகுப்புக் கெடெக்குமா ?
(iii) உங்களுக்குத் தமிழ் டிப்ளமோவுலே மொதல் வகுப்பு கெடெக்கலாம், இல்லெயா ?
(iv) உங்க நண்பரும் பரீட்செ எழுதுனாரா ?
(v) நீங்க நாளெக்கு ஒருவேளெ சினிமாவுக்குப் போகலாம், இல்லெயா ?
(vi) உங்க மனைவி என்ன படிக்கிறாங்க ?

VOCABULARY

பரீட்செ	'examination, test'	முடி	'be finished over'
ரேங்கு	'rank'	மொதல்வகுப்பு	'first class'
ஒருவேளெ	'sometimes, perhaps'	நேரா	'straight'
தியேட்டர்	'theatre'		

GRAMMAR

14.53.153. In Tamil, the future subjunctive is expressed by suffixing -லாம் to the infinitive form of a verb. Example :

14. 53. 153. நாசய்யாவுக்கு மொதல் ரேங்கு கெடெக்கலாம்.
நாசய்யா சினிமாவுக்கு வரலாம்.
அவரு நேராத் தியேட்டருக்குப் போகலாம்.

Note that these subjunctives are identical in form with the permissive imperatives (Refer 4.24.86). But they are functionally different. Mention may be made about the chief characteristics of the future subjunctive in comparison with the permissive imperatives to understand the functional difference between them.

First of all, a few verbs do not have the function of permissive imperatives. For example * *நான் அதிசயிக்கலாமா ?* 'May I surprise?' * *நான் தடுமாறலாமா ?* May I totter ?' etc., are ungrammatical sentences. Whereas, *நான் அதிசயிக்கலாம்* 'I may surprise', *நான் தடுமாறலாம்* 'I may totter' etc., are grammatical sentences. This shows that almost all the verbs can have the function of subjunctive unlike permissive imperatives.

Secondly, the future subjunctive may be immediately followed by its corresponding negative sentence. Example : *நரசய்யா வரலாம்; வராம இருக்கலாம்* 'Narasaiah may or may not come' (Refer 14.54.154). The permissive imperatives do not have corresponding negative form as mentioned above although the formation of affirmative is identical with the latter.

Sandhi : கொஞ்சம் + நேரம் → கொஞ்ச நேரம் (Refer S. 2 in 1.1)
நேரா + தியேட்டருக்கு → நேராத் தியேட்டருக்குப்
(போகலாம். Refer S. 21 in 3.20)

UNIT 14

LESSON 54

WHEN IS SUNDARAM COMING FROM MADRAS?

DIALOGUE

நரசய்யா : சுரேஷ், பேராசிரியரு சென்னையிலேயிருந்து எப்ப வருரு ?	Suresh, When is Professor (Sundaram) coming from Madras ?
சுரேஷ் : அநேகமா அடுத்தமாசம் இருபத்தி ஆறும் தேதி வரலாம் .... செலவேளை இருபத்தி ஆறும் தேதி வராமலும் இருக்கலாம்.	Most probably he may come on twentysixth of next month.... Sometimes he may not come on twenty-sixth also.
நரசய்யா : ஏன் அப்படிச் சொல்லுறீங்க ?	Why do (you) say so ?

சுரேஷ் : இருபத்தி ஏழாம் தேதி அவரோட சின்னம்மா பையனுக்குக் கலியாணம். அதனாலெ மாயவரத்துக்குப் போவாரு. மறுநாளு அங்கேயிருந்து புறப்படுவாரு.	His younger aunt's son's Wedding is on twentyseventh. So he will go to Mayuram. Next day he will leave Mayuram.
நரசய்யா : பொண்ணு யாரு ?	Who is the bride ?
சுரேஷ் : எனக்குத் தெரியாது .... இருபத்தி ஒம்பதாம் தேதி தானே கல்லூரி தெறக்குறாங்க ?	I do not know... (I think that) the college reopens on twentyninth ?
நரசய்யா : ஆமா.... ரயில்லே வருவாரா, பஸ்லே வருவாரா ?	Yes Will (he) come by train or bus ?
சுரேஷ் : அநேகமா பஸ்லே வரலாம்.	Most probably, (he) may come by bus.
நரசய்யா : இருபத்தி ஒம்பதாம் தேதி வகுப்பு எடுப்பாரா ?	Will he take (his) class on twenty-ninth ?
சுரேஷ் : ஒருவேளை எடுக்காம இருக்கலாம். ஏன்னா, அன்னைக்கு ஸ்டாஃப் மீட்டிங் இருக்கும் ... ஏன், நீங்க லீவுலே போறீங்களா ?	Sometimes he may not take (his class) because there will be a staff meeting on that day. Why, are you going on leave ?
நரசய்யா : இல்லெ, சும்மா கேட்டேன்.	No, (I) just asked.

DRILLS

a. Variation drill

14. 54. 154. அவரு பஸ்லே வரலாம்.
அவரு பஸ்லே வராம இருக்கலாம்.
அவரு வகுப்பு எடுக்கலாம்.
அவரு வகுப்பு எடுக்காம இருக்கலாம்.
அவருக்கு நேரம் இருக்கலாம்.
அவருக்கு நேரம் இல்லாம இருக்கலாம்.

b. Build up drill

(i) அவரு பஸ்லே வரலாம்.	அவரு பஸ்லே வரலாம்.
வரலாம்	வரலாம்
பஸ்லே	பஸ்லே வரலாம்
அவரு	அவரு பஸ்லே வரலாம்.
(ii) அவரு வகுப்பு எடுக்கலாம்.	அவரு வகுப்பு எடுக்கலாம்.
எடுக்கலாம்	எடுக்கலாம்
வகுப்பு	வகுப்பு எடுக்கலாம்
அவரு	அவரு வகுப்பு எடுக்கலாம்.
(iii) அவரு வகுப்பு எடுக்காம இருக்கலாம்.	அவரு வகுப்பு எடுக்காம இருக்கலாம்.
இருக்கலாம்	இருக்கலாம்
எடுக்காம	எடுக்காம இருக்கலாம்
வகுப்பு	வகுப்பு எடுக்காம இருக்கலாம்
அவரு	அவரு வகுப்பு எடுக்காம இருக்கலாம்.
(iv) அவரு வராமலும் இருக்கலாம்.	அவரு வராமலும் இருக்கலாம்.
இருக்கலாம்	இருக்கலாம்
வராமலும்	வராமலும் இருக்கலாம்
அவரு	அவரு வராமலும் இருக்கலாம்.

c. Expansion drill

(i) அவரு வரலாம்.	அவரு வரலாம்.
பஸ்லே வரலாம்	அவரு பஸ்லே வரலாம்.
ஒருவேளை வரலாம்	அவரு ஒருவேளை பஸ்லே வரலாம்.
(ii) அவரு வரலாம்.	அவரு வரலாம்.
ரயில்லே வரலாம்	அவரு ரயில்லே வரலாம்.
அநேகமா வரலாம்	அவரு அநேகமா ரயில்லே வரலாம்.
(iii) அவரு வராமலும் இருக்கலாம்.	அவரு வராமலும் இருக்கலாம்.
இருபத்திஆறும் தேதி வராமலும் இருக்கலாம்	அவரு இருபத்திஆறும் தேதி வராமலும் இருக்கலாம்.
ஒருவேளை வராமலும் இருக்கலாம்	அவரு ஒருவேளை இருபத்திஆறும் தேதி வராமலும் இருக்கலாம்.

d. Question-Answer drill

(i) Q : பேராசிரியரு சென்னையிலேயிருந்து எப்ப வாறாரு ?
A : அநேகமா அடுத்த மாசம் இருபத்திஆறாம் தேதி வரலாம்.

(ii) Q : இருபத்தி ஒம்பதாம் தேதி தானே கல்லூரி தெறக்கு-றாங்க ?
A : ஆமா.

(iii) Q : ரயில்லே வருவாரா, பஸ்லே வருவாரா ?
A : அநேகமா பஸ்லே வரலாம்.

(iv) Q : இருபத்திஒம்பதாம் தேதி வகுப்பு எடுப்பாரா ?
A : ஒருவேளை அவரு வகுப்பு எடுக்காம இருக்கலாம்.

(v) Q : நீங்க லீவுலே போறீங்களா ?
A : இல்லே, சும்மா கேட்டேன்.

e. Substitution drill

(i) அவரு அடுத்தமாசம் வரலாம்.	அவரு அடுத்தமாசம் வரலாம்.
Substitute	
நாளைக்கு	அவரு நாளைக்கு வரலாம்.
அண்ணைக்கு	அவரு அண்ணைக்கு வரலாம்.
காலையிலே	அவரு காலையிலே வரலாம்.
ராத்திரி	அவரு ராத்திரி வரலாம்.
(ii) அவரு அநேகமா அடுத்த-மாசம் வரலாம்.	அவரு அநேகமா அடுத்தமாசம் வரலாம்.
Substitute	
ஒருவேளை	அவரு ஒரு வேளை அடுத்தமாசம் வரலாம்.
செலவேளை	அவரு செலவேளை அடுத்தமாசம் வரலாம்.
நிச்சயமா	அவரு நிச்சயமா அடுத்தமாசம் வரலாம்.
(iii) அவரு வரலாம்.	அவரு வரலாம்.
Substitute and change the verb suitably.	
போ	அவரு போகலாம்.
எடு	அவரு எடுக்கலாம்.
தெற	அவரு தெறக்கலாம்.
கேளு	அவரு கேக்கலாம்.

(iv) நான் சும்மா கேட்டேன். Substitute and conjugate the verb accordingly.	நான் சும்மா கேட்டேன்.
நாங்க	நாங்க சும்மா கேட்டோம்.
நாம	நாம சும்மா கேட்டோம்.
நீ	நீ சும்மா கேட்டே.
நீங்க	நீங்க சும்மா கேட்டீங்க.
இவன்	இவன் சும்மா கேட்டான்.
இவ	இவ சும்மா கேட்டா.
இவரு	இவரு சும்மா கேட்டாரு.
இவங்க	இவங்க சும்மா கேட்டாங்க.
இது	இது சும்மா கேட்டது.

f. Transformation drill

(i) அவரு செலவேளெ வரலாம்.	அவரு செலவேளெ வராம இருக்கலாம்.
அவரு வகுப்பு எடுக்கலாம்.	அவரு வகுப்பு எடுக்காம இருக்கலாம்.
அவரு தமிழ் படிக்கலாம்.	அவரு தமிழ் படிக்காம இருக்கலாம்.
அவரு கடன் வாங்கலாம்.	அவரு கடன் வாங்காம இருக்கலாம்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இருபத்திஏழாம் தேதி..............+ உக்குக் கலியாணம். (son)

இருபத்திஏழாம் தேதி பையனுக்குக் கலியாணம்.

(i) இருபத்திஏழாம் தேதி..............பையனுக்குக் கலியாணம். (mother's younger sister)

(ii) இருபத்திஏழாம் தேதி.............. (marriage)

(iii) ....யாரு ? (bride)

h. Fill in the blanks using the appropriate future subjunctive form of the verbs given in parentheses.

(i) அவரு அநேகமா பஸ்லே.............. (வா)

(ii) இருபத்திஒம்பதாம் தேதி கல்லூரி.............. (தெற)

(iii) அவரு ஒருவேளெ.............. (சொல்லு)

(iv) அவரு வகுப்பு.............. (எடு)

(v) அன்னைக்கு நேரம்.............. (இரு)

Fill in the blanks using the appropriate negative future subjunctive form of the verb given in parentheses.

(i) அவருக்கு அன்னைக்கு நேரம்............... (இரு)
(ii) அவரு வகுப்பு............... (எடு)
(iii) அவரு ஒருவேளெ............... (சொல்லு)
(iv) இருபத்திஒம்பதாம் தேதி கல்லூரி............... (தெற)
(v) அவரு அநேகமா பஸ்லே............... (வா)

j. Write the word represented by the formula.

Example : **வரலாம்** வா + Fut. subjunctive.

(i) தெற + Fut. subjunctive : ....
(ii) எடு + Fut. subjunctive : ....
(iii) இரு + Fut. subjunctive : ....
(iv) சொல்லு + Fut. subjunctive : ....
(v) போ + Fut. subjunctive : ....
(vi) கேளு + Fut. subjunctive : ....

k. Fill in the blanks using the appropriate conjugated forms (past) of the verbs given in parentheses.

(i) அவங்க இருபத்திஒம்பதாம் தேதி............... (தெற)
(ii) அவரு வகுப்பு............... (எடு)
(iii) அவரு பஸ்லே............... (வா)
(iv) நான் சும்மா............... (கேளு)

l. Answer these questions.

(i) இந்த வருஷம் எத்தனாம் தேதி உங்க பள்ளிக்கூடம் தெறந்தாங்க ?
(ii) நீங்க மைசூருக்கு ரயில்லே வந்தீங்களா ? பஸ்லே வந்தீங்களா ?
(iii) நாளைக்கு உங்க ஆசிரியரு வகுப்பு எடுப்பாரா ?
(iv) நீங்க எத்தனாம் வகுப்பு மாணவங்களுக்குக் கற்பிக்குறீங்க ?
(v) இன்னைக்கு உங்க ஆசிரியரு வகுப்பு எடுக்காம இருக்கலாம், இல்லையா ?
(vi) நீங்க அடுத்த மாசம் லீவுலே போறீங்களா ?
(vii) நேத்து உங்க ஆசிரியருகிட்டெக் கேள்வி கேட்டீங்களா ?

VOCABULARY

அநேகமா	'probably'	செலவேளெ	'sometimes'
சின்னம்மா	'mother's younger sister, aunt'	பையன்	'son'
கலியாணம்	'marriage'	மறுநாளு	'next day'
பொண்ணு	'bride'	ஸ்டாஃப்	'staff'
மீட்டிங்	'meeting'	லீவு	'leave'
சும்மா	'simply, just'		

GRAMMAR

14.54.154. The negative future subjunctive is formed by adding the negative marker -ஆம to the verb stems and together they are followed by the finite verb இருக்கலாம். Example :

14. 54. 154. அவரு பஸ்லே வராம இருக்கலாம்.
அவருக்கு நேரம் இல்லாம இருக்கலாம்.

The suffix -ஆம is realized as -ஆமல் when it is followed by any suffix beginning in a vowel.

எடுக்காம + உம் → எடுக்காமலும்
வராம + உம் → வராமலும்
இல்லாம + உம் → இல்லாமலும்

See the following examples.

14. 54. 154. அவரு வகுப்பு எடுக்காமலும் இருக்கலாம்.
அவருக்கு நேரம் இல்லாமலும் இருக்கலாம்.

Sandhi : போறீங்க + ஆ → போறீங்களா (Refet S. 19 in 2.14)

UNIT 15

LESSON 55

I WANT TO LEARN TAMIL

DIALOGUE

பல்தேவராஜ் : வணக்கங்க. என் பேரு பல்தேவராஜ் .... நான் ராஜஸ்தான்லே-யிருந்து வரேன். நான் தமிழ் படிக்கணும்....அட்மிஷனுக்காக யாரெப் பார்க்கணும் ?	Vanakkam sir. My name is Baldevraj... I am coming from Rajasthan. I want to learn Tamil....Whom should I meet for admission ?
குமாஸ்தா : மொதலாவது மொதல்வரெச் சந்திக்கணும். அவரோடெ அறெ தெரியுமா உங்களுக்கு ?	First of all (you) must meet the Principal. Do you know his room ?

பல்தேவராஜ் : தெரியாதுங்க .... எனக்கு அட்மிஷன் லகுவா கெடெக்குங்களா?	(I) do not know, sir... Will I get admission easily ?
குமாஸ்தா : அட்மிஷன் கெடெக்கும். ஆனா, நீங்க கடினமா உழெக்கணும். அப்படன்னுத்தான் ஒரு புது மொழியெ நல்லா வாசிக்க முடியும் ; எழுத முடியும்.	(You) will get admission. But, youmust work hard. Then only you can read and write a new language well.
பல்தேவராஜ் : எத்தனெ மணி நேரம் மாணவங்க வகுப்புலே இருக்கணும் ?	For howmany hours the students have to remain in the classroom ?
குமாஸ்தா : சுமார் அஞ்சரெ மணி நேரம் இருக்கணும் .... நெறெய வீட்டுப் பாடம் கொடுப்போம். அதெயெல்லாம் எழுதணும். மறுநாளு வகுப்புக்குக் கொண்டு வரணும் .... இன்னொரு முக்கியமான விஷயம். எல்லா மாணவங்களும் ஹாஸ்டல்லேதான் தங்கணும். ஹாஸ்டல் மெஸ்லே தான் சாப்பிடணும். நீங்க மொதல்வரெப் பாருங்க .... அவரு எல்லாத்தெயும் சொல்லுவாரு. அதுதான் அவரோடெ அறெ.	They have to remain in the classroom for about five and a half hours... (We) will give a lot of homework (You) must write all of them. Next day (you) must bring (them) to the classroom. Another important matter is that all the students must stay in the hostel (and) eat in the hostel mess. You go and meet the Principal. He will tell you about everything. That is his room.
பல்தேவராஜ் : சரிங்க .... ரொம்ப நன்றி.	Alright sir...Thank (you) very much.

DRILLS

1. Variation drill

15. 55. 155. நான் தமிழ் படிக்கணும்.
நான் யாரெப் பார்க்கணும் ?
நீங்க மொதல்வரெச் சந்திக்கணும்.
நான் வகுப்புக்கு வரணுமா ?

15\. 55\. 156. அப்படின்னுத்தான் ஒரு புதுமொழியெ நல்லா வாசிக்க முடியும்.
அப்படின்னுத்தான் ஒரு புதுமொழியெ நல்லா எழுத முடியும்.

b Build up drill

(i) நான் தமிழ் படிக்கணும்.	நான் தமிழ் படிக்கணும்.
படிக்கணும்	படிக்கணும்
தமிழ்	தமிழ் படிக்கணும்
நான்	நான் தமிழ் படிக்கணும்.
(ii) நீங்க மொதல்வரெச் சந்திக்கணும்.	நீங்க மொதல்வரெச் சந்திக்கணும்.
சந்திக்கணும்	சந்திக்கணும்
மொதல்வரெ	மொதல்வரெச் சந்திக்கணும்
நீங்க	நீங்க மொதல்வரெச் சந்திக்கணும்.
(iii) நான் யாரெப் பார்க்கணும் ?	நான் யாரெப் பார்க்கணும் ?
யாரெப் பார்க்கணும் ?	யாரெப் பார்க்கணும் ?
நான்	நான் யாரெப் பார்க்கணும் ?
(iv) நான் வகுப்புக்கு வரணுமா ?	நான் வகுப்புக்கு வரணுமா ?
வரணுமா ?	வரணுமா ?
வகுப்புக்கு	வகுப்புக்கு வரணுமா ?
நான்	நான் வகுப்புக்கு வரணுமா ?

c. Expansion drill

(i) நீங்க சந்திக்கணும்.	நீங்க சந்திக்கணும்.
மொதல்வரெச் சந்திக்கணும்	நீங்க மொதல்வரெச் சந்திக்கணும்.
மொதலாவது சந்திக்கணும்	நீங்க மொதலாவது மொதல்வரெச் சந்திக்கணும்.
(ii) நீங்க தங்கணும்.	நீங்க தங்கணும்.
ஹாஸ்டல்லே தங்கணும்	நீங்க ஹாஸ்டல்லே தங்கணும்.
(iii) நீங்க கொண்டு வரணும்.	நீங்க கொண்டு வரணும்.
வகுப்புக்குக் கொண்டு வரணும்	நீங்க வகுப்புக்குக் கொண்டு வரணும்.
மறுநாளு கொண்டு வரணும்	நீங்க மறுநாளு வகுப்புக்குக் கொண்டு வரணும்.
வீட்டுப்பாடத்தெக் கொண்டு வரணும்	நீங்க வீட்டுப்பாடத்தெ மறுநாளு வகுப்புக்குக் கொண்டு வரணும்.
(iv) நீங்க சாப்பிடணும்.	நீங்க சாப்பிடணும்.
ஹாஸ்டல் மெஸ்லே சாப்பிடணும்	நீங்க ஹாஸ்டல் மெஸ்லே சாப்பிடணும்.

d. Question-Answer drill

(i) Q : நான் தமிழ் படிக்கணும்....அட்மிஷனுக்காக யாரெப் பார்க்கணும் ?

A : மொதலாவது மொதல்வரெச் சந்திக்கணும்.

(ii) Q : அவரோடெ அறெ தெரியுமா ?

A : தெரியாதுங்க.

(iii) Q : எனக்கு அட்மிஷன் லகுவாக் கெடெக்குங்களா ?

A : அட்மிஷன் கெடெக்கும். ஆனா, நீங்க கடினமா உழெக்கணும்.

(iv) Q : எத்தனெ மணி நேரம் மாணவங்க வகுப்புலே இருக்கணும் ?

A : சுமார் அஞ்சரெ மணி நேரம் இருக்கணும்.

e. Substitution drill

(i) நான் பார்க்கணும்.	நான் பார்க்கணும்.
Substitute and change the verb accordingly.	
சந்தி	நான் சந்திக்கணும்.
உழெ	நான் உழெக்கணும்.
வாசி	நான் வாசிக்கணும்.
இரு	நான் இருக்கணும்.
கொடு	நான் கொடுக்கணும்.
(ii) நீங்க தங்கணும்.	நீங்க தங்கணும்.
Substitute and change the verb accordingly.	
கொண்டுவா	நீங்க கொண்டுவரணும்.
வா	நீங்க வரணும்.
சாப்பிடு	நீங்க சாப்பிடணும்.
சொல்லு	நீங்க சொல்லணும்.
எழுது	நீங்க எழுதணும்.
(iii) நீங்க வாசிக்கமுடியும்.	நீங்க வாசிக்க முடியும்.
Substitute and change the verb accordingly.	
சந்தி	நீங்க சந்திக்க முடியும்.
உழெ	நீங்க உழெக்க முடியும்.
பாரு	நீங்க பார்க்க முடியும்.
இரு	நீங்க இருக்க முடியும்.
கொடு	நீங்க கொடுக்க முடியும்.

(iv) நீங்க எழுத முடியும்.	நீங்க எழுத முடியும்.
Substitute and change the verb accordingly.	
தங்கு	நீங்க தங்கமுடியும்.
கொண்டுவா	நீங்க கொண்டுவரமுடியும்.
வா	நீங்க வரமுடியும்.
சாப்பிடு	நீங்க சாப்பிடமுடியும்.
சொல்லு	நீங்க சொல்லமுடியும்.
(v) நான் மொதல்வரெச் சந்திக்கணும்.	நான் மொதல்வரெச் சந்திக்கணும்.
Substitute and change the noun accordingly	
பேராசிரியரு	நான் பேராசிரியரெச் சந்திக்கணும்.
ஆசிரியரு	நான் ஆசிரியரெச் சந்திக்கணும்.
ஆசிரியெ	நான் ஆசிரியெயெச் சந்திக்கணும்.
மாணவரு	நான் மாணவரெச் சந்திக்கணும்.
மாணவி	நான் மாணவியெச் சந்திக்கணும்.

f. Transformation drill

(i) நீங்க மொதல்வரெப் பார்க்கணும்.	நான் யாரெப் பார்க்கணும்?
நீங்க பேராசிரியரெப் பார்க்கணும்.	நான் யாரெப் பார்க்கணும்?
நீங்க ஆசிரியரெச் சந்திக்கணும்.	நான் யாரெச் சந்திக்கணும்?
நீங்க மாணவரெச் சந்திக்கணும்.	நான் யாரெச் சந்திக்கணும்?

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நீங்க..............+எச் சந்திக்கணும். (principal)
நீங்க மொதல்வரெச் சந்திக்கணும்.

(i) எனக்கு..............+ஆக் கெடெக்குங்களா ? (easiness)
(ii) நீங்க..............உழெக்கணும். (hard)
(iii) நீங்க கடினமா..............க்கணும். (work)
(iv) இன்னொரு முக்கியமான.............. (matter)
(v) ....முக்கியமான விஷயம். (another)
(vi) இன்னொரு..............விஷயம். (important)
(vii) ....வகுப்புக்குக் கொண்டு வரணும். (next day)

h. Include the infinitive form of the verb given in parentheses against each of the sentences as shown in the example

Example : நான் தமிழ்..............ணும் ? (படி)
நான் தமிழ் படிக்கணும்.

(i) நான் யாரெப்..............ணும் ? (பாரு)
(ii) நான் மொதல்வரெச..............ணும். (சந்தி)
(iii) நீங்க கடிணமா..............ணும். (உடெ)
(iv) மாணவங்க வகுப்புலே .... ணும். (எழுது)
(v) அதெயெல்லாம்..............ணும். (எழுது)
(vi) மெஸ்லே..............ணும். (சாப்பிடு)

i. Write the word represented by the formula.

Example : படிக்க படி + Infinitive

(i) தங்கு + Infinitive : ....
(ii) சொல்லு + Infinitive : ....
(iii) சாப்பிடு + Infinitive : ....
(iv) கொண்டுவா + Infinitive : ....
(v) எழுது + Infinitive : ....
(vi) இரு + Infinitive : ....
(vii) உடெ + Infinitive : ....
(viii) சந்தி + Infinitive : ....
(ix) பாரு + Infinitive : ....

j. Fill in the blanks using the appropriate obligative verbal forms of the verb given in parentheses.

(i) நான் தமிழ்............ (படி)
(ii) நான் யாரெப் .... (பாரு)
(iii) மொதலாவது மொதல்வரெச்............ (சந்தி)
(iv) அஞ்சரெ மணி நேரம்............ (இரு)
(v) அதெயெல்லாம்............ (எழுது)

k. Change the given nouns into the objective and add at the left to the verb in the sentences given below.

(i) மொதல்வரு : நீங்க சந்திக்கணும்.
(ii) யாரு : நான் பார்க்கணும்.
(iii) புதுமொழி : நீங்க எழுத முடியும்.
(iv) எல்லாம் : அவரு சொல்லுவாரு.

l. Change these sentences to the future.

(i) அவரு எல்லாத்தெயும் சொல்லுறாரு.
(ii) நெறெய வீட்டுப்பாடம் கொடுக்குறோம்.

(iii) மாணவங்க நெறெய வீட்டுப்பாடம் எழுதுறாங்க.
(iv) சுமார் அஞ்சரெ மணி நேரம் வகுப்புலே இருக்குறாங்க.

m. Frame questions for the answers given below following the model.

Model : நீங்க மொதல்வரெப் பார்க்கணும்.
நான் யாரெப் பார்க்கணும் ?

(i) நீங்க பேராசிரியரெப் பார்க்கணும்.
(ii) நீங்க ஆசிரியரெச் சந்திக்கணும்.
(iii) நீங்க மாணவரெச் சந்திக்கணும்.

n. Make up ten sentences in the pattern.

Subject + Obligative verb.
Model : நான் + படிக்கணும்.

o. Answer these questions.

(i) நீங்க எங்கேயிருந்து வறீங்க ?
(ii) உங்களுக்குத் தமிழ் டிப்ளமோ படிக்கணுமா ?
(iii) நீங்க இந்த இன்ஸ்டிடியூட்டுலே மொதலாவது யாரெச் சந்திச்சீங்க ?
(iv) உங்களுக்கு உங்க ஆசிரியரோடெ வீடு தெரியுமா ?
(v) நீங்க கடினமா உழெக்குறீங்களா ?
(vi) நீங்க எத்தனெ மணி நேரம் வகுப்புலே இருக்கணும் ?
(vii) நீங்க தினந்தோறும் வீட்டுப்பாடம் எழுதணுமா ?
(viii) நீங்க ஹாஸ்டல்லேதான் தங்கணுமா ?

VOCABULARY

அட்மிஷன்	'admission'	மொதல்வரு	'principal'
லேசுவா	'easily'	கடினமா	'hard'
உழெ	'work (hard)'	அப்படன்னுத்தான்	'then only'
இன்னொரு	'another'	முக்கியமான	'important'
விஷயம்	'matter'	தங்கு	'stay'

GRAMMAR

15.55.155. The defective verbs like வேணும்/வேண்டாம், பிடிக்கும்/பிடிக்காது, தெரியும்/தெரியாது etc., can be added to the infinitive form of another verb as auxiliary verbs. This unit in six lessons deals with the various uses of this kind of verbal composition in detail.

-ணும் is a truncated form of the verb வேணும். It is added to the infinitive to denote 'obligation' or 'strong wish' or 'command'. These verbs are at times called 'obligative verbs'. Example :

15. 55. 155. நான் தமிழ்ப் படிக்கணும்.
நான் வகுப்புக்கு வரணுமா ?
நான் யாரெப் பார்க்கணும் ?

It is important to note that the basic difference between the defective verb வேணும் and the auxiliary verb -ணும் is that the subject is always dative in the former (Refer 3.19.70) and nominative in the latter.

15.55.156. அப்படீன்னுத்தான் means 'if it is so'. See the use of this form in the following examples.

15. 55. 156. அப்படீன்னுத்தான் ஒரு புதுமொழியெ நல்லா
வாசிக்க முடியும்.
அப்படீன்னுத்தான் ஒரு புதுமொழியெ நல்லா
எழுத முடியும்.

Sandhi 27. Honorific marker -ங்க is realised as -ங்கள் when a particle beginning with vowel is added to it. Example :

கெடெக்குங்க + ஆ → கெடெக்குங்களா

Sandhi 28. The consonants க், ச், த் and ப் are always doubled after அப்படீன்னு. Example :

அப்படீன்னு + தான் → அப்படீன்னுத்தான்

கெடெக்கும் + ங்க → கெடெக்குங்க (Refer S.2 in 1.1)
மாணவன் + ங்க → மாணவங்க (Refer S.5 in 1.3)
யாரெ + பார்க்கணும் → யாரெப் பார்க்கணும்
மொதல்வரெ + சந்திக்கணும் → மொதல்வரெச் சந்திக்கணும்
(Refer S.20 in 2.17)

UNIT 15

LESSON 56

INVITING A FRIEND

DIALOGUE

மூர்த்தி : சுரேஷ்! நீங்க எங்க வீட்டுக்குச் சாப்பிட வரணும். நாளைக்கு உங்களுக்கு வரமுடியுமா ?	Suresh ! you must come to our house for lunch. Can you come tomorrow ?
சுரேஷ் : என்ன விசேஷங்க ?	What is special, (about tomorrow) sir ?
மூர்த்தி : நாளெ கலாவோட பொறந்த நாளு. அதுனாலே நாளைக்கு மத்தியானம் சாப்பிட வாங்க.	Tomorrow is Kala's birth day. So, (you) please come and have a lunch tomorrow noon.

(vi) பாடு + Participial noun (Neg.) : ....

k. Answer these questions.

(i) நீங்க பணத்துக்கு ஆசெப்படாதவரா ?
(ii) நேரான வழியிலே சம்பாதிக்காதவனோடெ பணம் நல்ல பணம் இல்லெ, இல்லே ?
(iii) நீங்க சினிமாவே பார்க்காதவரா ?
(iv) உங்களுக்குப் படிக்காதவங்களெப் பிடிக்குமா ?
(v) உங்களுக்குப் பணம் இல்லாதவங்களெப் பிடிக்காதா ?
(vi) உங்க மனெவி தமிழ் படிக்காதவங்களா ?

VOCABULARY

உலகம்	'world'	ஆசெப்படு	'desire'
அவசியம்	'important'	நேரானவழி	'just means'
காப்பாத்து	'save'	கடத்தல்காரங்க	'smugglers'
ஜெயில்	'prison, jail'	சர்க்கார்	'government'
நேர்மெ	'honest'	கஷ்டம்	'suffering'
கஷ்டப்படு	'suffer'	சம்பாதி	'earn'

GRAMMAR

16.67.177. The negative form of a participial noun is expressed by negative relative participle (Refer 16.63.171) and the pronominal suffixes -அன் or -அ or -அரு or -அங்க or -து as the case may be. As it is mentioned earlier in section (16.63) negative in general has no tense in Tamil. Consider the following examples :

16. 67. 177. பணத்துக்கு ஆசெப்படாதவங்க யாரு ?
நேர்மெயா உழெக்காதவங்க எல்லாரும்
கஷ்டப்படத்தான் வேணும்.

ஆசெப்படாதவங்க and உழெக்காதவங்க are negative participial nouns and they are derived from the negative relative participles ஆசெப்படாத and உழெக்காத by adding the pronominal suffix -அங்க.

Sandhi : உலகம் + உலே → உலகத்துலே
பணம் + உக்கு → பணத்துக்கு (Refer S.17 in 2.13)

UNIT 17

LESSON 68

ASKING WAY TO KANYAKUMARI

DIALOGUE

சுரேஷ் : ஸார், கன்னியாகுமரிக்கு எந்த வழியாப் போக-ணும் ?	Sir, by which way (one) should go to Kanyakumari ?
கண்டக்டர்: நம்பர் எட்டு, ஒம்பது, பத்து பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க.	Please go and wait at the 8, 9 and 10 number bus stops.
சுரேஷ் : சுசீந்திரத்துலே ஸ்டாப் இருக்குதுங்களா ?	Will there be any stop at Suchindrum ?
கண்டக்டர் : ஆமாங்க. பத்து நிமிஷம் நிக்கும்... நீங்க சுசீந்திரத்துலே எறங்-கணுமா ?	Yes, sir. (It) will stop for ten minutes... Do you want to get down at Suchindrum ?

சுரேஷ் : ஆமாங்க.

Yes, sir.

கண்டக்டர் : அப்படின்னா, நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க. அங்கே எறங்கி நீங்க சுசீந்திரம் கோயிலெப் பார்க்கலாம். ஆறு மணிக்கு நம்பர் பத்து வரும். அதுலே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.

If it is so, please get into the bus No. 8 and get down at Suchindrum. Having got down there you can see Suchindrum temple. At six o' clock the bus No. 10 will come. Boarding that (you) can go to Kanyakumari.

சுரேஷ் : கன்னியாகுமரியிலே காலையிலே சூரியோதயம் பார்க்க முடியுமா ?

Can (I) see sunrise in the morning at Kanyakumari ?

கண்டக்டர் : முடியும். கன்னியாகுமரியிலெ இருக்குற ஒரு ஹோட்டல்லே ராத்திரி தங்கி அதிகாலையிலே சூரியோதயம் பார்க்கலாம். மாலையிலே சூரிய அஸ்தமனமும் பார்க்கலாம். அதோ ! எட்டாம் நம்பர் பஸ் வருது. அதுலே ஏறிச் சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க.

Yes (you) can (see). (You) can see sunrise early in the morning by staying in a hotel at Kanyakumari ; (You) can also see sunset in the evening. Look ! The bus No. 8 is comming. Please board that bus and buy a ticket to Suchindrum.

சுரேஷ் : ரொம்ப நன்றிங்க.

Thank (you) verymuch, sir

கண்டக்டர் : பரவாயில்லெங்க.

Don't mention please.

DRILLS

a. Variation drill

17. 68. 178. நீங்க நம்பர் எட்டு பஸ்ஸ்டாப்லே போய் நில்லுங்க.
நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க.
சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம்.
நீங்க ஹோட்டல்லே தங்கி அதிகாலையிலே சூரியோதயம் பார்க்கலாம்.

b. Build up drill

(i) நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க.	நீங்க நம்பர் எட்டு பஸ்ஸ்டாப்லே போய் நில்லுங்க.
நில்லுங்க	நில்லுங்க
போய்	போய் நில்லுங்க
பஸ் ஸ்டாப்லே	பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க
நம்பர் எட்டு	நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க
நீங்க	நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய் நில்லுங்க.
(ii) சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம்.	சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம்.
பார்க்கலாம்	பார்க்கலாம்
கோயிலெ	கோயிலெப் பார்க்கலாம்
நீங்க	நீங்க கோயிலெப் பார்க்கலாம்
எறங்கி	எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம்
சுசீந்திரத்துலே	சுசீந்திரத்துலே எறங்கி நீங்க கோயிலெப் பார்க்கலாம்.
(iii) நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க.	நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க.
எறங்குங்க	எறங்குங்க
சுசீந்திரத்துலே	சுசீந்திரத்துலே எறங்குங்க
ஏறி	ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க
நம்பர் எட்டுலே	நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க
நீங்க	நீங்க நம்பர் எட்டுலே ஏறிச் சுசீந்திரத்துலே எறங்குங்க
(iv) பஸ்லே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.	பஸ்லே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.
போகலாம்	போகலாம்
கன்னியாகுமரிக்கு	கன்னியாகுமரிக்குப் போகலாம்
ஏறி	ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்
பஸ்லே	பஸ்லே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.

c. Expansion drill

(i) நீங்க பார்க்கலாம்.	நீங்க பார்க்கலாம்.
கோயிலெப் பார்க்கலாம்	நீங்க கோயிலெப் பார்க்கலாம்

எறங்கிப் பார்க்கலாம்	நீங்க எறங்கிக் கோயிலெப் பார்க்கலாம்
சுசீந்திரத்துலே பார்க்கலாம்	நீங்க சுசீந்திரத்துலே எறங்கிக் கோயிலெப் பார்க்கலாம்.
(ii) நீங்க நில்லுங்க.	நீங்க நில்லுங்க.
போயி நில்லுங்க	நீங்க போயி நில்லுங்க.
நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே நில்லுங்க	நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போயி நில்லுங்க.
(iii) நீங்க பார்க்கலாம்.	நீங்க பார்க்கலாம்.
சூரியோதயம் பார்க்கலாம்	நீங்க சூரியோதயம் பார்க்கலாம்.
அதிகாலெயிலே பார்க்கலாம்	நீங்க அதிகாலெயிலே சூரியோதயம் பார்க்கலாம்.
ஹோட்டல்லே தங்கி பார்க்கலாம்	நீங்க ஹோட்டல்லே தங்கி அதிகாலெயிலே சூரியோதயம் பார்க்கலாம்.

d. Question-Answer drill

(i) Q : ஸார், கன்னியாகுமரிக்கு எந்த வழியாப் போகணும் ?
A : நம்பர் எட்டு, ஒம்பது, பத்து பஸ் ஸ்டாப்லே போயி நில்லுங்க.

(ii) Q : சுசீந்திரத்துலே ஸ்டாப் இருக்குதுங்களா ?
A : ஆமாங்க. பத்து நிமிஷம் நிக்கும்.

(iii) Q : நீங்க சுசீந்திரத்துலே எறங்கணுமா ?
A : ஆமாங்க.

(iv) Q : கன்னியாகுமரியிலே காலெயிலே சூரியோதயம் பார்க்க முடியுமா ?
A : முடியும்.

e. Substitution drill

(i) அதுலே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம். Substitute and change the verb accordingly.	அதுலே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.
கௌம்பு	அதுலே கெளம்பிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்
புறப்படு	அதுலே புறப்பட்டுக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.
(ii) அது வருது. Substitute and conjugate the verb suitably.	அது வருது.

போ	அது போகுது.
ஏறு	அது ஏறுது.
நில்லு	அது நிக்குது.
தங்கு	அது தங்குது.
பாரு	அது பாக்குது.
வாங்கு	அது வாங்குது.
தா	அது தருது.

(iii) அது வரும். — அது வரும்.

Substitute and conjugate the verb accordingly.

போ	அது போகும்.
ஏறு	அது ஏறும்.
இறங்கு	அது இறங்கும்.
நில்லு	அது நிக்கும்
தங்கு	அது தங்கும்.
பாரு	அது பாக்கும்.
வாங்கு	அது வாங்கும்.

I Integration drill

(i) நீங்க ஒரு ஹோட்டல்லே தங்குறீங்க. நீங்க அதிகாலையிலே சூரியோதயம் பாக்குறீங்க.	நீங்க ஒரு ஹோட்டல்லே தங்கி அதிகாலையிலே சூரியோதயம் பாக்குறீங்க.
(ii) நீங்க போறீங்க. நீங்க பஸ் ஸ்டாப்பிலே நில்லுங்க.	நீங்க போய் பஸ் ஸ்டாப்பிலே நில்லுங்க.
(iii) நீங்க கன்னியாகுமரிக்குப் போகலாம். நீங்க சுசீந்திரத்துக்கு வரலாம்	நீங்க கன்னியாகுமரிக்குப் போய் சுசீந்திரத்துக்கு வரலாம்.
(iv) நீங்க பஸ்லே ஏறுங்க நீங்க சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க.	நீங்க பஸ்லே ஏறி சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க.

EXERCISES

g. Fill in the blacks using the cues given in parentheses as in the model given below.

Model : பஸ் ஸ்டாப்லே போய்..................ங்க. (wait)

பஸ் ஸ்டாப்லே போய் **நில்லுங்க.**

(i) காலையிலே..................பாக்க முடியுமா ? (sunrise)

(ii) மாலையிலே..................+ உம் பாக்கலாம். (sunset)

h. Write the word represented by the formula.

Example : வந்து   வா + Verb. Part

(i) போ + Verb. Part : ....
(ii) இரு + Verb. Part : ....
(iii) எறங்கு + Verb. Part : ....
(iv) பாடு + Verb. Part : ....
(v) கொடு + Verb. Part : ....
(vi) படி + Verb. Part : ....
(vii) குடி + Verb. Part : ....
(viii) கேள் + Verb. Part : ....
(ix) பாரு + Verb. Part : ....
(x) செய் + Verb. Part : ....

i. Use the verbal participle and the suitable finite forms of the verbs given in parentheses in order.

(i) நீங்க நம்பர் எட்டுலே............சுசீந்திரத்துலே............
(ஏறு ; எறங்கு)

(ii) நீங்க ராத்திரி............சூரியோதயம்............
(தூங்கு ; பாரு)

(iii) அவ புஸ்தகத்தெப்............பாடம்............
(படி ; எழுது)

(iv) அவங்க சுப்புலட்சுமியெப்............நல்லாப்............
(பாராட்டு ; பேசு)

(v) அவரு புஸ்தகத்தெ............என்கிட்டெ............
(வாங்கு ; கொடு)

(vi) அவரு என்னெப் பேங்குக்கு............பாரத்தெப்............
(அறிமுகப்படுத்து ; பூர்த்திபண்ணு)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நீங்க போங்க.
நீங்க பஸ் ஸ்டாப்லே நில்லுங்க.
நீங்க போய் பஸ் ஸ்டாப்லே நில்லுங்க.

(i) நீங்க நம்பர் எட்டுலே ஏறுங்க.
நீங்க சுசீந்திரத்துலே எறங்குங்க.

(ii) நீங்க சுசீந்திரத்துலே எறங்குங்க.
நீங்க கோயிலெப் பார்க்கலாம்.

(iii) நீங்க கன்னியாகுமரிக்குப் போகலாம்.
நீங்க சுசீந்திரத்துக்கு வரலாம்.

(iv) ஒரு ஹோட்டல்லே தங்குங்க.
நீங்க அதிகாலையிலே சூரியோதயம் பாருங்க.

(v) நீங்க பஸ்ஸிலே ஏறுங்க.
நீங்க சுசீந்திரத்துக்கு ஒரு டிக்கெட் வாங்குங்க.

k. Write the word represented by the formula.

Example **போனேன்** போ + Past

(i) நில்லு + Past : ....
(ii) இறங்கு + Past : ....
(iii) ஏறு + Past : ....
(iv) தங்கு + Past : ....
(v) வாங்கு + Past : ....

l. Change the underlined word or group of words to its corresponding questions.

(i) சுசீந்திரத்துலே <u>பத்து</u> நிமிஷம் நிக்கும்.
(ii) <u>ஆறுமணிக்கு</u> நம்பர் பத்து வரும்.
(iii) <u>கன்னியாகுமரியிலே</u> சூரியோதயம் பார்க்கலாம்.
(iv) அதுலே ஏறிக் கன்னியாகுமரிக்குப் போகலாம்.

m. Answer these questions.

(i) நீங்க கன்னியாகுமரிக்குப் போனீங்களா ?
(ii) உங்க ஊருலே சூரிய அஸ்தமனம் பார்க்க முடியுமா ?
(iii) எத்தனாம் நம்பர் பஸ்லே ஏறி நீங்க மைசூரு சிட்டிக்குப் போனீங்க ?
(iv) ரயில்லேயிருந்து இறங்கி எத்தனாம் நம்பர் பஸ்லே ஏறி உங்க வீட்டுக்குப் போவீங்க ?
(v) போன தேர்வு எழுதி எத்தனை மார்க்கு வாங்குனீங்க ?
(vi) தினந்தோறும் மார்க்கெட்டுக்குப் போய் காய்கறி வாங்குறீங்களா ?

VOCABULARY

நில்லு	'wait'	நில்லு	'stop'
சூரியோதயம்	'sunrise'	சூரிய அஸ்தமனம்	'sunset'

GRAMMAR

17.68.178. Following the Unit 16, this Unit introduces the compound sentence called verbal participle or past participle or adverbial participle. This form of compound sentence is widely used in Tamil. The compounding in this type of sentence is generally done by a non-finite verb or a sequence of non-finite verbs (subordinate clause) and a finite verb (main clause). Whereas, in

a complex sentence similar non-finite verbs in the subordinate clause cannot be sequenced with the finite verb in the main clause. That is a sentence like 'அவன் நேற்று பார்த்த ஒன்றை வாங்குவான் வந்தான்' is considered to be ungrammatical. Now let us consider the following sentence.

17. 65. 175. நீங்க நம்பர் எட்டு பஸ்ஸிலே ஏறி [illegible]திலே இறங்குங்க.

In this sentence, the non-finite verb is ஏறி 'having got into' which may be called verbal participle. It is, here, compounded with the finite verb இறங்குங்க '(you) get down'. As we indicated earlier, this non-finite verb can be sequenced with other non-finite verbs also. For example, the sentence 'நீங்க நம்பர் எட்டு பஸ்ஸிலே ஏறி, [illegible] இறங்குங்க' is considered to be grammatical. In English, this form of expression is organised by a series of finite verbs joined by connective particles. A verbal participle form is expressed by a verb stem consisting of base verb and its corresponding past tense marker and the suffix denoting verbal participle. See the following examples:

ஏறி	having got into'
இறங்கி	having got down'
தங்கி	'having stayed'
வாங்கி	'having bought'
போய்	having gone'

In the above mentioned forms the base verb and the past tense marker may be represented as follows:

ஏறு + இ : ஏறி	'having got into
இறங்கு + இ : இறங்கி	'having got down'
தங்கு + இ : தங்கி	'having stayed'
வாங்கு + இ : வாங்கி	'having bought'
போ + ய் : போய்	'having gone'

Note that there is no suffix to indicate the verbal participle. Also note that the verbs like ஏறு get-into', இறங்கு 'get down' etc., have two past tense markers -இ- and -ன்-. -இ- is added to the stem when the verbal participle is constituted. -ன்- occurs elsewhere (as in ஏறினேன் 'get into-I' etc.). In the case of the verb போ 'go' -ய்- may be treated as the past tense marker.

The verbal participles do not give the meaning of past tense markers. The tense is always denoted by the finite verb in the main clause. For example, in the sentence 'நீங்க பஸ் ஸ்டாப்பிலே போய் நில்லுங்க' the meaning of future is conveyed by the imperative verb நில்லுங்க (you) wait'. Similarly, negation is also expressed by the negative finite verb. In Tamil, verbal participles are used in many ways. In this lesson we are chiefly concerned with a kind of verbal participle form which is used to express the continuation of the action expressed by the finite verb in the main clause. Example:

17. 68. 178. நீங்க நம்பர் எட்டு பஸ் ஸ்டாப்லே போய்
நில்லுங்க.
நீங்க சுசீந்திரத்துலே எறங்கி கோயிலெப்
பார்க்கலாம்.
பஸ்லே ஏறி கன்னியாகுமரிக்குப் போகலாம்.

Sandhi 31. The consonants க், ச், த் and ப் are always doubled after the verbal participle ending in –இ. Example

ஏறி + சுசீந்திரத்துலே → ஏறிச் சுசீந்திரத்துலே (எறங்குங்க)
வழியா + போகணும் → வழியாப் போகணும் (Refer S.21 in 3.20)

UNIT 17

LESSON 69

MEETING A FRIEND AFTER SOMETIME

DIALOGUE

சுரேஷ் : வணக்கங்க...உங்களெப் பார்த்து ரொம்ப நாளா-குது. இல்லெங்களா ?	Vanakkam, sir... It is many days since I saw you, isn't it ?
மூர்த்தி : ஆமாங்க. சௌக்கியமா இருக்குறீங்களா ?....நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும், இல்லே ?	Yes, sir. How are you ? ... It may be a month since we met, isn't it ?
சுரேஷ் : ஆமாங்க .... வீட்டுலே யாரும் இல்லெங்களா ?	Yes, sir... Is there nobody in the house ?
மூர்த்தி : இல்லெங்க...என் மனைவி ஊருக்குப் போய் ரெண்டு மூணு வாரம் ஆச்சு .... வெகேஷன் பாருங்க.	No, sir. It is three weeks since my wife went to (her) native place... It is a vacation (you) see.

சுரேஷ் : உங்க சொந்த ஊரு எது?	Which is your native place ?
மூர்த்தி : சேலம்.	Salem.
சுரேஷ் : நீங்க பொறந்த ஊரு அதுதானா ?	Is it that your birth place ?
மூர்த்தி : ஆமாங்க. ஆனா, நாங்க இந்த ஊருக்கு வந்து சுமார் பத்து வருஷம் ஆச்சு.	Yes, sir. But it is ten years since we came to this place.
சுரேஷ் : நீங்க போகலியா ?	Didn't you go (to your native place)?
மூர்த்தி : நான் சேலத்துக்குப் போய்க் கிட்டத்தட்ட மூணு வருஷம் ஆச்சு... நேரமில்லைங்க.	It is approximately three years since I went to Salem--- (There) is no time.
சுரேஷ் : அது சரிதாங்க....உங்க-ளுக்கு நேரம் கெடைக்கு-றது ரொம்பக் கஷ்டம், இல்லே ?	Yes, that is right, sir --- It is very difficult for you to find time, isn't it ?
மூர்த்தி : ஆமாங்க.	Yes, sir.

DRILLS

a. Variation drill

17. 69. 179. உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகுது.
நாம சந்திச்ச ஒரு மாசம் இருக்கும்.
என் மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.
நான் சேலத்துக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.

b. Build up drill

(i) உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சு.	உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சு.
நாளாச்சு	நாளாச்சு
ரொம்ப	ரொம்ப நாளாச்சு
பார்த்து	பார்த்து ரொம்ப நாளாச்சு
உங்களை	உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சு.

(ii) நாம சந்திச்சு ஒருமாசம் இருக்கும்.	நாம சந்திச்சு ஒருமாசம் இருக்கும்.
இருக்கும்	இருக்கும்
ஒரு மாசம்	ஒரு மாசம் இருக்கும்
சந்திச்சு	சந்திச்சு ஒரு மாசம் இருக்கும்
நாம	நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும்.
(iii) என் மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.	என் மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.
ஆச்சு	ஆச்சு
மூணு வாரம்	மூணு வாரம் ஆச்சு
போய்	போய் மூணு வாரம் ஆச்சு
ஊருக்கு	ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு
மனைவி	மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு
என்	என் மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.
(iv) நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு.	நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு.
ஆச்சு	ஆச்சு
பத்து வருஷம்	பத்து வருஷம் ஆச்சு
வந்து	வந்து பத்து வருஷம் ஆச்சு
ஊருக்கு	ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு
இந்த	இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு
நாங்க	நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு.

c Expansion drill

(i) உங்களைப் பார்த்து நாளாச்சு.	உங்களைப் பார்த்து நாளாச்சு.
ரொம்ப நாளாச்சு.	உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சு.
(ii) நாங்க வந்து பத்து வருஷம் ஆச்சு.	நாங்க வந்து பத்து வருஷம் ஆச்சு.
இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு	நாங்க இந்த ஊருக்கு வந்து பத்து வருஷம் ஆச்சு.

(iii) என் மனைவி போய் மூணு வாரம் ஆச்சு.	என் மனைவி போய் மூணு வாரம் ஆச்சு.
ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு	என் மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.
(iv) நான் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.	நான் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.
சேலத்துக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு	நான் சேலத்துக்குப்போய் ரெண்டு வருஷம் ஆச்சு.

d. Question-Answer drill

(i) Q உங்களெப் பாத்து ரொம்ப நாளாச்சு, இல்லெயுங்களா ?
A ஆமாங்க.

(ii) Q வீட்டுலெ யாரும் இல்லெயுங்களா ?
A இல்லெங்க.

(iii) Q உங்க சொந்த ஊரு எது ?
A : சேலம்.

(iv) Q நீங்க பொறந்த ஊரு அதுதானு ?
A : ஆமாங்க.

(v) Q நீங்க போகலெயா ?
A நேரமில்லெங்க.

e. Substitution drill

(i) நாம சந்திச்சு ஒருமாசம் இருக்கும், இல்லே ?	நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
Substitute and change the verb accordingly.	
போ	நாம போய் ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
சொல்லு	நாம சொல்லி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
கொடு	நாம கொடுத்து ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
புறப்படு	நாம புறப்பட்டு ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
அனுப்பு	நாம அனுப்பி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
வாங்கு	நாம வாங்கி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
எழுது	நாம எழுதி ஒரு மாசம் இருக்கும், இல்லே ?

மறுப் போடு	நாம மறுப்போட்டு ஒரு மாசம் இருக்கும், இல்லே ?
(ii) நான் போய் கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆச்சு.	நான் போய் கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆச்சு.
Substitute	
சுமார்	நான் போய் சுமார் ரெண்டு வருஷம் ஆச்சு.
அநேகமா	நான் போய் அநேகமா ரெண்டு வருஷம் ஆச்சு.
(iii) நான் சேலத்துக்குப் போய் மூணு வருஷம் ஆச்சு.	நான் சேலத்துக்குப் போய் மூணு வருஷம் ஆச்சு.
Substitute	
மாசம்	நான் சேலத்துக்குப் போய் மூணு மாசம் ஆச்சு.
வாரம்	நான் சேலத்துக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.
நாளு	நான் சேலத்துக்குப் போய் மூணு நாளு ஆச்சு.

f. Integration drill

(i) நாம சந்திச்சோம். அது ஒரு மாசம் இருக்கும்.	நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும்.
என் மனைவி ஊருக்குப் போனா. அது ரெண்டு வாரம் ஆச்சு.	என் மனைவி ஊருக்குப் போய் ரெண்டு வாரம் ஆச்சு.
நான் சேலத்துக்குப் போனேன். அது ரெண்டு வருஷம் ஆச்சு.	நான் சேலத்துக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : உங்க..................எது ? (native place)
உங்க சொந்த ஊரு எது ?

(i) நான் போய்..................மூணு வருஷம் ஆச்சு. (approximately)
(ii) நீங்க..................ந்த ஊரு அதுதானா ? (be born)
(iii) சுமார் பத்து..................ஆச்சு. (year)

h. Write the word represented by the formula.

Example : சந்திக்க   சந்தி + Verb. Part

(i) ஆகு + Verb. Part : ....
(ii) சொல்லு + Verb. Part : ....
(iii) எடு + Verb. Part : ....
(iv) ஏறு + Verb. Part : ....
(v) தா + Verb. Part : ....
(vi) ஊட்டு + Verb. Part : ....
(vii) பாராட்டு + Verb. Part : ....
(viii) கட்டு + Verb. Part : ....
(ix) அடி + Verb. Part : ....
(x) கேளு + Verb. Part : ....

i. Fill in the blanks using the verbal participle form of the verbs given in parentheses.

(i) உங்களெப்...............ரொம்ப நாளாச்சு. (பாரு)
(ii) நாம...............ஒரு மாசம் இருக்கும். (சந்தி)
(iii) மனெவி ஊருக்குப்...............ரெண்டு வாரம் ஆச்சு. (போ)
(iv) நாங்க இந்த ஊருக்கு...............பத்துவருஷம் ஆச்சு. (வா)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நான் உங்களெப் பார்த்தேன்.
அது ரொம்ப நாளாகுது.
நான் உங்களெப் பார்த்து ரொம்ப நாளாகுது.

(i) நாம சந்திச்சோம்.
அது ஒரு மாசம் இருக்கும்.
(ii) என் மனெவி ஊருக்குப் போனா.
அது ரெண்டு மூணு வாரம் ஆச்சு.
(iii) நாங்க இந்த ஊருக்கு வந்தோம்.
அது சுமார் பத்து வருஷம் ஆச்சு.
(iv) நான் சேலத்துக்குப் போனேன்.
அது ரெண்டு வருஷம் ஆச்சு.
(v) நான் இந்தப் புஸ்தகத்தெ வாங்குனேன்.
அது நாலு நாளு ஆச்சு.

k. Change the underlined word or group of words to its corresponding questions.

(i) நாம சந்திச்ச ஒரு மாசம் இருக்கும்.
(ii) என் மனெவி ஊருக்குப் போயி மூணு வாரம் ஆச்சு.

(iii) உங்க சொந்த ஊரு சேலம்.
(iv) உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகுது.

l. Write the word represented by the formula.

Example : வந்தோம் — வா + Past

(i) பாரு + Past : ....
(ii) சந்தி + Past : ....
(iii) பேசு + Past : ....
(iv) செய் + Past : ....
(v) சாப்பிடு + Past : ....
(vi) புறப்படு + Past : ....
(vii) போடு + Past : ....

m. Answer these questions.

(i) நீங்க உங்க மனைவியைப் பார்த்து ரொம்ப நாளாச்சு, இல்லே ?
(ii) உங்க சொந்த ஊரு எது ?
(iii) நீங்க எந்த ஊருலே ஆசிரியரா வேலை பார்க்குறீங்க ?
(iv) அந்த ஊருக்குப் போய் எத்தனை வருஷம் ஆச்சு ?
(v) நீங்க மைசூருக்கு வந்து எத்தனை வாரம் ஆச்சு ?
(vi) நீங்க எத்தனை வருஷமா ஆசிரியரா வேலை பார்க்குறீங்க ?
(vii) உங்களுக்குக் கலியாணம் ஆகி எத்தனை வருஷம் ஆச்சு ?
(viii) நீங்க இந்த இன்ஸ்டிடியூட்டுலே சேர்ந்து எத்தனை மாசம் ஆச்சு ?

VOCABULARY

ஆகு	'become'	பிற	'be born'
கிட்டத்தட்ட	'approximately'		

GRAMMAR

17.69.179. As we noted already a verbal participle is formed by a verb stem consisting of base verb and its corresponding past tense marker and the suffix denoting verbal participle. The following verbal participles are formed by means of the suffix -உ.

பாரு + த்த் + உ : பார்த்து 'having seen'
சந்தி + ச்ச் + உ : சந்திச்சு 'having met'
வ + ந்த் + உ : வந்து 'having come'

We also noticed in the previous lesson that verbal participles are used in many ways. Let us consider in this lesson the verbal participles which denote a period of time that lapsed since an action expressed by a finite verb in the main clause has begun. Example :

17. 69. 179. உங்களெப் பார்த்து ரொம்ப நாளாகுது.
நாம சந்திச்சு ஒரு மாசம் இருக்கும்.
என் மனைவி ஊருக்குப் போய் மூணு வாரம் ஆச்சு.

Sandhi 32. The consonants க், ச், த் and ப் are always doubled after the verbal participle போய். Example:

போய் + கிட்டத்தட்ட → போய்க் கிட்டத்தட்ட ரெண்டு மூணு வருஷம் ஆச்சு)

சரிதான் + ங்க → சரிதாங்க (Refer S.30 in 16.61)

UNIT 17

LESSON 70

ABOUT THE PREPARATION FOR EXAMINATION

DIALOGUE

மூர்த்தி : வாங்க சுரேஷ்! உங்க தேர்வு எப்ப ஆரம்பிக்குது?....எப்படிப் படிக்குறீங்க ?	Please come Suresh! When does your examination start?... How are you studying ?
சுரேஷ் : தேர்வு அடுத்த மாசம் ஆரம்பிக்குதுங்க....நல்லாப் படிக்குறேன். இந்த இலக்கணத்தைத் தான் சரியாப் படிக்க முடியலெ.	Examination starts by next month... (I) am studying well. Only this grammar I am not able to read well.
மூர்த்தி : ரெண்டு மூணு தரம் படிங்க. புரியும்.	Please read (it) for two or three times. (You) will understand.

சுரேஷ் : திருப்பித் திருப்பிப் படிச்சாச்சுங்க. புரியலெ. நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு. நெறெயப் பகுதி அவருக்கும் புரியலெ.	(I) have studied again and again, sir. (I) do not understand. Narasaiah also goes on studying repeatedly. Many portions are not clear even to him.
மூர்த்தி : செல பாயின்டெ நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.	You must write again and again some of the grammatical points.
சுரேஷ் : எத்தனெ தடவெங்க எழுதுறது? பார்க்கலாம்; இன்னும் முயற்சி செய்றேன்.	Howmany times do (I) have to write? Let (me) see; (I) will still try.
மூர்த்தி : பேராசிரியரெயும் போய்ப் போய்ப் பாருங்க... புரியாத பகுதியெ அவரு சொல்லிக் கொடுப்பாரு.	(You) please meet Professor (Sundaram) also again and again. He will explain the portions which (you) do not understand.
சுரேஷ் : சரிங்க. இனிமே, அவரெத்தான் போய்ப் பார்க்கணும். வேறெ வழியில்லெ...வரேங்க.	Alright, sir. Hereafter, (I) should go and see him. There is no other way.... (I) take leave of (you), sir.
மூர்த்தி : வாங்க.	Please do.

DRILLS

a. Variation drill

17. 70. 180. நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.
நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.
நீங்க பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க.
நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.

17. 70. 181. இனிமே, அவரெத்தான் போய்ப் பார்க்கணும்.

b. Build up drill

(i) நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.	நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.
பார்க்குறாரு	பார்க்குறாரு
படிச்சு	படிச்சுப் பார்க்குறாரு
படிச்சு	படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு
நரசய்யா	நரசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.

(ii) நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.	நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.
பார்க்கணும்	பார்க்கணும்
எழுதி	எழுதிப் பார்க்கணும்
எழுதி	எழுதி எழுதிப் பார்க்கணும்
நீங்க	நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.
(iii) பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க.	பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க.
பாருங்க	பாருங்க
போய்	போய்ப் பாருங்க
போய்	போய்ப் போய்ப் பாருங்க
பேராசிரியரெ	பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க.
(iv) நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.	நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.
படிச்சாச்சு	படிச்சாச்சு
திருப்பி	திருப்பிப் படிச்சாச்சு
திருப்பி	திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு
நான்	நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.

c. Expansion drill

(i) நீங்க பாருங்க	நீங்க பாருங்க.
போய்ப் பாருங்க	நீங்க போய்ப் பாருங்க.
போய்ப் பாருங்க	நீங்க போய்ப் போய்ப் பாருங்க.
பேராசிரியரெப் பாருங்க	நீங்க பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க.
(ii) நான் படிச்சாச்சு.	நான் படிச்சாச்சு.
திருப்பிப் படிச்சாச்சு	நான் திருப்பிப் படிச்சாச்சு.
திருப்பிப் படிச்சாச்சு	நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.
இலக்கணத்தெப் படிச்சாச்சு	நான் இலக்கணத்தெத் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.
(iii) நரசய்யாவும் படிச்சுப் பார்க்குறாரு.	நரசய்யாவும் படிச்சுப் பார்க்குறாரு.
படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு	நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.
தமிழ் இலக்கணத்தெப் படிச்சுப் பார்க்குறாரு.	நரசய்யாவும் தமிழ் இலக்கணத்தெப் படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.

(iv) நீங்க எழுதிப் பார்க்கணும்.	நீங்க எழுதிப் பார்க்கணும்.
எழுதி எழுதிப் பார்க்கணும்	நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.
அதெ எழுதிப் பார்க்கணும்	நீங்க அதெ எழுதி எழுதிப் பார்க்கணும்.

d Question-Answer drill

(i) Q : உங்க தேர்வு எப்ப ஆரம்பிக்குது ?
A : தேர்வு அடுத்த மாசம் ஆரம்பிக்குதுங்க.

(ii) Q : எப்படிப் படிக்குறீங்க ?
A : நல்லாப் படிக்குறேன்.

e. Substitution drill

(i) நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு. Substitute and change the verb accordingly.	நரசய்யாவும் படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.
எழுது	நரசய்யாவும் எழுதி எழுதிப் பார்க்குறாரு.
வாசி	நரசய்யாவும் வாசிச்சு வாசிச்சுப் பார்க்குறாரு.
சொல்லு	நரசய்யாவும் சொல்லிச் சொல்லிப் பார்க்குறாரு.
சாப்பிடு	நரசய்யாவும் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பார்க்குறாரு.
வா	நரசய்யாவும் வந்து வந்து பார்க்குறாரு.
போ	நரசய்யாவும் போய்ப் போய்ப் பார்க்குறாரு.
கொடு	நரசய்யாவும் கொடுத்துக் கொடுத்துப் பார்க்குறாரு.
வரெ	நரசய்யாவும் வரெஞ்சு வரெஞ்சு பார்க்குறாரு.

(ii) எத்தனெ தடவெங்க எழுதுறது ? Substitute and change the verb accordingly.	எத்தனெ தடவெங்க எழுதுறது ?
படி	எத்தனெ தடவெங்க படிக்குறது ?
பாரு	எத்தனெ தடவெங்க பார்க்குறது ?
சொல்லு	எத்தனெ தடவெங்க சொல்லுறது?
சாப்பிடு	எத்தனெ தடவெங்க சாப்பிடுறது?
கொடு	எத்தனெ தடவெங்க கொடுக்குறது ?

போ	எத்தனை தடவெங்க போறது ?
வா	எத்தனை தடவெங்க வறது ?

(iii) தமிழ் இலக்கணம் புரியலெ. — தமிழ் இலக்கணம் புரியலெ.

Substitute

பாடம்	தமிழ்ப் பாடம் புரியலெ.
வசனம்	தமிழ் வசனம் புரியலெ.
பாட்டு	தமிழ்ப் பாட்டுப் புரியலெ.
படம்	தமிழ்ப்படம் புரியலெ.
சங்கீதம்	தமிழ்ச் சங்கீதம் புரியலெ.

f Integration drill

(i) நாசய்யா படிச்சுப் பாக்குறாரு. நாசய்யா படிக்குறாரு.	நாசய்யா படிச்சுப் படிச்சுப் பார்க்குறாரு.
நீங்க எழுதிப் பாக்கணும். நீங்க எழுதணும்.	நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.
நீங்க போய்ப் பாருங்க. நீங்க போங்க.	நீங்க போய்ப் போய்ப் பாருங்க.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model: தேர்வு எப்ப..............க்குது ? (begin)
தேர்வு எப்ப ஆரம்பிக்குது ?

(i) ....+ எப் படிக்க முடியலெ. (grammar)
(ii) ரெண்டு மூணு..............படிங்க. (times)
(iii) .... படிச்சுக்கங்க. (again and again)
(iv) ரெண்டு மூணு..............படிக்க. (times)
(v) இன்னும்..............றேன். (try)

h. Write the word represented by the formula.

Example : ஆரம்பிச்சு   ஆரம்பி + Verb. Part

(i) எழுது + Verb. Part : ....
(ii) முயற்சிசெய் + Verb. Part : ....
(iii) கேள்விகேளு + Verb. Part : ....
(iv) வெளையாடு + Verb. Part : ....
(v) திருப்பு + Verb. Part : ....
(vi) புரி + Verb. Part ....

i. Fill in the blanks using the verbal participle form of the verbs given in parentheses.

(i) நாசய்யா .... பார்க்குறாரு. (படி)
(ii) நீங்க .... பார்க்கணும். (எழுது)
(iii) நீங்க .... பாருங்க. (வா)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நீங்க எழுதிப் பார்க்கணும்.
நீங்க எழுதணும்.
நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.

(i) நீங்க போய்ப் பாருங்க.
நீங்க போங்க.
(ii) நீங்க படிச்சுப் பாருங்க.
நீங்க படிங்க.
(iii) நான் வந்து பார்க்குறேன்.
நான் வறேன்.
(iv) நான் சொல்லிப் பார்க்குறேன்.
நான் சொல்லுறேன்.

k. Write the word represented by the formula.

Example : படிச்சாங்க   படி + Past
(i) ஆரம்பி + Past : ....
(ii) திருப்பு + Past : ....
(iii) எழுது + Past : ....
(iv) செய் + Past : ....
(v) சொல்லு + Past : ....
(vi) கொடு + Past : ....

l. Join the following according to the sandhi rules.

(i) இலக்கணம் + ஏ : .... (ii) நாசய்யா + ஏ : ....
(iii) புரி + ஆத : .... (iv) படிச்சு + படிச்சு : ....
வழி + இல்லை : .... திருப்பி + திருப்பி : ....

m. Answer these questions.

(i) உங்க் தேர்வு எப்ப ஆரம்பிக்குது ?
(ii) உங்களுக்குத் தமிழ் இலக்கணம் புரியுமா ?
(iii) நீங்க தமிழ் இலக்கணத்தைத் திருப்பிப் படிக்குறீங்களா ?
(iv) நீங்க ஹாஸ்டல்லே தமிழை எழுதி எழுதிப் பார்க்குறீங்களா ?
(v) நீங்க உங்க ஆசிரியரைப் போய்ப் போய்ப் பார்க்குறீங்களா ?
(vi) மாலையிலே வெளையாடி வெளையாடி உடம்பெல்லாம் வலிக்குதா ?

VOCABULARY

ஆரம்பி	'begin'	அடுத்த	'next'
இலக்கணம்	'grammar'	தரம்	'times'
திருப்பித் திருப்பி	'again and again'	தடவெ	'times'
முயற்சி செய்	'try'	சொல்லிக் கொடு	'teach'
இனிமே	'hereafter'		

GRAMMAR

17.70.180. We noticed in 17.68 that different verbal participle forms may be sequenced at a time with the finite verb in the main clause. When the two identical verbal participles are sequenced with the finite verb they together express continuous or repetitive action. See the following examples.

17. 70. 180. நரசய்யா படிக்கப் படிக்கப் பார்க்குறாரு.
நீங்க எழுதி எழுதிப் பார்க்கணும்.
நான் திருப்பித் திருப்பிப் படிச்சாச்சு.
பேராசிரியரெப் போய்ப் போய்ப் பாருங்க.

17.70.181. இனிமே which means 'hereafter' is a sentence conjunction. Example :

17. 70. 181. இனிமே, அவரெத்தான் போய்ப் பார்க்கணும்.

Sandhi 33. The consonants க், ச், த் and ப் are always doubled after the verbal participle ending in-அ_ preceded by two identical consonants. Example:

படிக்க + பார்க்குறாரு → படிக்கப் பார்க்குறாரு.

போய் + பாருங்க → போய்ப் பாருங்க (Refer S. 32 in 17.69)
எழுதி + பார்க்கணும் → எழுதிப் பார்க்கணும்
சொல்லி + கொடுக்குறாரு → சொல்லிக் கொடுக்குறாரு
திருப்பி + படிச்சாச்சு → திருப்பிப் படிச்சாச்சு (Refer S.31 in 17.68)
இலக்கணம் + ஏ → இலக்கணத்தெ (Refer S.17 in 2.13)
எப்படி + படிக்குறீங்க → எப்படிப் படிக்குறீங்க
சரியா + படிக்கலெ → சரியாப் படிக்கலெ (Refer S.21 in 3.20)

UNIT 17

LESSON 71

ABOUT THE EXAMINATION

DIALOGUE

மூர்த்தி : ஹலோ சுரேஷ்! பேராசிரியரெப்பார்க்கு-றீங்களா? இப்ப இலக்-கணமெல்லாம் புரியுதா?	Hallo Suresh! Are you meetin Professor (Sundaram)? Do you understand all the grammar now?
சுரேஷ் : இப்பப் பரவாயில்லெங்க. லேசாப்புரியுது. பேராசி-ரியரும் சொல்லிக்கொடுக்குறாரு.... கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடி-யுமா?	Now (it) is not bad, sir. (I) slowly understand. Professor (Sundaram) is also teaching (me). Is it possible to learn grammar without exerting one-self? I don't think.

மூர்த்தி : அது உண்மைதாங்க சுரேஷ். ஒரு சமயம் ஆங்கில இலக்கணம் புரியாம நான் ரொம்ப வருத்தப்பட்டேன். அப்புறம் விழுந்து விழுந்து படிச்சேன்.	That is true, Mr. Suresh. I suffered once not understanding the English grammar. Then, (I) worked (very) hard.
சுரேஷ் : நல்லாப் படிக்காம இலக்கணக் கேள்விக்குப் பதில் எழுத முடியாதுங்க. கடினமாப் பாடு படாமலா பலன் கெடைக்கும்? நீங்களே சொல்லுங்க.	(We) cannot answer the grammar question well without studying hard. Can one get benefit without working hard? You tell me.
மூர்த்தி : உண்மைதாங்க. சளைக்காம படிக்கணும்.... நேத்து ஏன் நரசய்யா இங்கே வராம வீட்டுக்குப் போனாரு?	That is true, sir. We should study without tiring--- Why did Narasaiah go to (his) house without coming here yesterday?
சுரேஷ் : அவருக்கு ஒரு அவசர வேலை இருந்தது. அதனாலெ தான் வரலெங்க.	He had an urgent work. That is why, he did not come, sir.
மூர்த்தி : ஓ! அப்படிங்களா?	Oh! Is that so?

DRILLS

a. Variation drill

17. 71. 182. நீங்க கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா?
ஆங்கில இலக்கணம் புரியாம நான் வருத்தப் பட்டேன்.
கடினமா பாடுபடாமலா பலன் கெடைக்கும்?
ஏன் நரசய்யா இங்கே வராம வீட்டுக்குப் போனாரு?

b. Build up drill

(i) நல்லாப் படிக்காம கேள்விக்குப் பதில் எழுத முடியாது.	நல்லாப் படிக்காம கேள்விக்குப் பதில் எழுத முடியாது.
முடியாது	முடியாது
எழுத	எழுத முடியாது
பதில்	பதில் எழுத முடியாது
கேள்விக்கு	கேள்விக்குப் பதில் எழுத முடியாது

படிக்காம	படிக்காம கேள்விக்குப் பதில் எழுத முடியாது
நல்லா	நல்லாப் படிக்காம கேள்விக்குப் பதில் எழுத முடியாது.
(ii) நான் ஆங்கில இலக்கணம் புரியாம வருத்தப்பட்டேன்.	நான் ஆங்கில இலக்கணம் புரியாம வருத்தப்பட்டேன்.
வருத்தப்பட்டேன்	வருத்தப்பட்டேன்
புரியாம	புரியாம வருத்தப்பட்டேன்
இலக்கணம்	இலக்கணம் புரியாம வருத்தப்பட்டேன்
ஆங்கில(ம்)	ஆங்கில இலக்கணம் புரியாம வருத்தப்பட்டேன்
நான்	நான் ஆங்கில இலக்கணம் புரியாம வருத்தப்பட்டேன்.
(iii) கடினமாப் பாடுபடாமலா பலன் கெடைக்கும் ?	கடினமாப் பாடுபடாமலா பலன் கெடைக்கும் ?
பாடுபடாமலா பலன் கெடைக்கும் ?	பாடுபடாமலா பலன் கெடைக்கும்?
கடினமா	கடினமாப் பாடுபடாமலா பலன் கெடைக்கும் ?
(iv) நீங்க கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா?	நீங்க கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா ?
முடியுமா ?	முடியுமா ?
படிக்க	படிக்க முடியுமா ?
இலக்கணம்	இலக்கணம் படிக்க முடியுமா ?
கஷ்டப்படாம	கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா ?
நீங்க	நீங்க கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா ?

c. Expansion drill

(i) நீங்க படிக்க முடியுமா ?	நீங்க படிக்க முடியுமா ?
இலக்கணம் படிக்க முடியுமா?	நீங்க இலக்கணம் படிக்க முடியுமா ?
கஷ்டப்படாமப் படிக்க முடியுமா ?	நீங்க கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா ?

(ii) நீங்க எழுத முடியாது.	நீங்க எழுத முடியாது.
கேள்விக்குப் பதில் எழுத முடியாது.	நீங்க கேள்விக்குப் பதில் எழுத முடியாது
நல்லாப் படிக்காம எழுத முடியாது	நீங்க நல்லாப் படிக்காம கேள்-விக்குப் பதில் எழுத முடியாது.
(iii) நான் வெருத்தப்பட்டேன்.	நான் வருத்தப்பட்டேன்.
இலக்கணம் புரியாம வெருத்தப்பட்டேன்	நான் இலக்கணம் புரியாம வருத்தப்பட்டேன்.
(iv) நீங்க படிக்கணும்.	நீங்க படிக்கணும்.
இலக்கணத்தெப் படிக்கணும்	நீங்க இலக்கணத்தெப் படிக்கணும்.
சலிக்காம படிக்கணும்	நீங்க சலிக்காம இலக்கணத்தெப் படிக்கணும்.

d. Question-Answer drill

(i) Q: ஹலோ சுரேஷ்! இப்ப இலக்கணமெல்லாம் புரியுதா?
A: இப்பப் பரவாயில்லெங்க. லேசாப் புரியுது.

(ii) Q: நேத்து ஏன் நரசய்யா இங்கே வராம வீட்டுக்குப் போனாரு?
A: அவருக்கு அவசரமா ஒரு வேலெ இருந்தது. அதனாலெதான் வரலெங்க.

e. Substitution drill

(i) பாடுபடாமப் பலன் கெடெக்குமா? Substitute and conjugate the verb accordingly.	பாடுபடாமப் பலன் கெடெக்குமா?
கஷ்டப்படு	கஷ்டப்படாமப் பலன் கெடெக்-குமா?
உழை	உழெக்காமப் பலன் கெடெக்குமா?
வேலெ பாரு	வேலெ பார்க்காமப் பலன் கெடெக்குமா?
முயற்சிசெய்	முயற்சிசெய்யாமப் பலன் கெடெக்குமா?
படி	படிக்காமப் பலன் கெடெக்குமா?
எழுது	எழுதாமப் பலன் கெடெக்குமா?
கொடு	கொடுக்காமப் பலன் கெடெக்குமா?
சந்தி	சந்திக்காமப் பலன் கெடெக்குமா?

(ii) பேராசிரியரும் சொல்லிக் கொடுக்குறாரு.	பேராசிரியரும் சொல்லிக் கொடுக்குறாரு.
Substitute and change the verb accordingly.	
பாரு	பேராசிரியரும் பார்த்துக் கொடுக்குறாரு.
கற்பி	பேராசிரியரும் கற்பிக்கக் கொடுக்குறாரு.
எடு	பேராசிரியரும் எடுத்துக் கொடுக்குறாரு.
(iii) ஆங்கில இலக்கணம் புரியலெ.	ஆங்கில இலக்கணம் புரியலெ.
Substitute	
தமிழ்	தமிழ் இலக்கணம் புரியலெ.
மலையாள(ம்)	மலையாள இலக்கணம் புரியலெ.
கன்னட(ம்)	கன்னட இலக்கணம் புரியலெ.
மராத்தி	மராத்தி இலக்கணம் புரியலெ.
ஹிந்தி	ஹிந்தி இலக்கணம் புரியலெ.

f. Transformation drill

(i) நான் கஷ்டப்பட்டு இலக்கணம் படிக்குறேன்.	நான் கஷ்டப்படாம இலக்கணம் படிக்குறேன்.
(ii) நான் நல்லாப் படிச்சு பதில் எழுதுனேன்.	நான் நல்லாப் படிக்காமப் பதில் எழுதுனேன்.
(iii) நரசய்யா இங்கே வந்து போறாரு.	நரசய்யா இங்கே வராமப் போறாரு.
(iv) நான் பேராசிரியருகிட்டெப் படிச்சு பரீட்செ எழுதுனேன்.	நான் பேராசிரியருகிட்டெப் படிக்காம பரீட்செ எழுதுனேன்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : இப்ப................புரியுது. (slowly)
இப்ப லேசாப் புரியுது.

(i) பேராசிரியரும்...............க்குறாரு. (teach)
(ii) ....ஆங்கில இலக்கணம் புரியலெ. (once)
(iii) நான் ரொம்ப...............+ட்டேன். (feel sorry)
(iv) ....+ஆம இலக்கணம் படிக்க முடியுமா ? (suffer)
(v) கடினமா...............+ஆமலா பலன் கெடெக்கும் ? (work)
(vi) பாடுபடாமலா...............கெடெக்கும் ? (benefit)
(vii) அவருக்கு ஒரு...............வேலெ இருந்தது. (urgent)

h. Write the word represented by the formula.

Example : படிக்காம　　படி + Verb. Part. (Neg)

(i) பாரு + Verb. Part. (Neg.) : ....
(ii) அடி + Verb. Part. (Neg.) : ....
(iii) கொடு + Verb. Part. (Neg.) : ....
(iv) வா + Verb. Part. (Neg.) : ....
(v) வெளெயாடு + Verb. Part. (Neg.) : ....
(vi) கேளு + Verb. Part. (Neg.) : ....
(vii) எழுது + Verb. Part. (Neg.) ....

i. Fill in the blanks using the negative verbal participle form of the verbs given in parentheses.

(i) ....இலெக்கணம் படிக்க முடியுமா ? (கஷ்டப்படு)
(ii) இலெக்கணம்...............நான் வருத்தப்பட்டேன். (புரி)
(iii) நல்லாப்............... பதில் எழுத முடியாது. (படி)
(iv) ....பலனை கெடைக்குமா ? (பாடுபடு)
(v) நரசய்யா...............போனாரு. (வா)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நீங்க இலக்கணம் படிக்க முடியுமா ?
நீங்க கஷ்டப்பட மாட்டீங்க.
நீங்க கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா ?

(i) நீங்க இலக்கணம் படிக்க முடியுமா ?
பேராசிரியரு சொல்லிக் கொடுக்க மாட்டாரு.
(ii) நான் ரொம்ப வருத்தப்பட்டேன்.
எனக்கு ஆங்கில இலக்கணம் புரியலெ.
(iii) உங்களாலெ கேள்விக்குப் பதில் எழுத முடியாது.
நீங்க நல்லாப் படிக்கமாட்டீங்க.
(iv) உங்களுக்குப் பலன் கெடைக்குமா ?
நீங்க கடுமையாப் பாடுபட மாட்டீங்க.
(v) நரசய்யா எங்கே போனாரு ?
நரசய்யா நேத்து இங்கே வரலெ.

k. Write the word represented by the formula.

Example : படிச்சேன்　　படி + Past

(i) வருத்தப்படு + Past : ....
(ii) விழு + Past : ....
(iii) பாடுபடு + Past : ....

l. Join the following according to the sandhi rules.

(i) படிக்காம + ஆ :……… செய்யாம + ஆ :………
உழெக்காம + ஆ :……… வெளெயாடாம + ஆ :………

m. Answer these questions.

(i) பள்ளிக்கூடத்துலே ஆங்கில இலக்கணம் புரியாம நீங்க வருத்தப்பட்டீங்களா ?

(ii) போன பரீட்செயிலே எல்லாக் கேள்விக்கும் பதில் எழுதாம வந்தீங்களா ?

(iii) கடினமா உழெக்காம மொதல் வகுப்பு கெடெக்குமா ?

(iv) காலெயிலே குளிக்காம சாப்பிடக்கூடாது, இல்லே ?

(v) நீங்க காலெயிலே சாப்பிடாமலா இன்ஸ்டிடியூட்டுக்கு வந்தீங்க ?

(vi) நீங்க கடினமா உழெக்காமலா போன பரீட்செயிலே பாஸ் பண்ணுனீங்க ?

(vii) நீங்க போன பரீட்செக்கு விழுந்து விழுந்து படிச்சீங்களாமே, உண்மெதானா ?

VOCABULARY

லேசா	'slowly'	ஒருசமயம்	'once'
வருத்தப்படு	'suffer, feel sorry'	பாடுபடு	'work'
பலன்	'benefit'	சளெ	'be tired'
அவசர	'urgent'		

GRAMMAR

17.71.182. The negative verbal participle is formed by adding -ஆம to the verb stem. The formation of the negative verbal participles like கஷ்டப் படாம, புரியாம, பாடுபடாம, வராம etc., may be represented as follows:

கஷ்டப்படு + ஆம : கஷ்டப்படாம
புரி + ஆம : புரியாம
பாடுபடு + ஆம : பாடுபடாம
வா + ஆம : வராம

Example.

17. 71. 182. நீங்க கஷ்டப்படாம இலக்கணம் படிக்க முடியுமா ?
ஆங்கில இலக்கணம் புரியாம நான் வருத்தப் பட்டேன்.
கடினமா பாடுபடாமலா பலன் கெடெக்கும் ?
ஏன் நரசய்யா இங்கே வராம வீட்டுக்குப் போறாரு?

Sandhi 35. The negative verbal participle suffix -ஆம is realized as -ஆமல் when a vowel beginning suffix is added to it. Example :

கஷ்டப்படாம + ஆ → கஷ்டப்படாமலா
பாடுபடாம + ஆ → பாடுபடாமலா
வராம + ஆ → வராமலா

Sandhi 35. The consonants க், ச், த் and ப் are always doubled after the negative verbal participle suffix -ஆம. Example

கஷ்டப்படாம + படிக்க → கஷ்டப்படாமப் படிக்க (முடியுமா ?)
சளைக்காம + படிக்கணும் → சளைக்காமப் படிக்கணும்
சொல்லி + கொடுக்குறாரு → சொல்லிக்கொடுக்குறாரு (Refer S.31 in 17.68)
இலக்கணம் + கேள்வி → இலக்கண கேள்வி (Refer S.2 in 1.1)
இலக்கண + கேள்வி → இலக்கணக் கேள்வி (Refer S.4 in 1.2)

UNIT 17

LESSON 72

CONSULTING A TEACHER

DIALOGUE

சுந்தரம் : வாங்க சுரேஷ். என்னைத் தேடி நேத்து வீட்டுக்கு வந்தீங்களாமே ?	Please come Mr. Suresh. It seems that (you) came in search of (me) to my house yesterday ?
சுரேஷ்: ஆமாங்க. அதிகாலையிலே வந்தும் உங்களைப் பார்க்க முடியலை.	Yes, sir. Eventhough (I) came early in the monring (I) could not meet you.

சுந்தரம் : நேத்துக் காலெயிலே மாயவரத்துலே ஒரு சொற்பொழிவு இருந்தது. அதிகாலெயிலே அஞ்சுமணிக்கே ஸ்டேஷனுக்குப் போனேன்; இருந்தும் ரயில் கெடெக்கலெ .... அப்புறமா பஸ்லே போனேன். என்ன விசேஷம் ?

There was a lecture yesterday morning at Mayuram. (I) went to the railway station early in the morning at 5 o' clock itself. Even then (I) could not get the train.... Then (I) went by bus. What is the matter ?

சுரேஷ் : ஒண்ணுமில்லெங்க .... எவ்வளவு படிச்சும் தமிழ் இலக்கணத்துலே செல பகுதி புரியலெ.... உங்களுக்கு இப்ப நேரம் இருக்குதா ?

Nothing (special).... Though (I) studied so many times (I) do not understand some portions in Tamil grammar.... Do you have time now ?

சுந்தரம் : ஆமா ! எனக்குப் பதினோரு மணிக்குத்தான் வகுப்பு .... கேளுங்க ....

Yes. I have class only at 11 o' clock.... Please ask me....

சுரேஷ் : நீங்க வகுப்புலே பல தடவெ வெளக்கியும் செல பகுதி கஷ்டமா இருக்குது. அதுலே 'வினெயெச்சம்' ஒரு பகுதிங்க.

Though you explained many times in the classroom (I) have difficulty (in understanding) some portions (in grammar). The verbal participle is one among them.

சுந்தரம் : நான் வினெயெச்சத்தெப் பல தடவெ வகுப்புலே வெளக்கமாச் சொல்லியும் நெறெயப் பேருக்குப் புரியலெ. இப்பச் சொல்லுறேன், கவனமா கேளுங்க.

Though I explained the 'verbal participle' many times in the classroom in detail many (students) have not understood. (I) will explain to you now. Listen carefully.

சுரேஷ் : சரிங்க.

Alright, sir.

DRILLS

a. Variation drill

17. 72. 183. நான் அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.
எவ்வளவு படிச்சும் எனக்குத் தமிழ் இலக்கணம் புரியலெ.

நீங்க பலதடவெ வெளக்கியும் செலபகுதி கஷ்டமா இருக்குது.
நான் பல தடவெ வெளக்கமா சொல்லியும் நெறெயப் பேருக்குப் புரியலெ.

b.- Build up drill

(i) நான் அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.	நான் அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.
முடியலெ	முடியலெ
பார்க்க	பார்க்க முடியலெ
உங்களெ	உங்களெப் பார்க்க முடியலெ
வந்தும்	வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ
அதிகாலெயிலே	அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ
நான்	நான் அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.

(ii) எவ்வளவு படிச்சும் தமிழ் இலக்கணம் புரியலெ.	எவ்வளவு படிச்சும் தமிழ் இலக்கணம் புரியலெ.
புரியலெ	புரியலெ
இலக்கணம்	இலக்கணம் புரியலெ
தமிழ்	தமிழ் இலக்கணம் புரியலெ
படிச்சும்	படிச்சும் தமிழ் இலக்கணம் புரியலெ
எவ்வளவு	எவ்வளவு படிச்சும் தமிழ் இலக்கணம் புரியலெ.

(iii) நீங்க பல தடவெ வெளக்கியும் செல பகுதி கஷ்டமா இருக்குது.	நீங்க பலதடவெ வெளக்கியும் செல பகுதி கஷ்டமா இருக்குது.
இருக்குது	இருக்குது
கஷ்டமா	கஷ்டமா இருக்குது
செல பகுதி	செல பகுதி கஷ்டமா இருக்குது
வெளக்கியும்	வெளக்கியும் செலபகுதி கஷ்டமா இருக்குது
பல தடவெ	பல தடவெ வெளக்கியும் செல பகுதி கஷ்டமா இருக்குது
நீங்க	நீங்க பல தடவெ வெளக்கியும் செல பகுதி கஷ்டமா இருக்குது.

c. Expansion drill

(i) நான் பார்க்க முடியலெ.	நான் பார்க்க முடியலெ.
உங்களெப் பார்க்க முடியலெ	நான் உங்களெப் பார்க்க முடியலெ.
அதிகாலெயிலே வந்தும் பார்க்க முடியலெ	நான் அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.
(ii) எனக்குப் புரியலெ	எனக்குப் புரியலெ.
தமிழ் இலக்கணம் புரியலெ	எனக்குத் தமிழ் இலக்கணம் புரியலெ.
எவ்வளவு படிச்சும் புரியலெ	எனக்கு எவ்வளவு படிச்சும் தமிழ் இலக்கணம் புரியலெ.
(iii) நெறெயப் பேருக்குப் புரியலெ.	நெறெயப் பேருக்குப் புரியலெ.
வெளக்கமா சொல்லியும் புரியலெ	நெறெயப் பேருக்கு வெளக்கமா சொல்லியும் புரியலெ.

d. Question-Answer drill

(i) Q : என்னெத் தேடி நேத்து வீட்டுக்கு வந்தீங்களாமே ?
A : ஆமாங்க. அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.

(ii) Q : என்ன விசேஷம் ?
A : ஒண்ணுமில்லெங்க .

(iii) Q : உங்களுக்கு இப்ப நேரம் இருக்குதா ?
A : ஆமா. எனக்கு பதினொரு மணிக்குத்தான் வகுப்பு.

e. Substitution drill

(i) அதிகாலெயிலே வந்தும் பார்க்க முடியலெ.	அதிகாலெயிலே வந்தும் பார்க்க முடியலெ.
Substitute and conjugate the verb suitably.	
போ	அதிகாலெயிலே போயும் பார்க்க முடியலெ.
கௌம்பு	அதிகாலெயிலே கௌம்பியும் பார்க்க முடியலெ.
புறப்படு	அதிகாலெயிலே புறப்பட்டும் பார்க்க முடியலெ.
சேரு	அதிகாலெயிலே சேர்ந்தும் பார்க்க முடியலெ.
சொல்லு	அதிகாலெயிலே சொல்லியும் பார்க்க முடியலெ.
தெரிவி	அதிகாலெயிலே தெரிவிச்சும் பார்க்க முடியலெ.

(ii) உங்களைப் பார்க்க முடியலெ.	உங்களைப் பார்க்க முடியலெ.
Substitute and change the verb suitably.	
சந்தி	உங்களைச் சந்திக்க முடியலெ.
கேளு	உங்களைக் கேக்க முடியலெ.
வழியனுப்பு	உங்களை வழியனுப்ப முடியலெ.
அனுப்பு	உங்களை அனுப்ப முடியலெ.
கௌப்பு	உங்களைக் கௌப்ப முடியலெ.
(iii) செல பகுதி புரியலெ.	செல பகுதி புரியலெ.
Substitute	
பல	பல பகுதி புரியலெ.
நெறெய	நெறெயப் பகுதி புரியலெ.
கொஞ்சம்	கொஞ்சப் பகுதி புரியலெ.

f. Integration drill

(i) நான் அவரெப் பார்க்க முடியலெ. நான் அதிகாலெயிலே போனேன்.	நான் அதிகாலெயிலே போய் அவரெப் பார்க்க முடியலெ.
(ii) நீங்க நேத்து வந்தீங்களா ? நீங்க என்னெத் தேடுனீங்க.	நீங்க என்னெத் தேடி நேத்து வந்தீங்களா ?
(iii) நான் ரயில்லே போனேன். நான் அதிகாலெயிலே ஸ்டேஷனுக்குப் போனேன்.	நான் அதிகாலெயிலே ஸ்டேஷனுக்குப் போய் ரயில்லே போனேன்.
(iv) நான் தமிழ் இலக்கணத்தெப் வௌக்கமாச் சொன்னேன். நான் தமிழ் இலக்கணத்தெப் படிச்சேன்.	நான் தமிழ் இலக்கணத்தெப் படிச்சு வௌக்கமாச் சொன்னேன்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : என்னெ...............+ இ வீட்டுக்கு வந்தீங்களா ?
(search)

என்னெத் தேடி வீட்டுக்கு வந்தீங்களா ?

(i) நேத்து ஒரு...............இருந்தது. (lecture)
(ii) தமிழ் இலக்கணத்துலே செல...............புரியலெ. (portion)
(iii) உங்களுக்கு இப்ப...............இருக்குதா ? (time)

(iv) நீங்க பல..............வெளக்கியும் கஷ்டமா இருக்குது. (times)
(v) நீங்க..............தடவெ வெளக்கியும் கஷ்டமா இருக்குது. (many)
(vi) அதுலே..............ஒரு பகுதிங்க. (verbal participle)
(vii) நீங்க இப்ப..............கேளுங்க. (carefully)
(viii) நீங்க இப்ப கவனமா..............ங்க. (listen to)

h. Write the word represented by the formula.

Example : கேட்டு   கேளு + Verb. Part

(i) புறப்படு + Verb. Part : ....
(ii) தேடு + Verb. Part : ....
(iii) வெளக்கு + Verb. Part : ....
(iv) இரு + Verb. Part : ....

i. Use the verbal participle and the suffix -உம் form of the verbs given in parentheses in the blanks.

(i) நான்..............உங்களெப் பார்க்க முடியலெ. (வா)
(ii) ....ரயில் கெடெக்கலெ. (இரு)
(iii) எவ்வளவு..............தமிழ் இலக்கணம் புரியலெ. (படி)
(iv) பலதடவெ..............தமிழ் இலக்கணம் கஷ்டமா இருக்குது. (வெளக்கு)
(v) நான் வெளக்கமா..............செலெப் பேருக்குப் புரியலெ. (சொல்லு)

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : நான் அதிகாலெயிலே வந்தேன்.
இருந்தும் நான் உங்களெப் பார்க்க முடியலெ.
நான் அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.

(i) நான் அஞ்சுமணிக்கே ஸ்டேஷனுக்குப் போனேன்.
இருந்தும் எனக்கு ரயில் கெடெக்கலெ.
(ii) நான் பஸ்லே கௌம்புனேன்.
இருந்தும் நான் அவரெப் பார்க்க முடியலெ.
(iii) நான் தமிழ் இலக்கணத்தெ நல்லாப் படிச்சேன்.
இருந்தும் எனக்குச் செல பகுதி புரியலெ.
(iv) நான் பல தடவெ வெளக்குனேன்.
இருந்தும் செலருக்குச் செல பகுதி புரியலெ.
(v) நான் பல தடவெ வெளக்குனேன்.
இருந்தும் செலருக்குச் செல பகுதி கஷ்டமா இருக்குது.
(vi) நான் வகுப்புலே வினெயெச்சத்தெ வெளக்கிச் சொன்னேன்.
இருந்தும் செலருக்கு நல்லாப் புரியலெ.

k. Write the word represented by the formula.

Example : **போனேன்** போ + Past

(i) தேடு + Past : ....
(ii) கேளு + Past : ....
(iii) வெளக்கு + Past : ....

l. Change the underlined word or group of words to its corresponding question.

(i) நீங்க <u>என்னெத்</u> தேடி வீட்டுக்கு வந்தீங்க.
(ii) <u>நேத்துக் காலெயிலே</u> சொற்பொழிவு இருந்தது.
(iii) செலபகுதி <u>கஷ்டமா</u> இருக்குது.
(iv) <u>எனக்குப்</u> பதினொரு மணிக்கு வகுப்பு இருக்குது.

m. Join the following according to the sandhi rules.

(i) மாயவரம் + உடனே : .... (ii) வெளக்கி + உம் :........
இலக்கணம் + உடனே :........ சொல்லி + உம் :........

n. Answer these questions.

(i) திரும்பத் திரும்பப் படிச்சும் உங்களுக்குத் தமிழ் இலக்கணம் புரியலெங்களா ?
(ii) நான் வினெயெச்சத்தெ பல தடவெ வகுப்புலே வெளக்கமாச் சொல்லியும் நெறெயப் பேருக்குப் புரியலெ, இல்லே ?
(iii) நீங்க ஜூலெ மாசமே மைசூருக்கு வந்தும் சாமுண்டி மலெயெப் பார்க்கலெயா ?
(iv) உங்களுக்குக் காலெயிலே எத்தனெ மணிக்கு வகுப்பு இருக்குது ?
(v) நீங்க இந்தப் பாடத்தெ எத்தனெ தடவெ எழுதுனீங்க ?
(vi) நேத்து அதிகாலெயிலே உங்க வீட்டுக்கு வந்தும் உங்களெச் சந்திக்க முடியலெ. நீங்க எங்கே போனீங்க ?

VOCABULARY

தேடு	'search'	சொற்பொழிவு	'lecture'
இருந்தும்	'eventhough'	செல	'some'
பல	'many'	வெளக்கு	'explain'
வினெயெச்சம்	'varbal participle'	வெளக்கமா	'in detail'
வனமா	'carefully'		

GRAMMAR

17.72.183. The verbal participle followed by the suffix -உம் signifies 'although' in Tamil.

வந்து + உம் : வந்தும் 'although (I) came'
படிச்சு + உம் : 'although (I) read'
வெளக்கு + உம் : வெளக்கியும் 'although (I) explained' etc.

Example.

17. 72. 183. நான் அதிகாலெயிலே வந்தும் உங்களெப் பார்க்க முடியலெ.
எவ்வளவு படிச்சும் எனக்குத் தமிழ் இலக்கணம் புரியலெ.
நீங்க பல தடவெ வெளக்கியும் கஷ்டமா இருக்குது.

Sandhi : வந்தீங்க + ஆமே → வந்தீங்களாமே (Refer S.19 in 2.14)
என்னெ + தேடி → என்னெத் தேடி
உங்களெ + பார்க்க முடியலெ → உங்களெப் பார்க்க முடியலெ (Refer S.20 in 2.17)
மாயவரம் + உலே → மாயவரத்துலே
இலக்கணம் + உலே → இலக்கணத்துலே
வினையெச்சம் + ஏ → வினையெச்சத்தெ (Refer S.17 in 2.13)

UNIT 17

LESSON 73

THE MOON

நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப்பூக் கொண்டுவா
நடுவீட்டில் வை
நல்லதுதி செய்
தங்கக்கிண்ணம் பார்த்து
தயிரும் சோறும் சேர்த்து
அள்ளி அள்ளி எடுத்து
அழகாய் வாயில் ஊட்டு.

DRILLS

a. Variation drill

17. 73. 186. நிலா நிலா ஓடி வா
மலைமேலே ஏறி வா.

b. Build up drill

(i) நிலா நிலா ஓடி வா. | நிலா நிலா ஓடி வா.
ஓடி வா | ஓடி வா
நிலா நிலா | நிலா நிலா ஓடி வா.

(ii) மலைமேலே ஏறி வா. | மலைமேலே ஏறி வா.
ஏறி வா | ஏறி வா
மலைமேலே | மலைமேலே ஏறி வா.

EXERCISES

c. Write the word represented by the formula.

Example : ஓடி ஓடு + Verb Part.

(i) ஏறு + Verb Part : ....
(ii) பாடு + Verb Part : ....
(iii) சேரு + Verb Part : ....
(iv) எடு + Verb Part : ....
(v) அள்ளு + Verb Part : ....

d. Give the spoken equivalents of the following written forms.

(i) நில்லாமல் : ....
(ii) மலை : ....
(iii) மல்லிகைப்பூ : ....
(iv) வீட்டில் : ....
(v) அழகாய் : ....

e. Answer these questions.

(i) உங்களாலெ புஸ்தகத்தெப் பார்க்காமெ இந்தப் பாட்டெச் சொல்ல முடியுமா ?
(ii) இந்தப் பாட்டெப் போலெ வேற ஏதாவது பாட்டு உங்களுக்குத் தெரியுமா ?
(iii) உங்களுக்கு மல்லிகெப்பூ ரொம்பப் பிடிக்குமா ?
(iv) உங்க வீட்டுலே தங்கக் கிண்ணம் இருக்குதா ?

VOCABULARY

நிலா	'the Moon'	நடு	'middle'
துதி	'worship'	கிண்ணம்	'bowel'
சேரு	'mix'	அள்ளு	'take up a handful'

GRAMMAR

17.73.184. The verbal participle quite often expresses an action which takes place simultaneously with the action described by the finite verb. See the following examples.

ஓடிவா 'come running'
ஏறிவா 'come climbing (the mountain)

சுரேஷ் : பெரம்பூர் போகணும் .... எவ்வளவு நேரம் ரயில் பெட்டித் தொழிற்சாலைக்குப் போய்ச் சேருறதுக்கு ஆகும் ?	(I) want to go to Perambur. How long will it take to reach the Perambur coach factory ?
டாக்ஸிக்காரன் : சுமார் ஒருமணி நேரம் ஆகுங்க.	It will take about an hour, sir.

சுரேஷ் : அங்கேயிருந்து திரும்பி எழும்பூர் ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும்?	Howlong will it take to return to Egmore railway station from there ?
டாக்ஸிக்காரன் : சுமார் ஒண்ணரெ மணிநேரம் ஆகுங்க ... எந்தப் பக்கம் போற ரயில்லே நீங்க போகப் போறீங்க ?	It will take about an hour and a half ...To which direction are you (planning) to go by train ?
சுரேஷ் : கடலூர் வழியாப் போற ரயில்லே திருச்சிக்குப் போகணும்.	(I) have to go to Trichy by the train that goes via Cuddalore.
டாக்ஸிக்காரன் : அந்த ரயில் புறப்பட இன்னும் மூணரெ மணிநேரம் இருக்குதுங்க. ரயில்பெட்டித் தொழிற்சாலெயிலே-யிருந்து ஒருமணிக்குள்ளே நீங்க திரும்புனா ரயிலடிக்குச் சரியான நேரத்துக்கு வரலாம் .... ஒரு மணிக்குள்ளே உங்க வேலெயெ முடிக்க முடியுமா ?	There is three and a half hours time for the departure of that train, sir. If you return within an hour from the coach factory you can come to the railway station in time...Can (you) finish your work within one hour ?
சுரேஷ் : சரி, பார்க்கலாம்... நீ மீட்டரெப் போடப்பா.	Alright, let us see...You put on the meter.

DRILLS

a. Variation drill

19. 79. 192. எழும்பூர் ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும்?
அந்த ரயில் புறப்பட இன்னும் மூணரெ மணி நேரம் இருக்குது.
ரயில்பெட்டித் தொழிற்சாலெக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் ஆகும் ?

19. 79. 193. எவ்வளவு நேரம் எழும்பூர் ரயிலடிக்கு வறதுக்கு ஆகும் ?
இன்னும் எவ்வளவு நேரம் அந்த ரயில் புறப்படுறதுக்கு ஆகும் ?
எவ்வளவு நேரம் ரயில்பெட்டித் தொழிற்சா-லெக்குப் போய்ச் சேருறதுக்கு ஆகும் ?

b. Build up drill

(i) ரயில்பெட்டித் தொழிற்சா- லெக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?	ரயில்பெட்டித் தொழிற்சாலெக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?
எவ்வளவு நேரம் ஆகும்?	எவ்வளவு நேரம் ஆகும்?
சேர	சேர எவ்வளவு நேரம் ஆகும்?
போய்	போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?
தொழிற்சாலெக்கு	தொழிற்சாலெக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?
ரயில்பெட்டி	ரயில்பெட்டித் தொழிற்சாலெக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?
(ii) அந்த ரயில் புறப்பட இன்னும் மூணரெ மணி நேரம் இருக்குது.	அந்த ரயில் புறப்பட இன்னும் மூணரெ மணி நேரம் இருக்குது.
இருக்குது	இருக்குது
நேரம்	நேரம் இருக்குது
மூணரெ மணி	மூணரெ மணி நேரம் இருக்குது.
இன்னும்	இன்னும் மூணரெ மணி நேரம் இருக்குது
புறப்பட	புறப்பட இன்னும் மூணரெ மணி நேரம் இருக்குது
ரயில்	ரயில் புறப்பட இன்னும் மூணரெ மணி நேரம் இருக்குது.
அந்த	அந்த ரயில் புறப்பட இன்னும் மூணரெ மணி நேரம் இருக்குது.

c. Expansion drill

(i) நீ வர எவ்வளவு நேரம் ஆகும்?	நீ வர எவ்வளவு நேரம் ஆகும்?
எழும்பூர் ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும்?	நீ எழும்பூர் ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும்?
(ii) நீ சேர எவ்வளவு நேரம் ஆகும்?	நீ சேர எவ்வளவு நேரம் ஆகும்?
போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?	நீ போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?
ரயில்பெட்டித் தொழிற்சா- லெக்கு போய்ச் சேர எவ்வ- ளவு நேரம் ஆகும்?	நீ ரயில்பெட்டித் தொழிற்சா- லெக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?

d. Question-Answer drill

(i) Q: டாக்ஸி வருதாப்பா ?
A: உக்காருங்க, ஸார்.

(ii) Q: எவ்வளவு நேரம் ரயில்பெட்டித் தொழிற்சாலைக்குப் போய்ச் சேருறதுக்கு ஆகும் ?
A: சுமார் ஒரு மணி நேரம் ஆகுங்க.

(iii) Q: எழும்பூர் ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும் ?
A: சுமார் ஒண்ணரை மணி நேரம் ஆகுங்க

(iv) Q: எந்தப் பக்கம் போற ரயில்லே நீங்க போகப் போறீங்க?
A: கடலூர் வழியா போற ரயில்லே திருச்சிக்குப் போகணும்.

(v) Q: ஒருமணிக்கு உள்ளே உங்க வேலையை முடிக்க முடியுமா ?
A: சரி, பாக்கலாம்.

e. Substitution drill

(i) ரயிலடிக்கு வறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ? Substitute and change the verb accordingly	ரயிலடிக்கு வறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?
போ	ரயிலடிக்குப் போறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?
புறப்படு	ரயிலடிக்குப் புறப்படுறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?
கௌம்பு	ரயிலடிக்குக் கௌம்புறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?
திரும்பு	ரயிலடிக்குத் திரும்புறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?
(ii) ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும் ? Substitute and change the verb accordingly.	ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும் ?
புறப்படு	ரயிலடிக்குப் புறப்பட எவ்வளவு நேரம் ஆகும் ?
கௌம்பு	ரயிலடிக்குக் கௌம்ப எவ்வளவு நேரம் ஆகும் ?
போ	ரயிலடிக்குப் போக எவ்வளவு நேரம் ஆகும் ?

(iii) சுமார் ஒருமணி நேரம் ஆகும்.	சுமார் ஒருமணி நேரம் ஆகும்.
Substitute	
ரெண்டு	சுமார் ரெண்டுமணி நேரம் ஆகும்.
மூணரெ	சுமார் மூணரெமணி நேரம் ஆகும்.
நாலேகால்	சுமார் நாலேகால் மணி நேரம் ஆகும்.
அஞ்சேமுக்கால்	சுமார் அஞ்சேமுக்கால் மணி நேரம் ஆகும்.

f Integration drill

(i) எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும்? தொழிற்சாலெக்குப் போய்ச் சேருவேன்.	எவ்வளவு நேரம் தொழிற்-சாலெக்குப் போய்ச் சேருறதுக்கு ஆகும்?
எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும்? எழும்பூர் ரயிலடிக்கு வருவேன்.	எவ்வளவு நேரம் எழும்பூர் ரயிலடிக்கு வறதுக்கு ஆகும்?
மூணரெ மணி நேரம் அதுக்கு இருக்குது. அந்த ரயில் புறப்படும்.	மூணரெ மணி நேரம் அந்த ரயில் புறப்படுறதுக்கு இருக்குது.
(ii) எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும்? தொழிற்சாலெக்குப் போய்ச் சேருவேன்.	எவ்வளவு நேரம் தொழிற்-சாலெக்குப் போய்ச் சேர ஆகும்?
எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும்? எழும்பூர் ரயிலடிக்கு வருவேன்.	எவ்வளவு நேரம் எழும்பூர் ரயிலடிக்கு வர ஆகும்?
மூணரெ மணி நேரம் அதுக்கு இருக்குது. அந்த ரயில் புறப்படும்.	மூணரெ மணி நேரம் அந்த ரயில் புறப்பட இருக்குது.

g. Transformation drill

(i) தொழிற்சாலெக்குப் போய்ச் சேர ஒரு மணி நேரம் ஆகும். ரயில் புறப்பட மூணரெ மணி நேரம் ஆகும்.	தொழிற்சாலெக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்? ரயில் புறப்பட எவ்வளவு நேரம் ஆகும்?

ரயிலடிக்கு வர ரெண்டு மணி நேரம் ஆகும்.	ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும்?
ரயிலடிக்குத் திரும்ப ஒண்ணரை மணி நேரம் ஆகும்.	ரயிலடிக்குத் திரும்ப எவ்வளவு நேரம் ஆகும்?

EXERCISES

h. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : .... தொழிற்சாலைக்குப் போகணும். (railway coach)

ரயில்பெட்டித் தொழிற்சாலைக்குப் போகணும்.

(i) .... க்குப் போகணும். (factory)

(ii) கடலூர் .... + ஆ போற ரயில்லே போகணும். (via)

(iii) நீ .... + ஏப் போட்டியா. (meter)

i. Write the word represented by the formula

Example : போக   போ + Inf.

(i) சேரு + Inf : ....

(ii) ஆகு + Inf : ....

(iii) திரும்பு + Inf : ....

(iv) புறப்படு + Inf : ....

(v) இரு + Inf : ....

(vi) முடி + Inf : ....

(vii) போடு + Inf : ....

(viii) உக்காரு + Inf : ....

j. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும்?
தொழிற்சாலைக்குப் போய்ச் சேருவேன்.

எவ்வளவு நேரம் தொழிற்சாலைக்குப் போய்ச் சேருறதுக்கு ஆகும்?
(தொழிற்சாலைக்குப் போய்ச் சேருறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?)

(i) எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும்?
எழும்பூர் ரயிலடிக்கு வருவேன்.

(ii) மூணரை மணி நேரம் அதுக்கு இருக்குது.
அந்த ரயில் புறப்படும்.

(iii) எத்தனை மணி நேரம் அதுக்கு இருக்குது?
அந்த ரயில் புறப்படும்.

Model எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும் ?
தொழிற்சாலெக்குப் போய்ச் சேருவேன்.
எவ்வளவு நேரம் தொழிற்சாலெக்குப் போய்ச் சேர ஆகும் ?
(தொழிற்சாலெக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும் ?)

(i) எவ்வளவு நேரம் அதுக்கு ஆகும் ?
எழும்பூர் ரயிலடிக்கு வருவேன்.

(ii) மூணரெ மணிநேரம் அதுக்கு இருக்குது.
அந்த ரயில் புறப்படும்.

(iii) எத்தனெ மணி நேரம் அதுக்கு இருக்குது ?
அந்த ரயில் புறப்படும்.

k. Frame ten sentences from the table given below.

Example : நீங்க புறப்பட எவ்வளவு நேரம் ஆகும் ?

நீங்க அவங்க	குடி ஏறு தூங்கு எழுது சாப்பிடு	எவ்வளவு நேரம் ஆகும் ?

l. Join the following according to the sandhi rules.

(i) ஒண்ணு + அரெ : ....
மூணு + அரெ : ....
சேரு + அ : ....
ஆகு + அ : ....

(ii) நேரம் + உக்கு : ......
பக்கம் + உக்கு : ....

m. Answer these questions.

(i) நீங்க உங்க ஊருக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?
(ii) நீங்க எந்த ஊரு வழியா ஊருக்குப் போவீங்க ?
(iii) ஹாஸ்டல்லேயிருந்து இன்ஸ்டிடியூட்டுக்கு வர உங்களுக்கு எத்தனெ மணி நேரம் ஆகும் ?
(iv) ரயிலடியிலேயிருந்து உங்க கிராமத்துக்கு டாக்சியிலே போக எத்தனெ மணிநேரம் ஆகும் ?
(v) நீங்க பெரம்பூர்லே ரயில் பெட்டித் தொழிற்சாலெயெப் பார்த்தீங்களா ?

VOCABULARY

டாக்ஸி	'taxi car'	ரயில்பெட்டி	'railway coach'
தொழிற்சாலெ	'factory'	வழி	'via'
மீட்டர்	'meter'	டாக்ஸிக்காரன்	'taxi driver'

GRAMMAR

19.79.192. Infinitives such as வர 'to come', புறப்பட 'to start' and சேர 'to reach' are the adverbial modifiers of time. See the following examples.

> **19. 79. 192.** எழும்பூர் ரயிலடிக்கு வர எவ்வளவு நேரம் ஆகும்?
> அந்த ரயில் புறப்பட இன்னும் மூணரை மணி
> நேரம் இருக்குது.
> ரயில்பெட்டித் தொழிற்சாலைக்குப் போய்ச்சேர
> எவ்வளவு நேரம் ஆகும்?

19.79.193. This use of infinitive is mostly expressed by the verbal nouns as in the following examples.

> **19. 79. 193.** எவ்வளவு நேரம் எழும்பூர் ரயிலடிக்கு வறதுக்கு
> ஆகும்?
> இன்னும் எவ்வளவு நேரம் அந்த ரயில்
> புறப்படுறதுக்கு இருக்குது?
> எவ்வளவு நேரம் ரயில்பெட்டித் தொழிற்
> சாலைக்குப் போய்ச் சேருறதுக்கு ஆகும்?

Although the word order of these sentences is to be followed as indicated in (19.79.193) they are normally spoken as எழும்பூர் ரயிலடிக்கு வறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?, ரயில்பெட்டித் தொழிற்சாலைக்குப் போய்ச் சேருறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும்? etc.

Sandhi : ரயில்பெட்டி + தொழிற்சாலைக்கு → ரயில்பெட்டித் தொழிற்-
சாலைக்கு

எந்த + பக்கம் → எந்தப்பக்கம் (Refer S.4 in 1.2)
போய் + சேருறதுக்கு → போய்ச் சேருறதுக்கு (Refer S.32 in 17.69)
போக + போறீங்க → போகப் போறீங்க (Refer S.29 in 15.56)
திருச்சிக்கு + போகணும் → திருச்சிக்குப் போகணும்
ரயிலடிக்கு + சரியான → ரயிலடிக்குச் சரியான (நேரத்துக்கு வரலாம்)
(Refer S.18 in 2.14)

UNIT 19

LESSON 80

APPOINTING A SERVANT MAID

DIALOGUE

கமலா : உனக்கு எந்த ஊரம்மா ?	Which place do you belong to ?
வேலைக்காரி : எனக்குப் பள்ளத்தூர் கிராமங்க .... வயல் வேலை செய்யவும் வீட்டுவேலை செய்யவும் எனக்குத் தெரியுங்க.	I belong to Pallathur village---I know field work as well as domestic work.
கமலா : எனக்கு வீட்டுவேலை செய்யத்தான் ஒருத்தி வேணும் ... நீ செய்றேயா ?	I need a woman to do the domestic work only---Will you do it ?
வேலைக்காரி : சரிங்க .... என்னென்ன வேலையெல்லாம் செய்யணுங்க ?	Alright, madam....What all works should (I) do, madam ?

கமலா : காலெயிலே துணி துவெக்கவும் பாத்திரம் துலக்கவும் வேணும். அப்புறம், வீட்டெப் பெருக்கிச் சுத்தம் செய்யணும். அடுப்புலே நெருப்பு மூட்டி வெந்நீரு போடவும் வெளாவி வைக்கவும் வேணும்.... இந்த வேலெயெல்லாம் காலெயிலே ஒம்பது மணிக்குள்ளே முடிச்சுச் சாயங்காலம் நாலு மணிக்குத் திரும்பவும் வரணும்....முடியுமா ?

In the morning (you) should wash clothes and clean vessels. Afterwards (you) should sweep and clean the house. You should also keep fire oven, boil water and prepare water for bath....(You) should finish all these works within nine o' clock and come back (for work) at four o' clock in the evening...Can (you) do it ?

வேலெக்காரி : சரி. வறேங்க.

O. K., (I) will come madam.

கமலா : குடியிருக்கத் தோட்டத்துலே ஒரு சின்ன குடிசெயும் சமெக்கக் கொஞ்சம் அலுமினியப் பாத்திரமும் உனக்குக் கொடுக்குறேன்...அதுக்கு மேலே பத்து ரூபாய் சம்பளமும் கொடுக்குறேன் ...சம்மதமா ?

(I) will give you a small hut in the garden to live in and a few aluminium vessels for cooking. Over and above this, (I) will also give you ten rupees as wages...Do you agree ?

வேலெக்காரி : சம்மதங்க....வயிறு பசியா இருக்குதுங்க.... தின்னச் சோறும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும் கொடுக்குறீங்களாம்மா ?

(I) agree, madam...(I) feel hungry madam...Will (you) give (me) some rice to eat and some water to drink ?

கமலா : சரி. இரு.... கொண்டு வறேன்.

O.K. Stay here...(I) will bring.

DRILLS

a. Variation drill

19. 80. 194. எனக்கு வயல்வேலெ செய்யவும் வீட்டுவேலெ செய்யவும் தெரியும்.
காலெயிலே துணி துவெக்கவும் பாத்திரம் துலக்கவும் வேணும்.

நெருப்பு மூட்டி வெந்நீரு போடவும் வெளாவி
ஸ்வைக்கவும் வேணும்.

19. 80. 195. குடியிருக்கத் தோட்டத்துலே ஒரு சின்னக் குடி செயும்
சமெக்கக் கொஞ்சம் அலுமினியப் பாத்திரமும்
கொடுக்குறேன்.
*தின்னச் சோறும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும்
கொடுக்குறீங்களாம்மா ?*

b. Build up drill

(i) எனக்கு வயல்வேலெ செய்யவும் வீட்டுவேலெ செய்யவும் தெரியும்.	எனக்கு வயல்வேலெ செய்யவும் வீட்டுவேலெ செய்யவும் தெரியும்.
தெரியும்	தெரியும்
வேலெ செய்யவும்	வேலெ செய்யவும் தெரியும்
வீட்டு	வீட்டு வேலெ செய்யவும் தெரியும்
வயல்வேலெ செய்யவும்	வயல்வேலெ செய்யவும் வீட்டு-வேலெ செய்யவும் தெரியும்
எனக்கு	எனக்கு வயல்வேலெ செய்யவும் வீட்டுவேலெ செய்யவும் தெரியும்.

(ii) *தின்னச் சோறும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும் கொடுக்குறீங்களாம்மா ?*	*தின்னச் சோறும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும் கொடுக்கு-றீங்களாம்மா ?*
கொடுக்குறீங்களாம்மா ?	*கொடுக்குறீங்களாம்மா ?*
தண்ணீரும்	*தண்ணீரும் கொடுக்குறீங்க-ளாம்மா ?*
கொஞ்சம்	*கொஞ்சம் தண்ணீரும் கொடுக்கு-றீங்களாம்மா ?*
குடிக்கக்	*குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும் கொடுக்குறீங்களாம்மா ?*
சோறும்	*சோறும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும் கொடுக்குறீங்க-ளாம்மா ?*
தின்ன	*தின்னச் சோறும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும் கொடுக்கு-றீங்களாம்மா ?*

c. Expansion drill

(i) நீ பாத்திரம் துலக்கவும் வேணும்.	நீ பாத்திரம் துலக்கவும் வேணும்.
துணி துவெக்கவும் வேணும்	நீ துணி துவெக்கவும் பாத்திரம் துலக்கவும் வேணும்.

(ii) நீ வெளாவி வைக்கவும் வேணும்.	நீ வெளாவி வைக்கவும் வேணும்.
வெந்நீரு போடவும் வேணும்	நீ வெந்நீரு போடவும் வெளாவி வைக்கவும் வேணும்.
(iii) நான் கொடுக்குறேன்.	நான் கொடுக்குறேன்.
அலுமினியப் பாத்திரமும் கொடுக்குறேன்	நான் அலுமினியப் பாத்திரமும் கொடுக்குறேன்.
சமைக்கக் கொடுக்குறேன்	நான் சமைக்க அலுமினியப் பாத்திரமும் கொடுக்குறேன்.
ஒரு சின்னக் குடிசையும் கொடுக்குறேன்	நான் ஒரு சின்னக் குடிசையும் சமைக்க அலுமினியப் பாத்திரமும் கொடுக்குறேன்.
தோட்டத்துலே கொடுக்குறேன்	நான் தோட்டத்துலே ஒரு சின்னக் குடிசையும் சமைக்க அலுமினியப் பாத்திரமும் கொடுக்குறேன்.
குடியிருக்கக் கொடுக்குறேன்	நான் குடியிருக்கத் தோட்டத்துலே ஒரு சின்னக் குடிசையும் சமைக்க அலுமினியப் பாத்திரமும் கொடுக்குறேன்.

d. Question-Answer drill

(i) Q : உனக்கு எந்த ஊரம்மா ?
A : எனக்குப் பள்ளத்தூர் கிராமங்க.

(ii) Q : எனக்கு வீட்டுவேலை செய்யத்தான் ஒருத்தி வேணும் ...நீ செய்றேயா ?
A : சரிங்க.

(iii) Q : அதுக்குமேலே பத்துரூபா சம்பளமும் கொடுக்குறேன் ...சம்மதமா ?
A : சம்மதங்க.

e. Substitution drill

(i) எனக்கு வயல்வேலை செய்யத்தெரியும்	எனக்கு வயல்வேலை செய்யத் தெரியும்.
Substitute and change the verb accordingly	
வீட்டுவேலை செய்	எனக்கு வீட்டுவேலை செய்யத் தெரியும்.
நெருப்புமூட்டு	எனக்கு நெருப்பு மூட்டத் தெரியும்.
துணிதுவை	எனக்குத் துணிதுவைக்கத் தெரியும்.
வெளாவி வை	எனக்கு வெளாவி வைக்கத் தெரியும்

பாத்திரம் துலக்கு	எனக்குப் பாத்திரம் துலக்கத் தெரியும்.
வெந்நீரு போடு	எனக்கு வெந்நீரு போடத் தெரியும்.
(iii) நான் குடிசெ கொடுக்குறேன்.	நான் குடிசெ கொடுக்குறேன்.
Substitute	
பாத்திரம்	நான் பாத்திரம் கொடுக்குறேன்.
துணி	நான் துணி கொடுக்குறேன்.
சோறு	நான் சோறு கொடுக்குறேன்.
சம்பளம்	நான் சம்பளம் கொடுக்குறேன்.

f. Integration drill

(i) எனக்குத் தெரியும். நான் வீட்டுவேலெ செய்வேன்.	எனக்கு வீட்டுவேலெ செய்யத் தெரியும்.
(ii) எனக்குத் தெரியும். நான் வயல்வேலெ செய்வேன்.	எனக்கு வயல்வேலெ செய்யத் தெரியும்.
(iii) எனக்குத் தெரியும். நான் பாத்திரம் துலக்குவேன்.	எனக்குப் பாத்திரம் துலக்கத் தெரியும்.
(iv) நான் குடிசெ கொடுக்குறேன். நீ தோட்டத்துலே குடியிருப்பே.	நான் தோட்டத்துலே குடியிருக்கக் குடிசெ கொடுக்குறேன்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below

Model : எனக்கு .... செய்யத் தெரியும். (field work)
எனக்கு வயல்வேலெ செய்யத் தெரியும்.

(i) எனக்கு வீட்டுவேலெ செய்ய .... வேணும். (a female servant)

(ii) காலெயிலே .... க்கணும். (wash the clothes)

(iii) காலெயிலே .... + அணும். (clean the vessels)

(iv) வீட்டெப் .... + அணும். (sweep)

(v) .... + அணும். (prepare hot water)

(vi) நான் ஒரு சின்னக் .... கொடுக்குறேன். (hut)

(vii) பத்துரூபாய் .... கொடுக்குறேன். (wages)

h. Write the word represented by the formula.

Example : போட போடு + Inf.

(i) செய் + Inf : ....

(ii) தெரி + Inf : ....

(iii) துவெ + Inf : ....

(iv) துல + Inf : ....

(v) பெருக்கு + Inf : ....

(vi) மூட்டு + Inf : ....

(vii) வெளாவு + Inf : ....

(viii) சமெ + Inf : ....

(ix) கொடு + Inf : ....

(x) குடியிரு + Inf : ....

i. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below.

Model : எனக்குத் தெரியும்.
நான் வயல்வேலெ செய்வேன்.

எனக்கு வயல்வேலெ செய்யத் தெரியும்.

(i) எனக்குத் தெரியும்.
நான் வீட்டுவேலெ செய்வேன்.

(ii) எனக்குத் தெரியும்.
நான் துணி துவெப்பேன்.

(iii) எனக்குத் தெரியும்.
நான் பாத்திரம் துலக்குவேன்.

(iv) எனக்குத் தெரியும்.
நான் நெருப்பு மூட்டி வெந்நீரு போடுவேன்.

(v) எனக்குத் தெரியும்.
நான் வெந்நீரு வெளாவி வைப்பேன்.

(vi) நான் ஒரு குடிசெ கொடுக்குறேன்.
நீ தோட்டத்துலே குடியிருப்பே.

(vii) நான் அலுமினியப் பாத்திரம் கொடுக்குறேன்.
நீ சமெப்பே.

Model : எனக்குத் தெரியும்.
நான் வீட்டுவேலெ செய்வேன்.
நான் வயல்வேலெ செய்வேன்.

எனக்கு வீட்டுவேலெ செய்யவும் வயல்வேலெ செய்யவும் தெரியும்.

(i) எனக்குத் தெரியும்.
நான் துணி துவெப்பேன்.
நான் பாத்திரம் துலக்குவேன்.

(ii) எனக்குத் தெரியும்.
நான் நெருப்பு மூட்டுவேன்.
நான் வெந்நீரு போடுவேன்.

(iii) நான் செய்வேன்.
நான் வெந்நீரு போடுவேன்.
நான் வெளாவி வைப்பேன்.

(iv) நான் செய்வேன்.
நான் சோறு சமெப்பேன்.
நான் வெந்நீரு போடுவேன்.

(v) எனக்குத் தெரியும்.
நான் சோறு சமெப்பேன்.
நான் தின்னுவேன்.

(vi) எனக்குத் தெரியும்.
நான் பாடுவேன்.
நான் ஆடுவேன்.

(vii) உங்களுக்குத் தெரியுமா ?
நீங்க தமிழ்லே படிப்பீங்க.
நீங்க தமிழ்லே எழுதுவீங்க.

j. Read the following questions.

(i) உனக்கு என்ன செய்யத் தெரியும் ?
(ii) உனக்கு என்ன வேலெயெல்லாம் தெரியும் ?
(iii) நீங்க எனக்கு என்ன கொடுக்குறீங்க ?
(iv) நீ நாலுமணிக்குத் திரும்பவும் வரணும், முடியுமா ?
(v) எதுக்கு அடுப்புலே நெருப்பு மூட்டணும் ?
(vi) நான் எதுக்குத் திரும்பவும் வரணும் ?

Pick out the appropriate answers from the following sentences.

(i) வெந்நீரு போட அடுப்புலெ நெருப்பு மூட்டணும்.
(ii) சரி, வரேங்க.
(iii) எனக்கு வயல்வேலெ செய்யத் தெரியும்.
(iv) நான் குடியிருக்க ஒரு சின்னக் குடிசெ உனக்குத் தரேன்.
(v) எனக்குத் துணி துவெக்கவும் பாத்திரம் துலக்கவும் தெரியும்.
(vi) நீ வேலெசெய்யத் திரும்பவும் வரணும்.

Give your answers as follows.

Model: (i) (iii)
(ii)

(iii) —
(iv) —
(v) —
(vi) —

k. Frame twelve sentences from the table given below.

Example : உன்னாலெ பாடவும் நடிக்கவும் முடியுமா ?

உன் அவன்	பாடு வாங்கு போ பேசு சமெ ஏறு	நடி கொடு வா எழுது பரிமாறு எறங்கு	முடியுமா ?

l. Join the following according to the sandhi rules.

(i) செய்ய + உம் : ....
திரும்ப + உம் : ....
சமெக்க + உம் : ....

(ii) வீடு + ஏ : ....
(iii) பாத்திரம் + ஏ : ....
தோட்டம் + ஏ : ....

m. Answer these questions.

(i) உங்களுக்கு எந்த ஊரு ?
(ii) உங்களுக்குத் தமிழ்ப் படிக்கவும் எழுதவும் தெரியுமா ?
(iii) உங்களாலெத் தமிழ்லே பாடவும் நடிக்கவும் முடியுமா ?
(iv) காலெயிலே துணி துவெக்கவும் பாத்திரம் துலக்கவும் உங்க வீட்டுலே யாரு இருக்குறாங்க ?
(v) நீங்க காலெயிலே வெந்நீருலே குளிப்பீங்களா, தண்ணீருலே குளிப்பீங்களா ?
(vi) நீங்க மத்தியானம் சாப்பிட்டுத் திரும்பவும் வகுப்புக்கு வரணும், இல்லே ?
(vii) காலெயிலே டிபன் சாப்பிடவும் பள்ளிக்கூடத்துக்குப் புறப்படவும் உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?
(viii) நாம எல்லாருக்கும் குடியிருக்க ஒரு வீடும் சாப்பிட நெல் வயலும் இருக்கணும், இல்லே ?

VOCABULARY

கிராமம்	'village'	வயல்வேலெ	'field work'
வீட்டுவேலெ	'homework'	ஒருத்தி	'a female person'
துணி	'clothes'	துணிதுவெ	'wash, as clothes'
பாத்திரம்	'vessel'	பாத்திரம் துலக்கு	'clean the vessels'
பெருக்கு	'sweep'	சுத்தம் செய்	'clean'
நெருப்பு	'fire'	நெருப்பு மூட்டு	'keep fire oven'

வெந்நீரு	'hot water'	வெந்நீரு போடு	'prepare hot water'
வெளாவு	'prepare hot water for bath'	குடியிரு	'live'
குடிசெ	'hut'	அலுமினியப் பாத்திரம்	'aluminium vessels'
சம்பளம்	'wages'	சம்மதம்	'agreement'
தின்னு	'eat'		

GRAMMAR

19.80.194. The conjunctive particle -உம் is added to infinitive to express various actions in sequence. Example

19. 80. 194. எனக்கு வயல்வேலெ செய்யவும் வீட்டுவேலெ
செய்யவும் தெரியும்.
காலையிலே துணி துவெக்கவும் பாத்திரம்
துலக்கவும் வேணும்.
நெருப்பு மூட்டி வெந்நீரு போடவும் வெளாவி
வைக்கவும் வேணும்.

19.80.195. Like nouns, the infinitives in Tamil can also have the function of modifier.

குடியிருக்கக் குடிசெயும்
சமெக்கப் பாத்திரமும்
தின்னச் சோறும்
குடிக்கத் தண்ணீரும்

Note that the infinitives such as குடியிருக்க, சமெக்க, தின்ன and குடிக்க have the function of modifier in the above constituents. Example :

19. 80. 195. குடியிருக்கத் தோட்டத்துலே ஒரு சின்னக்
குடிசெயும் சமெக்கக் கொஞ்சம் அலுமினியப்
பாத்திரமும் கொடுக்குறேன்.
தின்னச் சோறும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும்
கொடுக்குறீங்களாம்மா ?

Sandhi தின்ன + சோறும் → தின்னச் சோறும்
சமெக்க + பாத்திரமும் → சமெக்கப் பாத்திரமும்
குடிக்க + தண்ணீரும் → குடிக்கத் தண்ணீரும்
(Refer S.29 in 15.56)

செய்ய + உம் → செய்யவும்
துவெக்க + உம் → துவெக்கவும்
துலக்க + உம் → துலக்கவும் (Refer S.9 in 1.7)
செய்றே + ஆ → செய்றேயா

வேலெ + எல்லாம் → வேலெயெல்லாம் (Refer S.8 in 1.5)

எனக்கு + தெரியுங்க → எனக்குத் தெரியுங்க

நாலுமணிக்கு + திரும்பவும் → நாலுமணிக்குத் திரும்பவும்
(வரணும். (Refer S.18 in 2.14)

பெருக்கி + சுத்தம் → பெருக்கிச் சுத்தம் (செய்யணும்.
(Refer S.31 in 17.68)

முடிக்க + சாயங்காலம் → முடிச்சுச் சாயங்காலம். (வரணும்.
(Refer S.33 in 17.70)

அலுமினியம் + பாத்திரம் → அலுமினிய பாத்திரம்
(Refer S.2 in 1.1)

அலுமினிய + பாத்திரம் → அலுமினியப் பாத்திரம்
(Refer S.4 in 1.2)

UNIT 19

LESSON 81

THE MYSORE ZOO

DIALOGUE

சுந்தரம் : உங்களுக்குத் தெரியுமா? மைசூருலே ஒரு பெரிய மிருகக் காட்சி சாலெ இருக்குது. அங்கே புலி, கரடி, சிங்கம், யானெ, ஒட்டகம், குரங்கு எல்லாம் இருக்குது. ஒரு மனுஷக்குரங்கும் இருக்குது. கூண்டுக்குள்ளே அது செய்ற கலாட்டா-வெப் பார்க்கப் பார்க்க நமக்கு வேடிக்கெயா இருக்கும். கூண்டுக்கு முன்னாலே கூட்டம் சேரச் சேர

Do you know? There is a big zoo in Mysore. Tiger, bear, lion, elephant, camel and monkey are all there. There is also a chimpanzee. It is very funny to look at the chimpanzee doing its tricks inside the cage. As the crowd in front of the cage gathers the chimpanzee becomes very happy. Outside the tiger cage we can see four tiger cubs. If the small children go that side they come to play (with them). Seeing the tiger cubs children will run away in fear. The tiger cubs also follow them as long

அதுக்கு ரொம்ப ஆனந்தமா இருக்கும். புலிக்கூண்டுக்கு வெளியே நாலு புலிக்குட்டியெப் பார்க்கலாம். சின்னக் குழந்தெங்க அந்தப் பக்கம் போனா உடனே அது வெளெயாட வரும். குழந்தெங்க புலிக்குட்டியெப் பார்த்துப் பயப்பட்டு ஓடுவாங்க. அவங்க ஓட ஓடப் புலிக்குட்டியும் பின்னாலேயே ஓடும். இதெ ரசிக்கவே மைசூரு மிருகக் காட்சி சாலெக்கு ஆயிரந்தடவெ போகலாம். நீங்க மைசூருக்குப் போனாக் கண்டிப்பா இந்த மிருகக் காட்சி சாலெக்குப் போங்க.

as the children run. In order to enjoy just this scene one can go to the Mysore zoo thousand times. If you go to Mysore make it a point to go to this zoo.

DRILLS

a. Variation drill

19. 81. 196. நமக்கு அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்.
கூட்டம் சேரச் சேர அதுக்கு ஆனந்தமா இருக்கும்.
அவங்க ஓட ஓடப் புலிக்குட்டியும் பின்னாலேயே ஓடும்.

b. Build up drill

(i) நமக்கு அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்.	நமக்கு அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்.
இருக்கும்	இருக்கும்
வேடிக்கெயா	வேடிக்கெயா இருக்கும்
பார்க்கப் பார்க்க	பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்
அதெ	அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்
நமக்கு	நமக்கு அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்.

(iii) [illegible] பக்கத்துல [illegible] பின்னாடியோ முடியும்.	[illegible] பக்கத்துல [illegible] பின்னாடியோ முடியும்.
முடியும்	முடியும்
பின்னாடியோ	பின்னாடியோ முடியும்
பக்கத்துலயும்	பக்கத்துலயும் பின்னாடியோ முடியும்
ஓட்டல்	[illegible] பக்கத்துலயும் பின்னாடியோ முடியும்.
அவங்க	அவங்க [illegible] பக்கத்துலயும் பின்னாடியோ முடியும்.

c Expansion drill

(i) அதுக்கு ஆனந்தமா இருக்கும். கட்டிச் சேர்ச்சேரா ஆனந்தமா இருக்குது.	அதுக்கு ஆனந்தமா இருக்கும். அதுக்குக் கட்டிச் சேர்ச் சேர ஆனந்தமா இருக்குது.
(ii) நமக்கு வேடிக்கையா இருக்கும்.	நமக்கு வேடிக்கையா இருக்கும்.
பார்க்க வேடிக்கையா இருக்கும்	நமக்குப் பார்க்க வேடிக்கையா இருக்கும்.
[illegible] பார்க்க வேடிக்கையா இருக்கும்.	நமக்கு [illegible] பார்க்க வேடிக்கையா இருக்கும்.

d Substitution drill

(i) [illegible] பார்க்க வேடிக்கையா இருக்குது. Substitute and change the verb accordingly.	[illegible] பார்க்க [illegible] வேடிக்கையா இருக்குது.
செய்	[illegible] செய்ய வேடிக்கையா இருக்குது.
ஓட்டு	[illegible] ஓட்ட வேடிக்கையா இருக்குது.
படி	[illegible] படிக்க வேடிக்கையா இருக்குது.
[illegible]	[illegible] வேடிக்கையா இருக்குது.
பேசு	[illegible] பேச வேடிக்கையா இருக்குது.

e. Integration drill

(i) நாம மைதூருக்குப் போகலாம். நாம இதெ ரசிக்கலாம்.	நாம இதெ ரசிக்க மைதூருக்குப் போகலாம்.
(ii) குழந்தெங்க வருவாங்க. குழந்தெங்க புலிக்குட்டியெப் பார்ப்பாங்க.	குழந்தெங்க புலிக்குட்டியெப் பார்க்க வருவாங்க.
(iii) புலிக்குட்டி பின்னாலேயே ஓடும். அவங்க ஓடுவாங்க.	புலிக்குட்டி அவங்க ஓடப் பின்னாலேயே ஓடும்.

f. Transformation drill

(i) அதெப்பார்க்க வேடிக்கெயா இருக்கும்.	அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்.
கூட்டம் சேர அதுக்கு ஆனந்தமா இருக்கும்.	கூட்டம் சேரச் சேர அதுக்கு ஆனந்தமா இருக்கும்.
அவங்க ஓட அதுவும் ஓடும்.	அவங்க ஓட ஓட அதுவும் ஓடும்.
அவங்க வெளெயாட அதுக்கு ஆனந்தமா இருக்கும்.	அவங்க வெளெயாட வெளெயாட அதுக்கு ஆனந்தமா இருக்கும்.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : மைதூருலெ..............இருக்குது. (zoo)
மைதூருலெ மிருகக்காட்சி சாலெ இருக்குது.

(i) அங்கே..............இருக்குது. (tiger)
(ii) அங்கே..............இருக்குது. (bear)
(iii) அங்கே..............இருக்குது. (lion)
(iv) அங்கே..............இருக்குது. (elephant)
(v) அங்கே..............இருக்குது. (camel)
(vi) அங்கே..............இருக்குது. (monkey)
(vii) ....க்கு முன்னாலே கூட்டம் சேரும். (cage)
(viii) குழந்தெங்க..............வாங்க. (be afraid of)
(ix) அவங்க..............வாங்க. (run)
(x) இதெ..............க்க மைதூருக்குப் போகலாம். (enjoy)
(xi) மிருகக்காட்சி சாலெக்கு..............தடவெ போகலாம். (thousand)

h. Write the word represented by the formula.

Example : சேர   சேரு + Inf.

(i) வெளையாடு + Inf : ....

(ii) ஓடு + Inf : ....

(iii) ஏசி + Inf : ....

(iv) பயப்படு + Inf : ....

(v) தங்கு + Inf ....

(vi) ஏறு + Inf : ....

(vii) குடி + Inf : ....

(viii) பாடு + Inf : ....

i. Join each of these pairs of simple sentences into a complex one as shown in the model given below

Model : நமக்கு வேடிக்கையா இருக்கும்.
நாம அதெப் பார்ப்போம்.

நமக்கு அதெப் பார்க்க வேடிக்கையா இருக்கும்.

(i) குழந்தெங்க வருவாங்க.
குழந்தெங்க புலிக்குட்டியெப் பார்ப்பாங்க.

(ii) புலிக்குட்டி பின்னாலேயே ஓடும்.
அவங்க ஓடுவாங்க.

(iii) அது வரும்.
அது வெளையாடும்.

(iv) குழந்தெங்க வருவாங்க.
குழந்தெங்க புலிக்குட்டியெப் பார்ப்பாங்க.

(v) நாம [illegible] போகலாம்
நாம இதெ ரசிக்கலாம்.

Model : நமக்கு வேடிக்கையா இருக்கும்.
நாம அதெப் பா ப்போம்.
நாம அதெப் பாப்போம்.

நமக்கு அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கையா இருக்கும்.

(i) புலிக்குட்டி பின்னாலேயே ஓடும்.
அவங்க ஓடுவாங்க.
அவங்க ஓடுவாங்க.

(ii) அதுக்கு ஆனந்தமா இருக்கும்.
கூட்டம் சேரும்.
கூட்டம் சேரும்.

(iii) குழந்தெங்களுக்கு ஆனந்தமா இருக்கும்.
அவங்க வெளையாடுவாங்க.
அவங்க வெளையாடுவாங்க.

j. Frame five sentences from the table given below.

Example : குழந்தெங்களுக்கு இதெப் பார்க்கப் பார்க்க ஆனந்தமா இருக்கும்.

குழந்தெ	இது	பாரு கேளு பாடு சொல்லு	ஆனந்தமா இரு

k. Answer these questions.

(i) உங்க ஊருலே மிருகக் காட்சி சாலெ இருக்குதா ?

(ii) உங்க குழந்தெக்கு மிருகக் காட்சி சாலெயெப் பார்க்கப் பார்க்க ரொம்ப ஆனந்தமா இருக்குமா ?

(iii) நீங்க உங்க ஊருலே இருக்குற மிருகக் காட்சி சாலெயிலே ஒட்டகம் பார்த்தீங்களா ?

(iv) உங்களுக்கு மிருகக் காட்சி சாலெக்குப் போறதுக்குப் பிடிக்குமா ?

VOCABULARY

மிருகக் காட்சி சாலெ	'zoo'	புலி	'tiger'
கரடி	'bear'	சிங்கம்	'lion'
யானெ	'elephant'	ஒட்டகம்	'camel'
குரங்கு	'monkey'	மனுஷக்குரங்கு	'chimpanzee'
கூண்டு	'cage'	கலாட்டா	'trick'
வேடிக்கெ	'fun'	சேரு	'gather'
ஆனந்தம்	'happiness'	குட்டி	'young one of an animal, cubs'
பயப்படு	'be afraid of'	ஓடு	'run'
ரசி	'enjoy'		

GRAMMAR

19.81.196. An infinitive may be reduplicated to denote continuous action like verbal participle (Refer 17.70). See the following examples :

19. 81. 196. நமக்கு அதெப் பார்க்கப் பார்க்க வேடிக்கெயா இருக்கும்.
கூட்டம் சேரச் சேர அதுக்கு ஆனந்தமா இருக்கும்.
அவங்க ஓட ஓடப் புலிக்குட்டியும் பின்னாலேயே ஓடும்.

Sandhi **39.** The word final -ன் is dropped when the word functions as a modifier of another noun Example :

மனுஷன் + குரங்கு → மனுஷ குரங்கு

மனுஷ + குரங்கு → மனுஷக்குரங்கு

சின்ன + குழந்தெங்க → சின்னக் குழந்தெங்க

அந்த + பக்கம் → அந்தப்பக்கம் (Refer S.4 in 1.2)

சேர + சேர → சேரச்சேர

பார்க்க + பார்க்க → பார்க்கப் பார்க்க (Refer S.29 in 13.56)

ஆயிரம் + தடவெ → ஆயிரந்தடவெ (Refer S.24 in 5.29)

உங்களுக்கு + தெரியுமா → உங்களுக்குத் தெரியுமா

மிருகக்காட்சி சாலெக்கு + போங்க → மிருகக்காட்சி சாலெக்குப்
போங்க (Refer S.18 in 2.14)

UNIT 20

LESSON 82

THE CROW AND THE FOX

DIALOGUE

சுந்தரம் : நான் ஒரு கதெ சொல்லட்டுமா? ஒரு ஊருலே ஒரு காக்கா இருந்தது. ஒரு நாளு அந்தக் காக்காவுக்கு ஒரு வடெ கெடெச்சது. ஒரு மரத்துலே உக்கார்ந்து காக்கா வடெயெத் தின்ன ஆரம்பிச்சது. அப்ப, அந்த வழியா ஒரு நரி வந்தது. நரி காக்கா வாயிலே வடெயெப் பார்த்தது.

May I tell (you) a story? There was a crow in a village. One day that crow got a vada. Sitting on a tree the crow started to eat the vada. At that time, a fox came that way. The fox saw the vada in the mouth of the crow. The fox also was very hungry. The fox decided that he should eat that vada somehow. You know that fox is a very tricky animal, don't you? The fox made a trick. Seeing the crow "Oh ! crow ! it is said that you sing beautifully. Please sing a song" The crow did not understand the trick of the fox. Then she sang

நரிக்கும் பசியா இருந்தது. எப்படியாவது அந்த வடெயெத் தான் தின்னணும்'ன்னு நரி தீர்மானிச்சது. 'நரி ரொம்பத் தந்திரமான மிருகம்'ன்னு உங்களுக்குத் தெரியும் இல்லெயா? நரி ஒரு தந்திரம் செய்தது. அது காக்காவெப் பார்த்து: "காக்கா! நீ அழகாப் பாடுவாயாமே. ஒரு பாட்டுப் பாடேன்'ன்னு கேட்டது. நரியோடெ தந்திரம் காக்காவுக்குப் புரியலெ. உடனே காக்கா 'கா...கா...கா' ன்னு பாடிச்சு. அப்ப, வாயிலே இருந்த வடெ கீழெ விழுந்தது. நரி வடெயெ எடுத்துக் காட்டுக்குள்ளே ஓடிப் போச்சு. பாவம்! காக்கா ஏமாந்தது.

'caw—caw—caw' At that time, the vada which was in the crow's mouth fell down. The fox took the vada and ran into the forest. Alas! the poor crow got disappointed.

DRILLS

a. Variation drill

20. 82. 197. நரி காக்காவெப் பார்த்து 'ஒரு பாட்டுப் பாடேன்' ன்னு கேட்டது.
'அந்த வடெயெத் தின்னணும்'ன்னு நரி தீர்மானிச்சது. காக்கா உடனே 'கா....கா'ன்னு பாடிச்சு.

20. 82. 198. நரி அந்த வடெயெத் தான் தின்னணும்'ன்னு தீர்மானிச்சது.

20. 82. 199 காக்கா உட[illegible] பாடிச்சு.
நரி காட்டுக்[illegible] ஓடிச்சு.

b. Build up drill

(i) 'அந்த வடெயெத் தின்னணும்'ன்னு நரி தீர்மானிச்சது.

'அந்த வடெயெத தின்னணும்'ன்னு நரி தீர்மானி[illegible]

தீர்மானிச்சது	தீர்மானிச்சது
நரி	நரி தீர்மானிச்சது
'வடெயெத்	'வடெயெத் தின்னணும்'ன்னு நரி தீர்மானிச்சது
தின்னணும்'ன்னு	
அந்த	'அந்த வடெயெத் தின்னணும்'ன்னு நரி தீர்மானிச்சது.

(ii) காக்கா உடனே 'கா ... கா'ன்னு பாடிச்சு.	காக்கா உடனே 'கா ... கா'ன்னு பாடிச்சு.
பாடிச்சு	பாடிச்சு
'கா ... கா'ன்னு	'கா ... கா'ன்னு பாடிச்சு
உடனே	உடனே 'கா ... கா'ன்னு பாடிச்சு
காக்கா	காக்கா உடனே 'கா ... கா'ன்னு பாடிச்சு.

(iii) நரி காட்டுக்குள்ளே ஓடிச்சு.	நரி காட்டுக்குள்ளே ஓடிச்சு.
ஓடிச்சு	ஓடிச்சு
காட்டுக்குள்ளே	காட்டுக்குள்ளே ஓடிச்சு
நரி	நரி காட்டுக்குள்ளே ஓடிச்சு

c Expansion drill

(i) நரி கேட்டது.	நரி கேட்டது.
'ஒரு பாட்டுப் பாடேன்'ன்னு கேட்டது	நரி 'ஒரு பாட்டுப் பாடேன்'ன்னு கேட்டது.
காக்காயெப் பார்த்துக் கேட்டது	நரி காக்காயெப் பார்த்து 'ஒரு பாட்டுப் பாடேன்'ன்னு கேட்டது.
(ii) நரி ஓடிச்சு.	நரி ஓடிச்சு
காட்டுக்குள்ளே ஓடிச்சு	நரி காட்டுக்குள்ளே ஓடிச்சு
வடெயெ எடுத்து ஓடிச்சு	நரி வடெயெ எடுத்துக் காட்டுக்குள்ளே ஓடிச்சு.
(iii) காக்கா பாடிச்சு.	காக்கா பாடிச்சு.
'கா...கா'ன்னு பாடிச்சு	காக்கா 'கா...கா'ன்னு பாடிச்சு.
உடனே பாடிச்சு	காக்கா உடனே 'கா...கா'ன்னு பாடிச்சு.

d Substitution drill

(i) அது பாடிச்சு.	அது பாடிச்சு.
Substitute and change the verb suitably.	
ஓடு	அது ஓடிச்சு.
எறங்கு	அது எறங்குச்சு.

வெளெயாடு	அது வெளெயாடுச்சு.
கௌம்பு	அது கௌம்புச்சு.
வாங்கு	அது வாங்குச்சு.
தூங்கு	அது தூங்குச்சு.
ஒழுகு	அது ஒழுகுச்சு.
(ii) அது ஏமாந்தது.	அது ஏமாந்தது.
Substitute and change the verb accordingly.	
விழு	அது விழுந்தது.
வா	அது வந்தது.
உக்காரு	அது உக்கார்ந்தது.
இரு	அது இருந்தது.
(iii) அதெத் தின்னணும்'ண்ணு தீர்மானிச்சது.	அதெத் தின்னணும்'ண்ணு தீர்மானிச்சது.
Substitute	
எடுக்கணும்	அதெ எடுக்கணும்'ண்ணு தீர்மானிச்சது.
பார்க்கணும்	அதெப் பார்க்கணும்'ண்ணு தீர்மானிச்சது.
செய்யணும்	அதெச் செய்யணும்'ண்ணு தீர்மானிச்சது.
பறிக்கணும்	அதெப் பறிக்கணும்'ண்ணு தீர்மானிச்சது.
சொல்லணும்	அதெச் சொல்லணும்'ண்ணு தீர்மானிச்சது.

Transformation drill

(i) காக்கா பாடுது. நரி ஓடுது.	காக்கா பாடுச்சு. நரி ஓடுச்சு.
(ii) காக்கா ஏமாறுது. வடெ கீழே விழுது.	காக்கா ஏமாந்தது. வடெ கீழே விழுந்தது.
(iii) காக்காவுக்கு ஒரு வடெ கெடெக்குது. காக்கா தின்ன ஆரம்பிக்குது. நரி தீர்மானிக்குது.	காக்காவுக்கு ஒரு வடெ கெடெச்சது. காக்கா தின்ன ஆரம்பிச்சது. நரி தீர்மானிச்சது.
(iv) காக்காவுக்குப் புரியுது. நரி ஓடுது. வடெ கீழே விழுது. நரி தீர்மானிக்குது. காக்கா தின்ன ஆரம்பிக்குது.	காக்காவுக்குப் புரியலெ. நரி ஓடலெ. வடெ கீழே விழலெ. நரி தீர்மானிக்கலெ. காக்கா தின்ன ஆரம்பிக்கலெ.

f. Integration drill

(i) காக்கா மரத்துலே உக்காந்தது. காக்கா வடையெத் தின்ன ஆரம்பிச்சது.	காக்கா மரத்துலே உக்காந்து வடையெத் தின்ன ஆரம்பிச்சது.
(ii) நரி காக்காவெப் பார்த்தது. 'நீ ஒரு பாட்டுப் பாடேன்'ன்னு கேட்டது.	நரி காக்காவெப் பார்த்து 'நீ ஒரு பாட்டுப் பாடேன்'ன்னு கேட்டது.
(iii) நரி வடையெ எடுத்தது. நரி காட்டுக்குள்ளே ஓடிச்சு.	நரி வடையெ எடுத்துக் காட்டுக்குள்ளே ஓடிச்சு.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : ஒரு ஊருலே ஒரு............ இருந்தது. (crow)
ஒரு ஊருலே ஒரு காக்கா இருந்தது.

(i) காக்கா ஒரு..............-லே உக்காந்தது. (tree)
(ii) ஒரு..............வந்தது. (fox)
(iii) நரி..............ச்சது. (decide)
(iv) நரி..............+ ஆன மிருகம். (trick)
(v) நரி ஒரு.............. (animal)
(vi) வடை கீழே..............ந்தது. (fall)
(vii) நரி வடையெ..............த்தது. (take)
(viii) நரி..............+ உக்குள்ளே ஓடிச்சு. (forest)
(ix) பாவம், காக்கா..............+ ந்தது. (be disappointed)
(x) அது..............+ அ ஆரம்பிச்சது. (eat)

h. Select the right verb and use it in the blank with suitable form.

விழு, இரு, புரி, ஓடு, உக்காரு, ஏமாறு.

(i) நரிக்குப் பசியா..............
(ii) காக்காவுக்குப்..............
(iii) வடை கீழே..............
(iv) நரி காட்டுக்குள்ளே..............
(v) காக்கா..............
(vi) காக்கா மரத்துலே..............

i. Write the word represented by the formula.

Example : படிச்ச   படி + Past

(i) ஓடு + Past : ....

(ii) விளையாடு + Past : ....

(iii) எறங்கு + Past : ....

(iv) தூங்கு + Past : ....

(v) ஒழுகு + Past : ....

(vi) கௌம்பு + Past : ....

j. These are the statements given by Sundaram. Report his statements as in the model given below.

Model : சுந்தரம் : ஒரு ஊருலே ஒரு காக்கா இருந்தது.
சுந்தரம் 'ஒரு ஊருலே ஒரு காக்கா இருந்தது' ன்னு சொன்னாரு.

(i) சுந்தரம் : நரி ரொம்பத் தந்திரமான மிருகம்.

(ii) சுந்தரம் : அந்த வழியா ஒரு நரி வந்தது.

(iii) சுந்தரம் : அது காக்காவெப் பார்த்தது.

(iv) சுந்தரம் : பாவம் காக்கா ஏமாந்தது.

k. These are the questions asked by Sundaram. Report his questions as in the model given below.

Model : சுந்தரம் : நான் ஒரு கதெ சொல்லட்டுமா ?
சுந்தரம் 'நான் ஒரு கதெ சொல்லட்டுமா' ன்னு கேட்டாரு.

(i) சுந்தரம் : உங்களுக்குத் தெரியும், இல்லியா ?

(ii) சுந்தரம் : நீ அழகாப் பாடுவேயா ?

(iii) சுந்தரம் : காக்கா எப்படிப் பாடுச்சு ?

(iv) சுந்தரம் : நரி எங்கே ஓடிச்சு ?

(v) சுந்தரம் : நரியா அந்த வழியா வந்தது ?

l. Transform the following into reportive constructions using the reflexive pronoun தான்

Model : நரி, 'எப்படியாவது அந்த வடையெ நான் தின்னணும்' ன்னு தீர்மானிச்சது.
நரி எப்படியாவது அந்த வடையெத் தான் தின்னணும்' ன்னு தீர்மானிச்சது.

(i) காக்கா, 'அந்த மரத்துலே நான் உட்காரணும்' ன்னு தீர்மானிச்சது.

(ii) காக்கா, 'நான் அழகாப் பாடணும்' ன்னு தீர்மானிச்சது.

(iii) காக்கா, 'கா... கா' ன்னு நான் பாடணும்' ன்னு தீர்மானிச்சது.

m. Transform the second noun of each sentence into its corresponding reflexive pronoun as in the model given below.

Model: மாலா அவளெக் கண்ணாடியிலே பார்த்தா.
மாலா தன்னெக் கண்ணாடியிலே பார்த்தா.

(i) அவன் அவனெக் கண்ணாடியிலே பார்த்தான்.
(ii) அவள் அவளுக்காக வாங்குனாள்.
(iii) ராதா அவளுக்கு ஒரு பொட்டெ வாங்குனா.
(iv) மாணவங்க அவங்க பணத்தெக் கொடுத்தாங்க.
(v) அவள் 'நான் கொடுப்பேன்'ன்னு சொன்னாள்.
(vi) மாலா அவளிட்டேயிருந்து பத்துரூபாய் எடுத்துக் கொடுத்தா.
(vii) பேராசிரியரு அவருகூட அவனெ பாரச் சொன்னாரு.

n. Join the following according to the sandhi rules.

(i) வடெ + ஏ :	(ii) காடு + க்கு : ....
எப்படி + ஆவது :	(iii) தந்திரம் + ஏ : ....
நரி + ஓடெ :	மிருகம் + உக்கு : ....

o. Answer these questions.

(i) நீங்க ஒரு கதெ சொல்லுறீங்களா ?
(ii) நரி எப்படிப்பட்ட மிருகம் ?
(iii) காக்கா எப்படிப் பாடிச்சு ?
(iv) நரி என்ன தந்திரம் செய்தது ?
(v) நரியோடெ தந்திரம் காக்காவுக்குப் புரிஞ்சுதா ?
(vi) நரி எங்கே ஓடிச்சு ?

VOCABULARY

காக்கா	'crow'	மரம்	'tree'
நரி	'fox'	வாய்	'mouth'
தீர்மானி	'decide'	தந்திரமான	'tricky'
மிருகம்	'animal'	தந்திரம்	'trick'
விழு	'fall'	பாவம்	'Alas'
ஏமாறு	'disappoint'		

GRAMMAR

20.82.197. -ன்னு is the quotative particle. It is the verbal participle form of the verb என்- 'say'. This unit in three lessons mainly deals with various uses of this particle.

The quotative particle -ன்னு is used here to quote the sentence as it is uttered by the speaker. See the following examples.

20. 82. 197. நரி காக்காவெப் பார்த்து 'ஒரு பாட்டுப் பாடேன்'
ன்னு கேட்டது.
'அந்த வடையெத் தின்னணும்'ன்னு நரி
தீர்மானிச்சது.
காக்கா உடனே 'கா ... கா'ன்னு பாடுச்சு.

20.82.198. **தான்** is a reflexive pronoun. The corresponding plural form is தாங்க. Like other pronouns (Refer 1.1.1.) they can also be declined as follows. The oblique bases are தன்- and தங்க-

தான்	தன்னெ	தாங்க	தங்களெ
தனக்கு	தன்னாலெ	தங்களுக்கு	தங்களாலெ
தன்கிட்டெ	தன்கிட்டெயிருந்து	தங்ககிட்டெ	தங்ககிட்டெ-யிருந்து
தன்னோடெ	தன்கூட	தங்களோடெ	தங்ககூட

Examples

20. 82. 198. நரி அந்த வடையெத் தான் தின்னணும்'ன்னு
தீர்மானிச்சது.

20.82.199. The verbs that take the past tense marker -ன- in the case of human nouns will take -ச்சு- as the common form of the past tense and neuter personal termination in the case of non-human nouns. Example :

20. 82. 199. காக்கா உடனே பாடுச்சு.
நரி காட்டுக்குள்ளே ஓடுச்சு.

Sandhi : வடையெ + தின்ன → வடையெத் தின்ன (ஆரம்பிச்சது)
வடையெ + பார்த்தது → வடையெப் பார்த்தது
(Refer S.20 in 2.17)
அழகா + பாடுவேயாமே → அழகாப் பாடுவேயாமே (Refer S.21 in 3.20)
ரொம்ப + தந்திரமான → ரொம்பத் தந்திரமான (மிருகம்)
(Refer S.14 in 1.11)
எடுத்து + காட்டுக்குள்ளே → எடுத்துக் காட்டுக்குள்ளே (ஓடிப்போச்சு)
(Refer S.33 in 17.70)

UNIT 20

LESSON 8

ABOUT A PUBLIC MEETING

DIALOGUE

சுந்தரம் : சுரேஷ் ! நீங்க மிஸ்டர் மூர்த்தியெப் பார்த்தீங்களா ? — Suresh, did you see Mr. Murthi ?

சுரேஷ் : ஆமாங்க. நேத்து மாலெயிலே ஒரு பொதுக் கூட்டத்துலே அவரெப் பார்த்தேன். என்ன விசேஷங்க ? — Yes, sir. (I) saw him in a public meeting yesterday evening. What is the matter, sir ?

சுந்தரம் : ஒண்ணுமில்லெங்க. மாலெயிலே வீட்டுக்கு வரேன்'ன்னாரு. ஆனா, வரலெ. அதுதான் கேட்டேன். — Nothing, sir. He said he would come to my house in the evening. But, (he) didn't come. That is why (I) have asked.

சுரேஷ் : என்கிட்டெ 'அடுத்த வாரம் ஊருக்குப் போறேன் ; அக்கா மகளுக்குக் கல்யாணம் ; நான் கட்டாயம் போகணும்'ன்னாரு. 'நானும் ஊருக்குப் போறேன்'ன்னேன்.	He told me, "I am going to my native place next week ; (There is) marriage for (my) elder sister's daughter ; I should go without fail". I also said that (I) am going to (my) native place
சுந்தரம் : நேத்துப் பொதுக் கூட்டம் எங்கே நடந்தது ?	Where was the public meeting held yesterday ?
சுரேஷ் : தமுக்கம் மைதானத்துலெங்க. மேயர் பேசுனாரு. வர தேர்தல்லெ எல்லாரும் அவங்க கட்சிக்கே ஓட்டுப் போடணும்'ன்னு பேசுனாரு.	At Thamukkam Maidanam, sir. The Mayor spoke (in that meeting). He said that in the ensuing election everyone should vote for his party.
சுந்தரம் : அரசியல் பொதுக்கூட்டமா ? ... நீங்க இப்ப எங்கே போறீங்க ?	Oh ! political public meeting ? ....Where are you going now ?
சுரேஷ் : அறெக்குத்தான் போறேங்க...வாங்களேன்.	To the room only, sir.—Why don't (you) come, sir ?
சுந்தரம் : இன்னொரு நாளு வரேன். வரட்டுமா ?	I will come another day.—Shall (I) take leave of you ?
சுரேஷ் : சரிங்க.	O. K. sir.

DRILLS

a. Variation drill

20. 83. 200. 'மாலெயிலே வீட்டுக்கு வரேன்'ன்னாரு.
'நான் கட்டாயம் போகணும்'ன்னாரு.
'நானும் ஊருக்குப் போறேன்'ன்னேன்.

b. Build up drill

(i) 'மாலெயிலே வீட்டுக்கு வரேன்'ன்னாரு.	'மாலெயிலே வீட்டுக்கு வரேன்'ன்னாரு.
'வரேன்'ன்னாரு	'வரேன்'ன்னாரு
வீட்டுக்கு	'வீட்டுக்கு வரேன்'ன்னாரு
மாலெயிலே	'மாலெயிலே வீட்டுக்கு வரேன்'ன்னாரு.

(ii) 'நானும் ஊருக்குப் போறேன்'ன்னேன்.	'நானும் ஊருக்குப் போறேன்'ன்னேன்.
'போறேன்'ன்னேன்	'போறேன்'ன்னேன்
ஊருக்கு	'ஊருக்குப் போறேன்'ன்னேன்
நானும்	'நானும் ஊருக்குப் போறேன்'ன்னேன்.
(iii) 'நான் கட்டாயம் போகணும்'ன்னாரு.	'நான் கட்டாயம் போகணும்'ன்னாரு.
போகணும்'ன்னாரு	போகணும்'ன்னாரு
கட்டாயம்	'கட்டாயம் போகணும்'ன்னாரு
நான்	'நான் கட்டாயம் போகணும்'ன்னாரு.

c. Expansion drill

(i) அவரு 'ஓட்டுப் போடணும்'ன்னாரு.	அவரு 'ஓட்டுப் போடணும்'ன்னாரு.
'அவங்க கட்சிக்கே ஓட்டுப் போடணும்'ன்னாரு.	அவரு 'அவங்க கட்சிக்கே ஓட்டுப் போடணும்'ன்னாரு.
'எல்லாரும் ஓட்டுப் போடணும்'ன்னாரு.	அவரு 'எல்லாரும் அவங்க கட்சிக்கே ஓட்டுப் போடணும்'ன்னாரு.
'மற தேர்தல்லே ஓட்டுப் போடணும்'ன்னாரு.	அவரு 'மற தேர்தல்லே எல்லாரும் அவங்க கட்சிக்கே ஓட்டுப் போடணும்'ன்னாரு.
(ii) அவரு 'வரேன்'ன்னாரு.	அவரு 'வரேன்'ன்னாரு.
'வீட்டுக்கு வரேன்'ன்னாரு	அவரு 'வீட்டுக்கு வரேன்'ன்னாரு.
'மாலெயிலே வரேன்'ன்னாரு	அவரு 'மாலெயிலே வீட்டுக்கு வரேன்'ன்னாரு.

d. Question-Answer drill

(i) Q: என்ன விசேஷங்க?
A: ஒண்ணுமில்லெங்க.

(ii) Q: நேத்துப் பொதுக்கூட்டம் எங்கே நடந்தது?
A: தமுக்கம் மைதானத்துலேங்க.

(iii) Q: நீங்க இப்ப எங்கே போறீங்க?
A: அறெக்குத்தான் போறேங்க.

e. Substitution drill

(i) அவரு 'வரேன்'ன்னாரு.	அவரு 'வரேன்'ன்னாரு.
Substitute and conjugate the verb accordingly.	
போ	அவரு 'போறேன்'ன்னாரு.
தின்னு	அவரு 'தின்னுறேன்'ன்னாரு.
செய்	அவரு 'செய்றேன்'ன்னாரு.
பாடு	அவரு 'பாடுறேன்'ன்னாரு.
பாரு	அவரு 'பார்க்குறேன்'ன்னாரு.
(ii) நான் போறேன்'ன்னேன்.	நான் 'போறேன்'ன்னேன்.
Substitute and change the verb accordingly.	
நாங்க	நாங்க 'போறோம்'ன்னோம்.
நாம	நாம 'போறோம்'ன்னோம்.
நீ	நீ 'போறேன்'ன்னே.
நீங்க	நீங்க 'போறேன்'ன்னீங்க.
அவன்	அவன் 'போறேன்'ன்னான்.
அவ	அவ போறேன்'ன்னா.
அவரு	அவரு போறேன்'ன்னாரு.
அவங்க	அவங்க 'போறோம்'ன்னாங்க.
(iii) நான் அவரெ ஒரு பொதுக்-கூட்டத்துலே சந்திச்சேன்.	நான் அவரெ ஒரு பொதுக்-கூட்டத்துலே சந்திச்சேன்.
Substitute	
செமினார்லே	நான் அவரெ ஒரு செமினார்லே சந்திச்சேன்.
ஊர்வலத்துலே	நான் அவரெ ஒரு ஊர்வலத்துலே சந்திச்சேன்.
கல்யாணத்துலே	நான் அவரெ ஒரு கல்யாணத்-துலே சந்திச்சேன்.
(iv) நான் கட்டாயம் போகணும்.	நான் கட்டாயம் போகணும்.
Substitute	
நிச்சயமா	நான் நிச்சயமாப் போகணும்.
சீக்கிரமா	நான் சீக்கிரமாப் போகணும்.
வேகமா	நான வேகமாப் போகணும்.

f. Transformation drill

(i) நான் 'வரேன்'ன்னேன்.	நான் 'வரேன்'ங்குறேன்.
நான் 'போறேன்' ன்னேன்.	நான் 'போறேன்'ங்குறேன்.
நான் 'போகணும்'ன்னேன்.	நான் போகணும்'ங்குறேன்.

(ii)	நான் 'போகணும்'ங்குறேன்.	நான் 'போகணு'ம்பேன்.
	நான் 'போறேன்' ங்குறேன்.	நான் 'போறேன்'பேன்.
	நான் 'வறேன்'ங்குறேன்.	நான் 'வறேன்'பேன்.
(iii)	அவரு 'போகணு'ங்குறாரு.	அவரு போகணும்'ங்கலே.
	அவ 'வறேன்'ங்குறா.	அவ 'வறேன்'ங்கலெ.
	அவன் 'போறேன்'ங்குறான்.	அவன் 'போறேன்'ங்கலெ.
(iv)	நாங்க 'போகணும்'ம்போம்.	நாங்க 'போகணும்'ங்க மாட்டோம்.
	நீங்க 'போகணும்'பீங்க	நீங்க 'போகணும்'ங்க மாட்டீங்க.
	அவங்க 'வறணும்'பாங்க.	அவங்க 'வறணும்'ங்க மாட்டாங்க.

EXERCISES

g. Fill in the blanks using the cues given in parentheses as in the model given below.

Model : நான்................+ உலே பார்த்தேன்.
(public meeting)
நான் **பொதுக்கூட்டத்துலே** பார்த்தேன்.

(i) அக்கா மகளுக்குக்...............இருக்குது. (marriage)
(ii) நான்...............போகணும். (certainly)
(iii) ....பொதுக்கூட்டம் நடந்தது. (ground)
(iv) ....பேசுனாரு. (mayor)
(v) மேயர்...............னாரு. (speak, deliver)
(vi) வற...............லே ஓட்டுப் போடணும்'னாரு. (election)
(vii) அவங்க...............க்குப் போடணும்'னாரு. (political party)
(viii) அவங்க கட்சிக்கு...............ப் போடணும்'னாரு. (vote)
(ix) அவங்க...............+ அணும்'னாரு. (cast as vote)
(x) அது...............பொதுக்கூட்டமா ? (political)

h. These are the statements given by Mr. Murthi. Report his statements as in the model given below.

Model : மூர்த்தி : நாளைக்கு மாலையிலே வறேன்.
மூர்த்தி 'நாளைக்கு மாலையிலே வறேன்'னாரு.

(i) மூர்த்தி : அடுத்தவாரம் ஊருக்குப் போறேன்.
(ii) மூர்த்தி : அக்கா மகளுக்குக் கல்யாணம் இருக்குது.
(iii) மூர்த்தி : நான் கட்டாயம் போகணும்.
(iv) மூர்த்தி : பொதுக்கூட்டம் தமுக்கம் மைதானத்துலே நடந்தது.
(v) மூர்த்தி : அவங்க கட்சிக்கே ஓட்டுப் போடணும்.

i. These are the questions asked by Mr. Murthi. Report his questions as in the model given below.

Model : மூர்த்தி : நாளெக்கு மாலெயிலே வரேன்.
மூர்த்தி 'நாளெக்கு மாலெயிலே வரேன்'ன்னு சொன்னாரு.

(i) மூர்த்தி : அவங்க கட்சிக்கே ஓட்டுப் போடணும்.
(ii) மூர்த்தி : அக்கா மகளுக்குக் கல்யாணம் இருக்குது.
(iii) மூர்த்தி : நான் கட்டாயம் போகணும்.
(iv) மூர்த்தி : பொதுக்கூட்டம் தமுக்கம் மைதானத்துலே நடந்தது.

j. Select the right case form and use it in the blank.

பொதுக்கூட்டத்துலே, அக்காவோடெ, வீட்டுக்கு
மூர்த்தியெ, கட்சிக்கு

(i) நீங்க..............பார்த்தீங்களா ?
(ii) நான் ஒரு..............பார்த்தேன்.
(iii) நான் மாலெயிலே..............வரேன்.
(iv) அவங்க..............ஓட்டுப் போடணும்'ன்னாரு.
(v) ....மகளுக்குக் கல்யாணம் இருக்குது.

k. Join the following according to the sandhi rules.

(i) பொதுக்கூட்டம் + உலே :........ (ii) மூர்த்தி + ஏ :...........
வாரம் + உலே :............... மாலெ + இலே :........

l. Answer these questions.

(i) நீங்க அரசியல் பொதுக்கூட்டத்துக்குப் போவீங்களா ?
(ii) போன தேர்தல்லே நீங்க எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போட்டீங்க ?
(iii) உங்களுக்கு அரசியல் பிடிக்குமா ?
(iv) உங்களுக்கு எந்த அரசியல் கட்சி ரொம்பப் பிடிக்கும். ?
(v) உங்க அக்கா மகளோடெ கல்யாணத்துக்கு நீங்க போனீங்களா ?
(vi) நீங்க உங்க கட்சிக்காகப் பொதுக்கூட்டத்துலே பேசுவீங்களா ?
(vii) உங்க மேயரோடெ பேரு என்ன ?
(viii) உங்க நண்பரு 'மாலெயிலே உங்க அறெக்கு வரேன்'ன்னாரா ?
(ix) நீங்க 'வாங்க'ன்னீங்களா ?
(x) நீங்க 'யாருக்கு ஓட்டுப் போடணும்'ன்னு உங்க மனெவிகிட்டெச் சொன்னீங்க ?

VOCABULARY

பொதுக்கூட்டம்	'public meeting'	கட்டாயம்	'certainly'
மைதானம்	'ground'	மேயர்	'mayor'
தேர்தல்	'election'	கட்சி	'(political) party'
ஓட்டு	'vote'	ஓட்டுப் போடு	'cast vote'
அரசியல்	'politics'	அரசியல் பொதுக்கூட்டம்	'political meeting'
இன்னொரு	'another'		

GRAMMAR

20.83.200. The verb என்- 'say' is variously conjugated after quoting the exact sentence uttered by the speaker in the following examples. -ன்ன- is the variant of the verb என்- when it is immediately followed by the quoted sentence. -ன்ன- is the past tense marker which is then followed by various personal terminations according to the subjects.

20. 83. 200. 'மாலெயிலே வீட்டுக்கு வரேன்'ன்னாரு.
'நான் கட்டாயம் போகணும்'ன்னாரு.
'நானும் ஊருக்குப் போறேன்'ன்னேன்.

Sandhi : மூர்த்தியெ + பார்த்தீங்களா → மூர்த்தியெப் பார்த்தீங்களா
அவரெ + பார்த்தேன் → அவரெப் பார்த்தேன் (Refer S.20 in 2.17)
ஊருக்கு + போறேன் → ஊருக்குப் போறேன்
மகளுக்கு + சடங்கு → மகளுக்குச் சடங்கு (இருக்குது)
அறெக்கு + தான் → அறெக்குத்தான் (Refer S.18 in 2.14)

UNIT 20

LESSON 84

GOING TO MADRAS

DIALOGUE

சுரேஷ் : நரசய்யா, நான் நாளெக்குச் சென்னெக்குப் போகலாம்'ன்னு நெனெக்கறேன்.	Narasaiah, I am thinking of going to Madras tomorrow.
நரசய்யா : என்ன விசேஷம் ?	What is the matter ?
சுரேஷ் : என் நண்பரு ஒருத்தரெச் சந்திக்கணும்.	(I) have to meet a friend of mine.
நரசய்யா : உங்களுக்கு அவரு விலாசம் தெரியுமா ?	Do you know his address ?

சுரேஷ் : தெரியும். ஆனா, எப்படி அந்த விலாசத்தெக் கண்டுபிடிக்கிறது'ன்னு எனக்குப் புரியலெ. ஏன்னா, எனக்குச் சென்னையிலே எல்லா எடமும் சரியாத் தெரியாது. பேராசிரியரு அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தரு சென்னையிலே இருக்குறாரு'ன்னு சொன்னாரு. அவரெ ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி பேராசிரியரெ ஒரு கடிதம் எழுதச் சொல்லணும்.

Yes, (I) know. But, I do not understand how to find out that address because I do not know all the places in Madras well. Professor (Sundaram) told me that there is a person known to him in Madras. I should ask Professor (Sundaram) to write a letter to him asking him to come to the railway station.

நரசய்யா : இது நல்ல யோசனெ. உங்க நண்பரோடெ விலாசத்தெக் கண்டுபிடிக்கிற தொல்லெ இருக்காது. அப்படியே செய்யுங்க.

It is a good idea. (You) will not have the trouble to find out your friend's address. Do it so.

சுரேஷ் : வரட்டுமா ?

Shall (I) take leave of you ?

நரசய்யா : சரி. வாங்க.

O.K. please do.

DRILLS

a. Variation drill

20. 84. 201. நான் 'நாளைக்குச் சென்னைக்குப் போகலாம்'ன்னு நெனெக்கிறேன்.
எப்படி அந்த விலாசத்தெக் கண்டுபிடிக்கிறது'ன்னு எனக்குப் புரியலெ.

20. 84. 202. பேராசிரியரு 'அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தரு சென்னையிலே இருக்குறாரு'ன்னு சொன்னாரு.

b. Build up drill

(i) நான் 'நாளைக்குச் சென்னைக்குப் போகலாம்'ன்னு நெனெக்கிறேன்.
நெனெக்கிறேன்

நான் 'நாளைக்குச் சென்னைக்குப் போகலாம்'ன்னு நெனெக்கிறேன்.
நெனெக்கிறேன்

'போகலாம்'ன்னு	'போகலாம்'ன்னு நெனைக்கு- றேன்
சென்னைக்கு	'சென்னைக்குப் போகலாம்'ன்னு நெனைக்குறேன்
நாளைக்கு	'நாளைக்குச் சென்னைக்குப் போகலாம்'ன்னு நெனைக்கு- றேன்
நான்	நான் 'நாளைக்குச் சென்னைக்குப் போகலாம்'ன்னு நெனைக்கு- றேன்.
(ii) பேராசிரியரு 'அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தரு சென்னையிலே இருக்குறாரு' ன்னு சொன்னாரு.	பேராசிரியரு 'அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தரு சென்னையிலே இருக்- குறாரு'ன்னு சொன்னாரு.
சொன்னாரு	சொன்னாரு
இருக்குறாரு'ன்னு	'இருக்குறாரு'ன்னு சொன்னாரு
சென்னையிலே	'சென்னையிலே இருக்குறாரு'- ன்னு சொன்னாரு.
ஒருத்தரு	'ஒருத்தரு சென்னையிலே இருக்- குறாரு'ன்னு சொன்னாரு
தெரிஞ்ச	'தெரிஞ்ச ஒருத்தரு சென்னை யிலே இருக்குறாரு'ன்னு சொன்னாரு
அவருக்கு	'அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தரு சென்னையிலே இருக்குறாரு'- ன்னு சொன்னாரு
பேராசிரியரு	பேராசிரியரு 'அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தரு சென்னையிலே இருக்குறாரு'ன்னு சொன்னாரு.

c. Expansion drill

(i) பேராசிரியரு சொன்னாரு. 'தெரிஞ்ச ஒருத்தரு இருக்- குறாரு'ன்னு சொன்னாரு.	பேராசிரியரு சொன்னாரு. பேராசிரியரு 'தெரிஞ்ச ஒருத்தரு இருக்குறாரு'ன்னு சொன்னாரு.
(ii) நான் நெனைக்குறேன். 'சென்னைக்குப் போகலாம்'- ன்னு நெனைக்குறேன்.	நான் நெனைக்குறேன். நான் 'சென்னைக்குப் போகலாம்'- ன்னு நெனைக்குறேன்.
(iii) எனக்குப் புரியலை. 'எப்படிக் கண்டுபிடிக்குறது' ன்னு புரியலை.	எனக்குப் புரியலை. எனக்கு 'எப்படிக் கண்டுபிடிக்- குறது'ன்னு புரியலை.

